RKKUM...

ra Soundarrajan

n : September, 2012

s : 280

: 11.6 N.S. Book Print

: ரூ.125.00

L NILAYAM
rtments,
13, Sivaprakasam Street,
ai - 600 017.
342899, 24327696
@thirumagalnilayam.com
hirumagalnilayam.com

Will Computers,
- 17. Mobile : 9444006583
goodwilltngr@yahoo.in
Printing Co., Chennai - 5 ☎ 28446891, 28446166

# 1

## துளிர்க்கும்...

அழகான மலைப்பாதை!

பச்சைக் கம்பளம் ஒன்றின் நடுவில் கருநாகப் பாம்பு நெளிந்து கொண்டே செல்வதைப் போல் இருந்தது அந்த பாதை... மாவுச் சாக்கை தலை கீழாக கவிழ்த்து உதறினது போல அந்த மலை வெளி எங்கும் பனி வேறு பொழிந்தபடி இருந்தது!

காலை வேளை வேறு.. இப்படி ஒரு தருணத்தில் இதமான வேகத்தில் காரில் பயணிப்பது என்பது உண்மையிலேயே ஒரு சுகமான அனுபவம்தான். நல்ல ரசனை உள்ளவர்களுக்கு இந்த மாதிரி தருணங்களில் உற்சாகமாக பாடக்கூடத் தோன்றும்.

ரகுபதியும் நல்ல ரசனை உள்ளவன் தான். அவனை விட அவன் மனைவி ஜானகிக்கு இன்னமும் ரசனை மிகுதி. உடை உடுத்திக் கொள்வதில் இருந்து தலை வாரிப் பூ வைத்துக் கொள்வது வரை அவளிடம் ரசனை ததும்பும். பார்த்தால் பார்த்துக் கொண்டேயிருக்கலாம்.

இருந்தும் இருவருமே அந்த மலைப் பாதைமேல் ஏறியபடி இருக்கும் ஸ்கோடா காருக்குள் ஒரு ஜடம்

போலத்தான் அமர்ந்து கொண்டிருந்தனர். ரகுபதி இடது ஓரமாக பின் பக்கத்தில் அமர்ந்திருந்தான். ஜானகி வலது ஓரத்தில் அமர்ந்திருந்தாள். இருவருமே கார் கண்ணாடிக்கு வெளியில் தெரியும் ஏற்காட்டின் காபி தோட்டங்களை பார்த்தபடியே தான் வந்தனர்.

ஒவ்வொரு காபி செடியும் மிகவே ஊட்டமாக வளர்ந்து ஏராளமாக காய்களும் காய்த்திருந்தன. அவைகள்தான் பதப்படுத்தப்பட்டு கொட்டைகளாகி பின் காபிப் பொடியாகின்றன.

ஆனால் காபிச் செடியைப் பார்க்கும்போது அதெல்லாம் தெரியாது.. காய்த்துக் குலுங்கும் காபிச் செடியை அதுதான் காபிச் செடி என்று தெரிந்து கொள்வதும் கடினம். அதிலும் மலைத் தலங்களுக்கு அபூர்வமாக வருகின்றவர்களுக்கு அது ஏதோ ஒரு செடியாகத்தான் தெரியும்.

ஜானகியும் முதலில் அப்படித்தான் நினைத்தாள். கார் வளைந்து வளைந்து மேலேறவும் லேசாக காதை அடைத்து குளிரும் உடம்பை ஊடுருவத் தொடங்கிற்று. மனித உடம்பிலே காது மடல்கள் தான்மிக மென்மையான சதைப் பரப்பு... எனவே அந்த பாகத்தில் குளிரின் தாக்கம் அதிகமாக இருந்தது. ஜானகி சற்று நடுங்கத் தொடங்கினாள்.

ஆனால் ரகுபதி அந்த குளிரை ரசித்தான். ஜானகி லேசாக நடுங்குவதை யதார்த்தமாக கவனித்தவன்.

“ஜானகி... டிக்கியில ஸ்வெட்டர் இருக்கு எடுத்துத் தரட்டுமா?” என்று கேட்டான்.

“இல்லங்க.. நான் சமாளிச்சுக்குவேன்” என்றாள் அவளும்..



அதற்குள் ஏற்காட்டின் தொடக்க பாகம் வந்து விட்டது. ஊரின் முகப்பிலேயே ஏரி! அதன் கரையோரமாக கார் போகவும் ரகுபதி டிரைவரிடம் காரை நிறுத்தச் சொன்னான். பின்னர் காரைவிட்டு இறங்கினான். அவன் இறங்குவதைப் பார்த்து ஜானகியும் இறங்கினாள்.

காற்று சின்னப் பிள்ளைகள் ஓடி விளையாடுவது போல வீசிக் கொண்டிருந்தது. அதில் ஜானகியின் சேலை முந்தானையும் கொடி போல பறக்கப் பார்த்தது. அதை இழுத்து இடுப்பில் செருகிக் கொண்டாள்.

எதிரே ஏரியில் சில படகுகள்... அதில் பெரும்பாலும் இளம் ஜோடிகளே கண்ணில் பட்டனர்... அவர்களைப் பார்க்கவும் ரகுபதிக்கு ஒரு பெருமூச்சு தான் வந்தது. அதை ஜானகியும் கவனித்தாள்.

மிகச் சரியாக எட்டு வருடங்களுக்கு முன்னால் புதுமணத் தம்பதிகளாக அவர்களும் இப்படித்தான் படகு சவாரியில் ஈடுபட்டிருந்தனர்!

கல்யாணத் தேன் நிலவுக்காக ஏற்காட்டுக்கு வந்திருந்த சமயம் படகுச் சவாரியும், குதிரைச் சவாரியுமாக அன்றைய பொழுதுகளும் ரம்யமாகவே சென்றன.

இருவரிடமும் எதிலும் குறை சொல்ல முடியாது. ரகுபதிக்கு அப்போது இருபத்தி நான்கு வயது.. இருவரையும் ஒன்றாகப் பார்க்கும் எவரும் அற்புதமான ஜோடிகள் என்று ஒரு கணம் நெகிழ்ந்து போவார்கள். காசு பணத்திற்கும் பஞ்சமில்லை. ரகுபதி சொந்தமாக ஒரு கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தை நடத்தி வருகிறான். சிவில் என்ஜினியரிங்கில் எம்.இ. வரை படித்து முடித்து விட்டு தொழிலைத் தொடங்கினான். அதில் லட்ச லட்சமாகத்

தான் சம்பாதிக்கிறான். சேலத்திலேயே மிகவும் கவர்ச்சியான ஒரு பங்களா ரகுபதியின் பங்களாதான்... ஜனாதிபதியே ரகுபதியின் பங்களா உள்ள பக்கமாய் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் சென்றபோது யதார்த்தமாக ரகுபதி பங்களாவை பார்த்து விட்டு 'இது யாருடைய கன்ஸ்ட்ரக்ஷன் என்று விசாரித்து சொல்லுங்கள்' என்று தன் உதவியாளரிடம் சொல்லப்போக இறுதியில் டெல்லியில் அது ஜனாதிபதியை சந்தித்து பேசி மகிழும் ஒரு எல்லை வரை போய்விட்டது.

ரகுபதியைப் பற்றி சிந்தித்தால் இப்படி நினைத்து மகிழ ஏராளமான விஷயங்களும் இருக்கின்றன. ஜானகியும் ஒன்றும் சளைத்தவளில்லை. அவளது சமையல் நிகழ்ச்சிகள் டி.வியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றவை. அது போக அவள் பாடினால் கேட்டுக் கொண்டேயிருக்கலாம்.

மொத்தத்தில் இருவரிடமும் எல்லாமே இருக்கிறது. ஆனாலும் ஒன்றே ஒன்றுதான் இல்லை! அந்த ஒன்று இல்லாவிட்டால் என்ன..? இத்தனை இருக்கிறதே என்று அவர்களால் சந்தோஷமாக இருக்க முடியாதா என்றால் அது முடியவில்லை.

நெடுநேரம் ஏரிக்கரையில் இருவரும் அமைதியாகவே நின்றபடி இருந்தனர். அப்படி எதுவும் பேசாமல் நிற்பது கூட ஒரு கொடுமைதான்.. சரி ஏதாவது பேசுவோம் என்று ஆரம்பித்தாலோ அது பெரும்பாலும் ரகுபதியை நிம்மதியில்லாமல் செய்து விடுகிறது. இது அவளுக்கும் பொருந்தும்...

அவளுக்கும் அவனிடம் பேசவே தயக்கமாக இருக்கிறது. காரணம் அந்த இல்லாத ஒன்று தான்! அந்த



ஒன்று எப்படியோ தங்கள் பேச்சுக்குள் புகுந்து இறுதியில் ஏன் பேசினோம் என்றும் செய்து விடுகிறது.

அதனால் அமைதியாக இருப்பதே சரி என்று படுகிறது. ஆனால் அமைதியாக இருக்கும்போதோ மலையைச் சுமப்பது போல பாரமாகவும் இருக்கின்றது.

இந்தச் சிக்கல் எப்படித்தான் தீருமோ தெரியவில்லை.. இருவருமே அமைதியாக ஏரியையே பார்த்தபடி இருக்கும்போது கையில் குழந்தையுடன் ஒரு பிச்சைக்காரி இருவருக்கும் இடையில் நுழைந்தாள்.

குழந்தையை காட்டி 'பாலு வாங்கக் கூட காசு இல்லை தாயி.. ஆறு' மாசப் பிஞ்சு.. என்று மிக உருக்கமாகவும் பேசினாள். அந்த குழந்தையும் பார்க்க வெகு அழகாக இருந்தது. பிச்சைக்காரியின் குழந்தையை போலவே இல்லை. அதுவும் ஜானகியைப் பார்த்து சிரித்தது. ஜானகியும் தன்னை மறந்து கையை நீட்டினாள். அதுவும் தாவிக் கொண்டு வந்துவிட்டது. அதைப் பார்த்த ரகுபதிக்கு தான் என்னவோ போல் ஆகிவிட்டது.

"ஜானகி என்ன இது..?" என்று முகம் சிணுங்கினான்.

"ஐய்யோ அம்மா ஒரு பிச்சைக்காரி குழந்தைன்னும் பார்க்காம தூக்கிட்டீங்களேம்மா. உங்களுக்கு ரொம்ப பெரிய மனசு.." என்று அந்த பிச்சைக்காரியும் நெகிழ்ந்து போனாள்.

"குழந்தைக்கு பேர் என்னம்மா?" ஜானகி அவளிடம் கேட்டாள். ரகுபதியின் முகச்சிணுங்கலை அவள் பொருட்படுத்தவில்லை.

“பேருங்களா.. பேரு... பேரு..” பிச்சைக்காரி தடுமாறி னாள்.

“என்னம்மா பேரை கேட்டா... முழிக்கறே?”

“வெச்சால்லம்மா கூப்புட்றதுக்கு..”

“என்ன சொல்றே நீ... பேரை வைக்கலையா?”

“ஆமாம்மா.. சோத்துக்கே வழிய காணோம். இதுல பேர்தான் கேக்குதாக்கும்..”

“அப்ப என்னன்னு கூப்பிடுவே?”

“அது.. அப்பப்ப தோண்றது கூப்பிட்டுக்குவேன்.

மொட்டச் சிணுங்கி, லட்டு முண்டை, என் கடல முட்டாயி.. இப்படி...!” அவள் சொல்லிவிட்டு கொஞ்சம் வெட்கப்படவும் செய்தாள்.

ஜானகி அதைக் கேட்டு மனம் விட்டு சிரித்தாள். ஆனால் ரகுபதிக்கு எரிச்சலாக வந்தது.

“இந்தாம்மா இந்தா பிடி.. குழந்தையை வாங்கி கிட்டு இடத்தை காலி பண்ணு..” என்று அவள் வசம் ஒரு பத்து ரூபாயை நீட்டி கண்டிப்பான குரலில் சொன்னான்.

“பத்து ரூபாய்க்கு இன்னிக்கெல்லாம் என்னத்தங்க வாங்க முடியும்.. ஒரு நூறு ரூபாயை கொடுங்க.” என்று ரகுபதிக்கு கட்டளையிடுவது போல பேசினாள் ஜானகி. ரகுபதியும் எதுவும் பேசாமல் அவள் வசம் ஒரு நூறு ரூபாயைத் தந்தான். அவளும் குழந்தையை திரும்பப் பெற்றுக் கொண்டவளாக,

“மவராசியா பிள்ளை குட்டிங்களோடு நூறு வருசம் நல்லா இருக்கணும்” என்றாள். அதைக் கேட்டு



கண்ணிரண்டும் கலங்கிவிட்டது ஜானகியிடம். அவளும் அதை கவனித்தபடியே விலகிப் போனாள்.

“ஜானகி திஸ் ஈஸ் டூ மச்... யாராவது பார்த்தா என்ன நினைப்பாங்க?” என்று மௌனம் உடைந்த நிலையில் பேசத் தொடங்கினான் ரகுபதி.

“இப்ப மட்டும் என்னங்க... நம்மைபத்தி பரிதாபப் படாதவங்க யார்? அதுக்கு இது ஒண்ணும் மோசம் இல்லையே..”

“போதும்.. நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாம நீ பாட்டுக்கு எதையாவது பேசாதே..”

“நான் எதையாவது பேசறேனா.. உள்ளதைக் தானேங்க பேசினேன்.”

“ஜானகி.. நான் உன்னை இங்க கூட்டிகிட்டு வந்துருக்கறது எல்லாத்தையும் மறந்து நிம்மதியா கொஞ்ச நேரமாவது இருக்கணும்கறதுக்காக... ஆனா இங்கேயும் ஒரு குழந்தை வடிவத்துல பிரச்சனை தொடங்கும்னு நான் எதிர்பார்க்கலே..”

“அதை ஏன் பிரச்சனையா நினைக்கறீங்க... எவ்வளவு அழகான குழந்தை.. ஏன் அதை உங்களால நேசிக்க முடியல?”

“எப்படி.. எப்படி ஜானகி.. அது ஒரு பிச்சைக்காரி குழந்தை..”

“ஆனா அவளுக்கு கூட ஒரு குழந்தைக்கு தாயாகற பாக்யம் இருக்கு. அது இல்லாத நான் ஒரு வகைல அவளைவிடவே மோசம். என்னையே சகிச்சுக்க உங்க ளால முடியுது. அந்த குழந்தையை தான் நேசிக்க முடியலையா?”

"பாத்தியா.. பேச்சை கடைசில, உன்கிட்டயும் நமக்கு குழந்தை இல்லேங்கறதுலயும், கொண்டு வந்து நிறுத்திட்டே.."

"அது தானே உண்மை?"

"மண்ணாங்கட்டி.. நமக்கு ஒண்ணும் வயசாகல. இன்னும் நிறைய காலங்கள் இருக்குன்னு நீ நம்பிக்கையோடயே சிந்திக்க மாட்டியா?"

"அப்ப எதுக்கு டாக்டர் ரஜினிபிரேமலதா நீங்க ஒரு குழந்தையை தத்து எடுத்துக்கறது ரொம்ப நல்லதுன்னு சொல்லணும்?"

"அது தற்காலிகமா ஒரு ஆறுதலுக்காக நமக்கு சொன்ன வார்த்தைகள்.. நானே அதை பெருசா எடுத்துக்காதப்போ நீ ஏன் அதை பெருசா எடுத்துக்கறே?"

"ஆமாங்க.. நான் பெருசாதான் எடுத்துக்கறேன்... நீங்க ஒரு சராசரி புருஷனா இருந்து, என்கிட்ட இருக்கற குறைபாடு தெரிஞ்ச நிலைல குழந்தைக்காக விவாகரத்து, இல்லேன்னா இரண்டாம் கல்யாணம்னு போக ஆசைப்பட்டிருந்தா எனக்கும் உங்கமேலே ஒரு வெறுப்பு வந்து இந்த சிக்கலை நான் பெருசா எடுத்துக்காம இருந்திருப்பேன். ஆனா இப்பவும் நீங்க என்னை துளியும் வெறுக்காம, அதே சமயம் நம்பிக்கையோடையும் இருக்கீங்க பாருங்க... அதுதான் என்னை ரொம்பவே போட்டு பிசையுதுங்க.

ஐயோ... இப்படி ஒரு நல்ல மனுஷனுக்கு வாரிசைக் கொடுக்க முடியாத மலடியா போய்ட்டேனேன்னு மனசு கிடந்து குமுறுதுங்க.."



"போதும்.. இன்னொரு தடவை உன் வாயால உன்னை நீயே மலடினன்னுல்லாம் சொல்லிக்காதே.. நீ மலடி இல்லே.. உனக்கு குழந்தை பிறக்கும்.. எனக்கு நம்பிக்கை இருக்கு.."

"கர்ப்பப்பைன்னு ஒண்ணு ஏதோ பேருக்குத்தான் உங்க வரையல இருக்குன்னு டாக்டர் சொன்ன பிறகுமாங்க உங்களுக்கு இவ்வளவு நம்பிக்கை..?"

"ஆமாம் கர்ப்பப்பை இருக்குல்ல..? அது போதும் ஜானகி எனக்கு?"

"எப்படிங்க இப்படி உங்களால நம்பிக்கையோட இருக்க முடியுது.. நான் பட்டுப்போன ஒரு மரம்னு யார் சொன்னா நம்புவீங்க?"

"கடவுளே வந்து சொன்னாலும் நம்ப மாட்டேன். உன் நல்ல மனசுக்கும் உன் இரக்க குணத்துக்கும் நீ தாயாகியே தீரணும்.. நீ தாயாகுவே.."

ரகுபதி மிகவே உணர்ச்சிவயப் பட்டான்.

இருவரும் உணர்ச்சியோடு பேசிக் கொள்வதை அந்த ஏரிக்கரை புல்வெளி மேல் படுத்திருந்த ஒரு வயதான பெண்மணியும் கேட்டபடியே அமர்ந்திருந்தாள்.

என்ன தோன்றியதோ?

எழுந்து அவர்கள் இருவரையும் நெருங்கினாள்.

"தம்பி தாயி.. ரெண்டு பேர் பேசிகிட்டதும் என் காதுல உழுந்துச்சு.. ரெண்டு பேரும்மே தங்கம்னும் தெரிஞ்சிகிட்டேன். நான் ஒண்ணு சொன்னா கேப்பீங்களா?" என்று அந்த பெண்மணியும் கேட்டாள். நல்ல

குங்குமப் பொட்டும் மஞ்சள் பூசிய முகமுமாக அந்த பெண்ணை பார்க்கும்போது ஒரு தெய்வாம்சமும் பளிச் சென்று தெரிந்தது.

"சொல்லுங்கம்மா..." என்றான் ரகுபதி.

"இந்த சேர்வராயன் மலைல செம்மநத்தம்கற ஊர் தாண்டி கன்னிமார் குகைன்னு ஒரு இடம் இருக்கு. அங்க கெஜலட்சுமியம்மான்னு ஒரு பொம்பள சாமியார் இருக்காங்க. அவங்க குகையை விட்டு வெளியவே வரமாட்டாங்க. அவங்கள போய் இரண்டு பேரும் பாருங்க. நீங்க எதுவும் சொல்ல வேண்டாம். அந்தம்மா உங்களுக்கு குழந்தை இருக்குன்னா இருக்குதான். இல்லேன்னாலும் இல்லதான்... என்ன போய் பார்க்க றீங்களா?"

அந்த பெண்மணி கேட்டவிதமே மிகவும் கரிசனத் தோடு இருந்தது. இருவரிடமும் எந்தவித மறுப்பு மில்லை!

## 2

செம்மநத்தம் செல்லும் சாலைமேல் அந்த ஸ்கோடா கார் சீற ஆரம்பித்தது. ரகுபதி முகத்தில் ஒரு நம்பிக்கை தெரிந்தது. ஜானகியிடமும் ஒரு பிரகாசம் தெரிந்தது. ஜானகி உற்சாகமாக இருப்பது ரகுபதிக்கும் நம்பிக்கை தருவது போல் இருந்தது.

"ஜானகி" - என்றான் மிக இதமான குரலில்.

- அவளும் ஊன்றினாள்.



"எனக்கு இப்ப எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?"

"எனக்கும் தாங்க.."

"என் சந்தோஷமே உனக்கு வந்திருக்கற நம்பிக்கை தான்.."

"நீங்க தப்பா புரிஞ்சிகிட்டிருக்கீங்க.."

"என்ன ஜானகி சொல்றே?"

"நான் சந்தோஷமா இருக்கறது உண்மைதாங்க. ஆனா எனக்கு குழந்தை பிறக்கும்கற நம்பிக்கையால இல்ல.."

"பின்ன?"

"அந்தம்மா பிறக்கும் - பிறக்காதுன்னு இரண்டு பதில்ல ஒரு பதிலைத்தானே சொல்லப் போறாங்க?"

"ஆமா.. அந்த பாட்டியம்மா அப்படித்தான் சொன்னாங்க. அதனால என்ன இப்போ?"

"என்னவா... எனக்கு பிறக்காதுன்னும் அவங்க சொல்ல இடம் இருக்குதானே?"

"ஏன் இப்படி நெகடிவாவே எப்பவும் நினைக்கறே?"

"நான் நெகடிவா தானேங்க இருக்கேன்."

"இது எப்படி ஜானகி உனக்கு சந்தோஷம் தருது?"

"ஆமாங்க.. எனக்கு குழந்தை பிறக்காதுன்னு அந்தம்மா சொல்லிட்டா நீங்க இன்னொரு கல்யாணம் பண்ணிகிட்டு தானே தீரணும்?"

"ஓ நீ அப்படி வரியா?"

"பின்னே... இந்த பிரச்சனை ஒரு மனபாரமா அழுத்திகிட்டே இல்லாம முடிவு தெரிஞ்சிடுமே. குறைந்த பட்சம் என் பேச்சை கேட்காத நீங்க அந்த அம்மா பேச்சையாவது கேட்பீங்க தானே?"

"சரி... நான் இன்னொரு கல்யாணம் பண்ணிட்டா உன்னோட நிலை..?"

"நீங்க என்ன செய்யணும்னு சொல்லுங்க... நான் அதை செய்யறேன். விவாகரத்துல கையெழுத்து போடணுமா? போட்றேன்! முதல் மனைவியா ஒரு ஓரமா இருந்துக்கணுமா? இருந்துக்கறேன்!"

- ஜானகி எந்த பதட்டமும் இன்றி பேசியவிதம் ரகுபதியை மிகவே பாதித்தது.

"எப்படி ஜானகி இப்படியெல்லாம் பேச உன்னால முடியுது?"

"நான் எப்படியாவது இப்படியெல்லாம் பேசணுங்க. பேசலைன்னாதான் அது பாவம்."

"ஜானகி நீ இருக்கும்போது இன்னொரு பெண்ணை நான் ஏத்துப்பேன்னு எந்த அடிப்படையில நம்பறே?"

"அதான் நான் ஒதுங்கிக்கிறேன்னு சொல்றேனே?"

"நான் தெரியாமதான் கேக்கறேன்... என்கிட்ட பிரச்சனை இருந்து நான் உன்னை இன்னொரு கல்யாணம் செய்துக்கச் சொன்னா நீ செய்துக்குவியா?"

"இது நீங்க வீம்புக்கு பேசற பேச்சுங்க.."



"என் கேள்விக்கு நேரா பதில் சொல் - உனக்கொரு நியாயம் எனக்கொரு நியாயமா?"

"அதுதான் அப்படி எல்லாம் இல்லையே... அப்புறம் என்னங்க பேச்சு?"

"என்ன அதுதான் இல்லையே... நான் தெரியாம தான் கேக்கறேன். குழந்தை பிறந்தாதான் நம்மை இந்த உலகம் புருஷன் பொண்டாட்டின்னு சொல்லுமா - இல்லேன்னா சொல்லாதா?"

"குழந்தை தானேங்க தாம்பத்யத்துக்கே அர்த்தம்?"

"இல்லை.. நீ எனக்கு நன்மை செய்யறதா நினைச்சு பெரிய தீமை செய்யறே. இந்த விஷயத்தை பத்தி பேசத் தொடங்கினாலே கடைசில அது இப்படி வருத்தத்துலையும் கசப்புலையும் தான் முடியுது. பேசாமலே இருக்கவும் முடியலை.

- டிரைவர் வண்டியை திருப்பு.."

ரகுபதியின் பேச்சும் செயலும் அவளுக்கு அதிர்ச்சியை தந்தது.

"ஏன் காரை திருப்பச் சொல்றீங்க.. நீ போப்பா.."

"இல்ல... திருப்புப்பா நீ. நான் யாரையும் பார்க்க விரும்பலை. யாரும் எனக்கு எந்த அருள்வாக்கையும் சொல்லவும் வேண்டாம். என் வாழ்க்கைல உன்னைத் தவிர இன்னொரு பெண்ணுக்கு இடமும் இல்லை. இதுதான் என் இறுதியான முடிவு."

- அவர் அழுத்தமாக சொல்லவும் டிரைவர் ரத்தினமும் ஒரு மரத்தின் நிழலில் காரை நிறுத்தவும் சரியாக இருந்தது.

"நீ போப்பா.. ஒரு நல்ல காரியதுக்காக போகும் போது இப்படி பின் வாங்கக் கூடாதுங்க."

டிரைவர் ரத்தினம் யார் பேச்சை கேட்பது என்று தெரியாமல் திணற ஆரம்பித்தான். பிறகு அவனே பேசவும் ஆரம்பித்தான்.

"ஐயா.. அம்மா... நான் ஒண்ணு சொன்னா கேப்பீங்களா?" என்று பணிவாக தொடங்கினான்.

"என்ன.. சொல்லு." என்றான் ரகுபதியும்.

"உங்க குடும்ப விஷயத்துல நான் தலையிட்டு பேசறதா நினைக்காதீங்கய்யா... நான் உங்க டிரைவர். உங்களால தான் என் குடும்பமே நடக்குது. உங்க நல்லது கெட்டதுல எனக்கும் அக்கறை இருக்குய்யா. ஏன்னா நீங்க நல்லா இருந்தாதான் நானும் நல்லா இருப்பேன்..."

"ரத்னம்... பீடிகை போதும் விஷயத்துக்குவா."

"ஐயா நீங்க இரண்டு பேர் பேசிக்கறதும் என் காதுல விழுந்தது. என்னை மூணாவது மனுஷனாகவும், ஒரு வேலைக்காரனாகவும் மட்டும் நீங்க நினைச்சிருந்தா என்னை வெச்சுகிட்டே வாக்குவாதத்துல ஈடுபட்டிருக்க மாட்டீங்க. பொதுவா டிரைவர் வேலைல இருக்கறவங்களுக்கு காதும் வாயும் முதலாளிங்க விஷயத்துல மூடியே இருக்கணும்னு சொல்வாங்க. இங்க நானும் அப்படித்தான் இருக்கேன். இருந்தாலும் இப்ப அதை உங்களுக்காகவே மீறப் போறேங்க."

"ரத்னம் இப்பதான் பீடிகை வேண்டாம் விஷயத்துக்கு வான்னு சொன்னேன்." - ரகுபதி குரலில் அதட்டல் கூடியது.



"இது பீடிகையா உங்களுக்குப் படலாம்க.. இதை எல்லாம் சொல்லாம என்னால உங்க விஷயத்துல நுழைய முடியலீங்க.. நான் இப்ப இரண்டு விஷயத்தை சொல்லப் போறேன். எனக்கு கல்யாணம் ஆனது உங்களுக்குத் தெரியும். நீங்கதான் நடத்தியே வெச்சீங்க. ஆனா என் மனைவி இப்ப என்கூட இல்லைங்க."

டிரைவர் ரத்னம் சொன்னது ரகுபதி ஜானகி இருவருக்குமே அதிர்ச்சியாக இருந்தது.

"என்கிட்ட கோவிச்சுகிட்டு அவ தாய் வீட்டுக்குப் போய்ட்டா. நானும் அவ கோவிச்சுக்கற மாதிரிதான் நடந்துகிட்டேன். எங்கேயும் வெளியே கூட்டிகிட்டு போறதில்ல. அவ கையால சாப்பிட்றதும் இல்லை. வீட்டுக்கு போகும்போதே பசிதாங்காம ஹோட்டல்ல சாப்பிட்டு போயிடுவேன். அவ சமைச்சு வெச்சதை பிச்சைக்காரனுக்கு போடும்படியாகிடும். ஞாயிற்றுக் கிழமை ஓய்வு நாளையும் தண்ணி அடிச்சிட்டு படுத்துருவேன்.. இதை எல்லாம் நான் கொஞ்ச நாளா விட்டுட்டு இப்ப தான் பரிபூரணமாக திருந்தின ஒரு மனுஷனா இருக்கேன். காரணம் ஐயா நான் உங்கள பாத்துதான் என்னை மாத்திகிட்டேன்.

ஒரு ஆம்பளை எப்படி இருக்கணும்கறதுக்கு என்வரைல உதாரணம் நீங்க. அதேபோல ஒரு பொம்பள எப்படி இருக்கணும்கறதுக்கு உதாரணம் தான் அம்மாவும்..

நீங்க இரண்டு பேரும் எப்பவும் ஒண்ணா ஒத்துமையா வாழ்ந்தா தான் என்னை போல தூர இருந்து பாக்கறவங்களுக்கும் சந்தோஷம். ஆனா ஒரு பிள்ளை இல்லேங்கற குறை உங்களை வாட்றதையும் நான் தெரிஞ்சுக்காம இல்லை.

அடுத்த வேளை சோத்துக்கும் வழி இல்லாதவனுக்கும் கூட அஞ்சாறு பிள்ளைகளை அள்ளி கொடுக்கிற சாமிக்கு உங்களுக்கு தர்றதுக்கு ஏன் மனசு வரமாட்டேங்குதுன்னு எனக்கே தெரியல. ஆனா ஒண்ணு மட்டும் எனக்கு நல்லா தெரியும். நிச்சயமா உங்களுக்கு குழந்தை பிறக்கும்! நீங்க இப்படியே இருக்க மாட்டீங்க.

இதை எதை வெச்சு சொல்றேன்னு மட்டும் கேட்காதீங்க. யதார்த்தமா ஏற்காடு வந்த இடத்துல ஒரு சாமி அம்மா பத்தி காதுல விழுந்ததே நல்ல சகுனம்னு தான் நான் நினைக்கறேன். இல்லேன்னா ஒரு வயசான கிழவி எதுக்கு உங்ககிட்ட வந்து இந்த சாமி அம்மா பத்தி சொல்லணும்? நாமளும் இவ்வளவு தூரம் வரணும்?"

"எல்லாம் சரி ரத்னம்.. ஆனா அவங்கள சந்திக்கறதால ஒரு ஆபத்தும் இருக்கறதை ஜானகி எனக்கு உணர்த்திட்டாளே?"

"இருக்கலாம்யா.. அம்மாவுக்கு எப்படியாவது உங்களை அப்பா ஆக்கிடணும்கற எண்ணம். எப்படியாவது அம்மாவை எதனாலயும் பிரியக்கூடாதுங்கற எண்ணம். இரண்டுமே நடக்கும்கறதுதான் இப்ப என் எண்ணம். அந்த சாமியம்மா பத்தி நானும் கேள்விப்பட்டிருக்கேன். அவங்கள பாக்கறதால நல்லது மட்டும் தான் நடந்துருக்கு. அப்படி நடந்தாதான் அவங்களும் சாமியம்மாவாவே இருக்க முடியும். அதை வெச்சு சொல்றேங்க. தயவு செய்து அவங்கள இரண்டு பேரும் தரிசனம் பண்றதுதான் சரி. நிச்சயம் உங்க வரைல நல்லது மட்டுமே நடக்கும். பிள்ளை இல்லாம நீங்க வருத்தப்படணும்கறது இன்னியோட முடியறதா நினைச்சுக்குங்க.."



ரத்னம் மிக பொறுப்பாகவும் விசுவாசத்தோடும் பேசினான். அது ரகுபதியையும் அசைத்தது. ஒரு பெருமூச்சுக்கு பின் "சரி காரை எடு.." என்றான்.

ரத்னமும் உற்சாகமாக காரை கிளப்பத் தொடங்கினான்.

கன்னிமார் ஓடைப்புறம்! மிக அடர்வான வனப்பகுதியாக விளங்கிய அந்த இடத்தில் ஒரு ஓடை ஒன்றும் இருந்து அதில் நல்ல நீரோட்டமும் இருந்தது. பளிங்கு போல தண்ணீர்.. குட்டி மீன்களும் நிறைய இருந்தன. அந்த ஓடையின் போக்கில் ஒரு இடத்தில் ஒரு பெரிய ஆலமரம்! அந்த மரத்தை மாலை போல வளைத்துக் கொண்டு ஓடியது அந்த ஓடை. அந்த மரத்துக்கு கீழே சப்த கன்னிகள் ஏழு பேருக்குமாய் ஏழு நடுகற்கள். அந்த நடுகற்களுக்கு பாவாடை போல துணியை கட்டி மஞ்சள் குங்குமம் பூசி ஒரு தெய்வீகமான சூழலை அங்கே ஏற்படுத்தியிருந்தனர். இரண்டு செங்கல்லை சரித்து நிறுத்தி இடைப்பட்ட முக்கோணமான இடைவெளிக்குள் தீபத்தையும் ஏற்றி வைத்திருந்தனர். கன்னிமார் தெய்வங்களை அவ்வளவு தூரம் தேடி வந்து வணங்கவும் ஆட்கள் இருந்ததுதான் ஆச்சரியம். அப்படியொரு வனப்பரப்பு!

தார்ச்சாலையை விட்டு சில நூறு அடிகள் காட்டுப்பாதையில் நடந்துதான் வர வேண்டும். அந்தப் பாதையில் ஒரு இளம் பெண் நடந்தபடி இருந்தாள். அவள் கையில் ஒரு குழந்தை. துணியைச் சுருட்டி அந்த குழந்தையை தோளில் சரித்து பிடித்திருந்தாள். அவள் முகத்தில் கொஞ்சம்கூட பொலிவில்லை. அவள் ஆடை

களிலும் அங்கங்கே கிழிசல்கள். அவள் உடம்பிலும் கூட காயங்கள்.

பார்த்த மாத்திரத்தில் பரிதாபத்தை வரவழைக்க முடிந்த அந்த பெண் நேராக கன்னிமார்கள் குடி கொண்டிருந்த அந்த நிழலில்போய் நின்றாள்.

கண்ணீர் பொங்க கன்னிமார் தெய்வங்களையும் பார்த்தாள்.

"ஒருத்தருக்கு ஏழு பேர் இருந்தும் என்னை கைவிட்டுட்டீங்க.. இந்த குழந்தையை எனக்கு கொடுத்த இதோட அப்பன் இப்ப இதுக்கு நான் அப்பன் இல்லேங்கறான். என்னையே குத்தம் சொல்லி நான் கெட்டவங்கறான்."

முறையா பெரியவங்க பார்த்து வெச்சு பண்ற கல்யாணமே பிரச்சனையா போயிடற இந்த காலத்துல நான் என் ஆசைக்கு கட்டிகிட்டவ. ஆரம்பமே தப்பா போச்சு. அப்புறம் எப்படி மத்ததெல்லாம் மட்டும் நல்லா இருக்கும்?

நான் செஞ்ச தப்புக்கு இந்த குழந்தையும்ல எதிர் காலத்துல பதில் சொல்லணும்னு ஆகிப் போச்சு! என் தப்பும் தவறும் என்னோட போகட்டும். இதுக்கு எந்த பாதிப்பும் வரக்கூடாது. என்னை கைவிட்ட சாமிங்களே. இந்த குழந்தையையாவது காப்பாத்துங்க. நான் என்னை அழிச்சுக்கறதுன்னு முடிவு செய்துட்டேன்." என்றபடியே குழந்தையை கன்னிமார் சிலைகள் முன் கிடத்தியவள் திரும்பவும் பொங்கிப் பொங்கி அழுதாள். குனிந்து குழந்தையின் நெற்றியிலும் கன்னத்திலும் மாறி மாறி முத்தமிட்டாள்.



"கண்ணு... இந்த சாமிங்க இருந்தா உன்னை காப்பாத்தட்டும். இல்லாட்டி அம்மா முன்னால போறேன் நீ பின்னால வந்து சேரு." - என்று வாய்விட்டே வெடித்தவள் அங்கிருந்து விலகத் தொடங்கினாள்.

அந்த குழந்தைக்கு என்ன தெரியும்?

கால்கைகளை உதைத்துக் கொண்டு ஆலமர கிளைகளையும் இலைகளையும் பார்த்து பொக்கை வாயால் சிரித்தது.

சொல்லி வைத்தமாதிரி கன்னிமாரை வணங்க கெஜலட்சுமியம்மாவும் தன் குகையை விட்டு கிளம்பி வந்தபடி இருந்தாள். அவளது சடைமுடி தரையில் உரசியபடியே வந்தது.

கெஜலட்சுமியம்மாளின் கையில் ஒரு தடி மட்டும் ஊன்றுகோல் போல் இருந்தது!

## 3

அந்த ஊன்று கோலை ஊன்றி ஊன்றி மரத்தடிக்கு கெஜலட்சுமியம்மாள் வந்து சேரவும் அந்த குழந்தை ஒரு கட்டெறும்பின் கடிபட்டு அழவும் சரியாக இருந்தது. குழந்தையைப் பார்க்கையில் அந்த கிழட்டுத் தாயின் முகத்தில் ஒரு அதிர்ச்சியும் கூட....!

அடுத்த நொடி பார்வை நாலாபுரமும் தான் சென்றது. ஒருவரும் கண்ணில் படாத நிலையில் குழந்தையைத் தொட்டுத் தூக்கிக் கொண்டாள். ஊன்று கோல் நழுவி விழ குழந்தையும் அந்த தெய்வத்தாயின் தோளில் சாய்ந்து கொண்டது.

ஒரு சரியான அடைக்கலம் என்று உணர்ந்தது போல அதன் அழுகையும் நின்று போனது. அந்த முதிர்ந்த தாயின் பார்வையும் சப்த கன்னிகள் மேல் சென்றபோது, ஏழு கற்களையும் இணைத்தது போல போடப்பட்டிருந்த அரளிப்பூ மாலையும் இது என் விருப்பம் என்று அந்த தாய்க்கு உணர்த்துவதுபோல கவிழ்ந்து தரையில் விழுந்தது. அம்மா முகத்திலும் ஒரு சிரிப்பு... சொல்லி வைத்த மாதிரி அந்த கோவில் பகுதிக்கு வரும் ஒற்றையடிப் பாதைமேல் ஜானகியும் ரகுபதியும் ஒருவர்பின் ஒருவராக வந்தபடி இருப்பது தெரிந்தது. அவர்களும் மரத்தடியில் குழந்தையும் கையுமாக நிற்கும் கெஜலட்சுமியம்மாவைப் பார்த்தனர். சிகப்புக் கலரில் நூல் புடவை, நாரைச் சிறகு போல தலைமுடி, பளபளவென்று விழிகள், நெற்றியில் பளிச்சென்று குங்குமத்தோடு கெஜலட்சுமியம்மாவைப் பார்க்கும் போதே ஒரு தெய்வீகமான தோற்றம்.. அதுவே ரகுபதிக்கு புரிய வைத்துவிட்டது. ஜானகியும் மிக-பவ்யமாக கைகளை கூப்பி வணங்கத் தொடங்கினாள். ரகுபதியும்...

வணங்கியபடியே நெருங்கிய இருவரையும் அந்தத் தாயும் பார்த்து புன்னகைத்தாள்.

“நமஸ்காரம்மா...”

“சந்தோஷம்.. என்னைப் பார்க்கணும்னே வந்துருக்கீங்க போல இருக்கே?”

“அப்ப நீங்க தான் கெஜலட்சுமியம்மாவாம்மா?”

“அதுதான் இந்த கட்டைக்கு இந்த ஜென்மத்துப் பேர்..”



அந்த பதிலிலேயே ஒரு மின்னல் ஒளிந்திருந்து இருவரையும் தாக்கியதுபோல் இருந்தது. அப்போது குழந்தையும் சிணுங்கி அழுததுதான் ஆச்சரியம்.

“அடடே அழுவறியா... அம்மா அப்பா வந்த உடனே அவங்ககிட்ட போகணும்னு அழுவறியா?” என்று கேட்டபடியே அந்த குழந்தையை மார்புக்கு முன் ஏந்திப் பிடித்து பார்க்கவும் அடுத்த மின்வெட்டு இருவ ரிடமும் ஏற்பட்டது. குழந்தையும் அந்தத் தாய் பார்க் கவும் அழுவதை நிறுத்தி விட்டு பகபகவென பொக்கை வாயில் எச்சில் வழிய சிரித்தது.

“கள்ளன்டா நீ... அந்த கண்ணன் மாதிரியே பொறந்தது ஒரு இடத்துல போய் வாழப் போறது வேற இடத்துல. கொடுத்து வெச்ச பய நீ.. அதான் கன்னிகள் காலடில கிடந்து இந்த லட்சுமி கைலயும் இப்ப கிடக்கே..”

கெஜலட்சுமியம்மாவின் பேச்சு கேள்விகளுக்கு இடமின்றி அமைந்ததும் அது அவர்களுக்கும் பளிச் என்று புரிந்ததும் தான் ஆச்சர்யம். இருவருமே சிலிர்த்துப் போகத் தொடங்கினர். ஏரிக்கரையில் அந்த முதிய பெண்மணி சொன்னது ஒரு முறை காதோரம் ஒலிக்க ஆரம்பித்தது.

‘உங்கள பாத்த மாத்திரத்துலயே நீங்க எதுக்கு வந்திருக்கீங்க ஏன் வந்துருக்கீங்கன்னு நீங்க கேக்காம லேயே சொல்லிடுவாங்க..’

அந்த கருத்துதான் எத்தனை உண்மை!

ரகுபதியும் ஜானகியும் ஒருவரை ஒருவர் பார்த்து அடுத்து என்ன பேசுவது என்பது தெரியாதபடி நிற்கவும்

"வாம்மா வந்து உன் கண்ணனை வாங்கிக்கோ.." என்றாள் அந்த தெய்வக் கிழவி.

"அம்மா.."

"ஆமாம் நீ தான் இனி இந்த குழந்தைக்கு அம்மா.."

"என் பிரச்சினை என்னன்னு.."

"இதுதானே உன் பிரச்சினை. ஒரு குழந்தைதானே உங்க பிரச்சினை?"

"ஆமாம்மா.. எனக்கு தாயாகற பாக்யமே இல்லைன்னு டாக்டர்கள் சொல்லிட்டாங்க.."

"ஆனா கடவுள் அப்படி சொல்லலியே.. இதோ உன் குழந்தை.

"அம்மா அது வந்து.."

"என்ன தயக்கம்.. இது ஒரு தாயில்லாக் குழந்தை! இதை ஏத்துக்கோ.. நீ தாயாயிடுவே!"

அந்த கிழட்டுத்தாய் குழந்தையை ஜானகி எதிரில் நீட்டினாள். குழந்தை ஜானகியை பார்த்து சிரித்த படியே மீண்டும் எச்சிலைப் பிலிற்றியது. ஜானகி ஒரு பிச்சைக்காரியின் குழந்தையிடமே உருகிப் போனவள்.. இதனிடம் தானா விலகி இருப்பாள். அடுத்த நொடியே வாரிக் கொண்டாள். ரகுபதியின் கண்களில் கண்ணீர் துளிர்த்து விட்டது.

"அம்மா நாங்க உங்களப் பத்தி கொஞ்ச நேரம் முந்தித்தான் கேள்விப்பட்டோம். எங்களுக்கு ஒரு குழந்தை பிறக்குமா பிறக்காதான்னு தெரிஞ்சுக்கத்தான் உங்கள பார்க்கவும் வந்தோம்.. ஆனா எங்களுக்கு இப்படி



ஒரு குழந்தையே கிடைக்கும்னு நாங்க கொஞ்சம் கூட எதிர்பார்க்கலம்மா.. கொஞ்சம் கூட எதிர்பார்க்கல."

"அதுக்குப் பேர் தான் விதி.. இத்தனைக்கும் நீ பாதி வழில திரும்பிப் போக வேற பார்த்தே! ஆனா நீ அப்பாவாகியே தீரணும்னு விதி இருக்கும்போது உன்னால எப்படி போக முடியும்?"

- ஜெஜலட்சுமியம்மாவின் கேள்வி இருவரையும் அடுத்தகட்ட திகைப்புக்கு ஆளாக்கியது.

"அம்மா... நீங்க நிஜமாலுமே தெய்வப் பிறவி தாம்மா. மூன்றாவது கண் இல்லாம இப்படி எல்லாம் நடந்ததை சொல்ல முடியாது. எங்க வரைல ஜானகிக்கு குழந்தை இல்லேங்கறதுதான் டாக்டர்களோட பதில். அதனால என் ஜானகி எனக்கு இன்னொரு கல்யாணம் பண்றதுலேயே குறியா இருந்தா. எனக்கோ அவளைத் தவிர இன்னொரு பெண்ணை நினைச்சுப் பார்க்கற சக்தியே இல்லை. இப்படி ஒரு நிலைல நீங்க எந்த பதிலை எப்படி சொல்வீங்களோன்னு பயந்து பயந்து தான் வந்தேன்.

ஆனா சந்திச்ச மாத்திரத்துல எங்களுக்கு ஏற்ற ஒரு விடை குழந்தை வடிவத்துலயே கிடைக்கும்னு நான் எதிர்பார்க்கல. இதைவிட எங்களுக்கு ஒரு சரியான திருப்தியான பதிலும் இருக்க முடியாது" என்ற ரகுபதி அப்படியே சாஷ்டாங்கமாக அந்த தாயின் காலிலும் விழுந்தான். அதைப் பார்த்து ஜானகியும் குழந்தையை காலடியில் போட்டுவிட்டு தானும் விழுந்து எழுந்தாள். பின் இருவரும் எழுந்து நின்றனர். அந்த நொடியில் ரகுபதிக்குள் இது யாருடைய குழந்தை? என்னும் கேள்வியும் எழாமல் இல்லை. ஒரு பொருளை வாங்கிச்

செல்வது போல குழந்தையை வாங்கிச் செல்வது என்பது சாத்யமில்லை. இதெல்லாமே மனதில் ஓடும்போது அதையும் உணர்ந்ததுபோல

"என்னப்பா... இது யாரோட குழந்தை, நாளைக்கே இதனால ஏதாவது பிரச்சினைகள் வருமா, இது என்ன குலமோ, என்ன கோத்ரமோன்னுல்லாம் ஓடுதா?" என்று கேட்டாள் அந்த தெய்வக் கிழவி.

ரகுபதியிடம் மீண்டும் ஒரு திணறல்.

"அம்மா.. நீங்க கேட்டது வாஸ்தவம்தாம்மா.. எனக்கு சாதி மதமெல்லாம் ஒரு பொருட்டு இல்லை. ஆனா இந்த தங்க விக்ரகத்துக்குன்னு ஒருத்தர் கூடவா இல்லாம போயிட்டாங்க அதான் என் கேள்வி.." என்றான்.

"இவனுக்கு நல்ல விதி.. அதனாலதான் இவன் முதல்ல என் கைல கிடைச்சான். பின்னாலயே நீங்களும் வந்தீங்க. இதுபோதும் இவனோட அதிர்ஷ்டம் எப்படிப் பட்டதுன்னு சொல்ல... சில விஷயத்துல நதி மூலம் ரிஷி மூலமெல்லாம் பார்க்கக் கூடாது. இவன் வரைல இதோ இந்த ஏழு கன்னிமார்கள் தான் இவன் தாய். நான் இவனோட பாட்டி, நீங்கதான் இவனோட வருங்கால தாயும் தந்தையும்.. இவன் உங்க வீட்டுக்குள்ள நுழையற நொடில இருந்து உங்க வாழ்க்கையே மாறும் பாருங்க. இனி உங்களுக்கு துக்கமே இல்லை. அதான் எட்டு வருஷமா அழுது தீர்த்துட்டீங்களே.."

- கெஜலட்சுமியம்மாவின் ஒவ்வொரு வார்த்தையும் ஜானகிக்குள் ஒவ்வொரு தீக்குச்சியாய் எரிந்து அவள் மனம் முழுக்க இப்போது சூரியன் உதித்த மாதிரி ஒரு வெளிச்சம்.



"புறப்படுங்க.. அந்தி சாயறத்துக்குள்ள இந்த குழந்தையோட வீட்டுக்கு போங்க." என்றாள்.

"ரொம்ப சந்தோஷம்மா... நாங்க திரும்ப உங்கள பாக்க நினைச்சா எங்கம்மா பார்க்க.."

"நீ நினைச்சாலே போதும்... நானே கூட வருவேன். என் பேரனான இவன் எப்படி எல்லாம் வளர்றான்னு பார்க்கற ஆசை எனக்கு இருக்காதா என்ன?"

"அப்ப நீங்க எங்க வீட்டுக்கு வருவேன்னு சொல் நீங்களா?"

"இந்த கண்ணன் வரவைப்பான்னு சொல்றேன்."

"சந்தோஷம்மா சந்தோஷம்... ஒரு நிமிஷம்.." என்று பாக்கெட்டில் இருந்த பர்ஸை எடுத்து அதிலுள்ள விசிட்டிங் கார்டையும் எடுத்து நீட்டிய ரகுபதியை பார்த்து சிரித்தபடியே கார்டை வாங்கிக் கொண்ட கெஜலட்சுமியம்மா

"உன்னையே தெரிஞ்ச எனக்கு உன் முகவரி தானா தெரியாது?" என்று கேட்டபோது ரகுபதிக்கு கொஞ்சம் கூச்சமாகி போனது!

சார்ச்சாலையில் காருக்கு வெளியே நின்றபடி இருந்த டிரைவர் ரத்னம் கையில் குழந்தையோடு வந்த இருவரையும் பார்த்து விக்கித்துப் போனான்.

"ஐயா... என்னங்கய்யா குழந்தைக்காக போன நீங்க இப்படி ஒரு குழந்தையோடயே வந்து நிக்கறீங்க?"

அவன் கேள்விக்கு ரகுபதி பதிலைக் கூறாமல் பாய்ந்து வந்து கட்டிக் கொண்டான்.

"ஐயா என்னங்கய்யா இதெல்லாம்?"

"ரத்னம் நீ என் கார் டிரைவர் மட்டுமல்ல.. வாழ்க்கைக்கே டிரைவர். நீ மட்டும் வற்புறுத்தி அந்தம்மாவை பாக்கச் சொல்லாம போயிருந்தா இந்த தங்க விக்ரகம் எங்களுக்கு கிடைச்சிருக்காது.." என்றபடியே விலகினான்.

"எப்படிங்கய்யா இது நடந்தது.. இந்த குழந்தைக்கு தாய்ன்னு யாருமே இல்லையா?"

"இல்லேன்னுதான் தோணுது.. பெத்தவ இருந்தா அந்தம்மா எதுக்கு குழந்தையை எங்க கைல கொடுத்து இனிமே இந்த குழந்தைக்கு நீங்கதான் அப்பா அம்மான்னு சொல்லணும்?"

"என்னால இதை நம்பவே முடியலீங்க.."

"எங்களாலையும்தான்.. அந்தம்மா எங்களை கேள்வி கேட்கவே விடலை. ஏன் வந்தோம் எதுக்கு வந்தோம்னு எல்லாத்துக்கும் கேட்காமலே பதிலைச் சொல்லி குழந்தையையும் கைல கொடுத்து இருட்றதுக்குள்ள வீட்டுக்கு போகணும்னு சொல்லிட்டாங்க. இப்ப என்ன மணி?"

"அஞ்சேகால் ஆகுதுங்க... கார்ல ஏறுங்க.. ஆறே கால் மணிக்கு நம்ம பங்களா வாசல்ல இந்த கார் இருக்கும்.." என்ற ரத்தினமும் பாய்ந்து காரில் ஏறினான்.

காரும் சீறத் தொடங்கியது!



அந்த கிணற்றின் கரையில் ஊரே கூடியிருந்தது. கன்னிமார் கோவிலில் குழந்தையை விட்டு விட்டுச் சென்ற பெண் அந்த கிணற்றில் தான் குதித்து உயிரை விடப் பார்த்திருந்தாள். சிலர் பார்த்துவிடப் போய் அவளைக் காப்பாற்றி கரையிலும் போட்டிருந்தனர். தண்ணீரில் அவள் விழுந்த வேகத்தில் கிணற்றுச் சுவற்றில் தலைமோதி ரத்த காயமும் ஏற்பட்டிருந்தது.

கிராமப்புறமானதால் வண்டிச் சக்கரத்தில் படுக்க வைத்து வேகமாகச் சுற்றி வயிற்று நீரை வெளியே வரச் செய்ததோடு தலையில் அடிபட்ட பாகத்தில் தற்காலிகமாக பச்சிலைகளை வைத்தும் கட்டும் போட்டிருந்தனர்.

கண் முழித்தால்தான் அவள் யார் என்ன ஏது என்பது அவர்களுக்கு தெரிய வரும். அதற்காக அவர்களில் சிலர் காத்திருந்ததும் வீண் போகவில்லை. அவளிடம் மெல்ல பிரக்ஞை திரும்ப ஆரம்பித்திருந்தது.. முகத்தில் சிணுங்கல்கள்! வலி வேதனையின் பிரதிபலிப்புகள் அதற்கு நடுவில் கண் திறந்து பார்த்தவளுக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை. காத்துக் கொண்டிருந்தவர்களும் கேள்விகளாய் கேட்கத் தொடங்கினர்.

"யாரு தாயி நீ... இப்படியா உசுரை மாச்சுக்கப் பாப்பே? உசுரோட மதிப்பு தெரியாதவளா இருக்கியே ஆத்தா.." என்றாள் ஒருத்தி..

"உனக்கு நல்ல நேரம்.. அதான் நீ குதிக்கறத நாங்க பார்த்துட்டோம். இல்லாட்டா என்ன ஆகியிருக்கும்?"

"உன் பேர் என்ன தாயி.. நீ எந்த ஊரு?"

அவர்களின் அவ்வளவு கேள்விகளுக்கும் அவள் பதில் கூறாதபடி மலங்க மலங்கப் பார்த்தாள். வலிக்கின்ற

தலைப் பாகத்தையும் கையால் தொட்டுப் பார்த்து முகம் சுளித்தாள்.

"என்னம்மா கேக்கறோம்ல.. பதில் சொல்லு.. எதனால இப்படி கிணத்துல குதிச்சே?"

அவளுக்கு யார் கேள்விகளுக்கும் பதில் சொல்லத் தோன்றவில்லை. முடியவில்லையா இல்லை பிரிய மில்லையா? அதுவுமில்லை அவளுக்கு தான் யார் என்பதே தெரியவில்லையா?

## 4

அவள் மிரள மிரளப் பார்த்தாள். கஷ்டப்பட்டு தலையையும் சொரிந்து கொண்டாள். கண்களை விரித்தும் சுருக்கியும் என்னவெல்லாமோ செய்தாள்.

பார்க்கின்றவர்களுக்கும் அவள் நிலை ஓரளவு புரிந்து விட்டது.

"சரிதான் கிணத்துல விழுந்து தலைல அடி பட்டதுல சித்தம் கலங்கிடுச்சாட்டம் இருக்கு.."

"அப்படித்தான் தெரியுது... பாவம் இது யார் பெத்த புள்ளையோ?"

அவர்களாக கேள்விகளை கேட்டுக் கொண்டு பரிதாபப்படவும் செய்தனர். அவளும் மெல்ல எழுந்து அமர்ந்தாள். அப்போது தலையில் காயம் பட்ட இடத்தில் இருந்து லேசாக ரத்தம் கசிந்து வலிக்கவும் செய்தது.



"வலிக்குதாட்டம் இருக்கு. இப்ப இந்த பொண்ணை என்ன பண்றது?"

"பேசாம ஏற்காடு போலீசுக்கு தகவல் தந்து அங்க கொண்டு போய் விட்றுவோம்.."

"அதுக்கு முந்தி ஊர் மிராசுகிட்ட ஒரு வார்த்தை சொல்லுவோம். அவர் பார்த்து என்னவோ செய்துக் கட்டும்."

- என்று இறுதியாக மிராசுவை பார்த்துச் சொல்ல முடிவு செய்து ஒருத்தி ஓடினாள்.

அந்த மலைக் கிராமத்தில் ஒரு தார்சுக் கட்டிடமாக இருந்தது "மிராசுதார் காளியப்பன் வீடு." வீட்டு முன் பாகத்தில் பன்னீர் மரம், மஞ்சக் கடம்பு, பலா என்று எல்லாவித மரங்களும் ஊட்டமாய் வளர்ந்திருந்தன.

அந்த வீட்டுக்குள் தகவல் சொல்ல நுழைந்த பெண்ணின் எதிரில் மிராசுவின் மனைவி சாமந்திப் பூக்களைத் தொடுத்து மாலை போல கட்டிக் கொண்டிருந்தாள். அவளது மூத்த மகள் மத்தைக் கொண்டு தயிர் கடைந்து கொண்டிருந்தாள். வீட்டு கொல்லையில் மிராசுவுக்கு நாவிதன் சவரம் செய்து கொண்டிருந்தான்.

ஓடிவந்த பெண் மிராசுவின் மனைவியான தாமரையிடம் தான் பேசத் தொடங்கினாள்.

"மிராசம்மா.. மிராசம்மா.. நம்ம ஊருக்குள்ள ஒரு பொண்ணு கேணிக்குள்ள விழுந்து உசுரை விடப்பாத்திச்சு. நம்பாளுங்க பார்த்துட்டு காப்பாத்திட்டாங்க. ஆனா தலைல அடிபட்டதுல அதுக்கு பேச்சே வர மாட்டேங்குது... நீ யாரு உன் பேரு என்னன்னு கேட்டா முழி முழின்னு முழிக்கறா..."

அவள் சற்றே மூச்சிறைக்க பேசுவதை கேட்டபடியே முகத்தை துடைத்துக் கொண்டே வந்தார் மிராசுதார் காளியப்பன்.

வந்தவர் அந்த பெண்ணைப் பார்த்து,

"அந்த பொண்ணை கூட்டிகிட்டு கன்னிமார் கோயிலுக்கு வரச் சொல்லு. ஆத்தாகிட்ட அதை நிறுத்தி விசாரிப்போம். ஆத்தா பார்த்துகிடட்டும்.." என்றார்.

"சரிங்கய்யா.." என்று அவளும் திரும்பி ஓடினாள்.

மிராசு மனைவிக்கும் அவரது பதிலில் ஒரு திருப்தி என்பது அவளது முகம் போன போக்கில் நன்றாக தெரிந்தது.

"ஹூம்.. என்ன பாவம் செஞ்சாளோ நாண்டுக்கப் பார்த்து தப்பியிருக்கா.." என்று ஒரு பெருமூச்சு விட்டாள்.

அப்போது அவளது ஒரே மகனான சென்ராயன் என்பவன் செல்போனில் எஃப் எம் சினிமா பாட்டு கேட்டபடியே வந்தான்.

அது ஒரு இடத்தில் நன்றாக பாடியது. ஒரு இடத்தில் இரைச்சலிட்டது. அந்த மலை கிராமத்தில் சிக்னல் கிடைப்பதும் அப்படித்தான்.

மகனை சற்று செருக்கோடு பார்த்தாள். அந்த கிராமத்திலேயே பத்தாம் வகுப்பு வரை படித்தவன் அவன் மட்டும்தான்! ஏற்காட்டில் எஸ்டேட் ஒன்றில் வேலை செய்கிறான். கேட்டால் சூப்பரவைசர் என்பான். அவர்கள் பாஷையில் கங்காணி! மாசம் ஆறாயிரம் சம்பளம் வருகிறது. அதற்கே அவன் கால்கள் தரையில் நிற்பதில்லை.



எல்லாவிதமான கெட்ட பழக்கங்களும் உண்டு. எப்போதும் வாயில் பான்பராக் இருக்கும். மிராசு மகன் என்பதால் ஊருக்குள்ளும் ஒரு மரியாதை. ஆனாலும் விவரம் தெரிந்தவர்கள் அவனை அவ்வளவாக மதிப்ப தில்லை.

மகனைப் பார்த்த தாமரை "ஏன் கண்ணு லேட்டு?" என்று பாசத்தோடு கேட்டாள்.

"எஸ்டேட்டுக்கு இன்னிக்கு நிறைய துரைமாருங்க வந்தாங்க. எல்லா இடத்துக்கும் நான் தான் கூட்டிகிட்டு போனேன். ஆமா இன்னிக்கு கோழிக் கொழம்பு தானே" என்று கேட்டான்.

"ஐயோ கண்ணு! இன்னிக்கு அம்மாசி.. கவுச்சி யெல்லாம் பண்ண மாட்டோம்ல. கத்தரிக்காயை பொறிச்சு உருளையை போட்டு சாம்பார் வெச்சிருக் கேன். இன்னிக்கு ஒருநாள் சாப்ட்டுக்க. நாளைக்கு கோழியை நெய்யுலயே பொறிச்சு வெச்சுருக்கேன்..."

- என்று மகனிடம் உருகினாள் தாமரை.

"அடியே பூ கட்டிட்டியா ஆத்தாளை பாக்க போலாமுல்ல?" என்று இடையில் அதட்டலாக கேட்டார் மிராசு.

"ஒரு அஞ்சு நிமிசங்க.."

"நான் போய் முழுக்கு போட்டு வரேன். தயாரா இரு. இதுல பொட்டச்சி பஞ்சாயத்து வேற.."

"யாருன்னு தெரியலை கண்ணு. எவளோ ஒருத்தி நம்ம ஊர் கேணில விழுந்து நாண்டுக்க பாத்துருக்கா. நம்பாளுங்க பார்த்து காப்பாத்திப்புட்டாங்க. ஆனா

தலைல அடிபட்டு பாவம், அதுக்கு தன் நினைப்பே தப்பிப் போச்சாம்.."

- தாமரை சொன்ன நொடி அவன் முகம் ஒரு மாதிரி அதிர்வைக் காட்டியது.

"உனக்கும் பாவமா இருக்குல்ல?"

"அ.. ஆமாம் ஆத்தா.."

"அதான் உங்கப்பு நம்ம கன்னிமார் கோவில் ஆத்தாகிட்ட அதை கூட்டிகிட்டு வரச் சொல்லியிருக் காரு. அதுக்கு தான் யாருன்னு தெரியாட்டியும் கோவில்ல இருக்கற நம்ம கெஜலட்சுமியம்மா முகத்தை வெச்சே சொல்லிடுவாங்கல்ல..?"

- என்றாள். அதைக் கேட்டு அவன் முகத்தில் மேலும் மிரட்சி பரவியது.

"ஏங்கண்ணு.. உன் மூஞ்சி ஏன் ஒரு மாதிரி போவுது?"

"இல்ல.. யாரோ ஒருத்திக்காக அம்மாகிட்ட கூட்டி கிட்டு போறது எனக்கு நல்லதா படலை.."

"ஊருக்கு மிராசா இருந்துகிட்டு இதைக்கூட செய்யாட்டி அப்புறம் யாரு மதிப்பா? நீ போய் சாப்பிடு கண்ணு. உங்கப்பா முழுக்கு போட்டுட்டு வந்தாருன்னா நான் இந்த பூமாலையோட கன்னிமார் கோவிலுக்கு போவணும்.

அம்மாசிக்கு அம்மாசை பூசை நம்ம முறையில்ல?

- அவள் உற்சாகமாக சொன்னபடி கட்டிய சாமந்திப் பூ மாலையை ஒரு மூங்கில் தட்டில் வைத்து



அதில் சின்னதாக ஒரு பலாப்பழம், ஒரு சீப்பு மலை வாழை என்று பூஜைக்குரியவைகளை எடுத்து வைக்கத் தொடங்கினாள்.

சென்ராயன் முகத்தில் தீவிர சிந்தனை.

"ஏ ஆத்தா.. கிணத்துல உழுந்தது ஒரு பொண்ணு மட்டும் தானா - இல்ல கூடவே கைக்குழந்தையுமா?"

- என்று தாடையை தேய்த்தபடியே கேட்டான்.

"குழந்தையா... அப்படி ஒண்ணும் அந்த புள்ள சொல்லலியே.. ஏன் கண்ணு அப்படி கேட்டே?"

"இல்ல.. காலைல நான் எஸ்டேட்டுக்கு என் பைக்குல போகையில எதிர்ல ஒரு பொண்ணு கைக் குழந்தையோட அழுதுகிட்டே போச்சு. ஒருவேளை அந்த பொண்ணு தானோன்னு தெரிஞ்சுக்கத்தான் கேட்டேன்.."

"அப்படியா விசயம்?" - என்று தாமரை ஆலாபிக்க காளியப்பன் தலையை துவட்டியபடியே வந்தார். அவர் வரவும் சென்ராயன் விலகினான்.

"என்னடி புறப்படலாமா, வண்டி கட்டடச் சொல்லவா?"

"சொல்லுங்க சொல்லுங்க" என்றாள் தாமரை.

அடுத்த சில நிமிடங்களிலேயே அந்த வீட்டு வாசலில் ஒரு மாட்டு வண்டி புறப்படத் தயாராக வந்து நின்றது.

அதில் தாமரையும் காளியப்பனும் ஏறிக் கொண்டனர்!

சேலம் மிதிலா விலாஸ்!

இதுதான் ரகுபதி ஜானகியின் நவீன பங்களாவுக் கான நாமகரணம். மிக மிக அமைதியான அந்த பங்களா வில் குழந்தையின் அழுகுரல் ஒலிக்கவும் அதை ஆச்சரியத்தோடு கேட்டபடியே வந்தாள் கீரைக்காரி கண்ணம்மா.

அழும் குழந்தையை தோளில் போட்டு தட்டிய படியே போர்ட்டிகோ வாசலுக்கு வந்த ஜானகியை பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனாள்.

"கண்ணம்மா பொன்னாங்கண்ணி கீரை மட்டும் இன்னிக்கு போதும்" என்றாள் ஜானகி.

"யாரும்மா குழந்தை... உங்க சொந்தக்காரங் களுதா?"

"அது.. அது.. என் குழந்தை தான் கண்ணம்மா?"

"என்னது... உங்க குழந்தையா?"

"அ... ஆமா.. நீ கீரையை கொடு.."

"என்னம்மா சொல்றீங்க.. எதான தத்துகித்து எடுத்துட்டீங்களா?"

"அ.. ஆமாம்.."

"சந்தோசம்மா. எதுக்காகம்மா இப்படி அழுவுது! பால் கொடுத்தீங்களா?"

"கொடுத்தேன்... குடிக்காம அழுதுகிட்டே இருக் கான். அவரும் இப்ப பார்த்து வீட்ல இல்லை. க்ளப்புக்கு டென்னிஸ் விளையாட போனவர் இன்னும் வரலை.."



"பாலும் வேணாம்னு அழுவுதுன்னா வயித்து வலியா இருக்கும்மா.."

"அதுக்கு என்ன பண்ணலாம் - டாக்டர் கிட்ட தான் போகணும் - இல்ல?"

"அய்ய.. குழந்தையை இப்படி கொடுங்க.. ஊட்டுக் குள்ள விளக்கெண்ணை இருந்தா எடுத்துகிட்டு வாங்க - போங்க சீக்கிரம்.."

- ஜானகி கண்ணம்மாவிடம் குழந்தையை தர முன் வந்து, பின் தராமல்

"விளக்கெண்ணையை வயித்துல தடவணுமா... சொல்லு நான் தடவறேன்.."

"அதே தான் சூட்டு வலியா இருந்தா இரண்டே நிமிசத்துல குழந்தைக்கு வலி விட்றும். அப்படியே பின்னால உக்கார்ற இடத்துல சின்னதா சோப்புத் துண்டை எடுத்து உள்ளார செருகினேன்னா மலம் கட்டிக்கிட்டு இருந்தா சும்மா பீச்சுகிட்டு வந்து குழந்தை கலகலன்னு சிரிக்கும்.."

- என்ற அந்த கீரைக்காரியின் வைத்தியத்தை கீரையைக் கூட வாங்காமல் போய் முதல் காரியமாகச் செய்தாள் ஜானகி.

மிகச் சரியாக ஐந்து நிமிடத்தில் குழந்தை மலம் கழித்தபடியே சிரிக்க ஆரம்பித்தது.

அதைப் பார்த்த ஜானகிக்கும் கண்கள் பனித்துப் போனது.

"தேங்க்ஸ் கண்ணம்மா.. நான் பயந்தே போயிட் டேன்"

- என்று ஹாலுக்கே வந்துவிட்ட கண்ணம்மா விடமும் மனம் விட்டாள்.

"நீங்க நவுருங்கம்மா.. அது துணியை நான் சுத்தம் செய்யறேன்.." என்று முன் வந்த கண்ணம்மாவையும் தடுத்தவள் "இதை எல்லாம் நானே செய்யறேன் கண்ணம்மா." என்ற போதே அவள் தாய்மையின் தவிப்பையும் துடிப்பையும் கண்ணம்மாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

"அம்மா எதுக்கும் ஒரு வேலைகாரிய வெச்சுக் குங்க.. உங்களுக்கு பதட்டமில்லாம இருக்கும்.."

"இல்ல என் குழந்தைக்கான எல்லா வேலையையும் நான்தான் செய்வேன். சும்மா சொல்லக்கூடாது பார்த்த மாத்திரத்துல குழந்தையோட பிரச்சினையை நீ சரியா கண்டு பிடிச்சு சொல்லிட்டியே?"

"நாலு பிள்ளை பெத்தவம்மா நான்.. இது கூட தெரியாட்டி அப்புறம் பொம்பள ஜென்மமா பொறந்து என்ன புண்ணியம்?'

"சந்தோஷம்... வந்தது வந்தே - இந்த குழந்தையை எப்படி குளிக்க வைக்கறதுன்னு கொஞ்சம் சொல்லித் தர்றியா?"

"ஆமாம்மா.. குழந்தை வளர்றதே குளிக்க வைக்கறதுல தான். நல்லா எண்ணையை பூசி எங்க எப்படி நீவி உடணுமோ அப்படி நீவி விட்டு, குளிப்பாட்டணும். அப்புறமா சும்மா சாம்பிராணி புகை போட்டு தலையை காய வெச்சு நெத்தியிலையும், கன்னத்துலயும் நல்லா கட்டவிரல் சைசுக்கு பொட்டு வெச்சு, அப்படியே மார்போடு அமுக்கி பாலைக் கொடுத்தாக்கா குழந்தை மாங்கு மாங்குன்னு பசில எப்படிக் குடிக்கும் தெரியுமா?"



- அவள் சொல்வதே மிகுந்த ரசனையோடு இருந்தது. அதைக் கேட்கும்போது ஜானகிக்கு பால் சுரக்க வக்கற்றுப் போன தனது வறண்ட மார்புகளை நினைத்து கண்ணீர் தான் வந்தது.

"ஏம்மா அழுவறீங்க?"

"அப்படி எல்லாம் பால் கொடுக்க எனக்கு வக்கில்லையே கண்ணம்மா.?"

"அதனால என்னம்மா... பசும்பாலை வாங்கி பாதிக்கு பாதி தண்ணிய விட்டு இளம் சூட்டோட பாட்டில்ல உட்டு கொடுங்க. அப்பால இன்னொரு விசயம்.."

"என்ன கண்ணம்மா?"

"என்னதான் புட்டிப்பால் கொடுத்தாலும் தாய்ப் பால்ல தான் சத்து இருக்கு. அது இல்லாத குழந்தைங்க வளர வளர ரொம்பவே கஷ்டப்படுங்க. முணுக்குன்னா காச்சக் குளிர் வந்து சிக்குக் கோழியாவே இருப்பாங்க. முப்பது வயசுலயே தலைல நரை உழுந்து அம்பது வயசுலலே எம்பது வயசுக்காரங்க மாதிரி தளர்ந்தும் போயிடுவாங்க.

"நானும் கேள்விப் பட்டிருக்கேன்.. ஆனா இல்லாத ஒண்ணுக்கு எங்க கண்ணம்மா போக?"

"என் ஊட்டாண்ட ஒருத்தி இருக்கா... பாவம் அவ குழந்தை பொறந்து செத்துப் போச்சு. ஆனா மார்புல பால் கட்டி வலியால துடிக்கறா. அவளை நான் கூட்டிகிட்டு வரேன். ஒரு ஆறு மாசத்துக்கு அவ பால் தரட்டும். என்ன சொல்றீங்க?"

கண்ணம்மா எங்கேயோ தொடங்கி எதிலோ வந்து நின்றாள். அவள் சொல்வதிலும் நியாயம் இருக்கத்தா செய்கிறது. ஆனாலும் ஜானகியால் அந்த விஷயத்தி சட்டென்று ஒரு பதிலைக் கூற முடியவில்லை. அப்போ டென்னிஸ் ராக்கெட்டுடன் ரகுபதியும் நுழைந்திரு தான்.

கண்ணம்மாவை பார்க்கவும் அவள் நெளிந் குழைந்தாள். தீவிரமாக யோசித்த ஜானகியும் ஒ முடிவுக்கு வந்தவளாக.

“இல்ல கண்ணம்மா வேண்டாம்..” என்றாள்!

## 5

தாய்ப்பாலை வேண்டாம் என்று மறுத் ஜானகியை கீரைக்காரி கண்ணம்மாவோ சேர்ந்து கொண்டு ரகுபதியும் ஆச்சரியமா பார்த்தான்.

“ஏம்மா வேண்டாங்கறீங்க.. குழந்தைக்கு தானம்ம நல்லது?” என்று கண்ணம்மா சற்று ஏக்கத்தோ திருப்பிக் கேட்டாள்.

“வேண்டாம்னா விடேன்... சரி கண்ணம்மா புறப்படு. நாளைக்கு இதே நேரம் வா. நான் குழந்தையை குளிச்சு விடும்போது நீ கூட இரு. எனக்கு அ போதும்..”

“சரிம்மா..” கண்ணம்மா தன் கீரைக் கூடையை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். ரகுபதிக்கு என்ன தோன்றியதோ பர்ஸில் இருந்து ஒரு ஐநூறு ரூபாயை எடுத்து கண்ணம்மா முன் நீட்டினான்.



“எதுக்குங்கய்யா?”

“வெச்சுக்க. அந்த தாய்ப்பால் கொடுக்க தயாரா இருக்கற பெண்ணையும் இப்பவே கூட்டிகிட்டு வா..” என்றான். அவளிடம் ஒரு திகைப்பு.

“என்ன பாக்கறே.. கிளம்பு! நீ சொன்ன மாதிரி ஒரு குழந்தை வளர்றதை விட ஆரோக்யமாக வளருவதற்கு தாய்ப்பால் தான் பிரதானம். அப்படி ஒரு விஷயம் உன் மூலமா தேடி வரும்போது அதை பயன்படுத்திக்கறது தான் புத்திசாலிதனம்.”

கண்ணம்மா வேகமாக ஜானகியை தான் பார்த்தாள். ஜானகி பதிலுக்கு ரகுபதியை பார்த்தாள். “அங்க என்ன பார்வை? ஜானகிக்கு குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்க கூடாதுங்கற எண்ணமெல்லாம் கிடையாது. ஆனா தாய்ப்பால் கொடுக்கற தாய்மேல தன் குழந்தை பாசம் வெச்சுட்டா என்ன பண்றதுங்கற பயம்.. இது ஒரு அர்த்தமில்லாத. பயம். போகப் போக சரியா போயிடும். அந்த பொண்ணும் ஒரு நாளைக்கு மூணு வேளையோ நாலு வேளையோ இங்க வந்து பால் தரட்டும். அதுக்கு அந்த பொண்ணு கேக்கற காசை கொடுத்துடுவோம்..” என்றான்.

கண்ணம்மாவும் உற்சாகமாக புறப்பட்டுப் போனாள். அவள் விலகவும் ரகுபதி ஜானகி அருகில் அமர்ந்தான். குழந்தை அவள் மடியில் அப்பொழுது தான் மலர்ந்த ஒரு மலரைப் போல கிடந்தது.

மொழுக்கென்று அவ்வளவாய் நீளமில்லாத தலைமுடியோடு கூடிய தலை. நுனி திரண்ட மூக்கு... ஈர நுங்கைப் போன்ற இதழ்கள்.. இப்படியும் அப்படி

யும் உருளும் கருந்திராட்சை போல் கண்கள். புருவத்தில் பழுப்பாக சிறிய அளவிலான முடிக் கூட்டம்!

ஓரளவு புஷ்டியான சதைப் பிடிப்புள்ள உடல் மாகாலிக் கிழங்கு போன்ற கைவிரல்கள்..!

ரகுபதி குழந்தையின் அழகை ரசித்தான். அவளிடம் மௌனம் தொடர்ந்தது..

"என்ன ஜானு.. என் மேல கோபமா?"

"..........."

"பேசு ஜானு.. நான் குழந்தையோட நல்லதுக்காக தான் அந்த பொண்ணை கூட்டிகிட்டு வரச் சொல்லியிருக்கேன்."

"அதுசரி... அதுக்காக கண்ணம்மா எதிர்லையே என் குழந்தை பால் கொடுக்கற தாய் மேல பாசம் வெச்சுட்டா என்ன பண்றதுங்கற மாதிரி நான் பயப்படறதா சொன்னீங்களே?"

"அதானே ஜானகி உண்மை?"

"அது... அது.."

"எது?"

"அப்படியெல்லாம் இல்லைங்க...?"

"அப்ப ஏன் தாய்ப்பால் வேண்டாம்னே?"

"பால் கொடுக்கும்போது அந்த தாய்க்கு செத்துப் போன தன் குழந்தை நினைவு வரும். தன் குழந்தை குடிக்க வேண்டிய பாலை இப்படி யார் பெத்த குழந்தையோ குடிக்குதேன்னு ஒரு எண்ணமும் வரும்! தாய்ப்பாலை பூரிப்போட சந்தோஷமா தரணும்ங்க. அந்த பெண்ணால



அப்படி தர முடியுமான்னு ஒரு சந்தேகம் எனக்கு வந்தது. அடுத்து அவளோட உதவிக்கு நம்மால பணம் தான் தர முடியும். தாய்ப்பாலுக்கோ விலை மதிப்பே கிடையாது. விலை மதிப்பில்லாத ஒண்ணுக்கு ஏதோ ஒரு விலையை நிர்ணயம் செய்ய நாம யாருங்க?"

ஜானகியின் ஒவ்வொரு கேள்வியும் ரகுபதியின் பொட்டில் அடித்தது போல் இருந்தது. பிரமித்துப் போனான். அவள் யோசித்த ஒரு கோணத்தில் கூட தன்னால் யோசிக்க முடியாமல் போனதை எண்ணி சற்று வெட்கப்படவும் செய்தான்.

"என்னங்க அப்படி பாக்கறீங்க?"

"சாரி ஜானகி. நான் உன்னை ஒரு வழக்கமான தாயா நினைச்சுட்டேன். நீ ரொம்ப உயரத்துல இருக்கே.."

"போதும்.. உடனே எதையாவது சொல்லாதீங்க! எனக்கு ஒரு வேலைக்காரி வேணும். ஏற்பாடு செய்யுங்க."

"இதை என்கிட்ட போய் சொல்றியே ஜானகி. வீட்டு வேலைக்காரிக்கு இன்டர்வியூவா வைக்க முடியும். இதெல்லாம் உன் டிபார்ட்மென்ட் கீரைக்காரி கண்ணம்மாவையே கேள்."

"அவளுக்கு கீரை விக்கற வேலை இருக்கே?"

"அதை அவள் ஒரு சம்பாத்யத்துக்காக தானே செய்யறா?"

"அதனால.."

"அதுல கிடைக்கற வருமானத்தை விட கூடுதலா நாம தருவோம்"

நாளைக்கே நான் கேட்டுப் பாக்கறேன்.”

“சரி நாளைக்கே நான் கேட்டுப் பாக்கறேன்.”

“கேட்டு பாக்காதே. கேட்டு முடி! என்னா எ
மகன் எந்த காரணம் கொண்டும் அழக்கூடாது.”

ரகுபதி குழந்தையின் கன்னத்தை வருடியபடியே
சொன்னதை ரசித்தவள் “குழந்தைக்கு பேர் வைக்க
ணும்ங்க. ஞாபகம் இருக்குல்ல?” என்றாள்.

“ஞாபகம் இருக்காவா... ஒரு பெரிய விழாவுக்கே
ஏற்பாடு செய்யப் போறேன் தெரியுமா?”

“எதுக்குங்க விழாவெல்லாம்... வீட்டோட சிம்பிளா
முடிச்சுக்க கூடாதா?”

“இல்ல ஜானகி.. இவன் தான் இனி நம்ம வாரிசு
அதை இந்த உலகத்துக்கு உரத்த குரல்ல சொல்வோம்
நம்மளைப் போல குழந்தைப் பேறு இல்லாதவங்கள்
ளாம் நம்பள பாத்துட்டு அனாதை இல்லங்களுக்கு
போய் குழந்தையை தத்து எடுக்கணும். இதனால இந்த
உலகத்துல ஆதரவில்லாம போய்ட்ட மனித உயிர்
களுக்கெல்லாமும் ஒரு வாய்ப்பும் வழியும் ஏற்படும்..”

அவனிடம் உற்சாகம் ததும்பி வழிந்தது. அவ
ளுக்கும் அவனது நோக்கம் மிகப் பிடித்திருந்தது.

“சரிங்க என்ன பேருங்க வைக்கலாம்?”

“நீயே சொல்லேன்..”

“இவன் நமக்கு கிடைக்கவே காரணம் மலைல நாம
சந்திச்ச கஜலட்சுமியம்மாதான். ஆகையால அவங்க
பேரை ஞாபகப்படுத்தற மாதிரி ஒருபேரைத்தாங்க
வைக்கணும்.”

“கஜலட்சுமிதாசன்னு வைக்கலாம்கறியா?”



“இந்த தாசன்கற பேரும் பாணியும் ரொம்ப பழசு.
புதுசா ஏதாவது..”

“பெண்ணா இருந்தா கஜலட்சுமிங்கற அவங்க
பேரையே வைக்கலாம். பையனா போய்ட்டானே?”

“அப்ப கஜேந்திரன்னு வைப்போம்..”

“கஜேந்திரன்... கஜேந்திரன்... நல்லாதான் இருக்கு.”

“இந்த நிகழ்ச்சிக்கு கஜலட்சுமி அம்மாவையும் நாம
கூப்பிடணுங்க..”

“கட்டாயமா... நடக்கப் போற நிகழ்ச்சியோட
ஹைலைட்டே அவங்க தான். நம்ம பங்களாவுக்கு
அவங்க வந்துட்டு போக நாமளும் புண்ணியம் பண்ணி
யிருக்கணும்.”

“சரிங்க அவங்கள நேர்ல போய் அழைச்சுட்டு
வருவோம்க..”

“முதல்ல நான் தேதியை முடிவு பண்றேன். பிறகு
பத்திரிகை அடிச்சு அதையும் எடுத்துகிட்டே போவோம்..?”

“அப்ப முதல்ல தேதியை முடிவு பண்ற வழியை
பாருங்க.”

ஜானகியிடம் உற்சாகமும் சந்தோஷமும் பொங்கி
வழிந்தது. ரகுபதியும் குழந்தையின் கன்னத்தில் ஒரு
முத்தமிட்டு விட்டு மாடிப்படிகளில் ஏறினான்.

அந்த வீட்டிற்குள் அவர்கள் இருவருமே இது
போல கலகலப்பாக பேசிக் கொண்டு மகிழ்ச்சி
யோடு இருந்து பலப்பல வருடங்களாகி விட்டன. ஒரு
குழந்தை... அவர்களுக்கு எல்லாவற்றையும் கொண்டு
வந்துவிட்டது!

## கன்னிமார் கோவில்!

ஏழு கன்னிகளுக்கும் தான் கட்டி எடுத்து வந்திருந் பூக்களைப் போட்டு விளக்கேற்றி வைத்து தேங்கா பழம் உடைத்து வைத்து ஊதுபத்தியால் வாசப் புகையை யும் உருவாக்கி முடித்தவளாக கஜலட்சுமியம்மாவுக்கா காத்துக் கொண்டிருந்தாள் தாமரை!

ஓரளவு கூட்டம் கூடியிருந்தது. ஒரு மரத்தடியி காளியப்பன் மார்பில் சட்டையின்றி வேட்டியையு இடுப்பில் கட்டிய துண்டுமாக நின்றபடி இருந்தா அவருக்கு அருகில்தான் அந்த தற்கொலைக்கு முயன் பெண்ணும் நின்று கொண்டிருந்தாள். அவளிட துளியும் சுவாதீனம் இல்லை. மனதுக்குள் துளியு எண்ணங்களே இன்றி ஒரு பிறந்த குழந்தையைப் போல அவள் இருப்பது போல் தான் பார்ப்பதற் தோன்றியது.

முதல் நாளின் இதே காலை வேளையில்தான் குழந்தையோடு வந்து கண்ணீரோடு அழத் தெரிந்தவ ளுக்கு இப்போது தான் யார் என்பதே தெரியாதபடி ஒ குழப்பம்.

இருபத்தி நான்கு மணி கால அளவில் ஒரு மனி வாழ்க்கை இப்படி கூட மாறக்கூடும் என்பதற் ஒரு உதாரணமாக அவள் நிற்பது போல் தான் தோன்றியது.

காளியப்பனும் அவளிடம் பேச்சு கொடுத்துப் பார்த்து சோந்து விட்டிருந்தார். கஜலட்சுமியம்மா வந்து ஏதாவது விமோசனம் பிறந்தால் உண்டு.



அம்மாவோ குகைக்குள் கண்களை மூடிக் கொண்டு தியானத்தில் இருப்பதாக உள்ளே எட்டிப் பார்த்தவர்கள் வந்து சொன்னார்கள்.

தியானம் கலைந்து வரும்வரை காத்திருப்பதில் காளியப்பனுக்கும் எந்தவித சிரமமும் இல்லை.

“அய்யா ரொம்ப நேரம் நிக்கிறீங்க.. கொஞ்சம் உக்காருவோமே” என்றார் ஒருவர். சரி என்று அந்த மரத்து நிழலிலேயே இடுப்புத் துண்டை விரித்து அதன்மேல் அமர எத்தனித்த போது கஜலட்சுமியம்மா வருவது தெரிந்தது. ‘அம்மா வர்றாங்க.. அம்மா வர்றாங்க..’ என்று ஒருவித பரபரப்பும் தொற்றிக் கொண்டது.

அந்த தாயின் முகத்தில் அழகாய் ஒரு புன்னகை! எல்லோரும் கைகளை கூப்பி வணங்கினர். பார்வையிலேயே எல்லோரையும் கனிவாக பார்த்த கஜலட்சுமியம்மா அந்த பெண்ணையும் பார்த்தாள்.

“தாயி... யாருன்னு தெரியல ஊர் கிணத்துல விழுந்து தற்கொலை செய்துக்க பார்த்துச்சு. ஆனா பாத்தவங்க காப்பாத்திட்டாங்க. கிணத்துல குதிச்சதுல தலைல அடிப்பட்டு சுய நினைவே போயிடிச்சாட்டம் இருக்கு..” என்று விளக்கினார் காளியப்பன்.

கஜலட்சுமியம்மாவின் பார்வை அந்த பெண்ணை வருடியது. மெல்ல அருகில் சென்று தன் கரத்தால் அவள் தலையை தொட்டு வருடவும் அவளுக்கும் மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது. சற்று சிலிர்த்துக் கொண்டாள். அதுவரை எங்கோ வெறித்தபடி இருந்தவள் கஜலட்சுமியம்மாவை ஊன்றி பார்க்கத் தொடங்கினாள்.

"அம்மா கை படவும் மனக்கட்டு நீங்கிடிச்சு. நல்லா பாக்குது" என்றாள் ஒருத்தி. ஆனாலும் பெரிதாக அவள் ஒன்றும் பேசிவிடவில்லை. மலங்க மலங்க விழித்தாள். "உன் பேர் என்னம்மா?" என்று கேட்டதற்கும் பதி வில்லை.

"என்னம்மா பண்ணலாம்.எதனால இந்த பொண்ணு இப்படி இருக்குது?" என்று கேட்டார் காளியப்பன்.

"இதுக்கு பதில் உனக்கு கூடிய சீக்கிரம் கிடைக்கும். பாவம் இவ!"

"பாவம்தாம்மா.. பாத்தாலே தெரியுதே! என் னம்மா பண்ணலாம்?"

உன் வீட்டுக்கு கூட்டிகிட்டு போய் வெச்சுக்கப் பாரேன்..

கஜலட்சுமியம்மாவின் பதில் காளியப்பனை திணற அடித்தது.

"இப்படி பிரமை பிடிச்ச ஒரு பெண்ணை நான் எப்படிம்மா வெச்சுக்க முடியும்?"

"உனக்கு தான் கடமை இருக்கு... எப்படின்னு கேட்டா நான் என்ன சொல்ல?"

"அம்மா இதுக்கு சோறு போட்றதுல எனக்கு எந்த குறையும் வந்துடாது. ஆனா வைத்தியம் பாத்து குணப் படுத்தற வேலையெல்லாம் இந்த பொண்ணு வரைல இருக்குதுங்களே..?"

"அதையும் செய்.."

"அம்மா இதை ஒரு கண்டிப்போட சொன்னாக்கா நான் நிச்சயம் செய்யறேம்மா.."



காளியப்பன் ஒத்துக் கொள்ளவும் கஜலட்சுமி யம்மாவிடம் ஒரு மாற்றம்.

"நீ என் பேச்சை மதிச்சதே போதும். இவ இங்கயே இருக்கட்டும். இவளை நான் பாத்துக்கறேன்" என்றாள். அதைக்கேட்ட பிறகுதான் தாமரைக்கே மூச்சு வந்தது.

"நீ போய் சீந்தல் கொடி இலையையும் கற்பூர வல்லி இலையையும் பறிச்சுகிட்டு வா.." என்று அங்கு நின்றபடி இருந்த ஒருவனைப் பார்த்து கூறினாள். அவனும் சரி என்று புறப்பட்டான்.

அப்போது காளியப்பனின் மகனான சென்ராயன் வெகுதூரத்தில் நின்று கொண்டு மரத்தடியில் நடப்பதை பார்த்தபடி இருப்பதை கஜலட்சுமியம்மாவும் கவ னித்தாள்!

## 6

சென்ராயனைப் பார்த்த கஜலட்சுமியம்மாள் முகத்தில் ஒரு அர்த்த புஷ்டியுள்ள புன்னகை வந்து தேங்கியது. கஜலட்சுமி யம்மாள் பார்வை சென்ராயன் மேல் படவும் அவனிடம் ஒரு படபடப்பு. அங்கிருந்து வேகமாக விலகிச் செல்லத் தொடங்கினான்.

அந்த பெண்ணோ சிலைபோல நின்றபடி இருந்தவள், அதிலிருந்து மாறியவளாக சற்று அசைந்து தான் நிற்கும் இடத்திற்கு அருகில் வளர்ந்திருந்த மரக்கிளை ஒன்றின் தழைகளை உருவி கீழே போட்டபடி இயங்கத் தொடங்கியிருந்தாள். பூஜைக்கு வந்திருந் தவர்கள் வைத்த கண் வாங்காதபடி பார்த்துக் கொண் டிருந்தனர்.

சீந்தல் கொடியையும் கற்பூர வல்லியையும் பறித்து வரச் சென்றவன் வருவதற்கு சற்று காலமாகும் போ தோன்றியது. கற்பூரவல்லி கபத்துக்கு நல்லது. அ சாறு துளசி போல கார குணம் உடையது. சீந்தல் கொ எதற்கு என்று தான் காளியப்பனுக்கு புரியவில்லை யோசித்தபடியே இருந்தார்.

"என்னப்பா... உனக்குள்ள நிறைய கேள்விக இருக்கற மாதிரி தெரியுதே?"

"ஆமாம் தாயி.. இந்த பொண்ணை பாத்த பாவமா இருக்கு. கிணத்துல விழுந்து தற்கொலை பண்ணிக்கப் பாத்துருக்கான்னா நிச்சயம் இதுக் ஏதோ பிரச்சனை வந்துருக்கணும். இந்த வயசுல ஒ பொண்ணுக்கு என்ன பிரச்சனை வரமுடியும்?

கழுத்துல தாலிக் கொடியும் இல்ல.. ஒரு வேளை இது யாரையாவது விரும்பி விரும்புனவன் ஏமாத்தி தால இது கிணத்துல விழுந்திருக்குமோ?"

காளியப்பன் கேள்விகளுக்கு பதில் கூறாமல் சிரி தாள் அந்த அருள் கிழவி.

"உன்கிட்ட வந்தா நிச்சயம் நல்ல வழி பொற கும்னு நம்பித்தான் கூட்டிகிட்டு வந்திருக்கேன். நல் வழியா காட்டி விடும்மா.."

"யாருக்கும் யாரும் எந்த வழியையும் காட்டிவி முடியாதுப்பா. அவங்கவங்க பண்ண பாவமும் புண்ணி மும்தான் அவங்கவங்கள வழி நடத்தும்.."

"அப்ப உன்கிட்ட வந்ததுல அர்த்தமில்லை யாம்மா.. உன்னை அந்த ஆத்தாவா தானே நாங் நினைக்கறோம். நீ இப்படி சொன்னா எப்படி?"



"எது உண்மையோ அதை தான் நான் பேசுவேன். நானா உன்னை என்னை கடவுளா நினைக்கச் சொன்னேன்?"

"தாயி.. எதுக்கு இப்படி என் கேள்விகளுக்கு எதிர்மறையாவே பதில் தர்றே... நான் என்ன தப்பா கேட்டுட்டேன்.."

- காளியப்பன் பொறுப்புணர்ச்சியோடு பேசிய தற்கு, தத்துவார்த்தமாகவே தான் பேசியதை எண்ணி திரும்பவும் ஒரு சிரிப்பு சிரித்தாள் கஜலட்சுமியம்மாள்.

"வருத்தப்படாதே... நான் சில சமயங்கள்ள இப்படித்தான் பேசுவேன். என்னை மாதிரி இந்த வாழ்க்கைய இவளுக்கு வெறுக்கத் தெரியில. இவ ளுக்கு இல்லற யோகத்துக்கு அதிர்ஷ்டமில்ல.. சன்யாச யோகத்துக்கு தான் இவளுக்கு விதி இருக்கு.. விருப் பங்கள் இடம் மாறினாலே இப்படித்தான் எல்லாமே தடம் மாறிடும். அதனால ஒண்ணுமில்ல! இவ வரைல இந்த உலகத்தோட எந்த இன்ப துன்பமும் பாதிக்காத படி இருப்பா.. பாரு இங்க இவளப்பத்தி தான் நாம பேசிகிட்டிருக்கோம். ஆனா அவ பாட்டும் இலையை பிச்சுப் போட்டுகிட்டு ஏகாந்தமா இருக்கா! ஆனா நாம இதை பைத்தியம்னு சொல்வோம்."

"உண்மைதாம்மா... ஒரு வகைல இப்படி இருக் கறதே கூட நல்லதுதான். ஆனா பெண் ஜென்மமா போய்ட்டாளே... வயசுக் காலத்துல வேற இருக்க... எந்த மிருகமாவது ஏதாவது பண்ணிட்டா.?"

"உன் வருத்தமும் நியாயமான வருத்தம்தான். ஆனா ஒரு மிருகத்தால தான் இப்பவே இப்படி இருக்கா.. அது தெரியுமா உனக்கு?"

"நான் சந்தேகப்பட்டேன்.. நீங்க அதை இப்ப ஊர்ஜிதப்படுத்திட்டீங்கம்மா. போகட்டும் இவ இதோட எதிர்காலம்?"

"இங்கேயே இருக்கட்டும்.. எனக்கு கிடைக்கறது கொஞ்சம் இவளும் சாப்பிடட்டும். இவளுக்கான கெட்ட காலம் முடியும்போது இவளுக்கு நிச்சயம் சுயநினைவு திரும்பும். அப்ப மேற்கொண்டு பேசிக்கலாம்."

- கஜலட்சுமியம்மா ஒரு தீர்வைக் கூறவும் சீந்தல் கொடியையும் கற்பூர வல்லியையும் பறித்து வரச் சென்ற வன் அதோடு வந்து நின்றான்.

அடுத்து கஜலட்சுமியம்மாள் கன்னிமார் முன்னால் ஒரு சிறிய யாக குண்டம் வைத்து தீ வளர்க்க சொன்னாள். ஒரு பதினைந்து நிமிடத்தில் ஓடிப் போ செங்கற்களை எடுத்து வந்து அடுக்கி சிராய் ஒரு முட்டை போன்றவற்றையும் போட்டு தீ வளர்க்கப்பட்டது. அந் தெய்வத்தாய் எல்லோரையும் அந்த யாக குண்டத்தை வட்டம் கட்டி நிற்கச் சொன்னாள். அந்தப் பெண்ணை யும் அழைத்தாள். அவளும் தயங்கியபடி அருகில் வந்தாள்.

"இந்தா இந்த கொடியையும் இந்த இலையையும் கண்ணுல ஒத்திகிட்டு அக்னியில் போடு.." என்றாள்.

அவளும் அப்படியே செய்தாள். அந்த கொடியும் இலையும் விழுந்து எரியத் தொடங்கியதில் ஏராளமா புகை ஏற்பட்டு எல்லோர் கண்களுமே கரித்தது. சில விலக முயன்றனர்.

"யாரும் விலக வேண்டாம். இந்த புகை ரொம் நல்லது.. தீர்க்க முடிந்த வியாதி, தீர்க்க முடியா



வியாதின்னு ரெண்டு விதம். அதுல தீர்க்க முடியாத வியாதிக்கும், இம்மாதிரி மனநல பாதிப்புக்கும் சீந்தில் கொடியோட சாறு தீயில் ரசாயன மாற்றத்துக்கு உள்ளாகி அதனால ஏற்பட்ற புகை நல்ல பயனை தரும். மரண பயம் இருந்தா விலகும்.

உங்கள்ள யாருக்காவது தீர்க்க முடியாத வியாதியோட தாக்கம் ஒரு தொடக்கத்துல இருந்தாலும் இந்த புகை உங்க ரத்தத்துல வாயு வடிவத்துல கலந்து நன்மை செய்யும்"

- என்று ஒரு எளிய விளக்கத்தையும் கொடுத்த கஜலட்சுமியம்மாளிடம் இருந்து ஒரு பரவசமான வணக்கத்தோடு விடை பெற்றுக் கொண்டார் காளியப்பன்.

"அப்ப நான் உத்தரவு வாங்கிக்கறேன்மா.. பொண்ணுக்குன்னு ஒரு கட்டில், பாய், போர்வை கட்டிக்க சேலை, துணிமணி எல்லாத்தையும் கொடுத்து விட்றேன்" என்று போகும்போதே ஒரு நாட்டாமைக்குரிய பொறுப்புணர்ச்சியையும் காட்டி விட்டுத்தான் போனார்.

அந்த பெண்ணிடமும் முன்பைவிட கூடுதலாய் ஒரு மாற்றம் தெரிந்தது. காற்றில் கண்டபடி பறந்து கொண்டிருந்த அவளது மேலாடையை வெட்கத்தோடு அவள் இழுத்து இடுப்பில் செருகியிருந்தாள்!

ரகுபதியின் பங்களாவுக்கே வந்திருந்தார் அந்த ஜோதிடர்! பிரசன்னம் பார்த்து பலன் சொல்வதில் மிகத் தேர்ந்தவர். பாலக்காடுதான் அவரது பூர்வீகம். அவரால் துல்லியமாக பலனடைந்த ஒருவர் அவரைப் பற்றி சொல்லவும் ரகுபதி அவரைப்

பார்த்து அவரை வீட்டுக்கே அழைத்து வந்துவிட்டான். கேசவன் நம்பூதிரி என்கிற பெயரைக் கொண்ட அவர், வீட்டுக்குள் கால் வைத்த நொடி ஹாலில் உள்ள ஜெர்மானிய பெண்டுல கெடிகாரம் மணி பன்னிரெண்டு ஆகி பன்னிரெண்டு முறை சப்தமிடவும் செய்தது.

"ஆஹா! அருமையான சகுனம். உச்சிக்காலம் மைய நேரம்! பன்னெண்டு மணி குருவினுடைய அருள் கொண்ட காலமாகும். ஒண்ணும் ரெண்டு கூடி மூணு வருவது பன்னெண்டில் தான். இந்த குடும்பத்திலும் ஞங்கள் ரெண்டு பேரோடு அந்த குழந்தை கூடி மூணு வந்துள்ளது. இது பகவானிண்ட விருப்பம். என்னைக் கொண்டு குழந்தைக்கு பேர் வைக்க ஒரு நாள் பார்க்கவும் அதுக்கு ஜாதகம் கணிக்கவுமே ஞான் வன்னு.. இ மணி சப்தம் அத்ர வல்லிய விசேஷமாணு.." என்றார் கேசவன் நம்பூதிரி.

ஜானகியும் குழந்தையோடு அவர் எதிரில் வந்து நின்றாள். அருகில் வந்த குழந்தையின் பாதங்களைத்தான் முதலில் நம்பூதிரியும் பார்த்தார். உள்ளங்காலில் தெரிந்த ரேகைகள் அவருக்கு சிலிர்ப்பை ஊட்டியது. அதேபோல் நடு மார்பில் தெரிந்த மச்சமும் அவர் முகத்தில் பிரகாசத்தை உண்டு பண்ணியது.

"ஆஹா.. என்ன ஒரு காந்தம்.. என்ன ஒரு சௌலப்யம்" என்று சிலாகித்தார்.

"நம்பூதிரி... குழந்தையை பார்க்கும்போது என்ன தோணுது உங்களுக்கு..?"

"இவன் ஒரு கள்ளன். தப்பாய் நினைக்காண்டா... அந்த குருவாயூர் கிருஷ்ணனும் ஒரு கள்ளன் தானே?"



"ஓ அந்த அர்த்தத்துல சொல்றீங்களா?"

"ஆமா.. ஆமா.. சாமுத்ரிகா லட்சணம் பிரமாதம். "அபிஜித் முகூர்த்தம் என்று ஒரு முகூர்த்த காலம் உண்டு. அந்த காலத்தில் கரு சேரும்போது இப்படி ஒரு லட்சணம் உருவாகும். இந்த குஞ்சு கிருஷ்ணனும் அதே! கண்ணன் பிறந்தது ஒரு இடத்துல. வளர்ந்தது வேறிடத்துல.. பாவம் தேவகி... பெத்ததோட அவ கடமை முடிஞ்சு போனது. யசோதைக்குதான் கண்ணனை வளர்க்கற பாக்யம் கிடைச்சது. இவன் வரையிலும் கூட அப்படியேதான்... அந்த கண்ணனைப் போலவே இவன் எல்லா ஜால வித்தைகளையும் செய்வான். நீங்க பாக்கப் போறீங்க.."

- என்று நம்பூதிரி அடுக்கிக் கொண்டே போனார்.

பின் ஒரு ஏட்டுக் கட்டை எடுத்து குழந்தை கையை பிடித்துக் கொண்டு அந்த கட்டுக்குள் கயிறு போட்டு ஒரு ஏட்டை எடுக்கச் சொன்னார்.

அவ்வாறே செய்ததில் குழந்தையின் ஜாதகம் உருவானது. அதை பார்க்கும்போதே "பிரமாதம் பிரமாதம்..

இந்த ஜாதகக் கட்டத்துலையும் குழந்தை பிறந்தது ஒரு இடத்துல வளருவது ஒரு இடம்தாங்கற தடயம் இருக்கு. இதுவே இந்த குழந்தையோட சரியான ஜாதகம் இதுதான்கறதை ஊர்ஜிதம் செய்துடிச்சு.." என்றவர் இறுதியாக வரும் ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணியில் இருந்து பதினோறு மணிக்குள் குழந்தைக்கு பெயர் வைத்து தொட்டிலில் போடலாம் என்று அதற்கும் நேரம் குறித்துக் கொடுத்தார்.

அப்படியே "அந்த பிள்ளை இந்த வீட்டுக்கு வந்து எவ்வளவு நாளாச்சு?" என்று கேட்டார்.

"இன்னியோட ஆறுநாள் ஆச்சு நம்பூதிரி.."

"ஒன்பது நாளைக்குள் உங்களுக்கு ஒரு பெரி... நல்லது நடக்கும். அதுக்கு காரணம் இந்த பிள்ளைய... தான் இருப்பான். இவன் இருக்கற இடத்துல தொடர்... சியா நல்லது நடக்கும். அதை நீங்க போகப் போ... பார்ப்பீங்க.." - என்று உற்சாகமாய் கூறிவிட்டு நல்... தட்சணையை பெற்றுக் கொண்டு புறப்பட்டு... போனார்.

ரகுபதிக்கு மிகவே மகிழ்வாக இருந்தது. ஜானகியு... குழந்தையின் தலைமுடியை கோதி கோதி விட்டப... ஜோசியர் சொன்னதை எல்லாம் அசை போட்டு... கொண்டிருந்தாள்.

"ஜானகி.. நாள் குறிச்சாச்சு.. அம்மாவை போ... பாத்து அழைச்சுட்டு வருவோமா?" என்றான்.

"உங்க இஷ்டம்.."

"இப்பவே கிளம்பலாமா?"

"தாராளமா.." அவள் சொல்ல கீரைக்கா... கண்ணம்மா அந்த தாய்ப்பால் தருபவளோடு வந்தி... சரியா இருந்தது. புதிதாய் வந்திருக்கும் பெண் முகத்தி... ஒரு சோகம் பளிச்சென்று தெரிந்தது.

தான் பெற்றதை பறிகொடுத்த சோகம். அவளு... மார்பிரண்டும்கூட ஊறிப்போய் பெரிதாக இருப்ப... ஒரு பார்வையிலேயே அனுமானிக்க முடிந்தது.



படுக்கை அறைக்கு அழைத்துச் சென்று அவளை கட்டிலில் அமரச் செய்து குழந்தையையும் கையில் கொடுத்தாள். குழந்தை சாப்பிடட்டும் என்று இருந்து பார்க்காமல் வெளியில் வந்து கீரைக்காரி கண்ணம்மாவையும் தன் வீட்டிலேயே வேலைக்கு வரச் சொல்லி விட்டாள்.

அவளிடம் எவ்வளவு சம்பளம் கிடைக்குமோ என்று ஒரு சின்ன சஞ்சலம்.

"மாசம் உனக்கு அஞ்சாயிரம் சம்பளம்" என்று ரகுபதி கூறவும் தான் அவளுக்கு அந்த சஞ்சலம் அடங்கியது. கீரை விற்றால் மூவாயிரம் கிடைக்கும். கூட இரண்டாயிரம் கிடைக்கறது. அதுவும் சாப்பாடு துணி மணியோடு.. அவள் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவ மாடியது. அப்போது ரகுபதியின் செல்போனிலும் செய்தி.

"மிஸ்டர் ரகுபதி.. நீங்க போட்ட ட்ராயிங் தான் அப்ரூவ் ஆகியிருக்கு. நம்ம சி.எம். உங்க கன்ஸ்ட்ரக்ஷனுக்குத்தான் அந்த தீம் பார்க்கை கொடுக்க சொல்லியிருக்கார். கிட்டதட்ட நூத்தி இருபது கோடி ரூபா ப்ராஜக்ட். கங்க்ராஜிலேஷன்ஸ்.." என்றது அந்த செய்தி.

நம்பூதிரி சொன்னதுதான் எத்தனை பெரிய உண்மை? ரகுபதிக்கு மனது சந்தோஷத்தால் நிரம்பி வழியத் தொடங்கியது.

ரகுபதியின் காரில் பாலக்காடு நோக்கி பயணித்த படி இருந்தார் கேசவன் நம்பூதிரி. அவர் மனதுக்குள் ஒரு எண்ண ஓட்டம் "அதிர்ஷ்டமான குழந்தைதான்... ஆனா,

எப்ப வேணா மரணம் துரத்தி வரலாம்னு பிரசன்னம் சொன்னதை நல்ல வேளை நான் சொல்லலை. சொல்லியிருந்தா பாவம் அந்த ஜானகி.. அப்பவே மனசளவுல செத்துப் போயிருப்பா.

பார்ப்போம் இந்த குழந்தை அந்த கிருஷ்ணன் போலவே தன்னை நோக்கி வரப்போற அசுரர்களை எப்படி சமாளிக்கறான்னு..”

என்று தனக்குள் சொல்லியபடி இருந்தார்.

## 7

கன்னிமார் கோவில்! மலைக்கே உரிய குளிர் காற்று அடக்கமாக வீசியபடி இருந்தது. அந்த பெண் அமைதியாக உட்கார்ந்திருந்தாள். குளிரின் காரணமாக புடவை முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள். அதை பார்த்தபடியே வந்தாள் கெஜலட்சுமியம்மா!

குளிர் எடுத்தால் போர்த்திக் கொள்ள வேண்டும் என்பது அவளுக்கு தெரிய வந்துவிட்டதால் ஒரு மகிழ்ச்சியும் அந்த தாயின் முகத்தில் தெரிந்தது.

அருகில் சென்று அந்த பெண்ணை உற்றுப் பார்த்தாள்.

பதிலுக்கு அவளும் பார்த்தாள்

“என்ன குளிருதா?”

அவளிடம் பதிலில்லை - மாறாக பார்வையில் படபடப்பு. வரும்போதே எடுத்து வந்திருந்த ஷால் ஒன்று



தோளில் கிடந்தது. அதை நீட்டவும் அவளும் வாங்கி தோள்மேல் விரித்துப் போர்த்திக் கொண்டாள்.

“நீ குணமாக ஆரம்பிச்சுட்டே... வேகமா உன்னை குணப்படுத்த என்னால முடியும். ஆனா என் உள்ளுணர்வு வேண்டாம்னு சொல்லுது.. அப்படி அது சொன்னாலே அதனால ஏதோ கெடுதல்னு தான் அர்த்தம். ஆகையால கொஞ்ச நாளைக்கு நீ இப்படியே இரு. அதே சமயம் உன் நினைவும் மெல்லவே திரும்பட்டும்..” என்றாள். அப்போது அருகாமையில் ஒரு சலசலப்பு... திரும்பிப் பார்த்தாள். காளியப்பனின் மகன் சென்ராயன்! அவன் கையில் போர்வை பழைய புடவை ஒரு பிளாஸ்டிக் குடம் என்று பல பொருட்கள்..

“நீயா?” கெஜலட்சுமியம்மா சற்று ஏளனமாகவே எதிர் கொண்டாள். அவன் அவள் முன் வந்து அந்த பொருட்களை முன்னால் வைத்து விட்டு “அப்பா கொடுத்து விட்டாரு..” என்றான்.

“உங்கப்பாவுக்கு ரொம்ப நல்ல மனசு..! அவருக்கு கொடுக்க தெரிஞ்சிருக்கு... ஆனா சிலருக்கு கெடுக்க மட்டும் தான் தெரிஞ்சிருக்கு..” என்றாள். அவனுக்கு சுரீர் என்றது.

“நீங்க யாரைச் சொல்றீங்க?” என்று கேட்டான்.

“நான் யாரைன்னுப்பா சொல்லுவேன்.. இன்னிக்கு கொடுக்கறவங்கள விட கெடுக்கறவங்க தானே அதிகம்..”

“பொடி வெச்சுப் பேசறீங்க... இந்த மாதிரி பொண்ணுங்கள வெச்சு காபந்து பண்றது கஷ்டம். உங்களுக்கும் வயசாயிடிச்சு. நீங்களும் சாமி கும்புட வர்றவங்க தர்ற காணிக்கையை நம்பித்தான் இருக்கீங்க. இதுல இந்த பொண்ணை வேற கட்டிச் சுமக்கணுமா?”

- அவன் கேட்கவும் முதல் தடவையாக கெஜ லட்சுமியம்மா முகத்தில் கோபத்தின் ரேகைகள் ஓ ஆரம்பித்தன.

“தம்பி நான் யார் காணிக்கையை நம்பியும் இங் இல்லை. இது தெய்வீகமான இடம். உனக்கு அதெ லாம் புரியாது. இனி இந்த மாதிரி பேசிகிட்டு இந்த பக்க வராதே புறப்படு..” என்றாள். அவனும் முகத்தை சிணுங்கியபடியே திரும்பித் திரும்பி பார்த்தபடி செல்ல தொடங்கினான்.

எதனாலோ அவனையே வெறித்துப் பார்த்தபடி இருந்தாள் அந்த பெண்.

“என்ன கண்ணு... இவனை உனக்கு முந்தியே தெரியுமா?” என்று கேட்டாள். அவளுக்கு அதற்கு பதில் சொல்லத் தெரியவில்லை.

“நான் ஒருத்தி... உனக்கு உன்னையே இப்ப தெரியல. நீ எப்படி மத்தவங்கள பத்தி சொல்ல முடியும் முதல்ல உனக்கு ஒரு பேரை வைக்கறேன். இந்த நிமிஷத்துல இருந்து உன் பேரு சாமுண்டி... ஏழு கன்னிகள்ள ஒருத்தி தான் சாமுண்டி. ரொம்ப ஆக்ரோஷமானவ. எதிரிகளை சம்காரம் பண்றதுல இவளுக்கு நிகர் யாரும் கிடையாது. உன்னையும் எதிரிகள் இனி கஷ்டப்படுத்தக் கூடாது. இந்த பேர் உனக்கு ஒரு புது வலிமையை தரட்டும்” என்ற கெஜலட்சுமியம்மா அந்த கன்னிகளில் ஒரு கன்னியான சாமுண்டியின் கல் உருவின் மேல் சிந்திக் கிடந்த குங்குமத்தை எடுத்து அவள் நெற்றியில் வைத்து விட்டாள்!

அந்த தாயின் குங்குமக் கரம்பட்ட நொடி அந்த பெண்ணிடமும் ஒரு பெரும் சிலிர்ப்பு!



குழந்தை அழ ஆரம்பித்து அது பங்களா முழுக்க எதிரொலித்தது. ஜானகி பதற ஆரம்பித்தாள்! வேலைக்காரி கண்ணம்மாவும் வேலைக்கு வந்திருக்கவில்லை. ரகுபதியும் டென்னிஸ் விளையாட கிளப்புக்கு போயிருந்தான். குழந்தையோ மூச்சு முட்டுமளவு அழுகையை கொண்டு சென்று விட்டது..

“ரேரேரே.. ராராரா... என் ராஜா...

என்னடா செல்லம் - எதுக்குடா அழறே- ஐய்யோ என்னன்னு தெரியலியே.. தெய்வமே!” - ஜானகி வாய் விட்டும் கை விட்டும் புலம்பியபடி பூஜை ரூமுக்கு ஓடினாள். அங்கே ஒரு படத்தில் இருந்த பழனி முருகன் விபூதியை எடுத்து வந்து குழந்தைக்கு பொட்டு வைத்தாள். இரு கைகளாலும் தூக்கி இடமும் வலமுமாக ஆட்டிப் பார்த்தாள். தோளில் போட்டாள்... அப்படியும் இப்படியும் நடந்தாள். வாசப் பக்கம் வந்து பார்த்தாள்.. அழுகை அடங்கவே இல்லை. சுருதியும் மாறி குழந்தைக்கு தொண்டையை வேற அடைக்க தொடங்கியது. அதற்குமேல் ஜானகியிடம் பொறுக்க முடியவில்லை. கீழே ஒரு துணியை விரித்து குழந்தையை கிடத்திவிட்டு கெஜலட்சுமியம்மாவை மனதுக்குள் எண்ணி பிரார்த்திக்கத் தொடங்கி விட்டாள்.

“அம்மா... என் குழந்தையை காப்பாத்துங்க.. இப்ப பார்த்து வீட்டுலயும் யாருமில்லை... நான் ஒரு அசலான தாயா இருந்திருந்தா இந்த அழுகை எனக்கு புரிஞ்சிருக்குமோ என்னவோ? மலடிதானே.. என் கைக்கு கிடச்சு இந்த செல்வத்தை நான் இதனாலேயே இழந்துடுவேனேன்னு பயமா இருக்கும்மா..” என்று மனதுக்குள்

பிரார்த்தனை செய்து கொள்ளவும் கண்ணம்ம
வீட்டினுள் நுழையவும் சரியாக இருந்தது.

“என்னம்மா இது ஏன் குழந்தை இப்படி அழுவுது?

“தெரியல கண்ணம்மா... பசியாக இருக்கும்னு
புட்டி பால் கொடுத்தா தள்ளி விட்றான். நிறுத்தா
அழறான்..” என்று படபடப்பு குறையாமல் சொன்னா
ஜானகி. கண்ணம்மாவும் குழந்தையை தூக்கி வயிற்
அமுக்கிப் பார்த்தாள். பின் ஜட்டியை கழற்றிவிட்டு பி
பக்கம் பார்த்தபோது ஒரு கட்டெறும்பு கடித்து அ
படியே நசுங்கி செத்துக் கிடந்தது.

“ஐயோ குழந்தையை எறும்பு கடிச்சிருக்கும்மா
பாருங்க..” என்று காட்டியவள் ஜட்டியை உதறவு
மேலும் சில எறும்புகள் விழுந்து ஓடின. குழந்தையிட மு
அழுகை மெல்ல நிற்க ஆரம்பித்தது. தேங்கா
எண்ணெயை எடுத்து வந்து பின்பாகம் முழுவது
அழுத்தமாய் பூசிவிட்டு ஒரு வழியாக அழுகை
அடக்கினாள்.

அழுத களைப்பு அப்பவே கண்களில் தெரிய சோ
வுடன் கண்ணம்மாவை பார்த்தது குழந்தை.

“ஆமா எங்க அந்த பால் கொடுக்கற பொண்ணு?

“அத ஏம்மா கேக்கறீங்க - அவளும் திடீர்னு காய்ச்ச
டாக்டர்கிட்ட போனா சிக்கன் குனியான்னுட்டா
களாம். அது மோசமான காய்ச்சலுல்ல.. பால் கொடுக்
கூடாதாம்ல..” கண்ணம்மாவின் குரலில் சோக
எதிரொலித்தது.

“என்ன கண்ணம்மா நீ... இவன் பசும்பாலை குடிக்
மாட்டேங்கறானே.. இப்ப என்ன பண்றது?”



“அதாம்மா எனக்கும் தெரியல.. ஒரு குழந்தை தாய்ப்பால் குடிக்க தொடங்கிட்டா நடுவுல மாறக் கூடாதும்மா..”

“நீ தானே அவளை கூட்டிகிட்டு வந்தே?”

“நான் என்னம்மா பண்ணுவேன் - அவளுக்கும் காய்ச்சல் வரும்னு யார் எதிர்பார்த்தா?”

“சரி இப்ப என்ன பண்றது - பார் எப்படி வாடிப் போயிட்டான்...”

- ஜானகிக்கு குரல் உடைந்து போய் துக்கம் கண்ணீராக வெளிபடத் தொடங்கியது. அப்போது ரகுபதியும் வந்து சேர்ந்தான். விஷயத்தை அறிந்தவனிடம் தீவிரமான சிந்தனை..

“என்ன யோசிக்கறீங்க?”

“இல்ல... ராசியான இந்த குழந்தைக்கு இப்பவே பட்டினி கிடக்கணும்னு ஒரு விதி அமைப்பு இருக்க முடியுமா என்ன?”

“புரியற மாதிரி பேசுங்க..”

“புறப்படு அம்மாவை போய் பார்ப்போம். இது அவங்க கொடுத்த குழந்தை. அவங்களே ஒரு நல்ல வழியை நிச்சயம் காட்டுவாங்க..”

அவளுக்கும் அவன் சொன்ன பதில் தான் சரி என்று பட்டது. அடுத்த ஐந்தாவது நிமிடம் இரண்டு பேரும் குழந்தையுடன் புறப்பட்டு விட்டனர்.

ஏற்காடு மலைச்சாலை!

கறுப்பு உடம்பு கொண்ட ஒரு பெரிய பாம்பு வளைந்து வளைந்து செல்வது போல் இருந்தது அதன் மலைப்பாதை! இருபுறமும் காபி தோட்டங்கள்... பச்சை பிடித்த காபி கொட்டைக் காய்கள் ஊட்டமாகவும் கொத்தாகவும் வளர்ந்திருந்தன. காரும் வேகமாக மேலே ஏறியபடி இருந்தது! குழந்தை பின் சீட்டில் ஜானகியின் மடியில் தூங்கி விட்டிருந்தான். 'நல்ல சிகப்பு நிறம்... கறுப்புப் பட்டு நூல் போல தலைமுடி... மெது மெது வென்று புஷ்டியான கன்னம்... இந்த குழந்தை தான் எத்தனை உன்னதமான சிருஷ்டி. அதன் எச்சில் வியர்வை கூட விரும்பக் கூடியதாக விஷமற்றதாய் அமிர்தம் போல எண்ண வைக்கிறதே..!' ஜானகி குழந்தையை பார்த்தபடி அமர்ந்திருந்தாள். காரை டிரைவர் ரத்னம் தான் ஓட்டிக் கொண்டிருந்தான். அவனும் மெல்லத் திரும்பி பார்த்து ரசித்தான்.

"குட்டிப் பய வந்ததுல இருந்தே எல்லாமே நல்ல படியா நடந்துகிட்டு வருது இல்ல சார்..." என்று சந்தோஷமாக பேச்சையும் ஆரம்பித்தான்.

"ஆமாம் ரத்னம்.. ஆனா சாப்பிடத்தான் படுத்த றான்.."

"இந்த காலத்துப் பசங்க எல்லாமே அப்படித்தாங்க இருக்கு. மாகி, பூகின்னு கண்டதும் திங்குதுங்க. சத்தான ஆகாரம்னா புடிக்க மாட்டேங்குது.."



ஒரு சகஜமான பேச்சுடன் காரில் அவர்கள் வந்த படி இருக்க கன்னிமார் கோவிலில் சாமுண்டிக்கு பூ கட்ட சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள் கெஜ லட்சுமியம்மா.. சாமுண்டியும் அதை புரிந்து கொண்டு பூ கட்டினாள். நடு நடுவே தன் மார்பின்மேல் கை வைத்து அழுத்தி வலி வேதனையை முகத்தில் காட்டினாள். முன் பக்கமாய் ரவிக்கையும் ஈரமாகி விட்டிருந்தது. அதைப் பார்த்த கெஜலட்சுமியம்மாவுக்கு புரிந்துவிட்டது.

"உனக்கு நீ ஒரு தாய்ங்கறது தெரியாம இருக்கலாம்! ஆனா உன் உடம்புக்கு எப்படி அதோட குணங்கள் இல்லாம போகும். நீ ஒரு பிள்ளை பெத்தவங்கறது பெருகிச் சுரக்கற உன் மார்பே காட்டிக் கொடுக்குதே... கன்னிமார் தெய்வங்களே... இது என்ன வேதனை?" கெஜலட்சுமியம்மா நெஞ்சுருக பிரார்த்தித்துக் கொண்டே கண்களை மூடினாள். சில நொடிகளிலேயே கண்கள் திறந்து கொள்ள 'உங்க கருணையே கருணை' என்றும் அந்த கன்னிமார் தெய்வங்களைப் பார்த்து சொன்னாள்.

அப்படியே "கொஞ்ச நேரத்துல எல்லாம் சரியாயிடும். நான் என் இருப்பிடம் வரை போய்ட்டு வந்துட்றேன்.." என்று தன் குகை நோக்கி நடக்கத் தொடங்கினாள். அவள் விலகின நொடி ஒரு புதருக்குள் இருந்து ஒருவன் வெளிப்பட்டான். அவன் கைகளில் பாம்புகள் அடங்கிக் கிடக்கும் மூங்கில் பிரம்புக் கூடை! கன்னிமார் சிலைகள் முன் மரத்து நிழலில் சாமுண்டி தொடர்ந்து பூ கட்டிக் கொண்டிருக்கும்போது தான் கொண்டு வந்த பிரம்புக் கூடையை திறந்தான்.

உள்ளே நன்கு வளர்ந்த நாகம் ஒன்று விருட் டென்று படம் விரித்தபடி நிமிர்ந்தது!

படம் விரித்த அந்த நாகத்திடம் கூடைக்குள் அடைந்து கிடந்த கோபம் ஆக்ரோஷமா வெளிப்பட்டது. தன் இரட்டை நாக்கை அ நீட்டியபடி சீறியபோது அந்த பாம்பை சுமந்து வந்த னுக்கே அச்சமாக இருந்தது. இருந்தாலும் தான் வந் நோக்கம் ஈடேற வேண்டும் என்பதற்காக அந்த பாம்பை லாவகமாக பிடித்து தூக்கியவன் ஒரு இருபத தூரத்தில் பூ கட்டிக் கொண்டிருந்த சாமுண்டியை பார்த்து அவள் மேல் அந்த பாம்பு மாலைபோ விழுந்து அவளையும் கடிக்க வேண்டும் என் விரும்பியவன் போல அதை அவள்மேல் வீசி எறிந்தா அதுவும் பறந்துபோய் அவள்மேல் விழுந்தது. ஆனா அவள் தன் மேல் விழுந்த பாம்பைக் கண்டு துளிகூ பயமோ பதட்டமோ கொள்ளவில்லை. மரத்தில் இருந் ஒரு கிளை ஒடிந்து மேலே விழுந்தது போலத்தா கருதினாள். கீழே விழுந்த அதுவும் அவள் எதிரிலே படம் விரித்தபடி சீற்றத்தை வெளிக் காட்டியது. ஆனா அவள் எந்திரம் போல் பூ கட்டிக் கொண்டிருந்தா பாம்பை வீசி எறிந்தவனுக்கே கூட அந்த காட்சி ஆச்சரி மாக இருந்தது. அப்போது யாரோ வரும் அரவம் கேட் அவன் புதருக்குள் இருந்தபடி பார்த்தான்.

ரகுபதியும் ஜானகியும் கையில் குழந்தையோ வந்தபடி இருந்தனர். ஜானகியின் தோளில் குழந் ரகுபதியின் கையில் ஒரு வயர் கூடைக்குள் மரியாை நிமித்தம் அவன் வாங்கி வந்திருந்த பூ பழம் இத்யாதிகள்

இருவரும் அந்த மரத்தடியை சமீபித்த போ அரண்டு போய்விட்டனர். சாமுண்டி பூ கட்டியப



இருக்க, அந்த பாம்பு அவள் எதிரில் அவள் பூ கட்டு வதை பார்ப்பதுபோல பார்த்தபடி இருப்பது பதைக்க விட்டது.

ஜானகி குழந்தையை இறுக்கிக் கொண்டாள். ரகுபதிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. நல்ல வேளையாக அப்போது கஜலக்ஷ்மி அம்மாவும் வந்து விட்டாள். அம்மாவும் சர்ப்பத்தை பார்த்தாள். ஒரு வினாடி மனது பதைத்தாலும் அடுத்த வினாடி முகம் சகஜமாகியது. ரகுபதி ஜானகியையும் பார்த்த அம்மா சிரித்தாள். பின் 'வாங்க... வாங்க..' என்றபடியே அந்த பாம்பை நெருங்கி அதை ஏதோ ஒரு கயிறை எடுப்பது போல எடுத்து சற்று தள்ளி ஒரு புதருக்குள் கொண்டு சென்று விட்டு விட்டு திரும்பி வந்தாள்.

சாமுண்டியோ பூ கட்டிக் கொண்டே இருந்தாள். ஒளிந்திருந்து பார்த்தவனுக்கு ஏமாற்றமாக மட்டு மில்லை ஆச்சரியமாகவும் இருந்தது. மெல்ல அங்கிருந்து நழுவ ஆரம்பித்தான்.

அம்மாவும் ரகுபதி ஜானகி அருகில் சென்றாள். "என்ன.. பயந்துட்டீங்களா?"

"ஆமாம்மா... ஒரு பாம்பு இப்படி படம் விரிச்சு கிட்டு நிக்குது - ஆனா இந்த பொண்ணு துளிகூட பயப்படவே இல்லையே?"

"நான்கற எண்ணம் இருக்கும்போது தான் பயம் சந்தோஷம் துக்கம்கற உணர்வெல்லாம் வேலை செய்யும். ஆனா இந்த சாமுண்டிக்கு தன்னையே தெரி யாது. தன்னையே தெரியாதவளுக்கு பாம்பத்தான் தெரியுமா இல்ல தேளைத்தான் தெரியுமா?"

"இந்த பொண்ணு பேர் சாமுண்டியா?"

"ஆமாம்.. நான் வெச்சபேர்... நல்லா இருக்கா?"

"நீங்க வெச்ச பேர்னா.. அவங்களுக்கு பே
இல்லையா?"

"இருக்கலாம்... ஆனா அவளுக்குதான் அவயாரு
கறதே மறந்து போச்சே... அதனால பேரும் தெரியலை
ஆனா அவளை கூப்பிட ஒரு பேர் வேணுமே... அதான்
சாமுண்டின்னு பேர் வெச்சேன். அதோ அந்
சப்தகன்னிகள்ள ஒருத்திதான் சாமுண்டி. மாதா சக்தி
யோட ரத்த அம்சம்! பயம்கற ஒண்ணு இவளக் கண்டா
பயப்படும். அதான் பாம்பு படம் விரிச்சு நிற்கும் போதும்
எனக்கென்னன்னு பூ கட்டிட்டிருக்கா! இதைகூட
இப்பதான் நான் சொல்லிக் கொடுத்தேன்.."

"இவங்க யாருன்னு நான் தெரிஞ்சுக்கலாம்மா?"

"எனக்கே தெரியாதப்ப நான் எப்படிப்பா
உங்களுக்கு சொல்ல முடியும்?"

"உங்களுக்கே தெரியாதா..?" ரகுபதி அந்த பதிலை
நம்ப முடியாமல் எதிர் கொண்டான். அப்போது குழந்தை
அழத் தொடங்கியது. அதுவரை அமைதியாக இருந்த
குழந்தை அழவும் ஜானகியிடம் ஒரு மெல்லிய பதைப்பு

தோள்விட்டு தோள் மாற்றிப் போட்டுக் கொண்
டாள். முதுகை தட்டியும் கொடுத்தாள்.

"என்ன சொல்றான் என் பேரன்?" அம்மா அப்படி
ஒரு உறவு முறையோடு கேட்கவும் ரகுபதிக்கு சிலிர்த்தது

"அம்மா குழந்தைக்கு பேர் வைக்கப் போறோம்
அதை ஒரு விழாவா கொண்டாடி ஊர் உலகத்துக்கே
தெரியற மாதிரி பண்ண விரும்பறேன். அந்த கொண்



டாட்டத்துல நீங்க பங்கெடுத்துகிட்டு ஆசீர்வாதம்
பண்ணணும்னு கேட்டுக்கத் தான் வந்துருக்கோம்.."

ரகுபதி கச்சிதமாக சொல்லி முடிக்க குழந்தையின்
அழுகை கூடிப் போயிருந்தது. அது பூ கட்டிக் கொண்
டிருந்த சாமுண்டியையும் திரும்பிப் பார்க்கச் செய்தது.
அதை கஜலட்சுமியம்மாவும் கவனித்தாள்.

"நல்ல விஷயம்தான். ஆமா குழந்தை பசில
அழறான் போல இருக்கே?"

"ஆமாம்மா இப்ப என் பெரிய பிரச்சனையும்
அதுதான்..."

"என்னப்பா சொல்றே?"

"தாய்ப்பால்தான் வளர்ற குழந்தைக்கு ஊட்டம்
கறதால குழந்தையை பிறக்கும்போதே பறி கொடுத்
துட்ட ஒரு தாயை அதுக்காக ஏற்பாடு செய்திருந்தேன்.
ஆனா என் கெட்ட நேரம், அந்த தாய்க்கு விஷக்காய்ச்சல்
வந்துடிச்சு. குழந்தையோ புட்டிப்பாலை சரியா
சாப்பிடாம வாந்தி எடுக்கறான்."

- ரகுபதியின் வருத்தம் நிறைந்த பேச்சுக்கு நடுவில்
வேறு சில விஷயங்களும் நடக்கத் தொடங்கின. பூ கட்டிக்
கொண்டிருந்த சாமுண்டி குழந்தை அழுகை சப்தத்தை
கேட்டு சஞ்சலத்துக்கு ஆளானவள்போல் பூ கட்டு
வதை விட்டுவிட்டு எழுந்து ஜானகி அருகில் வந்து நின்று
பார்த்தாள். அவள் மார்பின் ஈரமே ஜானகிக்கு ஓரளவு
புரிய வைத்துவிட்டது. அவள் பார்த்த விதமும் அந்த
கண்ணீரில் தெரிந்த கனிவும் பாசமும் ஜானகியை
உருக்கிடத் தொடங்கியது.

அவள் கை நீட்டி குழந்தையை கேட்கவும் ஜானகியால் மறுக்க முடியவில்லை. குழந்தையும் அவள் கைக்கு செல்லவும் சட்டென்று அழுகையை நிறுத்தியது.

அவள் ஈர மார்பில் சாயவும் அதற்கு சிலிர்ப்பேற்பட்டது. தலையால் மார்பை முட்டிற்று. மிழற்றிற்று..

"அம்மாடி அவளும் ஒரு தாய் தான். எடுத்துவிட்டு உதவி செய்.." என்றாள் அம்மா. ஜானகிக்கு புரிந்து அவளை மரத்தடியில் ஒரு இடத்தில் அமரச் செய்து ரவிக்கையை விலக்கி விட்டாள்.

குழந்தையும் பாலருந்தத் தொடங்கிவிட்டது.

ரகுபதியின் கண்களில் கண்ணீர்த் திரை. ஜானகியும் அந்த பெண்ணருகே நின்றபடியே கை கூப்பினாள்.

"அம்மா... நாங்க பிரச்சனையை சொல்றதுக்கு முந்தியே விடையோட நீங்க இருக்கீங்க. போன தடவை வந்தப்ப குழந்தை கிடைச்சது. இப்ப குழந்தைக்கு ஒரு தாய் கிடைச்சிருக்கா.. இதெல்லாம் கனவா இல்ல நிஜமாம்மா? வெளியே சொன்னா யாரும் நம்பவும் மாட்டாங்க.." என்றான்.

"எதுக்காகப்பா சொல்லணும். இது உனக்கான அனுபவம்.. அவ்வளவுதான்" என்றாள் அம்மா.

"உண்மைதான்.. சில அனுபவங்கள் சிலருக்கு மட்டும்தான்... எங்க பூர்வ ஜென்ம புண்ணியம் தான் நாங்க உங்களை பாக்க காரணம்னு நினைக்கறேன்.."

"உன் புண்ணியம்மட்டுமா.. ஒரு விஷயத்துக்கு பின்னால நிறைய காரணிகள் இருக்குப்பா. எல்லாமே ஒரு கணக்குதான். ஒரு விஷயம் ஒருத்தருக்கு கூட்டலா



இருக்கும் - ஒருத்தருக்கு வகுத்தலா இருக்கும், ஒருத்தருக்கு பெருக்கலா இருக்கும், ஒருத்தருக்கு கழித்தலா இருக்கும்.." என்ற அம்மா திரும்பி புதர்பக்கம் பார்த்தாள்.

"இந்த பதிலே கூட எனக்கு வியப்பாதாம்மா இருக்கு.. அதே சமயம் ஓரளவு புரியவும் செய்யுது.."

"ஆமாம்... என்வரையில் இந்த குழந்தை விஷயம் ஒரு வகுக்கற விஷயம். உங்க தேவையோட என் இருப்பை போட்டு வகுத்தேன். உங்க வரைல இது ஒரு கூட்டலா அமைஞ்சது. இவன் உங்க குடும்பத்துல ஒருத்தரா வந்து கூட்டிடானே? இதோ இவனுக்கு இந்த விஷயம் ஒரு பெருக்கல்.. எப்படின்னு சொல்லு.."

"தெரியலியேம்மா..?"

"இவள நீங்க கூட்டிகிட்டு போகப் போறீங்களே. இவளுக்குள்ள இனிதானே பாதுகாப்பு சந்தோஷம் எல்லாம் பெருகப் போகுது.."

"அம்மா..!" அந்த பதில் ரகுபதியை பரவசமடையச் செய்துவிட்டது.

"அம்மா இந்த பொண்ணு எங்க கூட வரப் போகுதா?"

"ஆமாம்ப்பா.. ஏன் கூட்டிகிட்டு போக உனக்கு விருப்பம் இல்லையா?"

"ஐயயோ நீங்க ஒரு குஷ்டரோகியை காட்டி கூட்டிகிட்டு போன்னாலும் நான் கூட்டிகிட்டு போவேன்மா.."

"சந்தோஷம். இவ இங்க என்கூட இருந்தா எப்படியும் பாம்பும் தேளும் தான் வரும். எல்லா பாம்பும்

வேடிக்கை பார்க்கும்னும் சொல்ல முடியாது. இ
கொஞ்சம் தள்ளி சன்னதிக்கு வெளியே உட்கார்
திருந்தா அந்த பாம்பும் இவளை கடிச்சிருக்கும். அ
னாலயும் சொன்னேன்..."

- அம்மாவின் பதிலுக்குள் சில நுட்பமா
தகவல்களும்..

"அம்மா இது எங்களுக்கு பெரிய உதவி. உங்கள
ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்கலாமா?"

"தாராளமா கேள். இந்த பொண்ணு இப்படி ஒ
தாயா இருக்காளே... இவளோட குழந்தை எங்கே? இ
புருஷன் யார்? இதெல்லாம் தான் உன் கேள்விகள
இருக்கணும்னு நான் நினைக்கறேன்."

"ஆமாம்மா.. உங்க முன்னால ஒருத்தர் பே
வேண்டாம். நினைச்சாலே போதும்மா.. அப்படியே
சொல்லிட்டீங்க.."

"எங்க சொன்னேன். நானே இனிதான் இவ யார்
இவ பேர் என்ன? இவளை ஏமாத்தி தெருவுல விட்டவ
எங்க இருக்கான்னுல்லாம் கண்டு பிடிக்கணும். இந்
மலைல இருக்கற பக்கத்து கிராமத்து கிணத்து
தற்கொலை செய்துக்க இவ முயற்சி செய்துருக்கா. அந்
முயற்சில இருந்து இவளை காப்பாத்திட்டாங்க. ஆன
அதுல தலைல அடிபட்டு இவளுக்கு நினைவு தவறி
போயிடிச்சு. இப்ப பரவாயில்லை.. சொல்றத கேட்
கிட்டு அப்படியே செய்யறா.

அனேகமா இவ முன்னால வந்த பாம்புகூ
யதார்த்தமா வந்துருக்க வாய்ப்பு இல்லை! ஏன்னா இந்
கன்னிமார் கோவிலை சுத்தி ஒரு அருள் வளைய



இருக்கு. அதுக்குள்ள எந்த பாம்பும் வராது! மீறி வந்துருக்
குன்னா யாரோ கொண்டு வந்து விட்டுருக்கணும்!
ஆனாலும் ஒருத்தர் உயிர்ங்கறது எப்ப பிரியணும்னு
இருக்கோ அப்பதான் பிரியும். அதுக்கு முன்னால
தலைமேல் இடியே விழுந்தாலும், ஒரு நொடி அவங்க
விலகிக்க இடி பக்கத்துலதான் விழும். இதெல்லாம்
பாம்பை விட்டவங்களுக்கு தெரிய நியாயமில்லை.
ஏன்னா எப்ப இப்படி குறுக்கு வழிகள்ள போக
ஆரம்பிச்சுட்டாங்களோ அவங்கள புண்ணியங்கள் வழி
நடத்தல - பாவங்கள் வழி நடத்தறதா தான் அர்த்தம்..."

- அம்மாவின் பேச்சுக்குள் பல கேள்விகளுக்கான
பதில்கள்!

ரகுபதிக்குள் சிலிர்ப்பும் சிந்தனையும் போட்டி
போட்டது.

"அம்மா அப்ப இவளை நாங்க கூட்டிகிட்டு போய்
பாதுகாப்பாகவும் வெச்சுக்கணும்னு சொல்லாம சொல்
றீங்களாம்மா?"

"ஆமாம்பா.. இவ உங்க மகனை பாதுகாப்பா -
இவளை நீங்க பாத்துக்குங்க.."

"ஆஹா.. அற்புதம் அப்படியே செய்யறேன்மா.."

- என்ற ரகுபதியின் பார்வை அந்த பெண் பக்கம்
சென்றபோது அவள் மடியில் குழந்தை பசியார
பாலுண்ட களைப்போடு உறங்கியே விட்டிருந்தது!

அவள் முகத்திலும் ஒரு நிறைவு...

## 9

ரகுபதி குழந்தையை பார்க்கவும் ஜானகியிடம் ஒரு வேகம்.. சாமுண்டியின் மடியில் இருந்த குழந்தையை வேகமாய் தூக்கிக் கொண்டாள். அப்படி அவள் செயல்பட்டதில் ஏகப்பட்ட உட்பொருள் அது ரகுபதிக்கும் புரிந்தது. எங்கே வாராது வந்த மாமணியாக தனக்கு கிடைத்த பிள்ளை பாலைக் குடிக்கப்போய் அவளையே பிடித்துக் கொண்டு விடுவானோ என்கிற அச்சம்தான் அவளை அப்படி நடக்கச் செய்தது. ரகுபதிக்கே புரியும்போது கஜலட்சுமியம்மாவுக்கு தானா புரியாது? ஒரு சிரிப்பு மட்டும் பதிலுக்கு சிரித்தாள். ரகுபதியும் புறப்பட தயாரானான்.

"அம்மா உத்தரவு கொடுங்க.. நாங்க புறப்படறோம்.."

"ஆஹா.. தாராளமா கிளம்புங்க.."

"போன தடவை குழந்தையை கொடுத்து எங்க வயித்துல பாலை வார்த்தீங்க.. இந்த தடவை குழந்தைக்கு ஒரு தாயை கொடுத்து குழந்தை வயித்துல பாலை வார்த்திருக்கீங்க.." என்று கவிதை நயத்துடன் நன்றி கூறிய ரகுபதி சாமுண்டியையும் அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

அவள் கஜலட்சுமியம்மாவை திரும்பிப் பார்த்துக் கொண்டே போனாள். சிறிது தூரம் போனவள் மெல்ல திரும்பி வந்து அம்மாவிடமே நின்று கொண்டாள்!

"என்னம்மா போக மனசு வரலையா?"

"ஆமா.."



"அட.. பேச்சு வந்துருச்சே..!"

"ஓ.. அப்ப நான் பேசிட்டேனே?"

"பார்றா.. அது கூட தெரியலியா உனக்கு?" - அவள் விழித்தாள்.

"போ.. தைரியமா போ.. அம்மா சொல்றேன் போ.."

"நான் போய் என்ன பண்ணணும்?"

"குழந்தைக்கு இப்ப பால் கொடுத்த மாதிரி பால் கொடு.."

"பால்.. பால்.."

"உன் மார்புல இருந்து வந்ததே அது தான் பால்.."

"ஆமாம்ல.. சரி.. நான் பால் கொடுக்கறேன்.."

"பால் கொடுக்கறதோட இவங்களுக்கு உதவியா ஒத்தாசையா இரு."

"அப்படின்னா?"

"இங்க இப்ப பூ கட்டினே இல்லையா..?"

"ஆமாம்... ஆமா.."

"அந்த மாதிரி சின்னச் சின்ன வேலை செய்யறதுக்கு பேர்தான் உதவி ஒத்தாசை.."

"அப்படியா... அப்படின்னா நான் அப்படியே செய்யறேன்.."

"ஆமா நான் உன்னை ஒண்ணு கேட்கட்டுமா"

- அம்மாவின் கேள்விமுன் சற்று திருதிருவென்று பார்த்தாள்.

"அப்படி பார்க்காதே.. உன் பெயர் ஞாபகம் இருக்கா..?"

"பேர்.. பேர்... அப்படின்னா?"

"அப்படின்னாவது கேட்க தெரியுதே.. பேர்னா என்னன்னு தெரியலியா?"

"தெரியலியே..!"

"சரி இப்ப நான் சொல்றத நல்லா கேட்டுக்கோ. "சரி இப்ப நான் சொல்றத நல்லா கேட்டுக்கோ.. என்னை கஜலட்சுமின்னு கூப்பிடுவாங்க.. அதோ அவங்கள்ள குழந்தையை வெச்சிருக்கறவங்க பே ஜானகி... பக்கத்துல நிக்கறவர் பேர் ரகுபதி.."

"அப்படியா..?"

"எங்க இப்ப சொல் பார்ப்போம்... என் பே என்ன?"

"உங்க பேர்... பேர் ஜானகி!"

"அது அவங்க பேர்.. என் பேர் கஜலட்சுமி.."

"சரி கஜலட்சுமி... ஆமா என் பேர் என்ன?"

"ஆஹா நீயா கேட்டியே.. உன் பேர் சாமுண்டி.."

"சாமுண்டி... சாமுண்டி..."

"ஆமாம் இவங்க சாமுண்டின்னு உன்னை கூ பிட்டா என்னன்னு கேட்கணும். அவங்க சொல்றப எல்லாம் நடந்துக்கணும்.."

- சாமுண்டி ஒரு மாதிரி தலையை அசைத்தா

"இப்ப நீங்க கூட்டிகிட்டு போகலாம்... பேசாத இ பேசிட்ட நிலைல கூட வர்றதும் ரொம்ப நல்லத போச்சு. இவ படிப்படியா குணமாகி ஒரு நாள் தன்னை



பற்றின உண்மைகளை இவ நிச்சயம் சொல்ற நாள் வரும்."

- என்று கஜலட்சுமியம்மாவும் கூறிட ரகுபதி உற்சாகமாக அவளோடு புறப்பட்டான்.

"அம்மா பேர்சூட்டு விழாவுக்கு மறக்காம வந்துடுங்கம்மா.." என்றார் ஞாபகமாய்..

ஏற்காடு காபி எஸ்டேட் ஒன்றின் பங்களா முகப்பில் அந்த ஜீப் தேங்கி நின்றது. ஜீப்பில் இருந்து சென்ராயன் தான் இறங்கினான். அப்போது அங்கே சாமுண்டி மேல் பாம்பை வீசி எரிந்து கொல்லப்பார்த்தவன் நின்று கொண்டிருந்தான்.

"என்னய்யா... போன காரியம் என்னாச்சு?"

"அது வந்து சென்ராயா.."

"என்னா தலைய சொறியறே.. அந்த பைத்தியகாரிய போட்டுத் தள்ள முடியலியா?"

"நான் எல்லாத்தையும் சரியாத்தான் சென்ராயா பண்ணேன் ஆனா பாம்பு அவமேல விழுந்தும் அவளை கொத்தலை. இப்ப நினைச்சாலும் எனக்கு ஆச்சரியமா இருக்கு."

"அது எப்படிய்யா பாம்பு எதுவும் பண்ணாம இருக்கும். விஷப்பாம்ப தானே வீசி எறிஞ்சே?"

"நல்ல பாம்பு சென்ராயா... நல்லா ஆறடி நீளம்.. கீழ கொண்டலாம்பட்டி சோளக்காட்டுல மூணு நாளா காத்திருந்து பிடிச்ச பாம்பு.."

“அப்புறம் எப்படி தப்பாச்சு..?”

“அதான் தெரியல.. ஆனா ஒண்ணு... நீ நம்புனா சரி நம்பாட்டியும் சரி.. அந்த கன்னிமார் கோவி குன்னு ஒரு சக்தி இருக்கத்தான் செய்யுது. அ பொண்ணு அங்க உக்கார்ந்து பூ கட்டிகிட்டி தாப்பா..”

“பூ கட்டிகிட்டிருந்தாளா... அப்ப அவளு ஞாபகமெல்லாம் வந்துடிச்சா..?”

“அது தெரியல.. பாம்பு அவ எதிர்க்க கொ நேரம் படம் எடுத்து நின்னப்பகூட அவ கொஞ்சம் பயப்படல.. அவ பாட்டும் பூ கட்டிகிட்டே இருந்தா

“அப்ப அவளுக்கு தன்னை பத்தியும் சரி, ம எதை பத்தியும் தெரியலன்னுதான் அர்த்தம்... அ பாடா..!”

“ஆமா அது என்ன குத்தம் பண்ணிச்சு. எதுக் இப்படி அதை போட்டுத்தள்ள பாக்கறே?”

“உன் தொழில்ல ஏன் எதுக்குன்னெல்லா காரணம் கேட்கக் கூடாதுங்கறது உனக்கு தெரியு தெரியாதா?”

“அது வந்து சென்ராயா..”

“வேண்டாம் வேங்கையா... இதுக்கு மேலே வார்த்தை பேசாதே. ஊர் உலகத்துக்கு சந்தே வராதபடி அவ கதையை நீ முடிச்சா உனக்கு சுளை மூணு லட்சம் கிடைக்கும். அதுல இப்பவும் எ மாற்றமும் கிடையாது..?”



“ஆனா சென்ராயா.. அந்த பொண்ணு இப்ப அங்க இல்லையே?”

“அங்க இல்லைன்னா வேற எங்க?” சென்ராயன் பதட்டத்தோடு திருப்பிக் கேட்டான்.

“அந்த சாமியார் கிழவி அந்த புள்ளையை யாரோ ஒரு பணக்கார ஜோடி வரவும் அவங்களோட அனுப்பி வெச்சிடிச்சு... நான் புதருக்குள்ள நழுவறமாதிரி ஒளிஞ்சிருந்து பாத்துட்டு தான் வரேன்..”

“யார் அந்த ஜோடின்னு ஏதாவது தெரியுமா?”

“எனக்கு என்ன தெரியும்? ஆனா ஒரு விஷயம் மட்டும் விளங்கிடிச்சு. அந்த ஜோடிங்க கைல ஒரு குழந்தை இருந்துச்சு. அந்த குழந்தைக்கு இந்த பொண்ணுதான் பால் கொடுத்துச்சு. அதை வெச்சு பாக்கும்போது அந்தம்மா அந்த குழந்தையை பெத்திருக்க வாய்ப்பில்லேன்னு நான் நினைச்சேன். அதுக்கு தகுந்த மாதிரி அந்தம்மாவோட புருஷன்காரன் அந்த சாமியார் கிழவியை பார்த்து போன தடவை நாங்க வந்தப்ப குழந்தையை கொடுத்தீங்க, இப்ப குழந்தைக்கு பால் கொடுக்க ஒரு தாயையே கொடுத்துட்டீங்கன்னு சொல்லவும் தான் நான் நினைச்சது சரின்னு தோணுச்சு..”

- வேங்கையன் என்னும் அந்த கூலிக் கொலை காரனின் ஸ்டேட்மென்ட் சென்ராயனை வெகுநேரம் யோசிக்க வைத்தது.

“என்ன சென்ராயா யோசிக்கறே?”

“இல்ல.. அந்த குழந்தையும் அனேகமா அவ குழந்தையாதான் இருக்கணும்.”

"அது யார் குழந்தையா வேணா இருந்துட்
போகட்டும். எனக்கு அந்த பொண்ணுதானே குறி"

"இப்ப சொல்றேன் கேட்டுக்க.. அவ மட்டும்
இல்ல குழந்தையும் தான்."

"குழந்தையுமா. அது என்ன பாவம் பண்ணி
சென்ராயா?"

"கேள்வி கேட்காம வேலையை கச்சிதமா மு
மூணு லட்சத்த அஞ்சு லட்சமாக்கி தரேன்."

"நான் தெரியாம தான் கேக்கறேன். நீயோ மா
சம்பளக்காரன். இத்தனை லட்சத்துக்கு நீ எ
போவே?"

"முட்டாப்பயலே.. அவ என்ன எனக்கா பகை
அவளை அழிக்க நான் செலவு செய்யறதுக்கு."

"அப்ப வேற ஒருத்தருக்காக தான் நீ இதை செய்
சொல்றியா?"

"பாத்தியா. தொட்டுத் தொட்டு மேட்டர்கிட்
வரப்பாக்கறியே. முதல்ல இடத்தை காலி பண்ணு."

"கோவிச்சுக்கற பாத்தியா..?"

"உன்கிட்ட இனி பேச்சு இல்ல... அந்த ஜோ
யாருங்கறத கண்டுபிடி. போ. கொடுத்த வேலை
கச்சிதமா முடிச்சிட்டு வந்து சொல்லு. நீ சொல்
மட்டும் உண்மையா இருந்தா அஞ்சு லட்சம் அப்ப
உன்கைல இருக்கும்."

"நல்ல வேளை. அந்த ஜோடிங்க வந்த காரை
அதோட நம்பரையும் பாத்து வெச்சுகிட்டேன். இ



அதை வெச்சுகிட்டு தான் ஆள் யாரு? எங்க இருக்கான்னு எல்லாத்தையும் கண்டுபிடிக்கணும்."

"நீ பாட்டும் தேட்றேன் - கண்டு பிடிக்கறேன்னு நாளக் கடத்திடாதே. வேலை அதிகபட்சம் 10 நாள்ல இல்லாட்டி 15 நாள்ல முடியணும்."

"இவ்வளவு நாள்னு மட்டும் கெடு விதிக்காதே. கூடிய சீக்கிரம் ஜோலிய முடிச்சிட்டு நான் வருவேன்.. என்னா ஒரு காசா இரண்டு காசா.. அஞ்சு லட்சமில்ல..?"

- வேங்கையன் சொல்லிக்கொண்டே அங்கிருந்து அகன்றான். சென்ராயனும் பங்களாவினுள் நுழைந்தான். அந்த பங்களா முதலாளியின் காபி தோட்டத்தில் தான் சென்ராயன் வேலை பார்க்கிறான். தோட்டம், பங்களா என்று மாறி மாறி இருப்பான். முதலாளி மகன் சுரேஷ் என்கிற சுரேஷ்குமாருக்கு சென்ராயன் தான் வலது கை இடது கை என்று எல்லாம்..

சுரேஷ் சொன்னால் கிணற்றில்கூட குதிப்பான். அந்த சுரேஷ் சென்ராயன் உள்ளே வரவும் முழுக்கை சட்டைக்கு பட்டன் போட்டபடி அவன் எதிரில் மாடியில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தான். சென்ராயனைப் பார்க்கவும் "ஏண்டா லேட்டு?" என்பது தான் அவன் கேள்வியாக இருந்தது.

"தோட்டத்துல பூச்சி மருந்து அடிச்சுகிட்டு இருந்தாங்க. நான் வந்துட்டா சும்மா மேம்போக்கா அடிச்சுட்டு போக்கு காட்டிருவாங்கய்யா.. அதான் இருந்து அவங்க முழுசா அடிச்சு முடிக்கவும் கிளம்பி வந்தேன்."

"சரி சரி ஜீப் ரெடியா இருக்குல்ல?"

"அதுல தான்யா வந்துருக்கேன்.."

"சரி வா.. போகைல மத்த விசயத்த பேசிக்கலாம்
- பேச்சோடு வேகமாக நடந்த சுரேஷ் போர்ட்டிகோவி
நின்று கொண்டிருந்த ஜீப்பில் ஏறிக் கொள்ள
சென்ராயனே டிரைவிங் சீட்டில் ஏறிக்கொண்டு அ
கிளப்பினான்.

அன்றைய பகல் பொழுதில் அவ்வளவாக வெ
மில்லை. மேகப் பொதிகளும் ஊதிவிட்ட புகை போ
வழியெங்கும் தேங்கிக் கிடந்தது. மலைக்கு அழகே அ
பசுமையான மரங்கள்தான்! மலை மரங்கள் தான் நூ
உயரம் எல்லாம் சாதாரணமாக வளரும்.. கீழே
திம்மென்று நிழல் இருக்க சிலுசிலுப்பிலும் அ
எடுக்கும். அதை ஒருவர் ஒருமுறை அனுபவித்து விட்
அந்த சிலுசிலுப்புக்கும் நிழலுக்கும் மனது ஏங்கும்.

கண்களுக்கும் காட்சிகளால் குளிர்ச்சி..! ஜீப்
விரையும்போது காற்று வேறு காதுமடலில் மோ
குசுகுசுக்கும். மொத்தத்தில் மலை எல்லா விஷ
களிலும் மலைக்க வைப்பதால்தான் அதற்கு மலை என்
பெயர் வந்ததோ என்னவோ?

சுரேஷும் ரசித்தபடி வந்தான். சிரசின்மேல் வகி
எடுத்து தலைவாரிக் கொள்வதுபோல வகிடு எடு
மாதிரியான தார்ச்சாலை. பாம்பினுடைய நெளிச
அது கடன் வாங்கியிருந்தது. சென்ராயனும் மிதமா
வேகத்தில் ஜீப்பை செலுத்தினான். குறிப்பிட்ட
இடத்தின் கீழ் ஜீப் ஒதுங்கி நிற்க ஒரு டென்னி
கிரவுண்ட் அளவுக்கு இடம் இருந்தது. அங்கே ஜீப்
ஒதுக்கி நிறுத்திய சென்ராயனும் "சரக்க எடுக்கட்டு



களா?" என்று மெல்லிய குரலில் கேட்டான். சுரேஷிடம் மௌனமான சம்மதம். அடுத்து ஐந்தாவது நிமிடம் மேல்நாட்டு சரக்கு கண்ணாடிக் கோப்பைக்குள் அரக்கு நிறத்தில் தளும்பி வழிந்தது. குடியோடு கூடவே சிகரெட்!

"என்னடா... கெஸ்ட் அவுசுக்கு அவ வருவால்ல..?" கேள்வியும்..

"வருவாய்யா... எல்லா ஏற்பாடும் பண்ணிட்டேன்.."

"வந்து தகராறு பண்ணமாட்டால்ல?"

"பணத்தை நீட்டி வாங்கிட்டாய்யா... புருஷனுக்கு ஆபரேஷன் பண்ணணுமாம்... அதனால கொஞ்சம் கூட கேட்டா. நானும் கொடுத்துட்டேன்.."

"இவ தாண்டா அசல் பத்தினி. ரைட் வண்டிய எடு.."

-அந்த ஜீப் திரும்பவும் ஓடத் தொடங்கியது!

# 10

ஏற்காடு! கெஸ்ட் ஹவுசின் முன்னால் அந்த ஜீப் செருமியபடி நின்றது. மிக மெலிதான பனி மூட்டம். அடர்வான நிழல் சூழ்ந்த அந்திக் கருக்கல் போன்ற கால நிலை.

ஜீப்பில் இருந்து சென்ராயனும் சுரேஷும் இறங்கிக் கொண்டனர். கெஸ்ட் ஹவுசிற்கு வெளியே ஒரு பெரிய வாதாமரம் இருந்தது. அதன் நிழலில் புடவை முந்தானையால் முகம் சரியாக வெளியே தெரியாதபடி மூடி நின்று கொண்டிருந்தாள் ஒரு பெண்.

சுரேஷ் அவளைப் பார்த்த விதமே கடும் காமாந்
கமாக இருந்தது.

"அவதானாடா..?"

"ஆமாங்கய்யா..."

"சரி நீ கிளம்பு.."

"பாத்துய்யா.. பெரிய அய்யா வந்தாலும் வருவாரு.."

"யாரு அப்பாவா?"

"ஆமாம்யா.."

"அவருக்கு இன்னிக்கு கெஸ்ட் ஹவுஸ்ல என்ன வேலை?"

"தெரியலய்யா... எஸ்டேட் மேனேஜர்கிட்ட கெஸ்ட்ஹவுஸ் சுத்தமா இருக்கான்னு கேட்டுகிட்டிருந்தாரு.."

"சும்மா கேட்ருப்பாரு.. அதெல்லாம் வ மாட்டாரு... வந்தாலும் நான் பாத்துக்கறேன்."

"இல்லய்யா.. அவர் கட்டாயம் வருவார்னுதா என் மனசு நினைக்குது.."

"என்னடா... பயமுறுத்தறே?"

"பயமுறுத்தலய்யா.. உங்கள பத்தி அய்யாகிட்ட யாரோ போட்டு உட்றுக்காங்க. அனேகமா அந் மேனேஜராதான் இருக்கணும். என்ன கூப்பிட்டு கூ விசாரிச்சாரு.."

"என்னன்னு?"



"நீ தான் சுரேஷுக்கு இப்ப வலது கையா... அவ லுக்கு ரொம்ப பிடிச்சது விஸ்கியா - பிராந்தியா? கெஸ்ட் னுக்கு ஹவுசுக்கு யார் யாரோ வந்துட்டு போறாங்கன்னு கேள்விப்பட்டேன்னு பிலுபிலுன்னு பிடிச்சுக்கிட் டாருங்க.."

- சென்ராயன் சொல்லச் சொல்ல சுரேஷின் இமைகள் படபடத்தது. சற்று பெருமூச்சும் விட்டான். பின் "அந்த மேனேஜர் வேலையாதான் இருக்கணும். நம்ம விஷயத்துல வாலாட்டுனா என்ன நடக்கும்னு அவனுக்கு காட்டியாகணும்" என்றான்.

"வேண்டாம்யா.. இப்ப எதுவும் செய்ய வேண்டாம். மேனேஜரும் ஒண்ணும் லேசுப்பட்ட ஆள் இல்லை. அவர் தம்பிதான் இப்ப நம்ம ஏற்காடு போலீஸ் ஸ்டேஷன் சப் இன்ஸ்பெக்டரா இருக்காரு.."

- சென்ராயன் பதில் முள்போல தைத்தது. முகம் கோணலாகிப் போனது. மரத்தடியில் காத்துக் கொண்டிருந்த அந்த பெண்ணோ மெல்ல முட்டாக்கை விலக்கி ஜீப்பிற்கு அருகில் நின்றபடி பேசிக் கொண் டிருந்த இருவரையும் பார்த்தாள்.

மிகவும் இளவயதான தோற்றம், மாநிறம், நல்ல உயரமும் கட்டுமஸ்தாகவும் தெரிந்தாள். சுரேஷுக்கு அவளை தோற்றபூர்வமாக பார்த்துவிடவும் சென்ராய னிடம் பேசுவது இரண்டாம் பட்சமாயிற்று.

"சரி சென்ராயா.. நீ போ, எதுவா இருந்தாலும் பிறகு பேசிக்கலாம்.." என்றபடி ஜீப்பில் தற்காலிகமாக ஏறி அமர்ந்து மிச்சமிருந்த சரக்கை மளமளவென்று அப்படியே குடித்தான்.

குடித்த வேகத்தில் அந்த பெண்ணை வரச் சொல் விட்டு உள்ளே சென்றான். கெஸ்ட் ஹவுஸ் காவ காரனான வையாபுரி என்பவர் ஒரு அழுக்கு கோ அணிந்து தலைக்கு மஃப்ளர் எல்லாம் கட்டியிருந்தார்.

சுரேஷ் உள் நுழையவும் வெளியே வந்தவர் அந் பெண் நுழையவும் வெளிப்பக்கமாக கதவை இழுத் மூடினார். சென்ராயனையும் சற்று மந்தமாகப் பார்த்தா

"என்னய்யா பாக்கறே?"

"இதெல்லாம் என்ன பொழப்பு சென்ராயா?"

"புடிக்காட்டி இடத்த காலி பண்ணு.. இந் வேலைக்கு வர ஊருக்குள்ள நான் நீன்னு ஏகப்பட்ட பே காத்துகிட்டிருக்காங்க."

"இப்படி சொன்னா எப்படி சென்ராயா.. சின் முதலாளி உடம்பு என்னத்துக்கு ஆகும்.. நான் அந் அக்கரைல சொன்னேன்.."

"இந்த மாதிரி கவலையெல்லாம் நமக்கெது குய்யா? காசு இருக்கு வீசி எரிஞ்சு செலவழிக்கறாங் இல்லாததால நாம அடிமை வேலை பார்க்கறோம் ரொம்ப யோசிக்காதே... அதே சமயம் பெரிய இடத் சமாச்சாரம் - யார்கிட்டேயும் எதைப் பத்தியும் மூச் விடக்கூடாது.." சென்ராயன் எச்சரித்துவிட்டு புறப்பட் சென்றான். வையாபுரியும் அதுதான் சரி என்கிற மாதி ஒரு பீடியை பற்ற வைத்துக் கொண்டு ஒரு ஓரமா போய் உட்கார்ந்து கொண்டார்!



ரகுபதியின் பங்களா!

கீரைக்கார கண்ணம்மா சாமுண்டிக்கு வீட்டு வேலை பார்ப்பது எப்படி என்று சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். ஒரு விளக்குமாற்றை கையில் கொடுத்து எப்படிக் கூட்ட வேண்டும் எப்படி தரையை துடைக்க வேண்டும் என்றெல்லாம் செய்தே காண் பித்துக் கொண்டிருக்கும்போது குழந்தை அழும் சத்தம் கேட்டது.

அவ்வளவுதான் கையிலிருந்த விளக்குமாற்றை அப்படியே போட்டுவிட்டு குழந்தை இருந்த அறை நோக்கி ஓடத் தொடங்கினாள் சாமுண்டி.

குழந்தை ஜானகியின் கைகளில் இருந்தது. அதை அவளிடம் இருந்து தினவோடு பறித்தவள் வேக வேகமாய் கட்டில் மேல் அமர்ந்துகொண்டு ரவிக்கை ஊக்கை அவிழ்த்து குழந்தைக்கு பால் புகட்டத் தொடங்கிவிட்டாள். ஜானகிக்கும் கண்ணம்மாவுக்கும் இது சற்று அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ஜானகி அதை வெளிக்காட்டவில்லை. ஆனால் கண்ணம்மாவுக்கு சிடுசிடுவென்று கோபம் வந்தது.

"என்னம்மா இது.. நான் வீடு கூட்டச் சொல்லிக் கொடுத்துகிட்டிருக்கேன். குழந்தை அழற சப்தம் கேட்டு வந்து இப்படி உட்காந்துட்டாளே... இவளை என்னாங் கறது?" என்றாள்.

"எனக்கும் ஒண்ணும் புரியலை கண்ணம்மா விடு.. குழந்தைக்கு பால் தானே கொடுக்கறா.."

"அது சரிம்மா... அதுக்கு முறை இருக்குல்ல... உங்க கைல இருந்து இப்படியா புடுங்குவா?"

- கண்ணம்மாவுக்கு அடங்கவில்லை. ஆனா அவள் பேசியது எதுவுமே சாமுண்டியின் காதுகளில் விழவில்லை. அவள் குழந்தை பால் குடிப்பதில் தன்னை மறந்து விட்டிருந்தாள். குழந்தையும் முண்டி முண்டி பால் குடித்தபடி இருந்தது. அதை பார்த்த கண்ணம்மாவிடம் மேலும் நெருடல்.

"அம்மா இப்படியே விடாதீங்கம்மா. இவ பால் கொடுக்கறதையும், புள்ளை அதை குடிக்கறதையும் பார்த்தா இவதான் இந்த பிள்ளையை பெத்தாளோன்னு எனக்கு சந்தேகமாயிருக்கு.."

- கண்ணம்மாவின் பேச்சு ஜானகியின் மனதில் நெருப்பைக் கொளுத்திப் போட்டது.

"கண்ணம்மா.." என்றாள் அதட்டலான குரலில்.

"அம்மா.."

"என்ன அம்மா.. எதுக்கு இப்படி கற்பனை பண்ணிப் பேசறே?"

"கற்பனை இல்லம்மா.. பாருங்கம்மா இந்த காட்சியை - இதை பாக்கறவங்க என்ன நினைப்பாங்க."

"திரும்பத் திரும்ப நீ பேசினத நியாயப்படுத்தாதே விட்டா குழந்தையை எடுத்துகிட்டு இந்த சாமுண்டி ஓடிப் போயிடுவான்னு கூட சொல்வே போல இருக்கே"

"நான் என்ன சொல்றது... இப்படியே விட்டா அப்படி நடந்தாலும் நடக்கும்.."

"போதும் கண்ணம்மா.. வாய மூடிக்கிட்டு முதல்ல நீ வெளியே போ.."



"அம்மா.. இவளை கண்டிக்காம என்னைப் போய் கண்டிக்கறீங்க."

"இவளுக்கு தான் யாருங்கறதே தெரியாது... ஆனா நீ என்ன அப்படியா?"

"அது தாம்மா ரொம்ப ஆபத்தான விஷயம். தெரிஞ்சா இங்க நாம இப்ப பேசிக்கிட்டிருக்கறத கேட்டு குறைந்தபட்சம் திரும்பியாவது பார்த்துருப்பா. ஆனா.. பாருங்க கல்லாட்டம் உட்கார்ந்திருக்கறத.."

கண்ணம்மா சளைக்கவில்லை. நல்ல வேளையாக ரகுபதி வரவும் அவள் குரல் அடங்கியது. ஓரமாக ஒதுங்கினாள். சாமுண்டியும் பால் கொடுத்து முடித்து விட்ட நிலையில் குழந்தை வாயோரம் பால் ஒழுக அவளைப் பார்த்து சிரிக்க முனைந்தது. அதைப் பார்க்கவும் ஜானகியிடம் ஒரு படபடப்பு. ஓடிப் போய் குழந்தையை அவளிடம் இருந்து அவள் பிடுங்கியதைப் போலவே பிடுங்கினாள். குழந்தை அதனால் அழத் தொடங்கியது. பார்த்தபடி இருந்த ரகுபதிக்கே ஜானகியின் செயலால் கோபம்தான் வந்தது.

"என்ன ஜானகி இது.. எதுக்கு இப்படி குழந்தையை பிடுங்கறே. பாரு.. நீ பிடுங்கவும் அழுவுது.."

"அது சரி... இவ என்கிட்ட இருந்து குழந்தையை பிடுங்கினதை நீங்க பார்த்திருந்தா தெரியும்.."

"என்ன சொல்றே?"

"குழந்தை என்கிட்ட இருந்தப்ப அழுதான்க.. உடனே ஓடிவந்து பிடுங்கி பால் கொடுக்கத் தொடங்கிட்டா.."

“ஓ அதுதான் கண்ணம்மா கூட சர்ச்சையா..?”

“கண்ணம்மா ரொம்ப பயமுறுத்தறாங்க..”

“பயமுறுத்தறாளா?”

“ஆமாம். இப்பவே சாமுண்டியை கண்டிச்சு வைக்கணும்கறா.”

“பைத்தியம்.. தன் வேலைக்கு போட்டியா ஒருத்தி வரவும் அவதான் பயந்துட்டா. இது புரியலியா உனக்கு பாவம் சாமுண்டி. இங்க நாம இவ்வளவு பேசறோமே. பாரு அவபாட்டு மலங்க மலங்க பாத்துகிட்டு நிக்கறதை.”

-ரகுபதியின் விளக்கம் ஜானகிக்கு கொஞ்சம் போல மனசாந்தியை ஏற்படுத்தியது. ரகுபதி ஜானகியிடம் இருந்து குழந்தையை வாங்கிக் கொண்டான். வயிறு முட்ட பால் சாப்பிட்டதால் குழந்தைக்கு தூக்கம் சொட்டத் தொடங்கியது.

“பாரு... தூக்கம் வந்துடுச்சு. போய் தொட்டில்ல போட்டு தாலாட்டு..” என்று அவளிடமே குழந்தையை தந்தான். அப்படியே சாமுண்டியிடம் போய் நின்றான்.

“சாமுண்டி..”

“ஐய்யா..”

“குழந்தைக்கு பால் தந்தே போல இருக்கே?”

“அ.. ஆமாங்கய்யா.”

“குட்..”

“நான் இப்ப அடுத்து என்ன செய்யணும்?”

“போய் ஜானகி குழந்தையை தூங்க வைக்கறதைப் பார். நீயும் அதே போல தூங்க வைக்க கத்துக்கோ...”



“தூங்க வைக்கறதுன்னா என்ன?”

“போய்ப் பாரு..” அவளை அனுப்பி விட்டு கண்ணம்மாவை தேடிச் செல்லவும் அவள் கீரை ஆய்ந்து கொண்டிருந்தாள்.

“கண்ணம்மா..”

“அய்யாங்களா... வாங்க..”

“நான் வர்றது இருக்கட்டும். சாமுண்டியை பார்த்து நீ பயப்படாதே. அவளால உன் வேலைக்கு எந்த ஆபத்தும் வந்துடாது...”

“நானும் அப்படி எல்லாம் நினைக்கலீங்களே..”

“நீ நினைக்க வேண்டாம். ஆனா எனக்கு தெரியும். உன் வேலை என்னவோ அதை பார். குறிப்பா குழந்தைக்கும் ஜானகிக்கும் நடுவுல எந்த காரணத்தை கொண்டும் மூக்கை நுழைக்காதே.”

“சரிங்கய்யா..”

அப்புறம்... நாளைக்கு வீட்ல குழந்தைக்குப் பேர் சூட்டு விழா. பல பேர் வருவாங்க. எல்லாரையும் நல்ல படியா கவனிச்சு அனுப்பணும். சரியா...”

“சரிங்கய்யா..”

- கண்ணம்மாவையும் பேசி சரி செய்து விட்டு ஜானகி தொட்டிலை ஆட்டியபடி இருக்கும் பெட்ரூமுக்குள் நுழைந்தான் ரகுபதி. அருகில் அமர்ந்து கொண்டு கொட்டக் கொட்ட பார்த்துக் கொண்டிருந்தாள் சாமுண்டி.

"ஜானகி.. சாமுண்டி குழந்தையை தூங்கப் ப
ணட்டும். நீ என் கூட கொஞ்சம் வெளியவா. நம
கொஞ்சம் வேலை இருக்கு."

"என்ன வேலைங்க."

"நாளைக்கு பேர் சூட்டு விழாவுக்கு கெஜலட்சு
யம்மா வருவாங்க இல்லியா."

"நிச்சயமா."

"முதல் முதலா நம்ம வீட்டுக்கு வர்ற அவங்களுக்கு நல்லபடியா ஒரு பட்டுப்புடவை வாங்கித் தந்தாலே நல்லாயிருக்கும்?"

"ஓ- அதுக்கா.. இதோ அஞ்சு நிமிஷத்துல ரெடியா யிட்றேங்க."

ஜானகி விலகினாள். சாமுண்டி தொட்டிலை ஆட்டத் தொடங்கியிருந்தாள். அவள் விழிகள் வாயில் விரல் போட்டபடி தூங்கும் குழந்தை மேலேயே இருந்தது. மிகுந்த ரசனையோடும் அவள் பார்ப்பது போல் இருந்தது. பார்த்தபடியே கழுத்துப் பக்கம் கை விரலால் ஸ்பரிசித்தாள் அங்கே பால் கொட்டியது போல வெண்ணிறத்தில் தேமல்!

அதன்மேல் அவள் விரல்கள் ஸ்பரிசித்தன.. நெற்றி சுருங்கியது. அந்த தேமல் அவளுக்குள் ஒரு இனம் புரியாத சலனத்தையும் உருவாக்கத் தொடங்கியது. ஆனால் அவளால் சலனத்துக்கான காரணத்தை எண்ண பூர்வமாக உணர முடியவில்லை!



கெஸ்ட் ஹவுஸ்!

சல்லாபத்தை முடித்துக் கொண்டு எழுந்து அமர்ந்தான் சுரேஷ். ஒரு சிகரெட்டை தேடி எடுத்து பற்ற வைத்துக் கொண்டான். புகை உதட்டில் இருந்து குழல் குழலாகப் பிரிந்தது. அவனிடம் பணத்துக்காக தன்னை ஒப்படைத்திருந்த அந்த பெண்ணும் எழுந்து சேலையை சரிசெய்து கொண்டாள். அவனைப் பார்த்து சிணுங்கலாக சிரித்தாள். பதிலுக்கு அவனும் சிரித்தான். அப்போது அவள் பார்வை அவன் கழுத்தின்மேல் சென்றது. அங்கேயும் பாலைக் கொட்டியது போல தேமல்.

"உங்க கழுத்துல அது என்ன தேமலுங்களா?"

"ஆமாம்.. உன் கண்ல பட்ற அளவுக்கா பளிச்சினு தெரியுது?"

"தெரியவும் தானே கேட்டேன்... சரிநான் புறப்பட்றேன்."

"போய்ட்டுவா."

"அடிக்கடி வரவா?"

"அது உன் விருப்பம்."

"அப்ப வரேன்.." அவள் புறப்பட்டாள். அவள் வெளியில் வந்தபோது கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து சுரேஷின் அப்பா ராஜேசேகரன் இறங்கிக் கொண்டிருந்தார்!

# 11

ராஜசேகரனைப் பார்க்கவும் அந்த பெண்ணிட ஒரு அதிர்வு! கெஸ்ட் ஹவுஸ் வாட்ச்மேனா வையாபுரியும் விழுந்தடித்துக் கொண்டு ஓ வந்தார்.

ராஜசேகரன் பார்வை அந்த பெண்ணை ஊடுரு யது. அவள் தலையை குனிந்து கொண்டாள். சுரேஷு வெளியே சப்தம் கேட்டு வாசற்புறமாய் வந்து பார்த்தா ராஜசேகரைப் பார்க்கவும் பகீரென்றது. இருந்து மின்னல் வேகத்தில் சுதாரிக்கத் தொடங்கினான்.

“ஏ புள்ள... அங்க என்ன தேக்கம்..? ஒழுங்கா வேலை பார்க்கறதா இருந்தா வேலைக்கு வா இல்லாட்டி வரவே வராதே” - என்று சத்தமாக பே அவளை மிக வேகமாய் ஒரு வேலைக்காரி ஆக்கினா அவள் மட்டுமல்ல - வையாபுரியும் புரிந்து கொண்டா

அந்த பெண்ணும் எதுவும் பேசாமல் நழுவி செல்லத் தொடங்கினாள். சுரேஷ் ராஜசேகரனையு வரவேற்க ஆரம்பித்தான்.

“வாங்கப்பா.. என்னப்பா திடீர்னு இந்த பக்கம்?”

அவரும் தன் சஞ்சலத்தை விலக்காமலே பேச தொடங்கினார்.

“திடீர்னு வந்ததால தானே இதை எல்லா பார்க்க முடியுது?”

“என்னப்பா சொல்றீங்க..?”



“நீ சமாளிக்காதே. இப்ப வந்துட்டு போறவ யார்னு எனக்கு தெரியும்..”

சுரேஷுக்கு சுரீர் என்றது.

“அப்பா இவ நம்ம கெஸ்ட் ஹவுசை கூட்ட வந்தவ. ஒழுங்கா வேலை பாக்காம இதோ இந்த வையாபுரியோட அரட்டைல இருந்தா. அதான் திட்டி வெளியே அனுப்புனேன். நீங்களும் அப்ப பார்த்து வந்துட்டீங்க...”

“சுரேஷ்.. சும்மா சும்மா பொய்யா சொல்லாதே... உன்னை பத்தி ஒரு நல்ல விஷயம் கூட என் காதுல விழமாட்டேங்குது. வயசுப் பசங்க கொஞ்சம் அப்படி இப்படித்தான் இருப்பாங்கன்னு எனக்கும் தெரியும். ஆனா நீ எல்லாத்தையுமே வரம்பு மீறி போய்கிட்டிருக்கே! உனக்குள்ள நான் குரூரமான புத்தியையும் பாக்கறேன். எஸ்டேட்ல முப்பது வருஷமா நம்மகிட்ட வேலை பாத்துகிட்டு வர்ற அங்களாப்பன் மூஞ்சில சுடச் சுட காபியை வீசி எறிஞ்சிருக்கே! கேட்டா காபியில சர்க்கரை போடத் தவறுனதுக்கு தண்டனைன்னு சொல்லியிருக்கே. இதெல்லாம் ரொம்ப கொடூரம். இந்த ராஜசேகர் குடும்பமும் சரி, நம்ப எஸ்டேட்டும் சரி இந்த ஏற்காட்டுல ரொம்ப பேர் போன குடும்பம்... அதை பேர் கெட்ட குடும்பமா மாத்திடாதே..”

- என்று எச்சரித்தபடியே உள்ளே நுழைந்தார். வாட்ச்மேனான வையாபுரி அதை நன்கு ரசித்தார். பதிலுக்கு அவரை சுரேஷ் பார்த்த விதம் மிகக் கொடுமையாக இருந்தது.

உள்ளே ஒரே அலங்கோலமாக இருந்தது. சிகரெட் புகையின் வாடை மூக்கைத் துளைத்தது. பெட்ரூம் கதவு

திறந்திருக்கவும் உள்ளே எட்டிப் பார்த்தார். மது பாட்டில் கண்ணில் பட்டது. சுரேஷ் கைகளை குத்துப் பிசைந்து கொண்டான். ஓரிடத்தில் காண்டம் ஒன்றும் கண்ணில் பட்டு அவர் கண்களில் தீப்பிடித்தது. அருகே சென்று அதை கையில் எடுத்தார். சுரேஷையும் பார்த்தார். அவனோ தலையை தாழ்த்திக் கொண்டான்.

"இதுக்கு இப்ப என்ன பொய் சொல்லப் போறே?"

- அவன் விழித்தான்.

"இனி உன்கூட பேசறதுல பிரயோஜனமில்ல.. உனக்கு ஒரு நாள் அவகாசம் தரேன். நீ நம்ம எஸ்டேட் காபி க்யூரிங் டிபார்ட்மெண்ட்ல போய் வேலைல சேர்றே. முதலாளி ராஜசேகர் மகனா இல்லை. ஒரு சாதாரண கூலித் தொழிலாளியா! உனக்கு ஒரு நாள் சம்பளம் முன்னூத்தி பத்து ரூபா... காக்கி பேண்ட் காக்கி சட்டை போட்டுகிட்டு ஒரு தொழிலாளியா இந்த சம்பளத்துல நீ ஆறு மாசம் ஒழுங்கா வேலை பார்த்தா நீ என் பிள்ளை. இல்லே நான் சம்பாதிச்ச சொத்துல உனக்கு சல்லிக் காசு கிடையாது. இது எல்லாமே என் உழைப்புல வந்தது. ஞாபகம் வெச்சுக்கோ.. இனி இந்த கெஸ்ட் ஹவுசுக்கும் நீ வரக்கூடாது.

யோவ் வாட்ச்மேன்.. இவனை நீ உள்ள விட்டே உனக்கு இங்க வேலை கிடையாது. எங்க என் கண் எதிர்லயே புறப்படு பார்ப்போம்" என்றார்.

அவனுக்கு அவர் செருப்பால் அடித்தது போல் இருந்தது. அவரை முறைத்துப் பார்த்தபடியே அங்கிருந்து புறப்பட்டான். செல்போனில் சென்ராயனை தொடர்பு கொண்டு ஜீப்பை எடுத்து வரச் சொல்லவும்



ராஜசேகர் அவனை அருகில் அழைத்து அவன் செல்லை பிடுங்கிக் கொண்டு சென்ராயனுக்கு போன் செய்து "இனி நீ என் பையன் பேச்ச கேட்டு ஆட்டம் போட்டே உனக்கு இந்த எஸ்டேட்ல வேலை கிடையாது!" என்றார்.

சுரேஷுக்கு சில நிமிடங்களில் தன்னை விட்டு எல்லாமே போய்விட்டது போல் இருந்தது!

RTO ஆபீஸ்!

ஜே ஜே என்று கூட்டம்..

இந்தியன் போல் ஆயிரம் திரைப்படங்கள் வந்தாலும் திருந்த மாட்டோம் என்கிற மாதிரி எங்கு பார் லஞ்சம்!

புது வகை லஞ்சமாக ராணுவத்தினர் கொண்டாடும் கொடிநாள் கொடிகளை எல்லோர் தலையிலும் ஆளுக்கு தகுந்த மாதிரி கட்டிக் கொண்டிருந்தனர். ஒருவர் பேங்கில் கடன் வாங்கி கார் வாங்கியிருந்தார். கடன் முழுவதையும் கட்டி முடித்து விட்டார்.

ஆர்.சி.புக்கில் அதற்கான எண்டார்ஸ் முத்திரை பெற வந்திருந்தார். அதற்கு அரசாங்கம் விதித்திருக்கும் கட்டணம் இருநூறு ரூபாய். ஆனால் ஐநூறு ரூபாய் இல்லாமல் முத்திரை அந்த தாளில் விழாது என்று கூறிக் கொண்டிருக்கிறார் ஒரு புரோக்கர்.

"யோவ் எனக்கு மந்திரியை நல்லா தெரியும்.."

"அந்த மந்திரிக்கு உன்னை தெரியுமா?"

"நல்லா தெரியும்.."

"பிரயோஜனமில்லை... ஏன்னா இங்க வசூலாகற துல ஒரு பாகம் அவருக்கு போகுது..."

"அப்ப லஞ்சம் கொடுக்காம சரியான கட்ட ணத்தை மட்டும் கட்டி ஒரு ஆர்.டி.ஓ. ஆபீஸ்ல ஒருத்த னால காரியம் சாதிக்கவே முடியாதா?"

"குதிரைக்கு கொம்பு முளைச்சா, அத்தைக்கு மீசை முளைச்சா இது ஒரு வேளை நடக்கலாம்."

"சாதிச்சு காட்டிட்டா.."

"அதுக்கு நீ பெரிய யாகம்லாம் பண்ணி வரம் வாங்கி இருக்கணும். இங்க வேலை பார்க்கறவங்க அவங்க விஷயத்துக்கே தங்களுக்கு தாங்களே லஞ்சம் கொடுத்துகிட்டா தான் கையெழுத்தே போட வரும் அது தெரியுமா உனக்கு..?"

- புரோக்கரும், அவரும் மாறி மாறி மோதிக் கொண்டிருந்தனர். இதற்கு நடுவில் அந்த லஞ்சத்தை துளியும் ஒரு பொருட்டாக கருதாமல் பலரும் பணத்தை கொடுத்து காரியத்தை முடித்துக் கொண்டு போய்க் கொண்டேயிருந்தனர். அந்த கூட்டத்தில் வேங்கையனும் இருந்தான். அவன் வெட்டிவிட்ட ஒரு ஐநூறு ரூபாய்க் காக உள்ளே ஒருவன் அவன் கொடுத்த கார் நம்பரை வைத்து அதற்குரிய முகவரியை தேடிக் கண்டு பிடித் திருந்தான்.

ஒரு துண்டு சீட்டில் முகவரியை எழுதி எடுத்து வந்தும் நீட்டினான். அந்த சீட்டில் ரகுபதியின் பெயரும் அவன் வீட்டு விலாசமும் இருந்தது.

"பார்ட்டி பெரிய பசையுள்ள பார்ட்டி. இந்த சேலத்துலயே பெரிய பில்டிங் இவரோடதுதான்." என்று விமர்சனம் வேறு செய்தான்!



ரகுபதியின் பங்களா!

வெளியே வாழை மரம் கட்டப்பட்டு சீரியல் செட்டெல்லாம் போடப்பட்டிருந்தது. உள்ளே எங்கு பார்த்தாலும் மாவிலைத் தோரணமும் கலர் காகிதமுமாய் ஒரு திருவிழாக் கோலம்.. சாலையை அடைத்தபடி கார்கள் நின்றிருக்க அதிலிருந்து வி.ஐ.பிக்கள் இறங்கி உள்ளே சென்று கொண்டிருந்தனர்.

உள்ளே ஹாலில் ஒரு அலங்கரிக்கப்பட்ட தொட்டில் அருகில் ரகுபதியும் ஜானகியும் இருந்து வருபவர்களை வரவேற்றபடி இருந்தனர். கண்ணம்மா சாமுண்டி என்று இருவரும் புதுப்புடவையில் பளிச்சென்று இருந்தனர். கண்ணம்மா எல்லோருக்கும் கூல்ட்ரிங்ஸ் கொடுத்துக் கொண்டிருந்தாள். சாமுண்டியிடமும் ட்ரேயில் பழரசங்களை கொடுத்து எல்லோருக்கும் கொடுக்கச் சொல்லியிருந்தாள். ஆனால் சாமுண்டிக்கு புன்னகை யோடு அதை கொடுக்கத் தெரியவில்லை. மிரள மிரள ஒவ்வொருவரிடமும் போய் நின்றாள். ரகுபதி அதை கவனித்து அவளை அமைதியாக குழந்தை அருகில் போய் உட்கார்ந்து கொள்ளச் சொன்னான். அவன் பார்வை கஜலட்சுமியம்மாவை எதிர்பார்த்தபடி இருந் தது. வாசற்புறமே கணவனும் - மனைவியும் பார்த்தபடி இருந்தனர். ரகுபதியின் அக்காவான வசந்தா மும்பையில் இருந்து வந்திருந்தாள். "ரகு... யாருக்காக காத்திருக்கே. நல்ல நேரம் போறதுக்குள்ள குழந்தையை தொட்டில்ல போடணும்" - என்று அவ்வப்போது தூண்டியபடி இருந்தாள். ஜானகியின் உறவுக்காரர்களும் ஆச்சரிய மாக பார்த்தபடி இருந்தனர். பலர் ரகுபதியின் அடாப் டேஷனை மெச்சிக் கொண்டிருந்தனர்.

"ஆமா இந்த குழந்தையை ரகுபதி யார்கிட்ட இருந்து வாங்கியிருப்பார்?"

"சட்ட பூர்வமா தான் இந்த அடாப்டேஷன் நடந்துருக்கும்னு நினைக்கிறேன். கல்யாணமாகி எட்டு வருஷமான பின்னாலயும் குழந்தை இல்லேன்னா இப்படி தத்து எடுத்துக்கறது தான் நல்லது. இப்படி நடந்துக்க ஒரு துணிச்சல் வேணும் - அது ரகுபதிகிட்ட இருக்கு."

"இப்படி ஒவ்வொரு குழந்தை இல்லாத தம்பதிகளும் தயாரானா இந்த நாட்டுல அனாதைக் குழந்தைகளுக்கே இடமிருக்காது இல்லையா?"

அங்கு வந்திருப்பவர்களிடம் ஆரோக்யமாக இப்படி பல கருத்துக்கள். ரகுபதியின் அக்கா வசந்தாவுக்கு தான் பொறுமை போய்விடும் போல் இருந்தது.

"ஜானகி நீ போய் குழந்தையை கொண்டு வந்து தொட்டில்ல போடு.. பெரியவங்க வரிசையா குழந்தைக்கு பொட்டு வெச்சு தலையை வருடி ஆசீர்வாதம் செய்யட்டும்.. நல்ல நேரம் போயிடப் போகுது.." என்று வேகமானாள். ஜானகியாலும் அதற்குமேல் சமாளிக்க முடியவில்லை. ரகுபதியை பார்த்தாள். அவனும் அரை மனதாக சம்மதம் தெரிவிக்கவும் கெஜலட்சுமி அம்மா உள்ளே நுழையவும் சரியாக இருந்தது. நெற்றி நிறைய குங்குமம் - தலையிலும் பூ... தெய்வீகமான கோலம்.. அம்மாவை பார்த்த அவ்வளவு பேருக்கும் கையெடுத்து கும்பிடத் தோன்றியது. சிலர் கும்பிடவும் செய்தனர். ரகுபதி வேகமாக முன் சென்றான். "அம்மா வாங்கம்மா. உங்களுக்காகத்தான் காத்திருக்கோம்" என்றான். ஜானகியும் காலில் விழுந்து எழுந்தாள். கெஜலட்சுமி



அம்மாவும் இருவரையும் தலையை வருடி ஆசீர்வதித்தாள். மேனிமேல் இருந்து ஜவ்வாது வாசம் வீசியது. குழந்தையோடு சாமுண்டியும் ஓடி வந்தாள்.

"சாமுண்டி... நல்லாயிருக்கியா?"

"ஓ..." அதற்கு மேல் சாமுண்டிக்கு பேச தெரியவில்லை.

"என்ன சொல்றான் கஜேந்திரன்?" என்று அடுத்து கேட்கவும் ரகுபதியிடம் திகைப்பு. அது அவன் தேர்வு செய்து வைத்திருக்கும் பெயர். அதை அம்மா கூறவும் ஆச்சரியமாக இருந்தாலும் இதைவிட பெரிய ஆச்சரியங்களை அம்மா நிறையவே அளித்திருப்பதும் நினைவுக்கு வந்து அடக்கிக் கொண்டான். அம்மாவும் குழந்தையை கையில் வாங்கிக் கொண்டாள். உச்சந்தலையில் முத்தமிட்டாள். குழந்தை சிணுங்கலுடன் அழப் பார்த்தது. அப்படியே தொட்டிலில் விடப் போன கெஜலட்சுமியம்மாவை வசந்தா சற்று அதிர்வுடன் பார்த்தாள்.

இந்த வீட்டுக்கே பெரியவளான என் கையில் குழந்தையை கொடுத்து விடச் சொல்லாமல் ஒரு கிழவி கையில் கொடுத்தா விடுவது என்கிற அதிர்வுதான் அது. பக்கத்தில் இருப்பவர்களின் எண்ண ஓட்டங்களை தன் அருள் சக்தியாலே உடனேயே அறிந்து கொண்டு விடும் கெஜலட்சுமியம்மாவும் குழந்தையை தொட்டிலில் விடுவது போல பாவ்லா செய்துவிட்டு குழந்தையை வசந்தா கையில் கொடுத்து விடச் சொன்னாள்.

வசந்தாவுக்கு அம்மாவின் செயல் இன்ப அதிர்ச்சியாக அமைந்துவிட்டது. அவளும் ஆசையாக தொட்டிலில் குழந்தையை விட்டாள். ரகுபதி அம்மாவின் பெருந்தன்மையான போக்கை நினைத்து நெகிழ்ந்து போயிருந்

தான். அந்த சம்பவங்கள் சாமுண்டிக்குள்ளும் இனம் புரியாத ஒரு பரவசத்தை அளித்தபடி இருந்தது. அருகில் இருந்த கண்ணம்மாவிடம் கேட்டாள்.

"ஆமாம் இங்க என்ன நடக்குது?"

"ஏன்.. பாத்தா உனக்கு தெரியலியா?"

"தெரியலியே.."

"பாத்துகிட்டே தெரியலங்கறே பாரு.. நீ கைகாரிடி.."

- கண்ணம்மா ஊசியாய் தைத்தாள். அவள் தைக்கிறாள் என்பதுகூட சாமுண்டிக்கு தெரியவில்லை.

"கைகாரின்னா..?" என்று திருப்பி கேட்டாள்.

"இதுக்குமேல என்னால உன் கூட பேச முடியாதுடி.. நடக்கறத கவனி.." என்று தொட்டிலில் எல்லோரும் ஆசீர்வதிப்பதைப் பார்த்தாள். குழந்தை நடப்பதை எல்லாம் பொக்கை வாயைப் போட்டு கொண்டு வேடிக்கை பார்த்தது. எல்லோரும் ஆசீர்வதித்து முடிக்கவும் அம்மா சாமுண்டியையும் அருகில் அழைத்தாள்.

"வா.. வந்து ஆசீர்வாதம் பண்ணு.."

"அப்படின்னா.."

"குழந்தை நல்லா இருக்கணும் இல்லையா?"

"ஆமா.. ஆமா.."

"அப்ப தலைல கைவெச்சு நல்லா இருன்னு சொல்லு.."



- சாமுண்டியும் அவ்வாறே செய்தாள். கண்ணம்மா வுக்கு தன்னைவிட்டு விட்டார்களே எனும்போது அவளையும் அழைத்து ஆசீர்வதிக்கச் சொன்னாள் அம்மா.

ரகுபதி நெகிழ்ந்துபோய் பேசத் தொடங்கினான்.

"நண்பர்களே! என் வாழ்க்கைல இன்னிக்கு ஒரு நல்ல நாள். முக்கியமான நாளும்கூட. உங்களுக்கெல்லாம் தெரிஞ்சிருக்கும் கல்யாணமானதுல இருந்து எங்களுக்கு குழந்தை இல்லாதது... இனியும் காத்திருக்கறதுக்கு ஒரு குழந்தையை தத்து எடுத்துக்கறது மேல்னு நாங்க நினைச்சப்போ எங்களுக்கு இதோ இந்த தெய்வீகமான கெஜலட்சுமியம்மா தயவால இந்த குழந்தை கிடைச்சது. இதுக்கு கஜேந்திரன்னு பேர் வெச்சிருக்கோம். இந்த குழந்தையை நாங்க தத்து எடுத்து இதுக்கு அப்பா அம்மாவாகி 1 வாரத்துக்கும் மேல ஆயிடுச்சு. ஊரறிய இப்ப நாங்க இந்த குழந்தையோட தாய் தகப்பன்கறத தெரிவிச்சுக்கறோம். எங்க வயித்துல இந்த குழந்தை பிறந்து வந்ததாகவே நினைக்கறோம். என் சொத்து பத்துல இருந்து சகலத்தையும் கஜேந்திரனுக்கு பங்கு உண்டு. என் வாரிசு இனி இவன்தான். இதை சந்தோஷமா தெரிவிச்சுக்கறேன். இந்த பேர் சூட்டு விழாவுக்கு வந்த உங்க அவ்வளவு பேருக்கும் என் நன்றிகள்!" என்ற ரகுபதி, அம்மாவை சில வார்த்தைகள் பேசச் சொன்னான். அம்மாவும் பேசத் தொடங்கினாள்.

"எல்லாரும் நல்லாயிருக்கணும். நான் ஒரு சன்யாசி. ஏற்காட்டு மலை மேல ஒரு கிராமத்துல நான் உண்டு என் சாமி உண்டுன்னு ஒதுங்கி வாழறவ... என்னை பார்க்க

வந்தப்பதான் இவங்களுக்கு இந்த குழந்தை கிடைச்சு இந்த குழந்தைக்கு நல்ல விதி - அதான் ரகுபதி ஜான மாதிரி ஒரு நல்ல அப்பா அம்மாகிட்ட வந்து சேர் திருக்கு.

பொதுவா பிள்ளைப் பேறுங்கறது ஒரு வரம். அ இல்லாம போக நாம செய்யற பாவங்கள்தான் காரண இந்த பாவத்தை நாம இந்த ஜென்மத்துல செய் இதோட பலன் அடுத்த ஜென்மத்துல தான்... அ வகைல ரகுபதியோட பூர்வ ஜென்ம கர்மம் தான் இ பிறப்புல குழந்தை இல்லாம போனதுக்கு காரணம். இ குழந்தையை தத்து எடுத்துகிட்டது ஒரு பெரிய பரிகார அதனால அந்த பாவம் வெகு சீக்கிரம் தீரலாம். தீரும் நான் நம்புறேன்.

பெற்ற தாயை தவிக்க விட்றது... சாப்பிட இலை உட்கார்ந்தவங்களை எழுந்திருக்க வைக்கறது பிராம்மணனோட சொத்தை அபகரிக்கறது, கோவி சொத்தை அனுபவிக்கிறது, பெண்ணை மானபங்க படுத்தறது, பெத்தவங்களுக்கு இறப்புக்கு பின்னா பித்ருகடன் எனப்படும் தெவசம், தர்ப்பணம் செய்யா போகறது, இதெல்லாம் தான் புத்ர தோஷத்துக் ஆளாக்குது..!

ஆகையால எல்லாரும் கவனமா இருங் அறியாமல் எவ்வளவு தவறுகள் வேணா செய்யலா அது மன்னிக்கப்படும். ஆனா தெரிஞ்சு சிறு தவ செய்தாலும் தண்டனை நிச்சயம்.."

- கெஜலட்சுமியம்மா எச்சரிப்பதுபோல பேச போது அந்த பங்களா ஹாலுக்குள் வேங்கையனு



நுழைந்திருந்தான். குழந்தையையும் சாமுண்டியையும் கொல்லாமல் அந்த வீட்டை விட்டு போகக் கூடாது என்னும் வைராக்யம் அவன் கண்ணில் ஒளிர்ந்தபடி இருந்தது.

## 12

பெயர் சூட்டு விழா கோலாகாலமாய் சென்று கொண்டிருக்க, அதில் கெஜலட்சுமியம்மாவும் பேசிடும்போது வேங்கையன் வந்துவிட்டதுதான் அதிர்ச்சியான விஷயம்.

கெஜலட்சுமியம்மா பேசி முடிக்கவும் வந்திருந்தவர்கள் வரிசையாக வந்து குழந்தையின் கையில் பரிசுப் பொருளை கொடுப்பது போல ஜானகி ரகுபதி கையில் கொடுத்து விட்டு குழந்தையை சிரசைத் தடவி வாழ்த்தி விட்டு நகர்ந்தார்கள்.

கெஜலட்சுமியம்மாவிற்கு ஒரு காவித்துணி போர்த்திய நாற்காலியை ஏற்பாடு செய்து அதில் உட்காரச் சொல்லி உபசரித்தபடி இருந்தனர். அம்மாவின் பார்வை அந்த வீட்டையே சுற்றிச் சுழன்றபடி இருந்தது.

நெற்றிப் பொட்டில் ஒரு இனம் தெரியாத குறுகுறுப்பு வேறு! அப்படி ஆனாலே கூட்டத்தில் தவறாக ஒருவன் இருக்கிறான் என்பது தான் பொருள்.

விவேகானந்தர் ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டபோது அவருக்குள் எப்போதும் இல்லாதபடி காம உணர்ச்சிகள் கிளர்ந்து எழுந்ததாம் - அதற்கேற்ப அந்த

கூட்டத்திற்கு தாசி தொடர்புள்ள ஒருவர் அந்
தாசியுடனேயே வந்திருந்தாராம். அவரின் எண்ண அலை
மன ஒருமைமிக்க விவேகானந்தரையே சீண்டு
அளவுக்கு இருந்ததாம்... மனிதர்களின் எண்ண ஓட்ட
களுக்கென்று ஒரு தனி சக்தி உண்டு. அதனால் தா
அன்றாடம் ஆலயத்திற்கு செல்வது, தேர்த்திருவிழா
மற்றும் ஊர்த் திருவிழாக்களுக்கு செல்வது மிக நல்லது
என்பார்கள் நம் சான்றோர்கள்.

காரணம் இறை நம்பிக்கை என்னும் நம்பிக்கை யோடு வருபவர்கள் தான் அக்கூட்டத்தினர். இதனால் பாசிடிவ் வைப்ரேஷன் அங்கு மிகுதியாக இருந்து நம் மனதில் நல்ல எண்ணங்கள் எழும்.

இதை தவ உடம்புடையவர்களால் சுலபமாக உணர முடியும். உப்பு, புளி, காரம் என்று மனிதர்களின் ஆசைச் சுவை அவ்வளவையும் தவிர்த்துவிட்டு ஐம் புலன் சுருக்கி உள்ளொளி பெருக்கியபடி இருக்கும் கெஜலட்சுமியம்மா போன்றவர்களுக்கு சூழலில் நிலவும் உணர்வு நிலைகளை அறிவது மிக சுலபம். அவர்கள் உடம்பே ஒருவித படபடப்பாய், எரிச்சலாய் அதை எதிரொலிக்கும். அப்போதும் அதுதான் நடந்தது.

அதற்கேற்ப பார்வையும் வேங்கையன் மேல் விழுந்தது. வேங்கையன் புத்திசாலித்தனமாய் தலைவாரி நெற்றிக்கு விபூதி எல்லாம் இட்டுக் கொண்டு ஒரு யோக்கியனைப் போல வந்திருந்தான். ஆடையும் அழுக்கில்லாமல் பளிச்சென்று இருந்தது. ஆனாலும் கண்ணிரண்டும் அவன் மனதுக்குள் உள்ள வன்மத்தை காட்டிக் கொண்டிருந்தன. அவன் கைவசம் ஒரு பரிசுப் பொட்டலமும் இருந்தது.



குழந்தையை நெருங்கியவன் ரகுபதி கையில் பரிசுப் பொட்டலத்தை தந்தான். ஒரு கும்பிடும் போட்டவனாக "ஏற்காடு செம்மநத்தம் மிராசுதார் இந்த பரிசை கொடுத்துவிட்டாருங்க. உங்களுக்கு எங்களால கிடைச்ச குழந்தை இது. அதான் ஊர்ப் பாசத்தோட பரிசு கொடுத்துவிட்டுருக்காரு..." என்றான்.

'அழைக்கப்படாத மிராசுதார் எதற்கு பரிசு கொடுத்து அனுப்ப வேண்டும்?' என்ற கேள்வியோடு அதை வாங்கிக் கொண்ட ரகுபதிக்கு கெஜலட்சுமியம்மா தன் வசம் குழந்தையை கொடுத்தது அவருக்கு எப்படி தெரியும் என்கிற கேள்வியையும் எழுப்பியது. சலனத்தோடு பார்த்தான். வேங்கையன் அதை கவனிக்காமல் ஒரு நாற்காலியில் போய் உட்கார்ந்து கொண்டான். அவன் பார்வை சாமுண்டி எங்கே என்றும் தேடியது.

சாமுண்டி மாடியில் ஒரு தூண் ஓரமாக நின்று கீழே பார்ட்டி ஹாலில் நடப்பவைகளை பார்த்தபடி இருந்தாள். அவள் பார்வையில் மருட்சி... ஒரு பணக்கார பார்ட்டி நடக்கிறது - அதில் எல்லோரும் சந்தோஷமாக பேசிக் கொண்டு குழந்தையை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதெல்லாம் அவளுக்கு அவ்வளவாய் தெரியவும் இல்லை - புரியவும் இல்லை.

ஒரு சிறு குழந்தை என்னவென்றே தெரியாமல் வேடிக்கை பார்ப்பதுபோல பார்த்துக் கொண்டிருந்தாள். வேங்கையன் அவளை ஒரு வழியாக கண்டுபிடித்து முடித்தான். சைகையில் அவளை அருகிலும் அழைத்தான். ஆனால் அவள் அவனை நோக்கி செல்லாதபடி வெறித்தாள்.

கெஜலட்சுமியம்மாள் தான் அமர்ந்திருக்கும் இடத்தில் இருந்தபடியே அவனைப் பார்த்துவிட்டு கண்களையும் இறுக்க மூடிக் கொண்டாள். மனதுக்குள் தீவிரமாய் ஒரு பிரார்த்தனை... அது அவனை துரத்தி அடிக்க வேண்டும் என்பதற்காக இருக்குமோ என்றுகூட தோன்றியது.

கூட்டமும் மெல்ல கரைந்தபடி இருந்தது. கஜேந்திரன் வாயில் எச்சில் ஒழுக சிரித்துக் கொண்டிருந்தான். அப்போது போலீஸ் ஆபீசர் ஒருவர் உள் நுழைந்து கொண்டிருந்தார். காக்கி யூனிஃபார்மில் பார்ப்பதற்கு மிடுக்காய் கம்பீரமாய் தெரிந்தார். அவரை பார்க்கவும் வேங்கையனுக்கு உதறல் எடுக்கத் தொடங்கி விட்டது.

அவனை இரண்டு முறை சிறைக்கு அனுப்பியவர்! இப்போதும் வேங்கையனை ஒரு திருட்டு கேசுக்காக தேடிக் கொண்டிருப்பவர்! பார்த்தால் வேங்கையன் தொலைந்தான். வேங்கையனுக்கும் உடனே அங்கிருந்து அவர் பார்வையில் பட்டுவிடாதபடி தப்பிச் செல்லும் எண்ணம் வேகமாய் மூண்டது. அமர்ந்த நிலையில் குனிந்து கொண்டு அவர் பார்வையில் பட்டுவிடாதபடி பார்த்துக் கொண்டான்.

அவரைப் பார்க்கவும் ரகுபதி ஓடிவந்து கைகுலுக்கி வரவேற்றார்.

“வெல்கம் சார்... வெல்கம்...”

“கங்கிராஜிலேஷன்ஸ் ரகுபதி... பெரிய காரியம் பண்ணியிருக்கீங்க.” என்று குழந்தையை பார்த்து குழந்தை கன்னத்தில் தடவி மகிழ்ந்தார்.



வேங்கையன் எழுந்துவிட்டான். நைசாக நழுவி கூட்டத்துக்குள் புகுந்து வாசலையும் தாண்டி விட்டான். கெஜலட்சுமியம்மாள் ஒரு சின்னச் சிரிப்புடன் இனி தானும் புறப்படுவோம் என்பது போல் தான் அமர்ந்திருந்த நாற்காலியில் இருந்து எழுந்தவளாக ரகுபதியை நோக்கி நடந்தாள்.

ரகுபதியும் ஜானகியும் பதிலுக்கு அவளை நோக்கி ஓடி வந்தனர்.

“அம்மா..”

“நான் புறப்பட்றேன்டா..”

“என்னம்மா அவசரம். இருந்து சாப்டுட்டு கொஞ்சம் ஓய்வும் எடுத்துட்டு பிறகு அப்புறம் கொஞ்சம் ஒய்வும் எடுத்துட்டு பிறகு போலாமே. உங்களை மலைக்குமேல கொண்டு போய்விட காரும் டிரைவரும் தயாரா இருக்காங்க..”

“இருக்கட்டும்பா... வரத்தெரிஞ்ச எனக்கு போகத் தெரியாதா என்ன...?” திருப்பிக் கேட்டாள். அப்போது சற்று தள்ளி நின்று கொண்டு குளிர்பானம் குடித்த படி இருந்த அந்த போலீஸ் ஆபீசரை நோக்கி ஒரு கான்ஸ்டபிள் நெருங்கி வந்தார்.

“என்னய்யா?”

“சார் ஒரு நல்ல விஷயம்.”

“விபரமா சொல்லுய்யா?”

“நீங்க தேடிகிட்டிருந்தீங்களே வேங்கையன்... அவன் இப்ப சிக்கிட்டான் சார்”

“எந்த வேங்கையன்?”

"அதான் சார் அந்த பீரோ புல்லிங் பார்ட்டி

"ஓ.. அவனா? எப்படி மாட்னான் - யார் புடிச்

"நான் தான் சார்... அதுவும் இப்பதான்! ஸ்கௌண்ட்ரல் இப்ப பார்ட்டிக்கு வந்துருக்கா உங்கள பாத்துட்டு எஸ்கேப் ஆகி ஓடப் பார்த்துருக்கா வெளிய ஜீப்புல நான் உட்கார்ந்துகிட்டிருக்கறத கவனி காம என் எதிர்லயே ஒரு மோட்டர் பைக்கோட லாக்கை உடைச்சு தள்ளிகிட்டும் போக பார்த்தா பாஞ்சு ஒரே அமுக்கு..."

- அடுத்த வினாடியே அந்த போலீஸ் அதிகா வெளியே செல்லத் தொடங்கினார். கான்ஸ்டபி பேசியது ரகுபதி காதிலும் விழுந்து ரகுபதி முகத்தி மெல்லிய கலவரம். அதை கவனித்த கஜலட்சுமியம் சிரிப்புடன்,

"ரகுபதி.. இனி கூட்டம் கூட்டி எதையும் கொ டாடாதே. குழந்தையையும் பத்ரமா பார்த்துக்கோ. எங் குழந்தை?" கேட்கவும் ஜானகி குழந்தையோடு வந் பணிவாக அம்மா எதிரில் நின்றாள்.

குழந்தையை தீர்க்கமாக பார்த்த அம்மா குழந் கழுத்துப் புறம் தெரிந்த பால் மச்சத்தை விரலா வருடியபடியே "இப்படி மச்சம் இருந்தா என்ன அர்த்த தெரியுமா?" என்றும் கேட்டாள்.

"என்னம்மா அர்த்தம்?"

"பிறக்கும்போதே இறக்கும்வரை தேவையா செல்வத்தை விட ஒரு தம்பிடி கூட இருக்கறவங்களுக் இப்படி ஒரு மச்சம் இருக்கும்."



"உண்மை தானேம்மா... கஜேந்திரனுக்கு தானே என் அவ்வளவு சொத்தும்..?"

"இது இப்பதானே... இனிமே தானே? நான் சொன்னது பொறக்கும்போதே..."

"அப்ப இந்த பிள்ளை ஒரு கோடீஸ்வரன் வாரிசாம்மா...?"

"இந்த மச்சம் அப்படி தாம்ப்பா சொல்லுது..."

அம்மாவின் கருத்து ஜானகியை சற்று கலவரப் படுத்தியது. முகம் மாறிப்போனது. இப்போது வெளியே யும் சலசலப்பு. எல்லோருமே வாசல் பக்கம் சென்று பார்த்தனர். போலீஸ் ஜீப்பில் கைகள் கட்டப்பட்ட நிலையில் வேங்கையன் உட்கார்ந்திருந்தான். அவனை பார்க்கவும் சற்றுமுன் செம்மநத்தம் மிராசுதார் கொடுத்ததாக சொல்லி அவன் கொண்டு வந்து கொடுத்த பரிசுப் பொருள்தான் நினைவுக்கு வந்தது.

"சார் இவன்?"

"பெரிய கிரிமினல் ரகுபதி... உங்களுக்கு இவனை எப்படி தெரியும்?"

"எனக்கு தெரியாது சார்.. இவனாதான் வந்துருக் கான்.

"ஏற்காடு செம்மநத்தம் வில்லேஜ் மிராசுதார் கிஃப்ட் கொடுத்து விட்டதா இவன் சொன்னப்பவே எனக்கு சுருக்குன்னுச்சு..."

"மைகாட்... எங்க அந்த கிஃப்ட்?"

- ஆபீசர் பதறினார். ரகுபதியே ஓடிப்போய் அந்த கிஃப்டை தேடி எடுத்தும் வந்து கட்டினார். அதை

காான்ஸ்டபிள் வாங்கிப் பிரித்தார். சின்னதாய் ஒ மரப்பெட்டி. அதை திறந்து உள்ளே பார்த்தபோ பெட்டி நிறைய குங்குமப்பூ இருந்தது.

"சார் குங்குமப்பூ..."

"அதுல நிச்சயம் மயக்க மருந்து கலந்துருப்பான் ராத்திரி பால் குடிக்கும்போது எப்படியும் இதை கலந் குடிக்கலாம்னு நினைக்கறது சகஜம். அப்படி குடிச்சிட் நீங்க படுத்தா அப்புறம் 12 மணி நேரத்துக்கு பிறகுதான் எழுந்திருப்பீங்க. அப்படி நீங்க தூங்கற ராத்திரியி பங்களாவுக்குள்ள பூந்து அவன் என்ன நினைக்கறானோ அதை சாதிச்சுகிட்டு போயிடுவான். இதெல்லாம் இவங்களோட குறுக்கு வழி..."

ஆபீசர் சொல்லச் சொல்ல நெஞ்சம் பதறியது ரகுபதிக்கும், ஜானகிக்கும். அவன் திருட வருவதற்கு என்று எண்ணிக் கொண்டிருக்கும் அவர்களுக்கு அவன் கொலை செய்ய வருவதற்கு என்பது தெரியாது தெரிந்தால் அவ்வளவுதான்...

அப்போது அங்கும் வந்துவிட்ட கெஜலட்சுமி யம்மா "பல நாள் திருடன் ஒரு நாள் அகப்பட்டுதானே தீரணும். இந்த நல்ல நேரத்துல இங்க நிறுத்தி வெச்ச பேசாம அவனை அழைச்சிகிட்டு போங்க.." என்றாள். ஆபீசரும் ரகுபதியிடம் "மிஸ்டர் ரகுபதி உங்க சன் ரொம்ப அதிர்ஷ்டசாலி. பாருங்க... உங்க மகனை நான் விஷ் பண்ண நேரம் ஒரு அக்யூஸ்ட் எனக்கு கிடைச் சிருக்கான். வெரி லக்கி ஃபெல்லோ..." என்று சிலாகித் தார். பின் திரும்ப ஒருமுறை கன்னத்தை தட முத்தமிட்டுவிட்டு ஜீப்பில் வேங்கையனோடு புறப்பட்டுப் போனார்.



ரகுபதியும் ஜானகியும் கெஜலட்சுமியம்மாவை பரவசத்தோடு பார்த்தனர்.

"அம்மா நீங்க வந்ததால உங்க அருளால நாங்க பெரியஅளவுல ஏமாறாம தப்பிச்சோம்..." என்றனர்.

"அவர் சொன்ன மாதிரி எல்லாம் இந்த பிள்ளை யோட ராசி. நான் இல்ல." என்று அதற்கொரு பதிலைச் சொன்ன கெஜலட்சுமியம்மா தன் இடுப்பில் இருந்து ஒரு கறுப்புக் கயிறை எடுத்து மணிக்கட்டில் கட்டிவிட்டு "பத்ரமா பாத்துக்கோங்க. இப்ப வந்த மாதிரி ஏதாவது ஆபத்து வந்தாலும் எதுவும் ஆயிடாம இந்த ரட்சை பாதுகாக்கும். அதே சமயம் இனி பெருசா கொண் டாட்டங்கள் எல்லாம் வேண்டாம். எளிமையும், பொறுமையும் தான் இனிமை" என்று கூறி வாழ்த்தி விட்டு புறப்பட்டாள்.

அவர்களுக்கு தெரியாது... மலை போல வந்த ஒன்று பனி போல நீங்கிய விதம்...

## 13

ஏற்காட்டில் அன்று அதிசயமாய் நல்ல வெய்யில்! தொழிலதிபர் ராஜசேகரனின் காபி தோட்டத்தில் கவ்வாத்து நடந்து கொண்டிருந்தது. பூஞ்சையான காபி செடிகளை பிடுங்கிப் போட்டு விட்டு அங்கே புதிய கன்றுகளை நட்டு, அதற்கு உரமும் இட்டு பின் ஒட்டுமொத்தமாய் அவ்வளவு செடிகளுக்கும் பூச்சி அடிப்பது என்று அந்த காபி தோட்டமே பரபரப்பில் இருந்தது.

மொத்தமாய் பத்தாயிரம் செடிகள்! ஒவ்வொ
செடியும் ஒருஅறுவடைக்கும் மூன்று கிலோ கா
கொட்டைகளை தரும். மொத்தமாய் முப்பது ட
உற்பத்தி. ஒரு டன்னுக்கு லட்ச ரூபாய் கிடைக்கு
முப்பது லட்சத்துக்காக கிட்டத்தட்ட பத்து பதினைந்
லட்ச ரூபாய் வரை செலவழிக்க வேண்டும். தரமான பூச்
மருந்து, தரமான மண்புழு, உரம் என்று போடுவதி
தான் வெற்றியே உள்ளது.

கிட்டத்தட்ட அறுபது பேர் வரை கவ்வாத்து
பணியில் ஈடுபட்டிருந்தார்கள். ராஜசேகரனே நேரடியா
மேற்பார்வையிட வந்திருந்தார். அவர் மேல் நிழ
விழுந்து விடாதபடி குடையை பிடித்துக் கொண்
கூடவே திரிந்து கொண்டிருந்தார் மேஸ்திரி வையாபுரி

ராஜசேகர் பார்வை அந்த கூட்டத்தில் யாரையோ
தேடியது. வையாபுரியும் கவனித்தார்.

"ஐயா யாரையோ தேடற மாதிரி தெரி
துங்களே...?"

"ஆமாம்."

"யார்னு சொன்னா அவங்க வேலைக்கு வந்துரு
காங்களா இல்லையான்னு நான் சொல்லிடுவேங்களே."

"அப்படியா... என் மகன் சுரேஷைத்தா
தேடறேன்." - என்று அவர் முடிக்கவும் வையாபுரிக்
சுருக்கென்றது.

"என்னய்யா சொல்றீங்க... கவ்வாத்து கூட்டத்து
அவரா?"

"இது அவனுக்கான கவ்வாத்து... இங்க அவ
இவங்களோட சேர்ந்து வேலை பார்த்தா தான் அவ



என் மகன். இல்லாட்டி அவனுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது... இந்த விஷயத்தை நீயும் தெரிஞ்சுக்கோ.

- ராஜசேகரன் குரலில் தெரிந்த கடூரம் வையாபுரிக்கும் புரிந்தது. ராஜசேகரன் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசுகிற சுபாவம் உடையவர். ஒரு விஷயத்தில் ஒரு முடிவெடுத்து விட்டால் அதிலிருந்து அவரை மாற்றவும் முடியாது.

எல்லாமே வையாபுரிக்கும் தெரியும். அடுத்து என்ன செய்வது, என்ன சொல்வது என்று தெரியாமல் ராஜசேகரனைப் பார்த்தார்.

"குடையை என் கைல கொடுத்துட்டு பங்களாவுக்கு போய் அவனைக் கூட்டிகிட்டு வா. எதுக்குன்னு கேட்டா கவ்வாத்து வேலைக்கு ஒரு கை குறையுதுன்னு சொல்லு. வரமுடியாதுங்கற மாதிரி பேசினா நான் கூப்டேன்னு சொல்லு..."

வையாபுரிக்கு பெரிய இடத்து சிக்கலில் தான் சிக்கிக் கொள்வது போல் தோன்றியது. தேங்கி நின்றார். தலையைச் சொரிந்தார்.

"என்னய்யா யோசிக்கறே?"

"இல்லீங்க... என்ன இருந்தாலும் அவர் என் சின்ன முதலாளி. அவரைப் போய் நான் எப்படிங்க...?"

"அவன்லாம் உன் சின்ன முதலாளி கிடையாது. அவன் இப்ப முதல்ல நல்ல மனுஷனாவே இல்லை. அப்புறம் எங்க சின்ன முதலாளி? இது நான் கஷ்டப் பட்டு சம்பாதிச்ச சொத்து. என் காலத்துக்கு பிறகு இது

உங்க எல்லாருக்கும் கூட சொந்தமாகலாம். யாருக்கு தெரியும்?"

"ஐயா..."

"போ... போய் நான் சொன்னதைச் செய். நான் யாருக்கு எப்ப என்ன கெடுதல் செஞ்சேன்னு தெரியல. எனக்கு இப்படி ஒரு பிள்ளை. அந்த பிள்ளையை இப்படியே விட்டா இந்த மலைக்காடே தாங்காது. அதான் உழைப்போட அருமையை நான் புரிய வைக்க முயற்சி செய்யறேன்... போய்யா..."

- ராஜசேகரன் பங்களா நோக்கி கை காட்டினார். வையாபுரியும் ஒரு தொழிலாளியைக் கூப்பிட்டு குடை பிடிக்கச் சொல்லிவிட்டு புறப்பட்டார். அந்த தொழிலாளியிடம் இருந்து குடையை வாங்கிக் கொண்ட ராஜசேகர் "நீ போய் உன் வேலைய பார்... இந்த குடையை எனக்கு பிடிச்சுக்க தெரியும்" என்றார்.

பங்களா! வெளியே ஒரு பெரும் தேக்குமரம். கிட்டத்தட்ட எண்பது வயது இருக்கலாம். நாயக்கர் மகால் தூண் போன்ற பருமனுடன் அகல அகல இலைகளும் கிளைகளுமாய் புஷ்டியாக வளர்ந்திருந்தது. அப்பகுதியில் ஏ.சி போட்டது போல் அப்படி ஒரு குளுமை. ஒரு ஐந்தாறு மலை அணில்கள் விளையாடிக் கொண்டிருந்தன. அங்கே ஒரு மேஜை நாற்காலி போடப்பட்டிருந்தது. அதில் அமர்ந்து விஸ்கி குடித்துக் கொண்டிருந்தான் சுரேஷ். அருகிலேயே சென்ராயன்.

"ஐயா... இப்படி வெளிப்படையா இங்க உட்கார்ந்து குடிக்கறது நல்லா இல்லைங்க. பெரியவர் எப்ப வேணா வரலாம். வந்தா என் சீட்டு கிழிஞ்சிடுங்க."



- என்று மன்றாடிக் கொண்டிருந்தான் சென்ராயன். சுரேஷ் அதை காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை.

அப்போது சென்ராயன் செல்போனில் அழைப்பு. எடுத்து காதுப்பக்கம் வைத்தான்.

"சென்ராயா..."

"யாரு..."

"வேங்கையன் பேசறேம்பா.."

"என்ன? காரியத்தை முடிச்சிட்டயா?"

"மண்ணாங்கட்டி.. நான் இப்ப லாக்அப்ல இருக்கேன்."

"லாக் அப்லையா?"

"வாயப் பொளக்காதே.. உன் விஷயமா அந்த குழந்தையையும், பொண்ணையும் கொல்றதுக்குப் போய் வசமா மாட்டிகிட்டிருக்கேன்?"

"யாராவது வக்கீலோட வந்து ஜாமீன்ல எடுக்கப் பாரு சென்ராயா. இல்லாட்டி ஒரு எழெட்டு கேஸ்ல என்ன உள்ள போட்ற எண்ணத்துல போலீசு இருக்குது."

"நீ எப்படிடா அவங்க கைல சிக்குனே?"

"அதை எல்லாம் இப்ப என்னால இந்த போன்ல சொல்ல முடியாது. இப்பவே நான் லாக் அப்புக்கு காவல் நிக்கற போலீஸ்கிட்ட ஒரு நிமிஷத்துக்கு பத்து ரூபான்னு பேசி செல்போனை வாங்கி உன்கூட பேசிகிட்டிருக்கேன்..."

"இங்கயும் நிலைமை ரொம்ப மோசம். சின்ன முதலாளிக்கும் அவங்க அப்பாவுக்கும் அப்படியே முட்டிகிட்டு நிக்குது. என்னால எதுவும் பண்ண முடியாது..."

"அப்ப நான் போலீஸ்கிட்ட எல்லா உண்மையை-யும் சொல்ல வேண்டி இருக்கும். சொல்லிடவா?"

"டேய்ய்..."

"என்னா டேய்.. உங்களுக்காக வந்த இடத்துலதான் நான் சிக்கிகிட்டிருக்கேன். என்னை வெளிய எடுக்க உதவி செய்யாட்டி நான் எதையும் பார்க்க மாட்டேன். போலீஸ் கிட்ட ஏன் வந்தேன். எதுக்கு வந்தேன்னு எல்லா உண்மைகளையும் சொல்ல வேண்டி வந்துடும். ஜாக்ரதை..."

"என்னடா மிரட்றியா...?"

"பின்ன.. நீ எனக்கென்னன்னு பேசும்போது நான் மிரட்றதுல என்ன தப்பு?"

"சரி சரி... நீ இப்ப எந்த ஸ்டேஷன்ல இருக்கே?"

- வேங்கையன் ஸ்டேஷன் விவரத்தை கூறவும் சென்ராயன் மனதுக்குள் குறித்துக் கொண்டான். விஸ்கியை சூப்பிச் சூப்பி குடித்தபடி இருந்த சுரேஷ் பதட்டமடைந்து போய் பார்க்கும் சென்ராயனிடம் "எவண்டா போன்ல?" என்று கேட்டான்.

"வேங்கையன் ஐயா.."

"எந்த வேங்கையன்?"

"அதாங்க... நம்ம விஷயமா அந்த புள்ளையையும், குழந்தையையும் போட்டுத் தள்ளச் சொன்னீங்களே..."

"சரி இப்ப அதுக்கென்ன?"

"அவன் போலீஸ்ல மாட்டிக்கிட்டானாம்யா.."



"தூத்தேறி... வேலை தெரியாதவன்கிட்டல்லாம் எதுக்குடா நீ வேலைய கொடுக்கறே?"

"ஐயா... இவன் பெரிய கொம்பங்க. என்ன கெட்ட நேரமோ தெரியல போலீஸ்ல மாட்டிகிட்டிருக்கான்."

"போலீஸ்ல மாட்டுனவன் உன்கிட்ட எதுக்கு பேசறான்?"

"என்னங்க கேள்வி இது... நம்ம விஷயமா போன இடத்துலதாங்க மாட்டியிருக்கான்."

"அதனால?"

"ஜாமீன்லயோ, இல்ல காசக் கொடுத்தோ வெளிய எடுக்கச் சொல்றாங்க."

"கேனத்தனமா இவன் மாட்டுவான். நாம ஜாமீன்ல எடுக்கணுமாமா?"

"ஐயா... நாம மறுத்தா நமக்குத்தான் ஆபத்து. அவன் நம்பள பத்தின எல்லா உண்மையையும் போலீஸ்ல சொல்லிடுவேன்கறான்..."

- சென்ராயனின் பேச்சு சுரேஷின் அவ்வளவு போதையையும் இறக்கி விட்டது. அப்போது பார்த்து மேஸ்திரி வையாபுரியும் வந்து நின்றார். அவர் வரவும் விஸ்கி பாட்டிலை எடுத்து வேகமாய் மறைக்கத் தொடங்கினான் சென்ராயன்.

வையாபுரிக்குச் சுரேஷின் நிலை லேசான கிலியை ஏற்படுத்தியது. எப்படி ஆரம்பிப்பது என்றே தெரிய வில்லை.

"சென்ராயா... இந்த மேஸ்திரிக்கு இங்க என்ன வேலைன்னு கேளு..."

"யோவ் கேக்கறாருல்ல.. சொல்லு!"

"அது வந்து தம்பி.."

"எது வந்து..?"

"இல்ல.. நம்ம காபி தோட்டத்துல கவ்வாத்து பணி நடந்துகிட்டிருக்கது."

"அதுக்கு?"

"இல்ல. அங்கதான் நம்ம பெரிய அய்யா இருக்காரு..."

"அதுக்கு?"

"இல்ல... உங்கள அய்யா கூட்டிகிட்டு வர... சொன்னாரு."

"எதுக்கு?"

"அது.. அது.."

"அதான் அவர் நின்று கவ்வாத்து எப்ப... நடக்குதுன்னு பார்க்கறாருல்ல. நான் வேற எதுக்குய்யா... இன்னிக்குன்னு பார். வெய்யில் வேற கடுமையா இரு... குது. என்னால முடியாது..."

"தம்பி..."

"அதான் முடியாதுன்னுட்டேன்ல... போகலாம்."

"அது இல்ல தம்பி. நீங்க கட்டாயம் வந்தே... தீரணும்னு சொல்லிட்டார் தம்பி."

"அதான் அவர் இருக்காருல்ல. அப்புறம் நா... எதுக்குய்யா?"

"அவர் கூப்பட்டது மேற்பார்வை பாக்க இல்... தம்பி.."



"பின்ன வேற எதுக்கு?"

"அது.. அது.."

"மென்னு முழுங்காம சொல்லுய்யா.."

"நீங்களும் கவ்வாத்து பணி செய்யத்தான் தம்பி."

- வையாபுரி தயங்கித் தயங்கி சொல்லிவிட்ட அந்த செய்தி சுரேஷை உலுக்கி விட்டிருந்தது.

"ஏய்ய..." - என்று அவரை அடிப்பதற்காக கைகளை தூக்கிக் கொண்டு எழுந்தான். சென்ராயன் பிடித்துத் தடுத்தான்.

"உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம்?"

"தம்பி... நான் வெறும் அம்பு. ஏவினவர் உங்க அப்பா..."

"அப்பா... பெரிய அப்பா. அவர் சொன்னா உனக்கு எங்கய்யா போச்சு புத்தி?"

- சுரேஷ் எகிறிக் குதித்தபோது ராஜசேகரனின் கார் வரும் சப்தம். அவரும் காரில் இருந்து இறங்கி அவனை நோக்கி வந்தார். சுரேஷ் அவரை கொஞ்சமும் எதிர் பார்த்திராத தடுமாற்றத்தை காட்டினான்.

சென்ராயன் அப்படியே பின்பக்கமாய் உள்ள மரத்தின் பின்னே ஒளிந்து கொண்டான்.

"என்னய்யா... என்ன சொல்றான். போவானா மாட்டானாமா?"

"ஐயா அது வந்து..."

"என்ன வந்து போய்... நீ ஒரு விளக்கெண்ணெய்னு தெரிஞ்சுதான் நான் வந்தேன். இப்ப சொல்றேன். இப்ப இருந்து முப்பதாவது நிமிஷத்துல காபி தோட்டத்துல காக்கி பேண்ட் சட்டையோட கவ்வாத்து வேலையில இவன் இருக்கணும். இல்ல இந்த பங்களாவை விட்டு வெளியே போயிடணும். எங்கேயும் யாரும் இவன் கூட ஒரு வார்த்தை பேசினாலும் அப்படியே வேலையை விட்டு போயிட வேண்டியதுதான்.."

- ராஜசேகர் கொந்தளித்து முடித்தவராக விலக, சுரேஷ¬ம் அடங்கிப் போய் வையாபுரி பின்னால் மௌனமாக நடந்தான்.

ஆனால் மனதுக்குள் ராஜசேகர் மேல் கொலை வெறி!

## 14

ராஜசேகரின் கட்டளைக்கு கட்டுப்பட்டு மேஸ்திரியோடு சென்ற சுரேஷை மரத்தின் பின்னால் ஒளித்திருந்த சென்றாயனும் பார்த்தான். மனது படபடத்தது. பெற்ற பிள்ளை என்றும் பார்க்காமல் ராஜசேகர் இந்த அளவுக்கு நடவடிக்கையில் இறங்குவார் என்பதை அவனால் நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

'சுரேஷ் இனி செல்லாக்காசாகி விடுவானோ?' என்கிற கேள்விகூட எழும்பியது. அதே வேகத்தில் போலீசில் மாட்டிக் கொண்டிருக்கும் வேங்கையன் நினைவும் வந்தது. அவனை வெளியே எடுக்காவிட்டால் அவன் சுரேஷைத்தான் காட்டிக் கொடுப்பான். இப்



போது தன் தோட்டத்திலேயே கவ்வாத்து வேலைக்குச் செல்லும் சுரேஷ்அதன் பின் கட்டம் போட்ட ஆடைகளோடு ஜெயிலுக்கும் போக வேண்டியிருக்கும் என்றும் தோன்றியது. கூடவே தானும்...

'வேங்கையன் வாயை அடைக்க என்ன வழி?' தீவிரமாக யோசிக்கத் தொடங்கிவிட்டான் சென்றாயன்!

குழந்தையை குளிப்பாட்ட கற்றுக் கொண்டிருந்தாள் ஜானகி. ஒரு பலகைமேல் அமர்ந்து கொண்டு இரு கால்களையும் நீட்டி அதன் மேல் குழந்தையை குப்புறப் போட்டு முதுகின் மேல் நல்லெண்ணெயை சொதம்பப் பூசி விரல்களால் மசாஜ் செய்வது போல வருடி விட்டு, அப்படியே கால் விரல்களை எல்லாமும் நீவி விட்டு, சொடக்கு எடுத்து, குழந்தை குளிப்பாட்டல் என்பது குழந்தைக்காக ஒரு தாய் செய்யும் யோகப் பயிற்சி என்பதை உணர்ந்து அதன்படி அவள் நடப்பது போல் இருந்தது. அருகில் இருக்கும் கண்ணம்மா வழி நடத்திக் கொண்டிருந்தாள். குழந்தையிடம் லேசான அழுகை! அது சாமுண்டியை அடுப்படி வேலையை விட்டுவிட்டு இழுத்து வந்திருந்தது. மலங்க மலங்க பார்த்தபடி நிலை வாசல் கதவருகே நின்று கொண்டிருந்தாள். குழந்தையின் அழுகை அவளை என்னவெல்லாமோ செய்தபடி இருந்தது. இதே அழுகையை இதற்கு முன் பலமுறை கேட்டது போலவும் ஒரு உணர்வு! அவள் மன அடைப்பு மெல்ல நீங்கத் தொடங்கி விட்டதோ என்று கூட எண்ணத் தோன்றியது.

"அம்மா குழந்தையை பெறட்டிப் போடுங்க. வவுறு, மார்பு இதையெல்லாம் நீவி விடுங்க. அப்பதான் மார்பு விரிஞ்சு கொடுக்கும். வவுத்தை உறுவி விட்டாத் தான் குடல் அளைஞ்சு கொடுத்து நல்ல பசி எடுக்கும். குழந்தையும் பாலை நிறைய குடிக்கும்."

"ஐயோ ரொம்ப அழுவறானே கண்ணம்மா ஒரு வேளை கண்ணுல எண்ணெய் இறங்கிடிச்சோ?"

"இறங்கினா இறங்கட்டும்மா. நல்லெண்ணெய் கண்ணுக்கும் ரொம்ப நல்லது. குழந்தை அழுவறதும் நல்லதும்மா. தொண்டை விரியும். பின்னால நல்லா சாப்புடும். சீக்கிரமா பேசும்.."

கண்ணம்மா எல்லாவற்றுக்கும் ஒரு பாசிடிவான பதிலைச் சொன்னாள். ஆனாலும் ஜானகி மனது நடுங்கியது. சொம்பில் வென்னீரை பொத பொத வென்று தலையில் கொட்டும்போது இரு புருவத்தின் மேலும் கையை மறித்து வைத்து, அந்த தண்ணீரில் குழந்தைக்கு மூச்சு முட்டாமல் பார்த்துக் கொள்வது பெரும்பாடாக இருந்தது. கண்ணம்மா குளிப்பாட்டி விட்டிருந்தால் எப்பொழுதோ குழந்தை குளித்து முடித் திருக்கும். ஜானகி நானும் பழகுகிறேன் என்று சொன்ன தால் தான் தாமதம்.

நடுவில் கண்ணம்மா கவனம் கதவு பக்கம் திரும்பி சாமுண்டியை பார்த்தது. அவளோ குழந்தை மேலேயே கண்ணாக இருந்தாள். அது கண்ணம்மாவை உறுத் தியது.

"நீ என்னடி பண்றே இங்கே. போடி போய் உன் பாத்திரம் கழுவற வேலையைப் பாரு.." என்றாள். அவள்



பேசவும் ஜானகியும் நிமிர்ந்து பார்த்தாள். சாமுண்டியின் வெறித்த விழிகள் ஜானகியையும் குடைந்தது.

"என்ன இவ இப்படிப் பார்க்கறா?"

"நான் என்னத்தம்மா சொல்ல. நான் ஏதாவது சொல்லி அது அய்யா காதுலயும் விழுந்தா என்னைத் தான் சண்டைக்காரியா பார்ப்பாரு.."

- கண்ணம்மா பேசப்பேச அதை காதிலேயே வாங்காதவள் போல நெருங்கி வந்தாள் சாமுண்டி. கண்கள் லேசாக கலங்கி விட்டிருந்தது.

"போய் வேலையைப் பாருன்னா கிட்ட வந்து நிக்கறே? கண்ணெல்லாம் வேற கலங்கியிருக்குது.."

"பாவம் குழந்தை இல்ல..?"

"குழந்தை பாவமா... யார் சொன்னா?"

"அழுவுதே?"

"அழுதா பாவமா,"

"இல்லியா பின்ன... ஆமா பசிக்குதா நான் வேணா பால் தரட்டுமா?" - கேட்டபடியே ஜாக்கெட் ஊக்கை வேகமாய் விலக்கி விட்டுக் கொண்டாள்.

"ஏய் ஏய்... ஊக்கைப் போடுடி. இப்ப யாருடி உன்கிட்ட பால் கேட்டா.. போடி உள்ள..."

"மாட்டேன்... பாப்பா அழுவுது. பால் கொடுத் துட்டுதான் போவேன்"

"அதுக்கு நாங்க இருக்கோம். நீ போ..."

"முடியாது. நான் என் குழந்தைக்கு பால் கொடுக் காம போக மாட்டேன்.."

அவள் என் குழந்தை என்று குறிப்பிட கண்ணம்மா ஜானகி இருவருக்குமே பகீர் என்றது.

"உன் குழந்தையா?"

"ஆமாம்... இது என் குழந்தை..."

"சரிதான்... அம்மா இவளை இனியும் இங்க உங்க கூட வெச்சிருத்தீங்கன்னா அவ்வளவுதான் இவளை முதல்ல வெளிய துரத்தி விடுங்கம்மா.."

கண்ணம்மா குரலில் கணிசமான அளவு பதட்டம் குழந்தையிடம் அழுகையோ பெருகியிருந்தது. நிஜ மாலுமே அதனிடம் அழுகையோடு பசியும் சேர்ந்து கொண்டு விட்டது. சாமுண்டியால் அதற்கு மேல் நின்று பேச பிடிக்கவில்லை. ஜானகி மடியில் கிடந்த குழந்தையை தொட்டுத் தூக்க குனிந்தாள். தூக்கியும் விட்டாள். ஜானகிக்கு நிஜமாலுமே கோபம் வந்துவிட்டது.

"ஏய் கண்ணம்மா, இவகிட்ட இருந்து குழந்தையை வாங்கு..."

என்று சொல்லி முடிப்பதற்குள் குழந்தைக்கு தன் பாலை கொடுக்கத் தொடங்க அதுவும் குளித்த பசிக்கு மிக வேகமாக உறிஞ்சுக் குடிக்கத் தொடங்கிவிட்டது. அது அப்படி சாப்பிடுவதை பார்த்த பிறகு அவளிடம் இருந்து குழந்தையை பிடுங்க ஜானகிக்கு மனம் வர வில்லை. ஆனால் கண்ணம்மாவுக்கு ஆத்திரம் நெட்டி முறித்தது. குழந்தையை வலிந்து பிடுங்கப் பார்த்தாள்.

"விட்றி குழந்தையை... விட்றி.. விட்றின்னா..".

என்று சாமுண்டியின் முதுகிலும் சில அடிகள் அடித் தாள். சாமுண்டி அசரவேயில்லை. அவள் வரையில் பிள்ளை பால்குடிப்பது அவ்வளவு சுகமாக இருந்தது.



நல்ல வேளை... அப்போது ரகுபதி அங்கு வரவும் அவளிடம் வேகமான விலகல். ஆனால் ரகுபதி கண்ணம்மா அடிப்பதை பார்த்து விட்டான். அது அவனது நெறிந்த விழிகளில் தெரிந்தது.

"வாங்க..." என்று இடையிட்டாள் ஜானகி.

"அதான் வந்துட்டேனே... இங்க என்ன நடக்குது?"

"ஒண்ணுமில்லீங்க. குழந்தையை இன்னிக்கு நான் குளிப்பாட்டி விட்டேன். அதுவும் அழுதிச்சு. இவ என்னடான்னா ஓடி வந்து என்கிட்ட இருக்கற குழந் தையை பிடுங்கி பால் கொடுக்க ஆரம்பிச்சுட்டா.."

"நல்ல காரியம் தானே பண்றா - அதுக்கு அடிக்கணுமா?"

"அது இல்லீங்கய்யா... என் குழந்தைங்கறாய்யா.."

"அது இல்லீங்கய்யா... என் குழந்தைங்கறாய்யா.." கண்ணம்மா எடுத்துக் கொடுத்தாள்.

"அதுக்கு தான் அடிச்சியா?"

"என்னய்யா நீங்க... நாளைக்கே இவ பாட்டும் குழந்தையை தூக்கிட்டு எங்கையாவது ஓடிட்டா என்னய்யா பண்றது?"

"எதுக்கு இப்படி விபரீதமா கற்பனை பண்றே?"

"இல்லீங்க. கண்ணம்மா சொல்றதுல அர்த்த மிருக்குங்க.."

"ஜானகி நீ தேவையில்லாம பயப்பட்றே. சாமுண்டியை நம்மகிட்ட ஒப்படைச்சது கெஜலட்சுமி யம்மா. அவங்க தப்பான எதையும் நமக்கு செய்ய மாட்டாங்க. அந்த நம்பிக்கை உனக்கு இல்லையா?"

“இருந்தாலும் என் குழந்தைங்கறதெல்லா அதிகபட்சம்க. கைல இருந்து புடுங்கறதும் தப்பு தானே

“இரு நான் விசாரிக்கிறேன்... “ரகுபதி கவனை சாமுண்டி பக்கம் திரும்பியபோது குழந்தை பால் குடித் முடித்துவிட்டு வாயோரம் பால் ஒழுக திரும்பி அவனை பார்த்தது. சரியான கோலிகுண்டுக் கண்கள், ஊதி பருத்த கன்னங்கள், புசுபுசுவென்ற தலைமுடி ரகுபதியின் கேள்வி கேட்கும் எண்ணம் அப்படியே மாறிப்போனது. கை நீட்டவும் சாமுண்டி தயக்கமின்றி குழந்தையை அவன் வசம் தந்தாள். “கஜா... என்னப்பா என்ன பாக்கறே? ஐயா பால் குடிச்சீங்களோ...? ப எல்லாம் தீர்ந்துச்சா..” கொஞ்ச ஆரம்பித்துவிட்டான் கண்ணம்மாவுக்கு எரிச்சலாக வந்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள். சாமுண்டியும் தான் வந்த வேலை முடிந்ததாக கருதிக் கொண்டு “நான் போய் பாத்திரம் தேய்க்கறேன்..” என்று சொல்லிக் கொண்டே நகர்ந்தாள். ஜானகியையும் ரகுபதியின் சொல் என்னவோ செய்தது.

ரகுபதி குழந்தையை ஜானகியிடம் கொடுத்து “பிடி ஜானகி.. இது எப்பவும் உன் குழந்தை தான். டோன்ட் பி எ சில்லி பொசசிவ் நெஸ். சாமுண்டியும் ஒரு குழந்தை இது உனக்கு தெரியல. அவளும் ஒரு குழந்தையை பெத்து பறி கொடுத்தவ. அதனால நம்ம குழந்தை அழவும் அவளோட தாய்மை துடிச்சிருக்கு. பால் கொடுத்து முடியவும் அடங்கிப் போச்சு. அதை உன்னால புரிஞ்சுக்க முடியிலையா?” என்று அழகாக வும், ஆறுதலாகவும் பேசத் தொடங்கினான்.

ஜானகிக்கு மட்டும் மனது சமாதானமாகாமல் நெருடலாகவே இருந்தது.



“என்னம்மா நான் இவ்வளவு சொல்றேன் புரியலியா?”

“ஐயா அவ ஒரு காரியக் கிறுக்கி. அவளுக்கு ஏதுங்க தாய்மை... நீங்க தாங்க அவளை பத்தி புரியாம பேச நீங்க..” என்று கண்ணம்மா தன் மனதில் பட்டதைக் கூறவும் ரகுபதிக்கு சுரீர் என்றது.

“கண்ணம்மா நீ வாய மூடிகிட்டு சும்மா இருக்க மாட்டே?”

“அவ கேட்டதுல என்னங்க தப்பு?”

“ஜானகி... நீயுமா?”

“எனக்கு பதில் சொல்லுங்க. சித்த பிரமை புடிச்ச மாதிரி இருக்கறவளுக்கு என் குழந்தைன்னு சொல்லத் தெரியாது. கைல இருந்து புடுங்கி பால் கொடுக்கத் தெரியுது. இதெல்லாமே அவ தெளிஞ்சிட்டு வர்றத உங்களுக்கு உணர்த்தலயா?”

“அப்படி நடந்தா அதுக்கு நாம சந்தோஷம் தான் படணும் ஜானகி. வருத்தப்படக் கூடாது. நான் சொல்றேன் சாமுண்டியால நம்ம குழந்தைக்கு நல்லதுதான் நடக்கும். நிச்சயம் எந்த கெடுதலும் நடக்காது. நீ தைரியமா இரு. ஏ கண்ணம்மா.. போ போய் உன் வேலையை பார். அப்புறம் உனக்கொரு விஷயம் இன்னியோட உனக்கு இங்க வேலை முடியுது. நாளைல இருந்து உனக்கு என ஆபீஸ்ல வேலை. நீ இனி வீட்டுக்கு வர வேண்டாம்.”

ரகுபதியின் அதிரடி அறிவிப்பு அவளுக்கு புரிந்து விட்டது.

"ஐயா.. நான் இருந்தா சாமுண்டியை ஏதாவது செஞ்சுருவேன்னு தான் நீங்க என்ன உங்க ஆபீசுக்கு கூப்பிட்றீங்களா?" என்று கேட்டாள்.

"அதுவும் ஒரு காரணம். நீ இல்லேன்னாலே ஜானகி நிம்மதியா இருப்பா. ஜானகி இப்படி எல்லாம் பேசறவளே கிடையாது. அவ நல்ல மனசை நீ தான் கண்டதைச் சொல்லி கெடுக்கறே..."

"அம்மா என்னம்மா ஐயா இப்படிச் சொல்றாரு"

"ஆமாங்க.. நீங்க கண்ணம்மாவை வீட்டை விட்டு மாத்தினது எனக்கு பிடிக்கலீங்க.." ஜானகியும் குறுக்கிட்டாள்.

"ஜானகி.. நான் உன் நல்லதுக்குத்தான் சொல்றேன்."

"அப்படின்னா அந்த சாமுண்டியை உங்க ஆபீசுக்கு கூட்டிகிட்டு போங்க. கண்ணம்மா இங்க என்கூட இருக்கட்டும்.."

- ஜானகியின் தீவிரம் ரகுபதியை மௌனமாக்கியது. லேசாக முறைத்தபடி விலகிப் போனான். ரகுபதி விலகவும் கண்ணம்மாவும் ஒரு பெருமூச்சுடன் "அம்மா ரொம்ப நன்றிம்மா" என்றாள். அப்படியே "கவலைப் படாதீங்கம்மா இவள நான் வீட்டை விட்டு துரத்த றேன்" என்றாள் மெல்லிய குரலில்.

ஜானகி அதிர்வோடு பார்த்தாள்.

"பயப்படாதீங்கம்மா... இவ இங்க இருந்தா நீங்க நிம்மதியா இருக்க முடியாது. ஐய்யாவும் அவ பக்கமே பேசுவாரு. நான் கடைத் தெருவுக்கு கூட்டிகிட்டு போற மாதிரி கூட்டிகிட்டு போய் ஏதாவது ஒரு பஸ்ல ஏத்தி விட்டுட்டு வந்துட்றேன். எங்கேயோ போய் என்னவோ



ஆகட்டும்.." என்றாள் கண்ணம்மா. அதை கேட்க ஜானகிக்கோ சற்று பகீரென்றது.

"ஏம்மா பயமா இருக்குதா?"

"வேண்டாம் கண்ணம்மா... இருந்துட்டு போகட்டும். இன்னொரு தடவை அவ இப்படி நடந்துகிட்டா பாத்துக்கலாம்.." என்றாள். கண்ணம்மாவும் மனதுக்குள் 'நடந்துகிட்டாவா.. நானே தூண்டிவிட்டு நடந்துக்க வைக்கறேன்' என்று கூறிக் கொண்டாள்!

காபி எஸ்டேட்!

கவ்வாத்து பணியில் அரையும் குறையுமாக ஈடுபட்டிருந்த சுரேஷ் எல்லோரையும் போல காகி உடுப்புக்கு தன்னை மாற்றிக் கொள்ளவில்லை. அதை அப்போது காரில் வந்து இறங்கிய ராஜசேகரும் கவனித்து மேஸ்திரியை கூப்பிட்டு கார் டிக்கியை திறந்து ஒரு காகி பேண்ட் சட்டையை எடுத்துக் கொடுத்து அவனை அணிந்து கொள்ளும்படி சொன்னார்.

"ஐயா இது...?"

"நான் போட்ட உடுப்பு! இதைப் போட்டு வேலை செய்து கஷ்டப்பட்டு உழைச்சு தான் நான் முதலாளி ஆகியிருக்கேன். இவனும் ஆகணும்னுதான் என் ஞாபகார்த்த உடுப்பை எடுத்து வந்தேன்.."

அவர் பேசியதெல்லாம் சுரேஷ் காதில் விழவே யில்லை. அந்த காகி உடுப்பையே வெறித்துப் பார்த்தான். சிறிது நேரம் பார்த்தபடி இருந்தவன் அதை அப்படியே

வீசி எறிந்தான். பேண்ட் ஒரு பக்கமும் சட்டை ஒரு பக்கமும் போய் விழுந்தது. அதைத் தொடர்ந்து அங்கிருந்து அவன் செல்லத் தொடங்கினான்!

## 15

சுரேஷ் ஆவேசமாக வெளியேறுவதை ராஜசேகரும் பார்த்தார். எல்லோருமே அவன் காக்கி உடையை வீசி எறிந்ததை பார்த்து அதிர்ந்து போயிருந்தனர்.

குறிப்பாக மேஸ்திரி!

ராஜசேகர் மேஸ்திரியை அருகில் அழைத்தார்.

"இனி அவனுக்கு இந்த காபி தோட்டத்துக்கு எந்த சம்பந்தமும் கிடையாது. அவன் நான் இல்லாதப்ப வந்தா அவனை நீங்க உள்ள சேர்க்கக் கூடாது. மீறி சேர்த்தா உங்க வேலை போயிடும் ஜாக்ரதை..." என்றவர் காரில் ஏறிக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

ஏற்காடு டாஸ்மார்க் பாரில் ஒரு குவார்ட்டர் வாங்கி குடித்துவிட்டு மஃப்ளரை அவிழ்த்து இறுக்கக் கட்டிக் கொண்டவனாக ரோட்டில் நடந்து கொண்டிருந்தான் சென்ராயன். உரசிக் கொண்டு வந்து நின்றது ஒரு போலீஸ் ஜீப். உள்ளிருந்து இறங்கிய சேலம் சரக சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் 'ஏய் நீதானே சென்ராயன்?' என்று கேட்டார்.

சென்ராயனுக்கு தயக்கமாக இருந்தது. மிரண்டு போய் பார்த்தான்.



"கேக்கறேன்ல?"

"அ... ஆமாய்யா..."

"ஏறுடா ஜீப்புல.."

"அய்யா... எதுக்குங்கய்யா.."

"ஏறுடான்னா..." பிடித்துத் தள்ளினார். ஜீப்பும் திரும்பி சேலம் நோக்கி கீழ் இறங்க ஆரம்பித்தது.

ஜீப்புக்குள் இருந்த சென்ராயனுக்கு அப்போதே என்ன நடந்திருக்கும் என்பது புரிந்துவிட்டது. போலீசில் அகப்பட்டிருக்கும் வேங்கையன் போட்டுக் கொடுத்திருக்க வேண்டும் என்பதை யூகித்தவன் சப் இன்ஸ்பெக்டரிடம் "சார் எதுக்கு சார் என்ன கைது பண்ணி கூட்டிகிட்டு போறீங்க?" - என்று கேட்க ஆரம்பித்தான்.

"நிஜமா உனக்கு எதுக்குன்னு தெரியாது...?"

"என்ன சார் இது கேள்வி. திடுதிப்னு வந்து இழுத்துகிட்டு போறீங்க. நான் ஒரு தப்பும் பண்ணலியே சார்.."

"நீ ஒரு தப்பு தான் பண்ணல. ஆனா பல தப்பு பண்ணியிருக்கே. அதுல கொலை செய்யறதுக்கே ஒருத்தனை ஒரு வி.ஐ.பி. வீட்டுக்கு அனுப்பியிருக்கே.."

"கொலையா... நானா?"

"இதோ பாரு... எங்களுக்கு உன்ன மாதிரி கிரிமினல்களோட ஓரியாட்றதுதான் பொழப்பே... எங்களாண்ட ஆக்ட் கொடுக்காதே. மூஞ்சியை வெச்சே முயல் பிடிக்கற நாய் எது மூக்குல மூத்திரம் பெய்யற நாய் எதுன்னு நாங்க சொல்லிடுவோம்.." - என்று அவர் அதட்டவும் அவனிடமும் சுருதி குறையத் தொடங்கியது.

"சார் வேங்கையன் எல்லாத்தையும் போட்
உட்டுட்டானா சார்..."

"பின்ன உனக்காக அவன் எதுக்கு ஏழு வரு
கம்பி எண்ணணும்."

"ஏழு வருசமா... எங்க சார் அந்த குழந்தையை தா
கொலை பண்ணலியே சார்.."

"ஓ.. பண்ணியிருந்தா தான் உங்கள தண்டிக்
கணுமோ? கொலை முயற்சிகளை அப்ப எங்க டிபார்ட்
மெண்ட் வேடிக்கை பார்க்கணுங்கறே?"

"இல்ல சார் நான் என்ன சொல்ல வந்தேன்னா"

"இங்க எதையும் சொல்லாதே.. இந்த கேஸ்ல ஒரு
பெரிய மனுஷன் இருக்கற மாதிரி தெரியுது.
அது யாருன்னு கேட்டா எனக்கு சென்ராயனைத்
தான் தெரியும் - வேறு எதையும் தெரியாதுங்கறான் நீ
ஏவி விட்ட வேங்கையன்! ஸ்டேஷனுக்கு வந்து என்
லத்திக்கு வேலை வைக்காம எல்லா உண்மைகளையும்
சொல்லிட்டா உனக்கு நல்லது. இல்லாட்டி எல்லா
கேஸையும் உங்க ரெண்டு பேர் மேலே போட்டு பத்து
பதினைஞ்சு வருஷத்துக்கு வெளிய வரமுடியாதபடி
பண்ணிடுவேன்.." எஸ்.ஐ யின் மிரட்டல் சென்ராயனை
உதற வைத்து விட்டது.

அதேசமயம் மனதுக்குள் வேங்கையன் சுரேஷைப்
பற்றி எதுவும் பேசாமல் விட்டது சற்று நிம்மதியை
தந்தது. இப்படி ஒரு நிலையில் தங்களை மீட்க சுரேஷால்
தான் முடியும். இல்லாவிட்டால் சுரேஷை காட்டிக்
தொடுப்பதை தவிர வேறு வழி இருப்பதாகவும் அவ
னுக்கு தெரியவ்வில்லை.



ஏற்கனவே சுரேஷுக்கு ராஜசேகர் வடிவத்தில் ஒரு
சோதனை ஆரம்பமாகி விட்டது. இது அடுத்த
சோதனையா இல்லை பெரிய வேதனையே இதுதானா
என்று அவனுக்கு குழப்பமாக கூட இருந்தது!

"சார் உங்க போனை கொஞ்சம் கொடுங்க சார்.."

"எதுக்கு... வக்கீலுக்கு தகவல் கொடுக்கவா?"

"இல்ல சார்... என்னோட முதலாளிக்கு தகவல்
தரணும் சார். நான் இப்ப டியூட்டில இருக்கேன் சார்."

"யார் உன் முதலாளி... சொல்லு, நான் உன்னை
அரெஸ்ட் பண்ண விஷயத்தை சொல்லிட்றேன்."

"சார் விளையாடாதீங்க சார்... எவ்வளவு பெரிய
அக்யூஸ்டா இருந்தாலும் அவங்க வக்கீல் கூட அவங்க
பேச ஸ்டேஷன்ல பர்மிஷன் தருவாங்க சார். இது
அவங்க அடிப்படை உரிமை சார். இங்க என் முதலாளி
கிட்ட சொன்னா அவர் வக்கீலோட வந்துடுவார் சார்..."

"பொடலங்கா... வக்கீல்ங்கறவங்க நிரபராதிகளை
காப்பாத்தறதுக்கு தான் சட்டம் படிச்சிட்டு வர்றாங்க.
உன்னை மாதிரி கேப்மாரிங்கள காப்பாத்தறதுக்கு இல்ல..
மூடிக்கிட்டு வா..."

சப் இன்ஸ்பெக்டர் அவன் வாயிலேயே போட்
டார். அவனுக்கு வகை தொகை இல்லாமல் சிக்கிக்
கொண்டு விட்டது தெளிவாகி விட்டது.

குழந்தை கஜேந்திரனிடம் ஓயாத அழு... ஜானகி மடியில் வைத்து தட்டி... பார்த்தாள். தொட்டிலில் விட்டு ஆட்டி... பார்த்தாள். பொம்மைகளை காட்டி அதன் கவனத்... திருப்பவும் முயற்சி செய்தாள். ஆனால் அழுகை... நின்றபாடில்லை. அந்த அழுகை சாமுண்டியை வீட்... வேலையே பார்க்க விடவில்லை.

ஜானகியிடம் வந்து வந்து நின்றாள்.

"நீ போ... இங்க என்ன உனக்கு வேலை?"

"குழந்தை அழுவுது... அதான்."

"அழுதா அழட்டும்.. நீ போய் உன் வேலையை... பார்."

"இல்லை.. என்னவோ மாதிரி இருக்கு.."

"என்னவோ மாதிரி இருக்கா?"

"ஆமா... நீங்க குழந்தையை அடிச்சீங்களா?"

"நான் அடிச்சேனா... உனக்கு என்ன புத்திகித்தி கெட்டுப் போச்சா..

"இல்லாட்டி ஏன் அழுவுது?"

"நானே அது தெரியாம தானே தவிச்சுகிட்டு இருக்கேன். நீ வேற.." - ஜானகி சலித்துக் கொள்ள வெளியே போயிருந்த கண்ணம்மாவும் உள் நுழைந்து கொண்டிருந்தாள். குழந்தை அழுவது அவளையும் என்னவோ செய்தது.



"ஏம்மா குழந்தை அழுவுது... இவ ஏதாவது பண்ணிட்டாளா?"

"நீ ஒருத்தி கண்ணம்மா... இவ என்னமோ நான் ஏதோ பண்ணிட்ட மாதிரி பேசறா..."

- ஜானகியின் பதில் அதிர்ச்சியளித்தது கண்ணம்மாவுக்கு.

"ஏய்... என்னடி சொன்னே?" - அவள் கவனம் சாமுண்டி பக்கம் கோபமாய் திரும்பியது.

"நான் ஒண்ணும் சொல்லலியே..."

"சொல்லாமதான் அம்மா வருத்தப்பட்றாங் களா?"

"விடு கண்ணம்மா.. இந்த குழந்தையை எடுத்து கிட்டு கொஞ்சம் வெளிய போய்ப்பார். அழுகை நிக்கு தான்னு பார்ப்போம்.."

- ஜானகி குழந்தையை கண்ணம்மாவிடம் கொடுத் தாள். குழந்தையை வாங்கும்போது லேசாக கை நழுவப் பார்த்து பிறகு பிடித்துக் கொண்டபோது சாமுண்டிக்கு பகீர் என்றது.

"என்னடி... என்னமோ நீ பெத்த குழந்தை கீழ உழுவப் போனமாதிரி திகைக்கறே..." என்று அதற்கும் ஒரு பதிலை சொன்ன கண்ணம்மா குழந்தையோடு வாசல் பக்கம் செல்லத் தொடங்கினாள்.

சாமுண்டியும் பின் தொடர்ந்தாள்.

"ஏய் சாமுண்டி நில்லு.." - ஜானகியின் அதட்ட லான குரல் சாமுண்டியை தடுத்து நிறுத்தியது.

"இப்ப உள்ள போய் நீ வேலையை பாக்க போறியா இல்லை இந்த வீட்டை விட்டே வெளிய போறியா?"

- ஜானகி வெடித்துவிட்டாள். சாமுண்டியும் அடக்கிக் கொண்டு சமையல் கட்டை நோக்கிச் சென்றாள். ஜானகியை அது என்னவெல்லாமோ செய்தது.

வாசல்புறமாய் பெரிய தோட்டம். செம்பருத்தியும், நந்தியாவட்டையும் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. தோட்டத்தின் நடுவில் ஒரு ஊஞ்சல் வேறு. அந்த ஊஞ்சலில் போய் உட்கார்ந்து ஆடியெல்லாம் பார்த்தாள் கண்ணம்மா.

வேலைக்கு ஆகவில்லை. குழந்தையின் அழுகை நிற்கவேயில்லை.

'ஒருவேளை பாலுக்காக தான் அழுகிறதோ? தனக்குள் எழும்பிய கேள்வியோடு உள்ளே வந்து ஜானகியிடம் கேட்டாள்.

"இல்ல கண்ணம்மா இப்பதான் குடிச்சான்.."

"அப்ப ஒரு வேளை வயித்துவலியா இருக்குமோ?"

"தெரியலியே..."

"டாக்டர்கிட்ட கூட்டிகிட்டு போகலாமா?"

இருவரும் மாறி மாறி கேட்டுக் கொண்ட போது ரகுபதியும் ஆபீஸ் வேலை முடிந்து வந்து விட்டிருந்தான். உள்ளே நுழையும்போதே அழுகுரல் அவனையும் பாதித்தது.

"என்ன ஜானகி ஏன் குழந்தை இப்படி அழுகுது..?"

"தெரியலீங்க.. நல்ல வேளை வந்தீங்க டாக்டர் கிட்ட போகலாம்க."



ஜானகி அழாத குறையாக சொல்லும்போது அவர்கள் எதிரில் மீண்டும் வந்து நின்றாள் சாமுண்டி. அவளைப் பார்க்கவும் ஜானகிக்கு எரிச்சலாக வந்தது. "உன்னை நான் உள்ள இருந்து வரக்கூடாதுன்னு சொல்லி இருக்கேன்ல?"

"ஏன் ஜானகி அவளை விரட்றே... அவ இப்ப என்ன செய்துட்டா..?"

"உங்களுக்கு சொன்னா புரியாதுங்க.. என்னமோ இவ பத்து மாசம் தவம் இருந்து பெத்த குழந்தையை நான் புடுங்கி வெச்சிருக்கற மாதிரி என்னை வெறிச்சு வெறிச்சு பார்க்கறா. வேலையையே பாக்க மாட்டேங்கறா.. குழந்தை சிணுங்கினா கூட ஓடி ஓடி வந்துட்றா.."

- ஜானகியிடம் எப்போதும் இல்லாதபடி எரிச்சல் பீறிட்டது.

"அய்யா இவளே கூட குழந்தையை ஏதாவது செய்துருப்பாய்யா. இல்லேன்னா இப்படி அழுவாது. நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்கய்யா.. இவ இருக்கற வரை அம்மாவால சந்தோஷமா குழந்தையை பாத்துக்கவே முடியாது." கண்ணம்மாவும் வக்காலத்து வாங்கினாள்.

ரகுபதிக்கு கண்ணம்மா அப்படி பேசியது பிடிக்கவில்லை. அது முகத்தில் தெரிந்தது. குழந்தையும் அழுதபடியே இருந்தது. சாமுண்டியோ எதையும் காதில் வாங்காதவளாக குழந்தை மேலேயே கவனமாக இருந்தாள். பாசத்துடிப்பு அவள் முகம் முழுவதிலும் தளும்பி வழிந்தபடி இருந்தது.

ரகுபதி வரையில் அவன் பாசமும், ...
உண்மைபோல் தோன்றவே ஜானகியின் கையில் ...
குழந்தையை வாங்கியவன் சாமுண்டியை அ...
"இந்தா பிடி... குழந்தை அழறத நிறுத்து பார்...
என்றான்.

அவன் செயல் ஜானகி வரையில் பெரிய அ...
யாக இருந்தாலும் மறுமுனையில் குழந்தை சா...
யிடம் அழுகையை நிறுத்தவும் அது மேலும் ...
அதிர்ச்சியை தந்தது.

அவளைவிட கண்ணம்மாவிடம் கூடுதல் அதி...

1...

ஜானகி கண்ணம்மா என்று இ...
முகத்திலும் அதிர்ச்சி பரவிய போ...
ரகுபதிக்கு அப்பாடா என்று இருந்...

"ஜானகி... பாத்தியா? குழந்தைக்கு சாமுண்...
தான் பிடிச்சிருக்கு. அவ கை படவும் அழுகை நின்...
போச்சு பார். கைல வெண்ணெயை வெச்சுகிட்...
நெய்க்கு, அலைஞ்ச கதையா சாமுண்டிய பக்கத்து...
வெச்சுக்கிட்டே நீ அநாவசியமா கவலைப்பட்...
குழந்தையையும் அழ விட்றுக்கே. அதுக்கு இதோ இ...
கண்ணம்மாவும் ஒரு காரணம்.

கண்ணம்மா நானும் ஆரம்பத்துல இருந்தே...
கவனிச்சுகிட்டு வரேன். உன் கிட்ட பொறாமையு...
பயமும் நிறையவே இருக்கு. எதனாலயோ உனக்...
சாமுண்டின்னாலே பிடிக்கல. இவளால உன் வேலைக்...
எந்த ஆபத்தும் வராதுன்னு நான் சொல்லியும் நீ அ...



காதுல வாங்கிக்காம ஜானகியை தாண்டி விட்டுகிட்டே இருக்குக்கே. இதை நான் பலமுறை கவனிச்சுட்டேன்.

இந்த வீட்ல ஜானகி குழந்தையோட சந்தோஷமா இருக்கணும்னா இனி நீ இங்க இருக்க கூடாது. இனி நீ என் ஆபீஸ்க்கு வந்து அங்க நான் சொல்ற வேலையை பார். இப்ப கூட நான் உன்னை வேலையை விட்டு நிறுத்தல. இடத்தை தான் மாத்தறேன். இனி நீ இந்த வீட்டுப் பக்கமே வரக்கூடாது ஞாபகம் வெச்சுக்கோ..."

என்ற ரகுபதியை கண்ணம்மா பேந்தப் பேந்தப் பார்த்தாள். ஜானகியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

"நீ புறப்படு..." என்று ரகுபதி கூறியும் கண்ணம்மா தேங்கித் தேங்கி நின்றாள்.

"இப்ப நீ புறப்பட்றியா இல்ல நான் வாட்ச்மேனை கூப்பிடட்டுமா?" ரகுபதியின் குரலில் அதட்டல் கலக்கவும் பயந்தபடியே ஒரு உதறலுடன் கண்ணம்மா அங்கிருந்து அகன்றாள்.

ரகுபதியின் கவனம் ஜானகியின் பக்கம் திரும்பியது. அவளோ எங்கோ வெறித்தபடி இருந்தாள்.

"ஜானகி..."

"நான் உங்ககிட்ட பேச விரும்பல..."

"இது அசட்டுத்தனமான கோபம். நான் உனக்கு நல்லதுதான் பண்ணியிருக்கேன்."

"அதை நான் சொல்லணும்."

"சாமுண்டி மேல உனக்கு ஏன் இவ்வளவு வெறுப்பு?"

“நீங்க ஒரு தாயா இல்லாம அப்பாவா போயிட்டீங்க. உங்களுக்கு சொல்லி எல்லாம் புரிய வைக்க முடியாது.”

“இதுல புரிஞ்சுக்க என்ன இருக்குது..?”

“இதுலதான் புரிஞ்சுக்க நிறைய விஷயங்கள் இருக்கு.”

“நீ தேவையில்லாம பயப்பட்றே... சாமுண்டிகிட்ட நான் அப்பழுக்கில்லாத ஒரு தாய்மையை பாக்கறேன். நம்ம குழந்தைக்கும் இப்ப அதுதானே தேவை?”

“அந்த தாய்மை என்கிட்ட இல்லையா..? இல்லாம தான் கெஜலட்சுமியம்மா என் கைல தூக்கி குழந்தையை கொடுத்தாங்களா?”

“இப்ப நீதான் புரியாம பேசுற... உன் தாய்மையால பால் கொடுக்க முடியுமா..? உன் ஸ்பரிசத்தால குழந்தையை அமைதிப்படுத்த முடியுமா? உன்கிட்ட இருக்கறது பாசம், அன்பு.. ஆனா குழந்தைக்கு இப்ப தேவை இதமான அரவணைப்பும் ஒருவித சக்தியும் தான்...”

“அப்ப இந்த குழந்தைக்கு இந்த நிமிஷம் நான் ஏற்ற அம்மா இல்லே... அப்படி தானே?”

“பைத்தியக்காரி... உனக்கும் எனக்கும் ஒரு கிடைக்க முடியாத பரிசா கிடைச்சது இந்த குழந்தை. இதோட நலம் மட்டும்தான் இப்ப நமக்கு முக்கியம். கொஞ்சம் விபரம் தெரிய ஆரம்பிச்ச பிறகு நீயே நூறு பர்சன்ட் உன் குழந்தையை வளர்க்கலாம். இப்ப கொஞ்சம் விட்டுக் கொடு. அதுவும் குழந்தைக்காக...”

ரகுபதியின் தீர்க்கமான பதில் ஜானகியின் வாயை அடைத்தது. ஆனால் ஜானகிக்கு மனது நிறையவில்லை.



இவர்கள் இருவருக்கும் இடையே நடந்த இந்த நீண்ட தர்க்கவாதம் எதுவுமே சாமுண்டியை துளிகூட பாதிக்கவில்லை. குழந்தைக்கு தன் தனங்களை கொடுத்துவிட்டு அது நிமிண்டி நிமிண்டி பால் குடிப்பதில் தன்னை மறந்திருந்தாள்!

ஒசர்வராய்ஸ் ஹோட்டலின் பார் பிரிவில் தண்ணி அடித்தபடி இருந்த சுரேஷின் முன்னால் பில் பேடை கொண்டு வந்து வைத்தார் சர்வர்.

அதை பார்த்த சுரேஷுக்கு சிரிப்பு வந்தது.

“எதுக்கு சார் சிரிக்கறீங்க?”

“சிரிக்காம என்ன பண்றது... போய்யா போய் உன் முதலாளிகிட்ட சொல்லி எங்கப்பாகிட்ட போய் பணத்தை வாங்கிக்க சொல்லு.”

“விளையாடாதீங்க சார்... பணத்தை கொடுங்க.”

“ஆமா நீ பெரிய சச்சின் டெண்டுல்கர். உன்னோட நான் விளையாட்றதுக்கு..”

“சார் என் வேலை போயிடும் சார்..”

“டோன்ட் ஒர்ரி.. உனக்கு நான் என் எஸ்டேட்ல வேலை போட்டு தரேன்...”

இருவரிடமும் வாக்குவாதம் அதிகரிக்கவும் மேனேஜர் வந்து நின்றார்.

“மிஸ்டர் சுரேஷ் நீங்க இப்படி நாகரீகம் இல்லாம நடந்துக்கக் கூடாது...”

"நீ யாருய்யா அதைச் சொல்றதுக்கு?"

"கேப்பீங்க சார். கேப்பீங்க. பேரர் இந்த ஆ... வெளிய விடாதீங்க. நான் இப்பவே வரேன்.."

விலகிய மேனேஜர் முதல் காரியமாக ரா... சேகருக்கு போன் போட்டார்.

"சார் உங்க சன் எங்க ஹோட்டல்ல வந்து குடி... சிட்டு பில்லுக்கு பணம் தராம கன்னாபின்னான்னு... பேசறார் சார்.."

"இந்த மாதிரி ஒரு பப்ளிக் நடந்துகிட்டா என்ன... செய்வீங்க?"

"அது சூழ்நிலையை பொருத்து முடிவு செ... வோம்."

"இப்பவும் அப்படியே செய்துக்குங்க. என்ன... அவன் என் மகனே இல்லை.."

"சார்..."

"ப்ளீஸ்... டோன்ட் டிஸ்டர்ப் மீ. நீங்க அவன்... வரைல போலீஸ்ல கூட ஹேண்ட் ஓவர் பண்ணலாம்... நான் பணம் தருவேன்னு மட்டும் எதிர்பார்க்காதீங்க." அவர் போனை கட் செய்து கொண்டார்.

மேனேஜருக்கு முகத்தில் அறைந்த மாதிரி இருந்... தது. திரும்பி வந்தார். சுரேஷ் டேபிள் மேல் சரிந்... திருந்தான்.

"பேரர் இவனை வெளிய கொண்டு போய் விட்றுங்க. இனி வந்தா உள்ளே சேர்க்காதீங்க" என்றார்.



அடுத்த ஐந்தாவது நிமிடம் அவனை தூக்கி வந்து ஹோட்டலுக்கு வெளியில் உள்ள தார்ச் சாலையின் ஒரு ஓரமாக போட்டனர்.

அவனிடம் சுரத்தே இல்லை!

சென்ராயன் வீட்டில் அவன் தாயான தாமரையிடம் ஒரே பதட்டம். ஊர்க்காரர்களில் ஒருவர் சென்ராயனை போலீஸ் ஜீப்பில் ஏற்றி அழைத்துச் சென்றதை பார்த்துவிட்டு வந்து சொன்னதன் விளைவு. காளியப்ப கவுண்டர் எங்கோ வெளியே போயிருந்தார். அதனால் அவருக்காக காத்துக் கொண்டிருந்தாள். அவரும் விரித்த குடையும் கையுமாய் ஒரு வழியாக வந்து சேரவும் விஷயத்தை கூறினாள்.

"என்ன புள்ள சொல்றே நிசமாவா?"

"அட ஆமாங்க.. என்னன்னு தான் கொஞ்சம் போய் பாருங்களேன்..."

தாமரை விசனப்பட கவுண்டர் தேங்கி நின்றார்.

"என்னங்க யோசனை?"

"உன் மகனை பத்தி அப்பப்ப தப்பு தப்பா காதுல விழுவும். எஸ்டேட் முதலாளியாலேயே உங்க மகன் ஒரு வழி ஆயிடுவான்னு சொல்வாங்க. அப்பல்லாம் இவன் கிட்ட கேட்டா பொறாமைல பேசறாங்கம்பான். கடைசில போலீஸ் புடிச்சிட்டு போற அளவுக்கு வந்துருக்குதா...?"

"பேசிகிட்டு நிக்கறிங்களே... போய் என்னன்னு பாருங்க..."

தூண்டிவிட்டாள் தாமரை. காளியப்ப கவுண்ட மடக்கிய குடையை திரும்ப விரித்தவராக பெரு சோடு புறப்பட்டார்.

ரகுபதியின் கார் போர்ட்டிகோவை வி விலகிய நொடி விறுவிறுவென்று உள் நுழைந்தாள் கண்ணம்மா.

"அம்மா.. அம்மா.."

"வா கண்ணம்மா..

"என்னத்தம்மா... ஐயா இங்க இருந்து கிளம் னப்ப விட்டுட்டீங்களேம்மா.."

"என்னால ஒண்ணும் பண்ண முடியல கண்ணம்ம அவர் பேசறத கேட்டா அதுவும் சரியா தான் படுது."

"சரிம்மா இப்ப குழந்தை எங்கே?"

"தொட்டில்ல தூங்கிகிட்டு இருக்குது."

"நல்ல வேளை அவதான் வெச்சுகிட்டு இருக்கா ளோன்னு நினைச்சேன். ஆமா அவ இப்ப எங்க?"

"அவளுக்கும் களைப்பு போல இருக்கு. படுத் துட்டா."

ஜானகி கூறவும் பூனை போல எழுந்து சென்று கிச்சனுக்குள் எட்டிப் பார்த்தாள் கண்ணம்மா.

சாமுண்டி கிச்சனில் ஒரு ஓரமாய் படுத்திருந்தாள். கண்ணம்மா குரல் கொடுக்க தொடங்கினாள்.

"சாமுண்டி... ஏய் சாமுண்டி..."



குரல் கேட்டு அவளும் எழுந்தாள். கண்ணம்மாவை பார்த்து மலங்க மலங்க விழித்தாள். கண்ணம்மாவுக்கோ அவளை அப்படியே அழைத்துக் கொண்டு அந்த பங்களாவை விட்டு வெளியேற்றும் எண்ணம்!

# 17

தன் அருகில் வந்து நின்றபடி போலியாக சிரிக்கும் கண்ணம்மாவின் உள்மனது எப்படிப் பட்டது என்பது சாமுண்டிக்கு தெரிய வில்லை.

அவளும் பதிலுக்கு சிரித்தாள்.

"என்ன சாமுண்டி பண்ணிகிட்டிருக்கே?"

"ஒண்ணும் பண்ணலியே.."

"அதான் பார்த்தாலே தெரியுதே.. ஆமா இப்படி உள்ளயே அடைஞ்சு கிடந்தா எப்படி?"

"அதுக்கு நான் என்ன செய்யணும்?"

"பரவால்லியே... இப்படி ஒரு கேள்வியையாவது என்கிட்ட கேட்டியே..." என்ற கண்ணம்மா சற்று விஷமச் சிரிப்போடு திரும்பி ஜானகியை பார்த்தாள். ஜானகிக்கு வியர்க்க ஆரம்பித்திருந்தது. அவளது மிக நல்ல உள்ளம் ஒரு தவறு நடப்பதற்கு முன்பே அதை எண்ணி நடுங்க ஆரம்பித்துவிட்டது.

"சரி சரி புறப்படு. நாம ரெண்டுபேரும் வெளிய போய் வீட்டுக்கு சாமான்லாம் வாங்கிட்டு வருவோம்..." என்று கண்ணம்மா தன் போக்கில் போகத் தொடங்கி விட்டாள்.

"சாமான்லாம்னா?"

"ஒரு கேள்விய ஒழுங்கா கேட்டா உடனேயே கேள்விய கொழப்புவியே.."

"கொழப்பறதுன்னா?"

"ஒவ்வொண்ணுக்கும் உனக்கு பதில் சொல்லி டிருக்க என்னால முடியாது. புறப்படு முதல்ல.."

"சரி இரு வரேன் என்றவள் குழந்தையை தே தொடங்கினாள்."

"ஏய் என்ன தேட்றே?"

"கொ. கொழந்தையை..."

"அது எதுக்கு?"

"அழுவுமே..."

"அதெல்லாம் அழுவாது... நாமதான் போய்ட் திரும்பி வந்துடுவோமே..."

"அப்படியா?"

"அப்படித்தான்... பேசிகிட்டே நிக்காம புறப்படு"

கண்ணம்மாவின் அதட்டலும் சேர்ந்து கொள் டது. அடுத்த நொடி சாமுண்டி ஜானகி முன்னால் போ நின்று தலையை சொரிந்தாள்.

"என்ன?"

"இது கூப்பிடுது.."

"கூப்ட்டா போ..."

"அப்ப போறேன்..." சாமுண்டி ஜானகியிடம் சொன்னவிதம் மிக மிக பரிதாபமாக இருந்தது. அது ஜானகியை என்னவோ செய்தது.



"கண்ணம்மா வேண்டாம் விட்று.." என்றாள் மிக வேகமான குரலில்.

"அட நீங்க ஒண்ணும்மா. இவ காலை சுத்துன பாம்பு மாதிரி. பொட்டுன்னு போட்டு தள்ளிடணும். இல்ல இவ நம்பள போட்டு தள்ளிடுவா."

"இல்ல.. பாக்க பாவமா இருக்கு.."

"பாவம் பாத்து தான் இப்படி இருக்கீங்க... என்னம்மா நீங்க... பிச்சை எடுத்த பெருமாள் மாதிரி குழந்தையை எங்கிருந்தோ வாங்கிட்டு வந்துருக்கீங்க. அதை புடுங்கித்தின்ன அனுமார் மாதிரி இவ வந்துருக்கா. இவளை நான் துரத்தறேன்னாலும் பயப்பட்றிங்களே..."

"இல்ல கண்ணம்மா அவருக்கு தெரிஞ்சா சந்தேகப்படுவார். அப்புறம் எங்களுக்குள்ள பெரிய பிரச்னை ஆயிடும்."

"எப்படி ஆகும். இவ தான் இனி இந்த ஊர்ப் பக்கமே வரப் போறதில்லையே. நான் இவளை பம்பாய் பக்கம் போற ரயில்ல ஏத்தி விட்டுட்றேன். நீங்க தைரியமா இருங்க.."

நெருங்கி வந்து காதைக் கடித்த கண்ணம்மா ஜானகியை அடக்கி விட்டு சாமுண்டியை இழுத்துக் கொண்டு புறப்படும் சமயம் குழந்தை அதை சரியாக உணர்ந்து கொண்டதுபோல் அழுதிடத் தொடங்கியது.

காலெடுத்த சாமுண்டியை யாரோ இழுத்தது போல் இருந்தது. அதே வேகத்தில் திரும்பி உள்ளே ஓடினாள். தொட்டிலில் கிடந்த குழந்தை மலங்க மலங்க முழித்தபடி அவளைப் பார்த்தபடியே அழுதது.

"என்ன பசிக்குதா?" என்று கேட்ட வேகத்தில் ரவிக்கையை அவிழ்த்து விட்டுக் கொண்டாள் குழந்தையை வாரி எடுத்தாள். பால் தரத் தொட... விட்டாள்.

அந்த காட்சி ஜானகியை மிகவே கலவரப்படுத்தியது.

"அம்மா பாத்திங்கல்ல.. இந்த புள்ளை வளரும் போது அம்மான்னு உங்களை கூப்பிடாது. இவளைத் தான் கூப்பிடும். தேவையா உங்களுக்கு?"

கண்ணம்மா கேட்ட விதமும் தொனியும் பரிதாபத்தில் இருந்த ஜானகியை வெகு வேகமாக ஆவேசத்துடன் மாற்றி "கண்ணம்மா நீ சொன்னது தான் சரி இவளை பம்பாய் இல்ல அதுக்கும் அந்த பக்கம் கொண்டு போய் விட்டுடு..." என்று சொல்ல வைத்தது.

கண்ணம்மாவுக்கும் அந்த வீட்டில் இனி தனக்கு போட்டியே இல்லை என்றும் எண்ணம் தோன்றி அது அவள் முகத்தில் ஒருவித செருக்காய் பரவி ஓடத் தொடங்கியது.

சப்த கன்னியர் கோவில் பக்கமாய் வந்த காளியப்ப கவுண்டர் பார்வை கெஜலட்சுமியம்மாவைத் தேடியது.

மிக அமைதியான சூழல். அன்று அதிக பனி வேறு. எல்லாப் பக்கமும் புகை மூட்டம் போட்டது போல் இருந்தது.

சேலம்போலீஸ்ஸ்டேஷனுக்குசென்றுசென்ராயனை பார்ப்பதற்கு முன் அம்மாவை பார்த்துவிட்டால் போகிற காரியம் நல்லவிதமாக முடியும் என்று மனதுக்குள் ஒரு



எண்ணம். கோவில் மரத்தடியில் அம்மா இல்லாததைத் தொடர்ந்து அப்படியே அம்மா வசிக்கும் குடிசைப் பக்கம் போய் வாசற்புறம் நின்றார்.

நிச்சயம் அம்மா உள்ளிருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அம்மா என்று குரல் கொடுக்க, அம்மாவும் எட்டிப் பார்த்தாள்.

"அடடே மிராசா?"

"இப்ப உன் பக்தன் மட்டும்தான் தாயி.."

"குரல்ல ஒரு சோகம் தெரியுதே.."

"தப்பா பிள்ளை வந்து பொறந்துட்டா சந்தோஷமா பட முடியும்?"

"அப்படி உக்காந்து பேசுங்க.."

அருகில் இருந்த சிறு பாறையை காட்டிவிட்டு வாசலுக்கு முன் சாணியிட்ட மெழுகிய திண்ணை மேல் அமர்ந்து கொண்டாள் அம்மா. ஆனால் கவுண்டர் உட்காரவில்லை.

"தாயி உட்கார்ந்து புலம்ப ஆசை தான். ஆனா என் மகன் இப்ப போலீஸ் ஸ்டேஷன்ல கைதியா இருக்கான். என்ன தப்பு பண்ணான்னு தெரியல. ஆனா பெருசா ஏதேதோ பண்ணிருக்கான். அவன் சவகாசம் அப்படி. அவனை பாத்து மீட்டுகிட்டு வரத்தான் போய்கிட்டிருக்கேன். உன் ஆசீர்வாதம் வேணும் தாயி..."

"இதுவரை என்னென்னவோ நடந்துருக்கலாம். ஆனா இனி நடக்கறது நல்லதாகவே இருக்கணும். நானும் இனி அவனை வீட்டு நாயா என் கண் எதிர்லயே வெச்சுக்கறதுன்னு முடிவு பண்ணிட்டேன்."

கவுண்டர் பேச்சைக் கேட்டு அம்மா கண்
முடினாள். சில வினாடிகள் அவள் முகத்தில் எந்த
சலனமுமில்லை. அதன் பின் முகம் முழுக்க ஒரு
பரவியது. அதில் ஆயிரம் அர்த்தங்கள்!

"தாயி இந்த சிரிப்புக்கு அர்த்தத்தை நான்
கக்கலாமா?"

"அதை உன்னால தெரிஞ்சுக்க முடியாது. நா
விதியை நினைச்சு சிரிச்சேன். அதுக்கு தான் என்ன
சக்தி. தண்டவாளத்தை விட்டு ரயில் எப்படி வில
ஒட்றது இல்லையோ, அப்படியே விதியை விட்டு வில
நம்ம வாழ்க்கையும் ஒட்றதே இல்லை."

"இதை இப்ப நீ சொல்றேன்னா ஒரு காரண
இருக்கணுமே?"

"நிச்சயமா இருக்கு... அதை நீ போகப் போக
தெரிஞ்சுக்குவே. நீ புறப்படு..."

"புறப்படுன்னா எப்படி... போற காரியம் நல்ல
படியா முடியணுமே?"

"எல்லாம் நல்லபடி முடியணும்னுதான் எல்லாமே
நடந்துகிட்டிருக்கு..."

"எல்லாம்னா புரியலியே தாயே..."

"அதுவும் போகப் போக புரியும். ஒன்னு
மட்டும் ஞாபகம் வெச்சுக்கோ. எந்த காரணத்தை
கொண்டும் நியாயத்துக்கும் தர்மத்துக்கும் எதிரா ஒரு
துரும்பைக் கூட கிள்ளிடாதே, உன் நல்ல மனசை பாசத்
துக்காக கெடுத்துக்காதே. அவ்வளவுதான் சொல்வேன்
புறப்படு."



அம்மா கூறிவிட்டு எழுந்து குடிசைக்குள்ளும்
போய்விட்டாள். கவுண்டருக்கு எதுவும் புரியவில்லை.
ஆனால் பெரிதாக ஏதோ தன்னைச் சுற்றி நடக்கப்
போகிறது என்பதை மட்டும் அப்போதைக்கு அவரால்
யூகிக்க முடிந்தது!

தெருவில் நடந்தபடி இருந்த கண்ணம்மா ஒரு
இடத்தில் ஆட்டோ ஒன்றை வழிமறித்து
அதில் சாமுண்டியை ஏறச் சொல்லி
தானும் ஏறிக் கொண்டாள். ஆட்டோவை சேலம்
ஜங்ஷன் நோக்கி விடச் சொன்னாள். சாமுண்டிக்கு
கண்ணம்மாவின் சூதோ, சூழ்ச்சியோ எதுவுமே
புரியவில்லை. வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டே
வந்தாள்.

ஆட்டோகாரர் பெட்ரோல் போடுவதற்காக
பங்க் ஒன்றுக்குள் நுழைந்தார். அங்கே எதிர் வரிசை
யில் ரகுபதியின் கார் நின்றிருக்க காருக்கு பெட்ரோல்
போட்டுக் கொண்டிருந்தான் ரகுபதி. அவனை பார்க்
கவும் கண்ணம்மாவுக்கு பக்கென்று நெஞ்சை அடைத்
தது. தன்னை சாமுண்டியோடு பார்த்தால் அவ்வளவு
தான் என்று யூகித்தவள் சட்டென்று ஆட்டோவை
விட்டு இறங்கியதோடு சாமுண்டியையும் இழுத்துக்
கொண்டு அப்படியே பின் பக்கமாகவே செல்லத்
தொடங்கினாள். ஆட்டோக்காரர் திரும்பிப் பார்த்து
இருவரும் ஆட்டோவுக்குள் இல்லாததைக் கண்டு
அதிர்ந்தார். ஆட்டோவை விட்டு இறங்கிப் பார்த்த
போது கண்ணம்மா சாமுண்டியோடு ஓடுவது தெரிந்தது.

"ஏ பொம்பள..." என்று கத்தவும் அது கண்ணம்
மாவை பீதிக்குள்ளாக்கியது. ரகுபதி தான் பார்த்து

விட்டு அழைப்பதாக நினைத்தவள் சாமுண்டியின் கையை விட்டு விட்டு சாலைக் கூட்டத்தில் விறு விறு வென்று நடந்து கண்ணில் பட்ட சந்து பொந்துகளில் எல்லாம் புகுந்து ஓடத் தொடங்கினாள்.

சாமுண்டி மட்டும் நடுத் தெருவில் ஒரு இடத்தில். அவளை ரகுபதியின் காரும் கடந்து போனது. ஆனால் ரகுபதி அவளைக் கவனிக்கவில்லை!

சாமுண்டியின் கால்களும் திக்குதிசை தெரியாத படி நடக்க ஆரம்பித்தன!

போலீஸ் ஸ்டேஷன்!

லாக் அப்பில் அண்டர்வேருடன் உள் அடங்கிக் கிடந்தான் சென்ராயன். கூடவே வேங்கையன். உள் நுழைந்து இன்ஸ்பெக்டர் முன் நின்றார். காளியப்ப கவுண்டர். கையில் மலை வாசிகளுக்கே உரிய வாக்கிங் ஸ்டிக் போன்ற குடை. தோற்றத்திலும் ஒரு மிடுக்கு.

"வணக்கங்க.."

"வணக்கம். நீங்க?"

கேள்விக்கு பதிலாக கவுண்டர் பார்வை லாக்அப் பக்கம் சென்றது. தாள முடியாமல் தலையை தாழ்த்திக் கொண்டான் சென்ராயன்.

"அந்த சென்ராயனோட அப்பனா நீங்க?"

இன்ஸ்பெக்டர் குரலில் துளிகூட மரியாதையே இல்லை.

"ஆமாம் சார். கொஞ்சம் மரியாதையா பேசினா நல்லா இருக்கும். நான் பஞ்சாயத்து போர்டு பிரசிடென்ட். ஊர் மிராசு..."



"சரிதான்... இப்பல்லாம் பெரிய மனுங்களோட பசங்கதான் எல்லாவித பொறுக்கித் தனங்களும் பண்றாங்கன்னு சொல்றது சரியா இருக்கு..."

"இப்படி எல்லாரையும் பொத்தாம் பொதுவா சொன்னா எப்படிங்க. நான் மானஸ்தன். நியாய தர்மத்துக்கு பயந்து நடக்கறவன்.."

"இப்படித்தான் இங்க என்ன பாக்கவர்ற எல்லா கிரிமினல்களோட அப்பன்காரங்களும் பேசறாங்க. ஆனா நியாய தர்மத்தோட புள்ளைங்கள வளர்க்க மட்டும் தெரியாம போயிடுது."

"ஒத்துக்கறேங்க.. நான் அந்த விஷயத்துல தப்பு பண்ணிட்டதாலதான் இப்ப என் மகன் உள்ள இருக்கான். இவன் என்ன தப்பு பண்ணான்னு கொஞ்சம் சொன்னீங்கன்னா நல்லா இருக்கும்.."

"தப்பு பண்ணா தான் பரவால்லியே... நாலு தட்டு தட்டிட்டு விட்டுடலாமே... கொலையேல்ல பண்ணப் பாத்துருக்காங்க."

அவர் கூறவும் கவுண்டருக்கு திக்கென்றது!

# 18

கொலை முயற்சி என்று இன்ஸ்பெக்டர் சொன்னதை கேட்ட கவுண்டர் விக்கித்துப் போனார். அது அவர் முகம் போன போக்கில் அப்பட்டமாய் தெரிந்தது. நேராக லாக்கப்புக் குள் தலை குனிந்தபடி இருக்கும் சென்ராயனிடம் சென்று நின்றார். கூடவே வேங்கையன்... திருதிருவென்று விழித்தான்!

"எலே... என்ன நிமிந்து பாருடா. அய்யா சொல்றதெல்லாம் நெசமா?"

சென்றாயன் நிமிரவேயில்லை. அவனால் நிமிர முடியவில்லை. "அடப்பாவி... அவர் சொன்னதெல்லாம் நெசம்தான் போல... அதான் உன்னால என் முகத்த பாக்க முடியல. நீ தறிகெட்டு அலையும் போதே நான் நினைச்சேன். ஆனா இப்படி கொலைகாரனா வந்து நிப்பேன்னு கொஞ்சம்கூட எதிர்பார்க்கலடா.."

என்றவரை சென்றாயன் நிமிர்ந்து பார்த்தான். அவன் கண்கள் கலங்கியிருந்தன.

"அப்பா நாங்க எந்த கொலையும் பண்ணலப்பா.. முதலாளிக்கு விசுவாசமா இருக்கப் போய் இப்படி ஆயிடிச்சுப்பா..." என்று மென்று துப்பியவனை எரிக்கும் விழிகளில் பார்த்தவர் அப்படியே திரும்பினார். எதிரில் இன்ஸ்பெக்டர்.

"இப்பதான் முதலாளிக்கு விசுவாசமான்னு வாயத் திறந்துருக்கான் உங்க மகன். இதுவரை நாங்க எவ்வளவு கேட்டும் வாயையே திறக்கல. யாருங்க இவங்களோட முதலாளி?"

"ஏற்காட்டுல பெரிய எஸ்டேட் அதிபருங்க அவரு. பேரு ராஜசேகரன். அவர் மகன்கிட்ட தான் இவன் வேலைல இருக்கான். ராஜசேகரன் அய்யா தங்கமானவருங்க. ஆனா அவர் மகன் அவர் பேரை கெடுக்கறதுக்குன்னே பொறந்தவனுங்க.."

"உங்க மகன் மட்டுமென்ன..?"

"வாஸ்தவம் தாங்க... எல்லாம் நாங்க செஞ்ச பாவம்..."



"ஏலேய் உன் முதலாளி தான் அப்ப கொலை செய்யச் சொன்னாரா?"

இன்ஸ்பெக்டர் அப்படியே மேட்டருக்குள் புகுந்து விட்டார்.

சென்றாயன் முழித்தான். காட்டிக் கொடுப்பதா வேண்டாமா என்கிற குழப்பம்.

"இப்ப நீ வாயத் திறந்து உண்மைய சொல்லாட்டி உங்கமேல இந்த ஸ்டேஷன்ல பெண்டிங்குல இருக்கற எல்லா கேஸையும் தூக்கி போட்ருவேன். இன்னம் என்னய்யா யோசனை?"

"அய்யா அது வந்து..."

"எது வந்துடா... யாரை கொலை செய்ய திட்டம் போட்டீங்க. அந்த என்ஜினியர் யாருக்கு எதிரி... உங்க முதலாளிக்கா இல்லை உங்களுக்கா?"

"என்ஜினியரா... அது யாருங்க?"

"இதோ இந்த வேங்கையனை நாங்க இந்த சேலத்துல இருக்கற ஒரு என்ஜினியர் வீட்லதான் புடிச்சோம். அந்த வீட்ல அன்னிக்கு விசேஷம். பெரிய மனுஷங்கள்ள இருந்து உறவுக்காரங்க வரை எல்லாரும் வந்துருந்தாங்க. அங்க இவனும் நுழைஞ்சிட்டான். அங்க அன்னிக்கு எங்க ஆபீசர் ஒருத்தரும் போகவும் அவர் கண்ணுல பட்டதால அங்க நடக்க இருந்த கொலை முயற்சி தவிர்க்கப்பட்டது."

இன்ஸ்பெக்டர் விசாரிக்கத் தொடங்கவுமே வேங்கையனுக்கு உதற ஆரம்பித்துவிட்டது. இதற்கு மேலும் பொறுமையாக இருந்தால் அது மேலும்

ஆபத்தில்தான் முடியும் என்பதை உணர்ந்து கொண் வன் இடையிடத் தொடங்கினான்.

"ஐயா..."

"என்ன?"

நான் எல்லா உண்மையையும் சொல்லிட் றேங்க. அவனை அதிர்ச்சியோடு பார்த்த சென்றாய னுக்கும் அதற்கு மேல் தப்பிக்க முடியும் என்று தோன்றவில்லை. மனதும் சுரேஷை நினைத்து குமுறத் தொடங்கிவிட்டது!

ஒசலம் கடைத்தெரு பகுதி!

சாமுண்டி பேந்தப் பேந்த முழித்தபடி நடந்து கொண்டிருந்தாள். திக்குதிசை தெரியவில்லை. மாரியம்மன் கோவில் அருகே வந்தபோது அன்னதானம் நடந்து கொண்டிருந்தது. பாக்குமட்டையில் சாம்பார் சாதமும், தயிர் சாதமும் கொடுத்துக் கொண்டிருந்தனர். வயிற்றுப் பசி அவளையும் அங்கே தள்ளி விட்டது. சாமுண்டி நெருங்கவும் சாம்பார் சாதம் தீர்ந்து தயிர் சாதம் மட்டும் தான் இருந்தது.

அதை வாங்கிக் கொண்டு ஓரமாக போய் உட் கார்ந்து சாப்பிட ஆரம்பித்தாள். அவள் சாப்பிட்ட இடத்தில் அவளைச் சுற்றி பல பிச்சைக்காரர்கள். அதில் சில பெண்களும் இருந்து அவளை வெறித்தனர்.

சாமுண்டி தயிர்சாதத்தை அள்ளி அள்ளி விழுங்க ஆரம்பித்தாள். மேலாக்கு சரிந்தது கூட தெரியவில்லை. பிள்ளை பெற்ற மார்புகள்.. ஒரு பிச்சைக்காரன்



அதைப் பார்த்து எரிய ஆரம்பித்தான். ஆனாலும் அவன் பார்வையின் அர்த்தம் புரியாமல் அவனை பார்த் தாள்! அவன் சிரித்தான் - அவளும் சிரித்தாள்! அவன் பாக்குமட்டையில் நிறைய சாம்பார் சாதம் இருந்தது. அவளை நெருங்கி வந்தான். "உனக்கு சாம்பார் சாதம் கிடைக்கலியா?" என்று கேட்டான். அவள் தலை மறுப் பாக ஆடியது. இப்போது அவளது மாராப்பு முற்றாக விலகி விட்டிருந்தது. அவனுக்கு முழுக்க உஷ்ணம் பரவ விட்டிருந்தது. அதற்குள் ஒரு வயதான பிச்சைக்காரி அவனது பார்வையை கவனித்தவளாக சாமுண்டி அருகில் வந்து மேலாக்கை இழுத்து சரி செய்து விட்டாள்.

"திரும்ப அவனையும் முறைத்துப் பார்த்தவள் "திரும்ப அவனையும் முறைத்துப் பார்த்தவள் எங்கே எங்கேன்னு அலையறானுங்க... போடா அப்படி கோட்டி நாயி..." என்று திட்டினாள்.

"ஏய் சடச்சி வேணாம்.. என் விஷயத்துல தலையிடாதே."

"என்ன தலையிடாதே இவளுக்கும் புள்ளயதர பாக்கறியா... பாவம்டா இவ... போயி காசுக்கு அலையு துங்க பாரு... அவகிட்ட போ..."

"சடச்சி... நீ தப்பா பேசறே..."

"நீ தப்பா நடந்துக்கறே... தா போ எழுந்திரிச்சு.

"நீ தப்பா நடந்துக்கறே... தா போ எழுந்திரிச்சு. சோத்த வாங்கினா போவியா. இங்க இவனுங்க எதுக்க எதுக்கு உக்கார்றே?"

"ஏன்..?" புரியாமல் சாமுண்டி கேட்கவும் அந்த கிழட்டு பிச்சைக்காரி தலையில் அடித்துக்கொண்டு என்

கூடவா.. உன்ன நான் தனியே விட்டேன் இவன் உன்ன
கடிச்சே தின்னுடுவான்"

என்று சாமுண்டியை அழைத்துக்கொண்டு மைதானம் நோக்கி செல்லத் தொட னாள். அந்த காமாந்தக பிச்சைக்காரனும் அவர்களு தெரியாமல் அவர்கள் பின்னால் செல்லத் தொட னான்!

ரகுபதி பங்களா!

ரகுபதியின் கார் ஹாரன் சப்தமுடன் உ நுழையவும் உள்ளே இருந்த ஜானகிக்கு சுருக்கென்ற எதிரில் கண்ணம்மா!

கடைத் தெருவில் அவளை தொலைத்த விபரத்தை கூறிவிட்டு புறப்பட இருந்தவள் மிரட்சியுடன் பார்த் தாள். "அம்மா அய்யா என்னை பார்த்தா உங்கமே கோவப்படுவார். சாமுண்டி விஷயமா எத கேட்டாலு தைரியமா சமாளியுங்க. நான் கொல்லை வழியா போயிட்றேன்," என்று பின் பக்கமாய் செல்லத் தொடங்கினாள்.

ரகுபதியும் பிரிஃப் கேசுடன் உள் நுழைந்தவன் ஹாலிலேயே தனது கோட்டை கழற்ற ஆரம்பித்தான். ஜானகியும் வந்து அதை வாங்கிக் கொண்டாள்.

"என்ன ஜானகி குழந்தை தூங்கிட்டானா?"

"உம்."

"ஒழுங்கா பால் சாப்ட்டானா?"

"உம்.."



"நீ சாப்ட்டியா?"

"நான்.. நான் உங்களுக்காக தான் காத்திருக்கேன்."

"நான் வர லேட்டானா என்ன செய்வே.. நேரத்துக்கு சாப்ட்டுடுன்னு சொல்லியிருக்கேன்ல?"

"உங்களுக்கு போட்டுட்டு சாப்ட்டாதாங்க சாப்ட்ட மாதிரியே இருக்கு.."

"இதே பதிலை இன்னும் எத்தனை வருஷம் சொல்லப் போறியோ தெரியலை."

பேச்சோடு பேச்சாக ரகுபதி பேண்ட் ஷர்ட்டை எல்லாம் கழற்றி எறிந்துவிட்டு பைஜாமா குர்தாவுக்கு மாறியவனாக சாப்பிட வந்தான். டைனிங்டேபிள் மேல் பதார்த்தங்கள்!

பெண்டுல கெடிகாரம் மணி இரண்டு என்பதற்கேற்ப இரண்டு முறை ஓசை எழுப்பியது. வெண்கல இசை வீடு முழுக்க எதிரொலித்தது. ரகுபதியும் வந்து அமர்ந்தான். ஜானகிக்கு நெஞ்சில் ஒருவித படப்படப்பு-

நல்ல வேளையாக வந்ததில் இருந்து சாமுண்டி பற்றி கேட்கவில்லை. அவள் நினைத்த நொடி டைனிங் டேபின் நாற்காலியில் அமர்ந்தவன் "ஆமா சாமுண்டிக்கு சாப்பாடு போட்டியா?" என்று கேட்டு அவள் படபடப்பை அதிகரிக்கச் செய்தான். அவளும் விடாமல் சமாளிக்க முனைந்தாள்.

"அது- அது- அவ ஒரு மணிக்கெல்லாம் சாப்ட்டாங்க."

"எங்க அவ?"

"இங்க... இங்கதான் இருந்தா மா... மாடியில
வேளை உக்காந்துகிட்டிருக்காளோ என்னவோ?"

"அங்க என்ன வேலை அவளுக்கு?"

"நா...நான் ரவையை காய போட்டுருக்கேன். 
புழு பூச்சி.."

"நல்ல ரவையா வாங்கறதுக்கென்ன... மாடியி
இருக்கற சாமுண்டி தப்பித் தவறி கைப்பிடி சுவர் பக்க
வந்து கீழவிழுந்துட்டா என்ன பண்றது... அவனே
நல்லது கெட்டது எதையும் தெரியாத ஒரு பச்ச
குழந்தை."

ரகுபதியின் பேச்சு ஜானகியை நெருடியது.

மாடியில் இருக்கிறாள் என்பதற்கே இவ்வளவு
கவலைப்படுபவன் அவள் வீட்டை விட்டே துரத்த
பட்டு விட்டாள் என்று தெரியவந்தால் கொந்தளித்து
விடுவானே? ஜானகிக்கு நினைத்துப் பார்க்கும்போதே
நெஞ்சு நடுங்கியது. வியர்க்க ஆரம்பித்தது. ரகுபதியும்
கவனித்தவனாக.

"என்ன ஜானகி... என்ன யோசனை ஏன் உடம்பு
வியர்க்குது?"

"என்னன்னே தெரியலீங்க... கொஞ்ச நேரமாவே
உடம்பு சரியில்ல."

"இதை ஏன் நீ முன்னாடியே சொல்லல... என்
னம்மா நீ."

ரகுபதி எழுந்து அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான். சூடாக ஒன்றும் இல்லை.

"என்ன ஜானகி டெம்பரேச்சர் இல்லையே..."



"அது... அது... உள் காய்ச்சலங்க."

"சரி எதுவா இருந்தாலும் சரி புறப்படு டாக்டரை போய் பார்த்துட்டு வந்துடுவோம்."

"ஐயோ நீங்க முதல்ல சாப்பிடுங்க.. அப்பறம் பாத்துக்கலாம்."

"உன்னை இப்படி பார்த்துட்டு எப்படி சாப்பிட முடியும் என்னால?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல... ஒரு அனாசின் போட்டா எனக்கு சரியாயிடுங்க... நீங்க சாப்பிடுங்க."

அவள் சொல்லிக் கொண்டே வெள்ளித் தட்டை வைத்து தம்ளரில் தண்ணீரையும் நிரப்பினாள். ரகுபதியிடம் முதல் தடவையாக ஒரு சிறு சந்தேகம் தலை தூக்கத் தொடங்கியது.

அவளிடமோ படபடப்பு கூடிக் கொண்டே போனது. அப்போது குழந்தை வேறு அழும் சப்தம்!

மளமளவென்று தட்டில் சாதம் போட்டு குழம்பை விட்டவள் "நீங்க சாப்பிடுங்க... நான் போய் குழந்தையை பாக்கறேன்..." என்று ஓடினாள்.

அப்போது கொரியர் பாய் ஒருவனும் கடிதங்களுடன் வந்திருந்தான். ஜானகி கையில் குழந்தை... எனவே ரகுபதியே எழுந்து போய் கையெழுத்து போட்டு வாங்கினான்.

அந்த கொரியர் பாயிடம் ஒரு புன்னகை.

"என்ன சார் உங்க வீட்ல இருப்பாங்களே ஒரு அம்மா... அவங்க இப்ப வேலைல இல்லையா?" என்று கேட்டான்.

நீ யாரைப்பா சொல்றே?

அதான் எப்பவும் நம்ம பாப்பாவோட இருப்பாங்களே?

"சாமுண்டியா?"

"பேரெல்லாம் தெரியாது. அவங்கள நான் கடைத்தெருவுல பார்த்தேன். திக்கு திசை தெரியாம போய்கிட்டிருந்தாங்க. அதான் கேட்டேன்."

கொரியர் பாயின் பதில் ரகுபதியின் நெஞ்சில் திம்மென்று குத்தியது!

## 19

கொரியர் பாய் கவரைக் கொடுத்து விட்டு போய் விட்டான். ஆனால் அவன்பேசியது ரகுபதி மனதில் சுழன்று அடித்தது. திரும்பிவரும் போதே முகத்தில் மாறுதல்கள். அப்படியே குழந்தையை தோளில் போட்டு அதன் அழுகையை கட்டுப்படுத்தப் பார்க்கும் ஜானகி எதிரில்தான் போய் நின்றான். அவளுக்கு கொரியர் பாய் பேசிவிட்டு போனது தெரியாது. ஆனாலும் ரகுபதியின் முகம் அவளுக்குள் நெருடியது.

"என்னங்க... எதான தப்பான விஷயமா. கவரை பிரிச்சு கூட பாக்காம ஒரு மாதிரியாகிட்டீங்க?"

"கவருக்குள்ள இருக்கறது பிரிச்சு பார்த்தா தெரிஞ்சு போயிடும் ஜானகி. ஆனா பல வருஷமா உன் கூடவே குடும்பம் நடத்தியும் உன்னைத்தான் எனக்கும் இன்னமும் சரியா புரிஞ்சுக்கவோ தெரிஞ்சுக்கவோ முடியல."



"என்னங்க என்னென்னமோ பேசறீங்க.. நான் அப்படி என்ன உங்களுக்கு புரியாத அளவு அன்னியமாயிட்டேன்."

"அதைவிடு.. உண்மையை சொல். சாமுண்டி எங்கே?"

ரகுபதி நெத்துக்குத்தாக விஷயத்துக்கு வந்து விட்டான். ஜானகியும் தலையை தாழ்த்திக் கொண்டு ஸ்தம்பித்தாள்.

"அப்ப மொட்டை மாடில இருக்கான்னு பொய் சொல்லியிருக்கே?"

"............"

"உன்னால பதில் சொல்ல முடியல இல்ல... உனக்குள்ள கூட அழுக்கும் இருட்டும் இருக்கே ஜானகி. என்னால இதை ஜீரணிக்க முடியல. நமக்கு ஏன் குழந்தை பிறக்கலைன்னு நான் பல சந்தர்ப்பங்கள்ள ஆழமா யோசிச்சு பார்த்ததுண்டு. அப்பல்லாம் என்னத்தான் நான் ஒரு பாவியா உணர்ந்திருக்கேன். என் ஜானகி பூவை போல புனிதமானவ - அவளுக்கு ஏன் இந்த தண்டனைன்னு கடவுள்கிட்ட கேட்டுருக்கேன். ஆனா அது தப்பு. நீ இவ்வளவு நாளா என்கிட்ட நல்லவ போல நடிச்சிருக்கே. உன் மனசுல சுயநலம், பயம், பொறாமை இதெல்லாம்தான் இருந்துருக்கு. அதான் ஒரு மன நலமில்லாதவ மேல கூட உன்னை கருணையோட நடந்துக்க விடலை."

அவன் பேச்சு ஜானகியை ஊசியாய் குத்தியது.

"இல்ல... நீங்க நினைக்கற அளவுக்கு நான் மோசமானவ இல்லை. ஆனா சாமுண்டி விஷயத்துல நான் தப்பு பண்ணியது வாஸ்தவம் தான். அதுக்கு காரணம் இருக்குங்க."

"என்ன காரணம்னு எனக்கு தெரியும். அபூர்வமா கிடைச்ச இந்த குழந்தைக்கு நீ மட்டுமே அம்மாவா இருக்க விரும்பறே. ஆனா அவன் தன் பாலையே தர்றதால குழந்தைக்கு பாசம் அவ மேல ஏற்பட்டுட்டா என்ன பண்றதுன்னு பயப்பட்டே. ஒரு குழந்தை வந்தா குழப்பம் தீரும். நிம்மதி உருவாகும்னு நான் நினைச்சேன். ஆனால் எல்லாமே தலை கீழா மாறிப்போச்சு. போகட்டும்... சாமுண்டியை என்ன செய்தே?"

"நான் எதுவும் செய்யல. கண்ணம்மா தாங்க வெளிய கூட்டிகிட்டுப் போனா?"

"அப்ப இதுக்கு பின்னால ஒரு சதிச் செயலே இருக்குன்னு சொல்லு.."

"..........."

"பேசு ஜானகி. சாமுண்டி நமக்கு இன்னொரு குழந்தை. ஜெலட்சுமியம்மா நம்பி ஒப்படைச்ச குழந்தை. அவளைத் தொலைக்க நமக்கு உரிமை இல்லை. அப்புறம் எந்த முகத்தோட அம்மாவை பாக்க முடியும். கொஞ்சமாவது யோசிச்சுப் பாத்தியா?"

"..........." ஜானகியால் பேச முடியவில்லை. கண்ணீர் பீறிட்டு வழிந்தது. குழந்தையும் அழ ஆரம்பித்தது.

"சரி... உன் கவனம் இந்த குழந்தை மேல இருக்கட்டும். கண்ணம்மாவை பார்த்து என்ன நடந்துதுன்னு கேக்க



றேன்.. சாமுண்டியை சேலம் கடை தெருவுல பாத்ததா கொரியர் பாய் சொல்றான். அப்ப கண்ணம்மா அவளை நடுத் தெருவுல விட்டுட்டு போயிருக்கணும். இப்பவே சாமுண்டியை தேடிப் போறேன். சாமுண்டி மட்டும் கிடைக்கல அந்த கண்ணம்மாதான் பதில் சொல்லணும் அவ உன்னைச் சொன்னா நீயும் பதில் சொல்லணும்..."

கைய உயர்த்தி பலத்த எச்சரிக்கை தொனியோடு பேசிய ரகுபதி தொடர்ந்து சாப்பிடக் கூட விரும்பாமல் அப்படியே அதே வேகத்தில் சாமுண்டியை தேடிக் கொண்டு புறப்பட்டான்.

ராஜசேகரின் பங்களா! வெளியே ஆட்டோவில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தார் காளியப்ப கவுண்டர். கையில் இருந்த குடையை அக்குளில் வைத்து அழுந்த பிடித்துக் கொண்டு வேட்டியை ஒரு முறை இறுகக் கட்டிக் கொண்டே நடந்தார். போர்டிகோவில் கார் இருந்தது. அது இருந்தால் ராஜசேகரன் இருக்கிறார் என்று பொருள்.

கவுண்டரை பார்க்கவும் வேலைகாரர்கள் நெளிந்தார்கள்.

"ஐயா இருக்காருல்ல?" கேட்கும்போதே ராஜசேகரே எதிரில் வந்தார்.

"யாரு?"

"நான் காளியப்பனுங்க. செம்மநத்தம் பஞ்சாயத்து பிரசிடெண்ட்.."

"சென்ராயனோட அப்பான்னு சொல்லலாமே..?" ராஜசேகர் மடக்கிக் கேட்டார். அவர் அப்படி கேட்டது

கவுண்டருக்கு கூச்சமாகி விட்டது. பெருமூச்சு விட்ட...

"என்ன பேச்சைக் காணோம். வாங்க உள்ற?" கேள்வி... கேட்டு உள்ளேயும் அழைத்தார்.

கவுண்டரும் பின் தொடர்ந்தார்.

அது கருங்கல் கொண்டு கட்டப்பட்ட பங்களா...

எப்போதும் மலையக பங்களாக்களில் மரங்களி... பங்கு அதிகம் இருக்கும். அவைகளுக்குத்தான் குளி... தாங்கும் தன்மையும் அதிகம். அதிலும் ரோஸ்வுட் மர... - வார்னீஷ் பளபளப்போடு மின்னியது. அங்கங்கே நவீ... சிற்பங்கள். வேட்டையாடப்பட்ட புலி ஒன்று பாட... செய்து அசல் புலியைப் போலவே நிறுத்தப்பட்டிருந்த... ஆனால் அதை எல்லாம் ரசிக்கும் மனநிலைதா... கவுண்டரிடம் சுத்தமாய் இல்லை.

"உக்காருங்க." என்றவுடன் உட்கார்ந்தார்.

முகத்தில் எப்படி ஆரம்பிப்பது என்பதற்கா... தயக்கங்கள்.

"சொல்லுங்க.. என் மகனைப் பத்தி தவிர வே... எதை பத்தி வேணா நீங்க பேசலாம்." ராஜசேகரின் ஆரம்பமே திண்டுக்கல் பூட்டாக இருந்தது. அது அந்த... நிலையிலும் சிரிப்பை வரவழைத்து விட்டது.

"என்ன சிரிக்கிறிங்க?"

"உங்க கோபத்தை நீங்க வெளிக்காட்டிட்டீங்க ஆனா என்னால முடியல... அதை நினைச்சேன் சிரிச் சேன்." "நான் கோபமாகவே பேசலை. ஆனா தீர்மானமா பேசியிருக்கேன். ஏன்னா நான் இப்ப அந்த அளவு



...ஏமாந்து மனசு நொந்து போய் இருக்கேன். ஏண்டா நாலு காசு சம்பாதிச்சு தோட்டம் எஸ்டேட்டுன்னு இருக் கோம். ஒரு நடுத்தட்டு குடும்பத்தவனாகவே இருந்துருக்க கூடாதான்னு தோணுது."

"நான்லாம் நடுத்தட்டுதான். என் மகன் மட்டும் என்னத்த வாழ்ந்துட்டான். ஜாடிக்கேத்த மூடி மாதிரி உங்க மகனோட சேர்ந்து தப்பு பண்ணிட்டு இப்ப கொலை பழியோட சேலம் போலீசால கைது செய்யப் பட்டிருக்கான்."

"ஆஹா... நல்ல விஷயம்! அப்படியே என் மகனை யும் தூக்கி உள்ளப் போட்டு இரண்டு பேரையும் களி தின்ன வையுங்க. வாழ்க்கைன்னா என்னன்னு புரியட்டும்."

சொன்னாலும் சொல்லாட்டியும் அதுதான் நடக்கப் போகுது. உங்க மகனை தேடி ஏற்காட்டுக்குள்ள சேலம் போலீஸ் வந்தாச்சு. நான் இங்க வந்தது இன்னொரு முக்கியமான விஷயம் பேச..."

"என்ன?"

"நீங்க விரும்பியோ விரும்பாமலோ தாத்தா ஆயீட் டீங்கன்னா உங்களுக்கு வருத்தமா இருக்குமா?"

கவுண்டர் கேட்டவிதம் ராஜசேகரனை கூர்மை யாக்கியது.

"ஆமாங்க. உங்க அருமை மகன் ஒரு ஏழைப் பொண்ணை கெடுத்து குட்டிச் சுவராக்கி அவ கைல ஒரு குழந்தையையும் கொடுத்துட்டான். அவளும் குழந்தை

யோட வந்து நாயம் கேட்டுறுக்கறா. உங்க மகன்
யார்னே தெரியாதுன்னு சொல்லிட்டான் போல. அந்த
பொண்ணு தான் பெத்த புள்ளையை எங்க ஊர் சாமி
யம்மாவான கெஜலட்சுமியம்மா இருக்கற கன்னிமார்
கோவில்கிட்ட விட்டுட்டு விலகிப் போய் கிணத்துல
குதிச்சு தற்கொலை பண்ணிக்கப் பாத்துருக்கா. அவ
நல்ல நேரமோ கெட்ட நேரமோ காப்பாத்தப்பட்டுட்டா.
அந்த புண்ணியத்த செஞ்சதும் நான் தான்.

ஆனா அப்ப எனக்கு அந்த பொண்ணோட கதை
துப்புரவா தெரியாது. அதை காப்பாத்தி சாமியம்மா
கிட்ட கூட்டிப் போய்விட்டேன். அதுக்கு முந்தியே இந்த
பொண்ணு அங்க விட்ட குழந்தையை ஒரு குழந்தை
இல்லாத தம்பதிங்களுக்கு அம்மா தூக்கி கொடுத்
துட்டாங்க. ஒரு ஆச்சரியம் பாருங்க நான் கொண்டு
போய் விட்ட பொண்ணையும் அந்த தம்பதி வீட்டுக்கே
வேலைக்காக அனுப்பிட்டாங்க. இதுல குறிப்பா சொல்
வேண்டிய விஷயம் ஒண்ணும் இருக்கு. தற்கொலை
பண்ணிக்க முயற்சி செஞ்சப்ப அந்த பொண்ணுக்கு
தலைல அடிபட்டதுல சுத்தமா அதுக்கு தான் யாரு
தனக்கு என்ன நடந்ததுன்னு எல்லாமே மறந்து போச்சு.

இந்த விஷயம் பூரா என் மகனுக்கு தெரியும். அவன்
போய் உங்க மகன்கிட்ட சொல்லவும் உங்க மகன் ரொம்
பவே பயந்து போய் அந்த பொண்ணையும், குழந்தை
யையும் கொல்லவே சொல்லிட்டாரு...”

கவுண்டர் கொஞ்சம் இடைவெளி விட்டார்.
ஆனால் ராஜசேகருக்கு மலை ஒன்று தலைமேல் ஏறிக்
கொண்டது போல் இருந்தது.



“குழந்தையை கொல்ல ஒருத்தனை ஏற்பாடு பண்ணி அந்த தம்பதிகள் வீட்டுக்கும் அனுப்பி யிருக்காங்க. குங்குமப் பூவுல விஷத்தை கலந்து அதை கொடுக்கற மாதிரி கொடுத்து கொல்ற திட்டத்தோட போன அவனும் எப்படியோ போலீஸ்கிட்ட மாட்டி கிட்டான். அடுத்து மாட்ட வேண்டியது உங்க மகன் மட்டும்தான்...”.

திரும்பவும் கவுண்டர் இடைவெளி விட ராஜ சேகரிடம் படபடப்பு கூட ஆரம்பித்தது.

“அப்ப அந்த பொண்ணும், குழந்தையும் தப்பிச் சிட்டாங்க.. அப்படி தானே?”

“ஆமாங்க. உங்க மகன் என் மகன்னு எல்லாரும் விடுதலை ஆறது இப்ப உங்க கைலதாங்க இருக்குது.”

“என் கைலயா?”

“ஆமாங்க. அந்த பொண்ணு இருக்கற இடம் தெரியும். குழந்தையும் அதே வீட்லதான் இருக்குது. அது உங்க ரத்தம். நீங்க பெரிய மனசு பண்ணி ஏத்துகிட்டா...” என்று கவுண்டர் சொல்லும்போதே கையை உயர்த்தி பேச்சை நிறுத்தச் சொன்ன ராஜசேகர் “அந்த பொண்ணையும், குழந்தையையும் நான் பாக்கணும் உங்களுக்கு வீடு தெரியுமா?”

“அது ஒண்ணும் விஷயமில்லீங்க. தெரிஞ்சுக்க லாங்க” என்றார் கவுண்டர். அப்போது ஓடி வந்த ஒரு வேலைகாரன் “அய்யா நம்ம தம்பி கால் மேல லாரி ஏறிடுச்சுங்களாம். ஆஸ்பத்திரிக்கு தூக்கிட்டு போயிருக் காங்களாம்...” என்றான்.

“அடக் கொடுமையே.. வெண்ணை திரளும்போது தாழி உடைஞ்சிடும்போல இருக்கே.” கவுண்டர் அதிர்ந்தார்.

## 20

கவுண்டர் தான் அதிர்ந்தார்...

ராஜசேகரிடம் பெரிதாய் அதிர்ச்சியில்லை... மாறாக முகத்தில் எண்ண ஓட்டம்.

‘கால் போய்விட்டது. ஆஸ்பத்திரியில் கிடக்கிறான் பிள்ளை’ என்று காதில் செய்தி விழுந்ததும் எப்படி இவரால் பதட்டப்படாமல் இருக்க முடிகிறது என்கிற ஆச்சரியம் கவுண்டருக்கு ஏற்பட்டது. சில வினாடிகளுக்கு பிறகு கவுண்டரை ஏறிட்டவர் “இப்ப அந்த பொண்ணும் குழந்தையும் இருக்கற இடம் உங்களுக்கு தெரியுமா?” என்று கேட்டார்.

“அத தெரிஞ்சிக்கலாங்க... போலீஸ்காரங்களுக்கு தெரியும்...”

“அப்ப புறப்படுவோம். முதல்ல அந்த பொண்ணைப் பார்ப்போம்...”

“ஐயா தப்பா எடுத்துக்க கூடாது... உங்க மகன் இப்ப ஆஸ்பத்திரியில...”

“தெருவுல கிடந்தவன் கால் போய் ஆஸ்பத்திரில இருக்கான். நல்லதுதானே நடந்துருக்கு. இனி எங்கயும் எழுந்திரிச்சி ஓட முடியாதுல்ல...?”

“ஐயா..”



“என்ன ஐயா... காலுன்னு ஒண்ணு இல்லேன்னா மனுஷன் குட்டைத் தண்ணி மாதிரி தேங்கிப் போயிருவான். அது இருக்கவும் தான் நடக்க முடியுது. நடக்க முடியறதால தான் ஓட முடியுது, ஆட முடியுது, ஏற முடியுது, இறங்க முடியுது... உடம்பு உறுப்புகள்ளயே கால்தான் மனுஷனுக்கு ரொம்ப முக்கியம்... அதனால தான் கும்பிடணும்ங்கறபோது கால்ல விழறோம். மனுஷன் காலுக்கே இவ்வளவு மரியாதைன்னா தெய்வத்தோட கால்களுக்கு எவ்வளவு சக்தி இருக்கும்?”

- ராஜசேகர் எதற்காக இப்படி கால் புராணம் படிக்கிறார் என்று புரியாமல் விழித்தார் கவுண்டர்.

“என்னடா... கால் கால்னு இந்த மனுஷன் காள் காள்னு கத்தறானேன்னு பார்க்கறீங்களா?

இவ்வளவு நல்ல கால் தான் சிலர் வரைல அவங்க நாசமா போகவும் காரணமா இருக்கு. வேசி வீட்டுக்கும், சாராயக் கடைக்கும் போனதும் இதே கால்கள் தானே?”

“ஐயா என்ன சொல்றீங்க?”

“அது போனது நல்லதுங்கறேன். என்னால முடியாததை அந்த லாரிக்காரன் செய்துட்டான். வாகனங்கள் ஓட்ற ரோட்டுல பிரக்ஞை இல்லாம விழுந்து கிடந்தது எவ்வளவு குற்றம்?”

“சரிங்க... முதல்ல ஆஸ்பத்திரிக்கு போய் தம்பியை பார்த்துட்டு..”

“தப்பு தப்பு... அவன் எங்க போயிடப் போறான். இப்பகூட திருந்தியிருக்கானோ இல்லை ஆஸ்பத்திரியில இருக்கறவங்ககிட்ட சாராயம் வாங்கிக் கொடுக்க சொல்லியிருக்கானோ யார் கண்டா?

எப்ப ஒரு பெண்ணை கெடுத்து ஒரு குழந்தையை யும் கொடுத்துட்டு அவளை கொல்லவும் திட்டம் போட்டானோ அப்பவே அவன் கொலைகாரனும் ஆயிட்டான். அந்த காலத்துல கொலை செய்தவங் களுக்கு கை கால்களை வெட்றதுங்கற நடைமுறை இருந் தது. இப்ப அந்த தண்டனை இவனுக்கு வேற வடிவத்துல கிடைச்சிருக்கு.

அவனை விடுங்க... எனக்கு இப்ப அவன் கணக்கே இல்லை. அவனால ஒரு பெண் பாதிக்கப்பட்டுருக்கா பாருங்க.. அதான் கணக்கு... வாங்க முதல்ல அந்த பெண்ணைப் போய் பார்ப்போம். அவளுக்கு முதல்ல ஒரு நியாயம் கிடைக்க வழி செய்வோம்." என்றவரை பிரமிப்போடு பார்த்தார் கவுண்டர்!

ஒசலம் நகருக்குள் ரகுபதியின் கார் கடைத் தெருவில் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. தேர் முட்டி அருகில் காரை பார்க் செய்துவிட்டு இறங்கி நடந்தபடி தேடத் தொடங்கினான்.

மிக மோசமான நெரிசலான பகுதி! சாரிசாரியாக மக்கள்... இதில் சாமுண்டியை எங்கே என்று தேடுவது! மனதில் அலை பாய்ச்சல்... இருந்தும் அவளை கண்டு பிடித்தே தீர வேண்டும் என்கிற வெறியுடன் கண்ணில் படுகிறவர்களை எல்லாம் வெறித்தபடி நடந்தான். அப்படியே மணிக்கூண்டுப் பகுதிக்கு வந்து போய் மைதானம் பக்கமும் செல்லத் தொடங்கினான்.

போஸ் மைதானம் போக்கிடமற்றவர்கள் முடங்கும் இடம். அரைகுறை ஜோதிடர்களில் இருந்து கடலை



வறுக்கும் அலிகள் வரை போஸ் மைதானத்தில் அடக்கம். அரசியல்வாதிகள் கூட்டம் போட ஏற்ற இடம். பொருட்காட்சியும் அங்கு தான் நடக்கும்.

அப்படிப்பட்ட இடத்தில் யார் யாரோ கண்ணில் பட்டார்கள். ஆனால் சாமுண்டி படவில்லை. அவள் கிடைக்காமல் செல்லச் செல்ல கோபம் கூடிக் கொண்டே போனது. அது கண்ணம்மாவிடம் போய் நின்றது. அவளுக்கு தான் எத்தனை கல் மனது?

கேள்வியும் களைப்புமாக ரகுபதி ஒரு இடத்தில் நின்றுவிட்டான். அப்போது காரில் அவனை உரசியபடி கடந்த எஞ்ஜினியர் ஒருவர் ஆச்சரியமாக ரகுபதியைப் பார்த்தார். காரை ஓரம்கட்டி விட்டு ரகுபதி என்று அழைத்தார். ரகுபதிக்கும் அப்போது தான் தானும் ஒரு நாடோடி போல தெருவில் நிற்பது உரைக்கத் தொடங்கியது.

"ரகுபதி... என்ன இது...? உங்க கார் எங்கே?"

"கார்... கார் பிரேக் டவுன் ஆயிடிச்சு சார்" என்று வாய்க்கு வந்த விதத்தில் சமாளிக்க முனைந்தார்.

"கார் பிரேக் டவுன் ஆனா போன் பண்ண வேண்டியது தானே. நீங்க எதுக்காக வியர்த்து வடிய இங்க சுத்தறீங்க. இது மோசமான இடம்னு தெரியாதா உங்களுக்கு!"

"தெ.. தெரியும்... யாராவது மெக்கானிக் கண்ணுல படமாட்டாங்களான்னுதான் வந்தேன். நீங்க போங்க சாந்தி தியேட்டர்கிட்ட எனக்கு தெரிஞ்ச மெக்கானிக் இருக்கான் நான் பார்த்துக்கறேன்" என்று திரும்பி நடக்க

ஆரம்பித்தான். கேள்வி கேட்ட நபருக்கு ஆச்சரியத்தோடு அதிர்ச்சியும் கலந்து 'சம்திங் ராங்' என்று மட்டும் மனதுக்குள் சொல்லிக் கொண்டார்!

ரகுபதி பங்களா!

ராஜசேகரின் கார் உள் நுழைந்து நின்றது. ஒரு போலீஸ்காரர் சகிதம் இறங்கினார். ராஜசேகர் கூடவே கவுண்டர். பங்களாவை பார்த்த உடனேயே ராஜசேகரிடம் ஒரு மலர்ச்சி.

"ஓ நம்ம ரகுபதி சார்தானா?

"உங்களுக்கு முன்பே தெரியுமா?"

"ஏற்காட்டுல என் பங்களா ஒண்ணுக்கு டிசைனர் எஞ்ஜினியர் எல்லாமே சார்தான்."

"அப்படிங்களா?"

"வெரி வெரி நைஸ்மேன். ஜென்டில்மேனும் கூட முப்பத்தாறு லட்ச ரூபாய்க்கு பட்ஜெட் போட்டு முப்பத்திமூணு லட்சத்துல பங்களாவை முடிச்சி மூணு லட்சத்தை திருப்பித் தந்தவர். எந்த எஞ்ஜினியர் தருவார். சொல்லுங்க பார்ப்போம்."

கேட்டபடி உள்ளே நுழைய ஹாலில் அழுத முகமும் குழந்தையை அணைத்த கையுமாய் இருந்த ஜானகி அவர் வரவும் நிமிர்ந்தாள்.

போலீஸ்காரர் பேசத் தொடங்கினார்.

"ரகுபதி சார் இல்லீங்களா?"

"வெளியே போயிருக்கார்..."



"உங்க கைல இருக்கற குழந்தைதானே ஏற்காடு மலைல உங்களுக்கு கிடைச்ச குழந்தை."

"அ.. ஆமாம் எதுக்கு கேக்கறீங்க!"

"இந்த குழந்தை யாருது. இதுக்கு தாய் யாருங்கற விபரமெல்லாம் தெரிஞ்சிடிச்சு. ஆமா இங்க உங்க வீட்ல தானே இந்த குழந்தையோட தாயான சாமுண்டிங்கறவங்களும் வேலை பார்க்கறாங்க."

"என்னது சாமுண்டி இந்த குழந்தைக்கு தாயா?" - ஜானகிக்கு கேட்கும்போதே நெஞ்சை அடைத்தது.

"ஆமாம்மா... அதான் நிஜம். இவர் பேர் ராஜசேகர். வாஸ்தவத்துல இப்ப இந்த குழந்தையோட தாத்தா இவர் தான்." என்று கவுண்டரும் விளக்கமாக கூறும்போதே ஜானகிக்கு மயக்கம் வந்துவிட்டது. குழந்தையோடு விழப் பார்த்தவளை ராஜசேகர் தாங்கிப்பிடிக்க குழந்தை கவுண்டர் கைக்கு வந்தது.

"அத இப்படி கொடுங்க... இந்தம்மாவை முதல்ல படுக்க வையுங்க.." என்ற ராஜசேகர் குழந்தையை வாங்கின கையோடு முதலில் பார்த்தது அந்த மச்சத்தை தான்! சுரேஷுக்கு அந்த மச்சம் எங்க இருக்குமோ அங்கேயே இருந்து! குழந்தையை அப்படியே அள்ளி அணைத்து முத்தமிடச் செய்தது அந்த மச்சம்.

"கவுண்டரே... இவன் என் பேரன் தான். இவன் என் பேரனே தான்..." என்று விம்மலோடு மிகவே உணர்ச்சி வயப்பட்டார்.

நல்ல வேளை ஜானகி மயக்கத்தில் இருந்தாள். பிரக்ஞையோடு இருந்திருந்தால் நொறுங்கிப் போயிருப்

பாள். அப்போது சாமுண்டியை தேடிப்போன ரகுபதியும் வந்து விட்டிருந்தான். அவனைப் பார்க்கும்போதே அலைந்து விட்டு வரும் களைப்பு தெளிவாகத் தெரிந்தது. ராஜசேகரையும் கவுண்டரையும் பார்க்கவும் அவனிடம் மெல்லிய ஆச்சரியம். அவர் கையில் குழந்தை இருக்க ஜானகி மயங்கிக் கிடப்பது அடுத்த கட்ட ஆச்சரியம்.

"சார் என்னாச்சு ஜானகிக்கு..?"

"மயங்கிட்டாங்க ரகுபதி.. என்னை நீங்க இப்ப எதிர்பார்க்கல இல்ல.."

"ஆமாம் சார்... என்ன நடந்தது?"

"இந்த குழந்தை யாரோ இல்ல ரகுபதி - என் பேரன். பேரன்கற அந்த உண்மையை சொன்ன உடனேயே உங்க மனைவி மயங்கி விழுந்துட்டாங்க."

அவர் பதிலை சொல்வது போல அவனையும் அதிர விட்டார்.

"சார் இந்த குழந்தை..."

"என் பேரனேதான். இன்னிக்குத்தான் இதோ கவுண்டரால தான் உண்மை தெரிய வந்தது."

"சார்..."

"அதிர்ச்சியாதான் இருக்கும் - இதை நீங்க உங்க பிள்ளையாகவே நினைச்சுட்டீங்களோ?

"ஆ... ஆமாம் சார்..."

"இப்ப கூட நீங்க அப்படியே நினைக்கலாம். அதுல எனக்கு ஆட்சேபணை இல்லை. என் மகனோட தப்பு



தான் ரகுபதி எல்லாத்துக்கும் காரணம். தாய் யாருன்னு தெரிஞ்சா இன்னும் ஆச்சரியப்படுவீங்க."

"யார் சார்?"

"இங்க உங்க வீட்ல வேலை செய்த சாமுண்டி தான்."

"சாமுண்டியா?"

ரகுபதியும் கேள்வியோடு ஜானகிக்கு அருகில் அமர்ந்துவிட்டான்.

"சாமுண்டி எங்க ரகுபதி?"

"சாமுண்டி... சாமுண்டி..."

"என்ன யோசிக்கறீங்க. உங்களுக்கு எந்த பாதிப்பும் வராது ரகுபதி. இந்த குழந்தையை நீங்களே வளர்க்கலாம். சாமுண்டியும் அவ விரும்பினா இங்கயே இருக்கலாம். ஆனா இவங்க அனாதையோ ஆதரவற்றவர்களோ கிடையாது. இவங்களுக்கு ராஜசேகர்ங்கற கோடீஸ்வரன் இருக்கான். அதை மட்டும் ஒத்துக்கணும் - ஏத்துக்கணும்."

"சார் நீங்க பேசறது சொல்றது எல்லாமே புதிரா இருக்கு. நீங்க எந்த அடிப்படைல சொல்றீங்க. சாமுண்டி, குழந்தையோட உங்களுக்கு எப்படி தெரியும்?"

"இதோ போலீஸ்காரர் சொல்வார்."

- ராஜசேகர் போலீஸ்காரரை கை காட்ட அவரும் சொல்லத் தொடங்கினார்.

அது ஒரு மோசமான குடியிருப்புப் பகுதி. பலப்பல வருடங்களுக்கு முந்தைய குடிசை மாற்று வாரிய அடுக்கு மாடிப் பகுதி. அதில் ஒரு அறைக்குள் மயக்க நிலையில் இருந்தாள் சாமுண்டி. அருகிலேயே ரவுடிகளைப் போல சிலர் அமர்ந்து சீட்டாடியபடி இருந்தனர். அவர்கள் சாமுண்டிக்கு போட்ட போதை ஊசி ஸ்ட்ரிப்புகள் அருகில் கிடந்தன.

## 21

அருண்டு கிடந்த சாமுண்டியை மயக்க மருந்து நன்றாகவே ஆக்ரமித்திருந்தது. அவளுக்கு சற்று தள்ளி அந்த ரவுடிகள் தங்கள் சீட்டுக் கச்சேரியை தொடங்கி விட்டிருந்தனர். அவ்வப்போது அவர்களில் ஒருவன் சாமுண்டியை பார்த்தபடியே இருந்தான். அதை இன்னொருவனும் கவனித்தான்.

“என்னடா... எப்ப எழுந்திரிப்பான்னு பாக்கறியா?”

“ஆமா... ஆள் சும்மா தளதளன்னு இருக்கால்ல?”

“அமுக்கிகிட்டு ஆட்டத்த கவனி... அது மறை கழண்ட கேசு...”

“இருந்துட்டு போகட்டும் - கோழி குருடா இருந்தா என்னடா... கொழம்பு ருசிக்காம போயிடுமா?”

“அதென்னவோ எனக்குத் தெரியாது. ஒரு ஊசிக்கு இரண்டா போட்டுருக்குது. பஸ் ஸ்டாண்ட் பக்கம் சுத்திக்கிட்டு இருந்துருக்கு. பிச்சைக்காரன் வெள்ளையன் பாத்துட்டு தட்டிகிட்டு வந்து பவானிகிட்ட விட்டுட்டு அவ கொடுத்த பிச்சை காசை வாங்கிட்டு போயிருக்



கான். பவானி இதை நம்பள பாத்துக்க சொல்லி விட்டுட்டு போயிருக்கா. அனேகமா இன்னிக்கு ராத்திரியே பம்பாய்க்கு பார்சல் ஆயிடுவான்னு நினைக்கறேன்.”

“ஓ... இது அங்க போய் மாட்டப் போவுதா?”

“இது தலைல அப்படி எழுதியிருந்தா நாம என்னடா பண்ண முடியும்?”

சீட்டாடியபடியே தங்களுக்குள் பேசிக் கொண்டனர். புகை மண்டலமான சூழலில் அவ்வப்போது கொஞ்சம் என்று குடிக்கவும் செய்தனர். ஒரே பிராந்தி பாட்டில்...! நான்கு பேர் கைகளிலும் சுற்றி வந்தது.

ஒருவனுக்கு போதை உச்சிக்கு ஏறிவிட்டது. ‘டேய்... இவளை இப்படி மயக்கத்துல வெச்சே நான் அனுபவிச்சிட்றேண்டா... இன்னிக்கு இவளுக்கு நான் தான் மாப்ள” என்று பாதி சீட்டாட்டத்தில் எழுந்திருக்கத் தொடங்கினான்.

“வேண்டாண்டா.. பார்ட்டி புதுசுன்னு! சொல்லி பவானி லோக்கல்ல ரேட் பேசிகிட்டிருப்பா. நீ தொட்டு வெச்சது தெரிஞ்சா கொந்தளிச்சிடுவா...”

“இதுல என்னடா புதுசு பழசு.. பவானியோட பார்ட்டியும் தண்ணிய போட்டுட்டு தான் தொடப் போறான். என்னத்தன்னு கண்டு பிடிப்பான் விட்றா...”

என்றவாறே சாமுண்டி அருகில் சென்றான். காமம் கண்களில் வழிய அவளை குனிந்து பார்த்தான். அப்படியே அருகில் அமர்ந்து அவளது ஆடையில் கையை வைக்க முனைந்தபோது “எட்றா கையை... பரதேசிநாயி.” என்று ஒரு காட்டமான குரல் கேட்டது. அதிர்ந்து போய் திரும்பினான்.

பவானி என்கிற முரட்டுப் பெண்மணி தான் வந்தபடி இருந்தாள். அவளைப் பார்க்கவும் அவனும் ஆடிப்போனான்.

"ஏண்டா.. இதான் நீ பாத்துக்கற லட்சணமா?". பவானி சகரவுடி ஒருவனை பார்த்துக் கேட்டாள்.

"இல்லிக்கா.. நான் கூட வேண்டாண்டான்னு சொன்னேங்க்கா.."

"என்ன சொன்னே.. இது கைபடாத சரக்குன்னு தெரியும்தானே? இப்ப தாண்ட இவளுக்காக அம்பதாயிரம் ரேட் பேசி துட்டும் வாங்கிட்டு வர்றேன்."

"அம்பதாயிரமா..! என்னக்கா விலைவாசில்லாம் ஏறுன மாதிரியே கட்டைங்க ரேட்டையும் ஏத்திட்டியா நீ..?"

"பின்ன... சுடுகாட்டுல பொணத்துக்கு சர்ட்டிபிகேட் தர்றதுக்கே ஆயிரம் கொடுக்கறாங்க. அரசியல்வாதிங்களும் லஞ்சத்தை இப்ப லட்சங்கள்ள பண்றதில்லடா.. எல்லாமே கோடிலதான்... நாம மட்டும் ஏண்டா கீழயே இருக்கணும்? என் வரைல ஃப்ரெஷ்ஷின்னா அம்பதாயிரம். ரெண்டாவது ரகம் நாற்பது.. மூணாவது முப்பது.."

"ஃப்ரெஷ்ஷை பார்ட்டி கண்டு பிடிச்சிடுவாங்க. ரெண்டு, மூணு இத்த எல்லாம் எப்படிக்கா நம்புவாங்க."

"பத்து பேர் கைமேல பட்றவரை வெக்கம்னு ஒண்ணு இருக்கும்பாரு. அதை வெச்சுத்தான்..."

"ஓ.. அப்படி ஒண்ணு இருக்குல்ல.. பெரிய ஆளுக்கா நீ.. ஆமா இதை பம்பாய்க்கு அனுப்பப் போறதில்லையா நீ.."



"ஒரு மாசம் இங்க இருந்து எனக்கு சம்பாரிச்சுக் கொடுக்கட்டும். அப்புறமா பம்பாயா, கல்கத்தாவான்னு பாப்போம்.."

அவர்கள் சாமுண்டியை ஒரு உயிர்ப் பிண்டமாக கருதி விலை போட்டுக் கொண்டிருந்தனர்!

போலீஸ் ஸ்டேஷனில் கம்ப்ளைண்ட் எழுதிக் கொடுத்தபடி இருந்தான் ரகுபதி. ராஜசேகரும் கூடவே கவுண்டரும் இருந்தனர்.

"சாமுண்டியோட போட்டோ இருக்கா?" - என்று கேட்டபோது முதலில் இல்லை என்ற ரகுபதி, பின்னர் குழந்தையின் பெயர் சூட்டு விழா பார்ட்டியில் வீடியோ எடுத்தது ஞாபகத்துக்கு வரவும் "வீடியோ படத்துல நிச்சயமா சாமுண்டி எங்கையாவது இருப்பா. அதை வெச்சு பிரிண்ட் போட்டு கொடுத்திட்றேன்..." என்றான்.

"சார் கொஞ்சம் மும்முரமா தேடுங்க.. மனநலம் சரியில்லாத பொண்ணு..." என்றார் கவுண்டர்.

"எங்களால ஆன எல்லாமே செய்வோம் சார். கவலைப்படாதீங்க. லோக்கல் சேனல்கள்ள போட்டோவை கொடுத்து தொடர்ந்து விளம்பரப் படுத்திகிட்டே இருந்தா நிச்சயம் இருக்கற இடம் தெரிஞ்சிடும். அதுலயும் தகுந்த சன்மானம் கொடுக்கப்படும்னா இந்த பொண்ணை பார்த்த மாத்திரத்துல கூட்டிகிட்டு ஸ்டேஷனுக்கே வந்துடுவாங்க.. ஆமா பொண்ணு எப்படி இருப்பா. நல்லா அழகா இருப்பாளா இல்லை சுமார் தானா?"

இன்ஸ்பெக்டர் கேட்டவிதம் அவர்களுக்கு சற்று அதிர்வை உண்டு பண்ணியது.

"எதுக்கு சார் கேக்கறீங்க?"

"இல்ல.. சுமாரான பொண்ணுன்னா சீக்கிரமாவே கண்டுபிடிச்சிடலாம். அழகான பொண்ணுன்னா அதுக்கு தக்குன ஆபத்தும் இருக்குது..."

"ஆபத்தா?"

"ஆமாம் சார்.. சேலம்தான் ஒரு காலத்துல விப சாரத்துல முதல் இடத்துல இருந்தது. இப்ப ரொம்பவே கண்ட்ரோல் பண்ணிட்டோம். இருந்தாலும் இப்பவும் அபலைப் பொண்ணுங்கன்னா ஸ்கெட்ச் போட்டு மடக்கி பம்பாய்க்கு கொண்டு போக ஒரு குரூப் தயாரா இருக்கு. அவங்க கண்ணுல இந்த பொண்ணு படாதவரை பிரச்சினை இல்லை.."

"ஐய்யோ சார்... பயமுறுத்தறீங்களே! அந்த பொண்ணு என் மருமக சார். ஒரு குழந்தைக்கு தாய்.."

- பதறினார் ராஜசேகர்.

"அதெல்லாம் உங்களுக்கு... காமவெறி பிடிச்ச அலையற ஜென்மங்களுக்கு நீங்க மருமகன்னு சொல்ற பொண்ணு ஒரு உருப்படி அவ்வளவுதான்."

"வேண்டாம் சார். இப்படி எல்லாம் எங்க எதிர்ல பேசாதீங்க. எப்ப செஞ்ச பாவமோ ஒரு மோசமான மகனைப் பெத்துட்டு அதோட எதிரொலியா தான் இப்ப இப்படி எல்லாம் அனுபவிச்சுகிட்டிருக்கேன். இனி ஒரு சின்ன தப்புகூட நடக்க கூடாது சார். இதுக்காக நான் எத்தனை கோடின்னாலும் செலவழிக்க தயாரா இருக்கேன்."



-ராஜசேகர் கதறி விட்டார். இன்ஸ்பெக்டராலும் அவரை ஆறுதல் படுத்த முடியவில்லை. அதன்பின் அவர்கள் மூவரும் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தனர். "சார் அதிகபட்சம் ஒரு நேரத்துல சாமுண்டி போட்டோவை மெயில் பண்ணிட்றேன். நானே போஸ்டர் போடவும் ஏற்பாடு செய்யறேன்." என்ற ரகுபதி அது தொடர்பாக அன்றைய நிகழ்வை வீடியோ எடுத்த வீடியோகிராபருக்கு தன் காரில் ஏறியபடியே போன் செய்து விஷயத்தை சொல்லி முடித்தான்.

காரும் புறப்பட்டது!

"ரகுபதி.. இப்ப எங்க போறோம்?" என்று உடைந்த குரலில் கேட்டார் ராஜசேகர்.

"சார் நாம இப்ப மலைக்குமேல இருக்கற கெஜலஷ்மியம்மாவை போய் பார்க்கலாம் சார். அவங்க தான் குழந்தையை என்கிட்ட ஒப்படைச்சாங்க. சாமுண்டியையும் அவங்கதான் ஒப்படைச்சாங்க. அவங்க பெரிய ஞானி. அவங்களால தான் சாமுண்டியையும் நம்மகிட்ட சேர்க்க முடியும்னு நான் நம்பறேன்" என்றான் ரகுபதி. ராஜசேகர் அதை கேட்டு மௌனம் சாதித்தார். ஆனால் கவுண்டர் உற்சாகமானார்.

"தம்பி சொல்றதுதான் சார் சரி... அம்மா ஒரு தெய்வப் பிறப்பு. இக்கட்டான இந்த நேரத்துல அவங்களாலதான் நமக்கு வழி காட்ட முடியும்" என்றார்.

"சரி உங்க இஷ்டப்படியே செய்யுங்க" என்றார் ராஜசேகர்.

"சார்.."

"என்ன கவுண்டரே..."

"அப்படியே உங்க பிள்ளையையும்.."
- இழுத்தார்.

"எதுக்கு கவுண்டரே அவனை நான் பார்க்கணும்? பார்த்தீங்கல்ல... அவனாலதானே நாம இப்ப இப்படி அல்லாடறோம்."

"வாஸ்தவம் தான்..! இருந்தாலும் இந்த பொண்ணையும், புள்ளையையும் யோசிக்காம எத்து கிட்ட நீங்க, பையன் விஷயத்துல யோசிக்கறது நல்லா இல்லைங்க. கால் போய் ஆஸ்பத்திரில கிடக்கற புள்ளைக்கும் நாமல்லாம் போய் பார்த்தா தானேங்க ஒரு ஆறுதல்?"

கவுண்டர் அப்படிக் கேட்கும்போதுதான் ரகுபதிக்கும் ராஜசேகரின் மகன் சுரேஷ் ஆக்சிடென்டாகி ஆஸ்பத்திரியில் கிடப்பது தெரிய வந்தது.

"சார் உங்க மகனைக்கூட பார்க்காமலா நீங்க எங்க வீட்டுக்கு வந்தீங்க?" என்ற ஆச்சரியம் குறையாமல் கேட்டான்.

"அவனை பாக்க என்ன இருக்கு ரகுபதி? பார்த்தா பி.பி.தான் அநாவசியமா ரைஸ் ஆகும். அவனால தானே இப்ப இவ்வளவு பாடு?"

"இல்ல சார்.. இது அப்படி நாம நினைக்கற தருணம் இல்லை. ஹாஸ்பிடல்ல போய் முதல்ல அவரை பாக்கறது தான் சரி."

"நோ... முதல்ல சாமுண்டி போட்டோவை ஸ்டேஷனுக்கு மெயில் பண்ற வேலைய பார்ப்போம். அப்புறமா போஸ்டர் அடிக்கற வேலை... சாமுண்டியை



கண்டுபிடிச்சு தர்றவங்களுக்கு அஞ்சு லட்சம் கூட தர நான் தயாரா இருக்கேன். போலீஸ்காரங்க எந்த அளவு சுறுசுறுப்பா தேடுவாங்கன்னு தெரியாது. இந்த விஷயத்துல பிரைவேட் டிடெக்டிவ்வையும் நாம அப்ரோச் பண்ணுவோம்."

- ராஜசேகர் பாய்ச்சல் காட்டினார்.

"சார் கெஜலஷ்மியம்மாவை..."

"இதை எல்லாம் முடிச்சிட்டு போய் பார்ப் போமே..." என்ற ராஜசேகரிடம் தென்பட்ட தீர்க்கம் ரகுபதியை ஆச்சரியப்படுத்தியது.

பங்களாவுக்குள் கார் புகுந்தபோது ஜானகியும் குழந்தையும் இல்லை. செக்யூரிட்டி ஓடி வந்து "சார் அம்மாவும் பாப்பாவும் மலைக்கு போறதா உங்ககிட்ட சொல்ல சொன்னாங்க சார்.." என்றான்.

ரகுபதிக்கு கொஞ்சம் சுறீர் என்று இருந்தது.

ஹாலுக்குள் டேபிள்மேல் கிடந்த கடிதம் மற்ற விஷயங்களை புரிய வைத்துவிட்டது.

'என்ன மன்னித்து விடுங்கள்!

இக்கட்டான இந்த வேளையில் நமக்கு வாழ்வில் சந்தோஷம் தந்த அம்மாவை பார்ப்பதுதான் எனக்கு ஒரே வழியாகத் தோன்றியது. அதனால் நான் ஏற் காட்டிற்கு கிளம்பி விட்டேன். குழந்தை பத்திரமாக என்னிடமே உள்ளது. எந்த காரணத்தை கொண்டும் குழந்தையை மட்டும் என்னால் பிரிய முடியாது. இதை அந்த பெரிய மனிதரிடம் கூறி விடுங்கள். இந்த விஷயத்

தில் அம்மாதான் எனக்கு துணை நிற்க வேண்டும். அதனால்தான் அம்மாவிடமே போகிறேன். நீங்களும் அங்கே வாருங்கள். மற்ற விஷயங்களை அம்மா பார்த்துக் கொள்வார்.

இப்படிக்கு உங்கள்

ஜானகி.

- என்று இருந்த கடிதத்தை பார்த்த ரகுபதி அதை ராஜசேகரிடம் காட்டினான். ராஜசேகரும் அதைப் படித்துவிட்டு "இதுக்கு பேர்தான் ரகுபதி தர்மசங்கடம் கறது.." என்றவராக சோபாவில் விழுந்தார்!

ஏற்காட்டுச்சாலை மேல் அந்த வாடகை கார் ஏறிக் கொண்டிருந்தது. குழந்தை கஜேந்திரனை மார்போடு இறுக்கி அணைத்தபடியே அமர்ந்திருந்தாள் ஜானகி.

காரை ஓட்டிக் கொண்டிருந்த டிரைவருக்கே அவள் குழந்தையை பக்கத்தில் சீட்டில் விடாமல் மார்போடு அணைத்துக் கொண்டிருப்பது என்னவோ போல் இருந்தது.

"மேடம்.. பாப்பாவை பக்கமா சீட்ல விடுங்களேன். சீட் காலியாதானே இருக்கு..." என்றான்.

"நீ ரோட்டை பார்த்து வண்டிய ஓட்டு... இது என் குழந்தை! நான் சுமக்கறேன்..! உனக்கென்னய்யா?" என்றாள். பதிலளித்த விதமே ஒரு மாதிரியாக இருக்கவும் அவனுக்கு கன்னத்தில் அவள் அறைந்தது போல் இருந்தது.



"என் ராஜா... என் செல்லம்..." என்று திடீரென்று குழந்தையை முத்தமிடவும் செய்தாள். அதனாலேயே பாதிக்கப்பட்டதுபோல குழந்தை அழத் தொடங்கியது.

# 22

குழந்தையிடம் அழுகை கூடிக் கொண்டே போனது! அதே வேளையில் ஜானகியால் அந்த அழுகையை நிறுத்த முடியவில்லை. இப்படியும் அப்படியும் மார்பில் போட்டு உதடுகளால் பல மாதிரி சப்தம் எழுப்பி குழந்தையின் அழுகையை தடுக்கப் பார்த்தாள்.

காரை ஓட்டிக் கொண்டிருந்த டிரைவருக்கு மிகவும் சடங்கடமாகிவிட்டது. காரை சற்று ஓரம்கட்டி நிறுத்திவிட்டு திரும்பிப் பார்த்தான். "நீ ஏன் காரை நிறுத்தினே?" என்று அவன்மேல் பாயத் தொடங்கி விட்டாள் ஜானகி.

"குழந்தை ரொம்ப அழுவுது அதான்..."

"குழந்தைன்னா அழும். இது ஒரு விஷயமா - நீ காரை எடு..."

"பசிக்குதோ என்னவோ?"

"பார்றா... பெத்த எனக்கு தெரியாதது உனக்கு தெரிஞ்சிடிச்சா?"

"இல்லம்மா நான் என்ன சொல்ல வர்றேன்னா..."

"எதையும் சொல்லாதே. காரை எடு... அழுதா நல்ல அழுகட்டும். இவனுக்கு இதே பொழப்பா போச்சு... அந்த சாமுண்டி நல்லா கெடுத்து வெச்சிருக்கா."

ஜானகி சிடுசிடுவென்று பேசினாள். அதை சகஜ மான பேச்சாக எடுத்துக் கொள்வதா இல்லை அவளே மனநலம் இல்லாமல் பேசுகிறாளா என்று அவனுக்கு சந்தேகம் வரத் தொடங்கி விட்டது. அரை மனதாக காரை எடுத்தான்!

யார் இந்த சாமுண்டி என்றும் கேட்டுக் கொண் டான்.

ஏற்காட்டு அடிவாரத்தை எட்டிப் பிடித்திருந்தது ராஜசேகரின் கார்! காருக்குள் ரகுபதியும், கவுண்டரும் கூட இருந்தனர். ரகுபதி முன் பக்கமாய் டிரைவர் சீட் டுக்கு பக்கத்தில் அமர்ந்திருந்தான். ராஜசேகர் வெளியே பார்த்தபடியே வந்தார். மகனான சுரேஷைப் போய் பார்க்க வேண்டும் என்கிற எண்ணமே இல்லாமல் அவர் இருப்பது கவுண்டர் வரையில் ஒரு உலக அதிசயமாகத் தான் இருந்தது. சில மனிதர்களிடம் மட்டும் தான் இப்படிப்பட்ட கொள்கை சார்ந்த வைராக்கியம் இருக்கும். ஆனால் இப்படிப்பட்டவர்களுக்கு எப்படி மோசமான பிள்ளைகள் பிறக்கிறார்கள் என்று தெரிய வில்லையே? கவுண்டருக்குள் அதுதான் இப்போது கேள்வியே...

ரகுபதிக்கும் ஜானகியை நினைத்து கோபம் தான். வந்திருந்தது. அவள் மிகவுமே கனிவானவள்... ரகுபதிக்கு தெரியாமல் ஒரு சிறு காரியத்தை கூட செய்ததில்லை. அப்படிப்பட்டவள் இன்று குழந்தையோடு தன்னிச்சை யாக புறப்பட்டு போயிருக்கிறாள். கடிதத்திலும் நான்



என்கிற தொனி...! எல்லாமே குழந்தை என்று ஒன்று வந்ததற்கு பிறகுதான்...

அதற்கு முன்பு வரை இருந்த ஜானகி பூப் போன்றவள் என்றால் இப்போது அவளே கல் போல கரடு முரடாக தெரிவதை எப்படி எடுத்துக் கொள்வது என்றே அவனுக்கு தெரியவில்லை. கவுண்டர் வரையில் மூவரும் மூன்று குரங்கு பொம்மை போல மனதுக்குள் கேள்விகளோடு மௌனமாக வருவது என்னவோ செய்தது. அந்த மௌனத்தை உடைப்பதுபோல பேசத் தொடங்கினார்.

"என்ஜினீயர் தம்பி கிட்ட ஒரு விஷயம் கேட்க லாமா?"

"கேளுங்கய்யா..."

"நீங்க இருக்கறதோ சேலத்துல... அம்மா இருக் கறதோ மலை கிராமத்துல! எப்படி உங்களுக்குள்ள தொடர்பு ஏற்பட்டிச்சு?"

"அது ரொம்பவே தற்செயல் அய்யா. நானும் ஜானகியும் ஏற்காட்டுக்கு பிக்னிக் மாதிரி வந்திருந்தோம். அப்ப எங்களுக்குள்ள சின்ன மனஸ்தாபம் வந்துருச்சு. அதுக்கு காரணம் எங்களுக்கு குழந்தை இல்லைங் கறதுதான். அப்பதான் என் கார் டிரைவர் அம்மா பத்தி சொல்லி கூட்டிகிட்டே போயிட்டான்..."

"அம்மாகிட்ட அப்ப குழந்தை இருந்துச்சா?"

"ஆமாம்... நாங்க போன சமயத்துலதான் யாரோ குழந்தையை அம்மாகிட்ட விட்டுட்டு போயிருக்காங்க."

"யாரோவா... சாமுண்டின்னு சொல்லுங்க."

"யெஸ்.. யெஸ்.."

"இப்ப எனக்கு எல்லாமே தெளிவா புரிஞ்சு குழந்தையோட தவிச்ச சாமுண்டி குழந்தையை அம்மா கிட்ட விட்டுட்டு எங்க ஊர் கிணத்துல விழுந்து தற்கொலை பண்ணிக்க பாத்துருக்கா. அப்பதான் நாங்க காப்பாத்தினோம். ஆனாலும் தலைல அடி பட்டதால சித்தம் கலங்கிப்போய் அவளுக்கு தன்னைப் பத்தின எந்த நினைப்பும் இல்லாமலே போயிடிச்சு. அப்படிப்பட்ட நிலைலதான் அம்மா சாமுண்டியையும் உங்ககிட்ட அனுப்பியிருக்காங்க."

"கூட்டிக்கழிச்சா அப்படித்தான் முடிவுக்கு வர வேண்டியிருக்கு. ஆனா அம்மா ஏன் இப்படி செஞ்சாங்கன்னுதான் புரியல" என்று வருத்தமான குரலில் பேசினான் ரகுபதி.

"இதுல புரிஞ்சுக்க முடியாம போக என்ன நம்ம இருக்கு. தாயும் பிள்ளையும் பாதுகாப்பா உங்க வீட்ல இருக்கட்டும்னு நினைச்சிருக்காங்க."

"இதை சொல்லியிருக்கலாமே.. குழந்தையை எங்களுக்குக்குன்னு கொடுக்கப் போய் என் மனைவியும் தான் பெத்த குழந்தையாகவே பாவிக்க தொடங்கிட்டா. இப்ப குழந்தைக்கு தாய் சாமுண்டின்னு தெரிய வரவும் அவளால அதை ஜீரணிக்க முடியல."

"ஒண்ணத் தொட்டு ஒண்ணுன்னு சம்பவங்கள் நடக்குது. அம்மா காரணமில்லாம எதையும் செய்யறவங்க இல்லை. ஆகையால உங்க வருத்தத்தை அம்மாகிட்டயே சொல்லுங்க.. என்ன சொல்றாங்கன்னு பார்ப்போம்.." என்றார் கவுண்டர். அதுவரை பேசாமல் வந்த ராஜசேகர் மெல்ல வாய் திறந்தார்.



"[illegible]..ரே"

"சொல்லுங்கய்யா.."

"அம்மா பெரிய சாமியாரிணியோ?"

"அப்படித்தாங்கய்யா.."

"அவங்களால கூடவா அந்த பொண்ணு சித்த கலக்கத்தை சரி செய்ய முடியல?"

"என்னங்கய்யா இப்படி கேட்டுட்டீங்க. எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலியே."

"சரி விடுங்க. இப்ப பார்க்க போறோமே. அந்த பொண்ணு இப்ப எங்க இருக்கன்னு சொல்லிடு வாங்களா?"

"இதுக்கும் எனக்கு என்ன பதில் சொல்றதுன்னு தெரியலீங்க."

"அப்ப எதுக்காக நாம அவங்கள பாக்க போய்ட்டு இருக்கோம்?"

ராஜசேகர் எப்போதும் வெட்டு ஒண்ணு துண்டு இரண்டு என்று பேசபவர். அந்த கேள்வி ரகுபதியை மிகவே பாதித்தது. "சார் உங்க கேள்விக்கெல்லாம் அம்மா நிச்சயம் பதில் சொல்வாங்க. நமக்கு இப்ப அம்மா மாதிரி ஒருத்தரோட வழிகாட்டுதலும் ஆசியும் ரொம்பவே முக்கியம். எல்லாத்துக்கும் மேலா என் மனைவியும் உங்க பேரனும் இப்ப அங்கதான் இருக்காங்க.." என்றான். அதன்பின் ராஜசேகர் எதுவும் பேசவில்லை.

காருக்குள் ஏசியை அணைக்கச் சொல்லிவிட்டு கண்ணாடியை இறக்கி விட்டு கொண்டார். ஏற்காடு

மலையின் ஜில்லென்ற காற்று முகத்தில் வந்து மோதத் தொடங்கியது.

ஜானகியின் கார் ஏற்காட்டின் ஏரிக்கரை யோரமாக நின்றிருந்தது. காருக்குள் குழந்தையிடம் பயங்கரமான அழுகை. டிரைவர் பால் வாங்கி வருவதற்காக போயிருந்தான்.

“ஏண்டா இப்படி அழுது அடம் பிடிக்கறே.. அம்மாவை பாருடா.. உனக்கு பால் வாங்கிட்டு வரதுக்காக டிரைவர் போயிருக்கார்... கொஞ்சம் பொறுத்துக்கோ” என்று என்னவோ அந்த குழந்தைக்கு புரியும் என்பதைபோல புலம்பிக் கொண்டிருந்தாள் ஜானகி. பால் வாங்கப் போன டிரைவரும் வந்து கொண்டிருந் தான். அவன் கையில் பால் பாட்டில் நிறைய பால்.

“எம்ப்பா லேட்டு.. குழந்தை துடிச்சு போய்ட்டான் பார்..”

“பாட்டில், ரப்பர் ஒவ்வொண்ணா வாங்கறதுக் குள்ள போதும் போதும்னு ஆயிடிச்சிம்மா...”

அவன் சொல்லும்போதே குழந்தை உதட்டில் பாட்டில் ரப்பரை செருகினாள் ஜானகி. குழந்தை யிடமும் தற்காலிகமாய் அழுகை அடங்கியது.

“கேக்கறேன்னு தப்பா எடுத்துக்காதீங்கம்மா.. உங்க பாலை கொடுக்கலாம்ல?” என்று கேட்டுவிட்டான் டிரைவர். ஜானகி அவனை வெறித்துப் பார்த்தாள்.

“என்னம்மா அப்படி பாக்கறீங்க?”

“என்னை என்ன உடம்பை பெருசா நினைக்கற கல்நெஞ்சக்காரின்னு நினைச்சுட்டியா?”



“தாய்ப்பால் கொடுக்காதவங்கள வேற எப்படிம்மா நினைக்கறது அதுலயும் இது முழுசா மூணுமாசம் கூட ஆகாத குழந்தையா இருக்குது. அதான் அப்படி கேட்டேன்.”

அவளுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது.

“அம்மா நான் தப்பா கேட்டிருந்தா மன்னிச் சிடுங்க.. மனசு கேக்காமதான் கேட்டேன்..”

“சரி சரி வண்டிய எடு..”

“ஒரு வேளை உங்க குழந்தை இல்லையோ இது...?”

அவன் அப்படி ஒரு கேள்வியை கேட்பான் என்று அவள் எதிர்பார்க்கவேயில்லை.

“வாய மூடிகிட்டு வண்டிய எடு.. இதை இன்னொரு தடவை என் குழந்தை இல்லைன்னு சொல்லாதே.. இது என் வயித்துல பிறக்காம இருந்துக்கலாம். ஆனா இது என் குழந்தைதான்.. ஞாபகம் வெச்சுக்கோ...”

அவள் சொன்ன பதிலில் அவனுக்கு புரிய வேண்டிய அவ்வளவும் புரிந்துவிட்டது.

“அப்ப அது தத்து குழந்தைங்களா. சாரிம்மா நான்தான் தெரியாம கேட்டுட்டேன்.” என்றபடி காரை எடுத்தான்.

“இப்ப நான் எந்த பக்கம்மா போகணும்?”

“செம்மநத்தம் போற ரோட்ல போ...” அவள் சொல்ல, அவனும் காரை திருப்பும்போது எதிரில்

ராஜசேகரின் காரும் வந்துவிட உள்ளே இருந்த ரகுபதி ஜானகியை பார்த்துவிட்டு கத்தினான். 'ஜானகி' என்கிற அவனது குரலைத் தொடர்ந்து ராஜசேகரின் டிரைவர் வேகமாக முன் சென்று அந்த கார் முன் வளைத்து நிறுத்தினான். ரகுபதியும இறங்கி ஜானகியை நோக்கி ஓடினான்.

அவளுக்கும் அவனைப் பார்க்கவும் ஒரு தெம்பு வந்தது.

"வந்துட்டீங்களா?"

"அதான் வந்துட்டேனே.. இப்படிதான் தனியா புறப்பட்டு வருவியா?"

"நான் இனியும் அங்க இருந்தா அந்த எஸ்டேட் காரர் வந்து குழந்தையை தூக்கிட்டு போயிடுவாரே?"

ஜானகி காருக்குள் ராஜசேகர் இருப்பது தெரியாமலே பேசினாள்.

"மெல்லப் பேசு... சார் கார்லதான் இருக்கார்!"

"ஐயோடா... அவர் இங்கேயும் வந்துட்டாரா, நீங்க மட்டும் வரதுக்கென்ன?

"உளறாதே... சரி எங்க கூட அந்த கார்ல வா... டிரைவர் உனக்கு எவ்வளவுன்னு சொல்லு நான் இங்கேயே செட்டில் பண்றேன்..."

"ஐயா வேண்டாம். நீங்க முதல்ல கார்ல ஏறுங்க. அவங்கள போகச் சொல்லுங்க."

"ஜானகி... உனக்கு என்ன ஆச்சு. ஏன் இப்படி மறை கழண்டவளாட்டம் பேசறே?"



"அப்ப.. நீங்க அவங்ககூட சேர்ந்துட்டீங்களா?"

"இப்படியெல்லாம் பேசாதே... முதல்ல காரை விட்டு இறங்கு. நாம முதல்ல அம்மாவை போய் பார்ப் போம். அவங்க நம்ம எல்லா சிக்கலுக்கும் நல்ல வழி காட்டுவாங்க.."

"எனக்கும் அந்த நம்பிக்கை நிறையவே இருக்கு. ஆனா அவங்க கூட மட்டும் வேண்டாம்..."

அடம் பிடித்தாள் ஜானகி. வேறு வழியின்றி ராஜசேகரை தொடரச் சொல்லிவிட்டு அவளது காரி லேயே ஏறிக் கொண்டாள்.

ஜானகி குழந்தையை இறுக்கமாக அணைத்துக் கொண்டிருந்தாள். எங்கே அவர்கள் பறித்துக் கொண்டு போய் விடுவார்களோ என்று அவள் பயப்படுவது நன்றாக தெரிந்தது. அது ரகுபதிக்கும் புரிந்தது. முதலில் அவளை கோபத்தோடு பார்த்தவன் அப்படியே மனம் மாறியவனாக பரிதாபமாக பார்த்தான்.

சப்த கன்னிகளின் அந்த கோயில் நிழலில் எல்லோரும் அமர்ந்திருக்க கெஜலட்சுமி யம்மாவும் தன் இருப்பிடத்தில் இருந்து வந்து நின்றாள். அவளை முதல் தடவையாக ராஜசேகர் ஏறிட்டார். மற்றவர்கள் கை எடுத்து கும்பிட்டனர். ராஜசேகர் மிக தாமதமாக அதை செய்தார். ஜானகி குழந்தையை இறுக அணைத்தபடி கண்களில் கலக்கத் தோடு பார்த்தாள்.

"என்னப்பா... யாரை தொலைச்சுட்டு தவிப்போடு எல்லாரும் வந்துருக்கீங்க?" என்னும் அம்மாவின் முதல் கேள்வியே ராஜசேகரை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது.

"அம்மா சாமுண்டிய தாம்மா தொலைச்சுட்டோம். எங்க இருக்கா எப்படி இருக்கான்னு தெரியலம்மா. இதுக்கு நடுவுல அவ யார், இந்த குழந்தை யார்னு எல்லா உண்மைகளும் தெரிஞ்சு போய் நாங்க எங்களுக்கு கிடைச்ச இந்த செல்வத்தை இழந்துடுவோமோன்னு பயமா இருக்கும்மா" என்று ரகுபதி உடைந்துபோய் அழவே தொடங்கிவிட்டான்.

பதிலுக்கு மெல்லிசாக சிரித்தாள் அம்மா.

"அம்மா நீங்க இப்படி சிரிக்கறதுக்கு பல அர்த்தம் இருக்குன்னு தெரியுது... ஜானகி மேலயும் தப்பு இருக்கும்மா, குழந்தை பாசம் அவ கண்ணை கட்டிடிச்சு.."

என்று தொடர்ந்த ரகுபதியை பார்த்த அம்மா "அதுல ஒண்ணும் தப்பு இல்லப்பா... சாமுண்டிக்கு தான்தான் தாய்னு தெரியக்கூடாதுன்னு தான் அவளை குணப்படுத்த வழி இருந்தும் நான் செய்யல. ஏன்னா அவ குணமாயிட்டா திரும்பவும் இந்த வாழ்க்கையை பத்தின எதிர்கால கவலை அவளை பிடிச்சு ஆட்டத் தொடங்கிடும் இல்லியா?"

அந்த பதில் ராஜசேகரை பிடரியை பிடித்து திருப்பியது. ஏன் குணப்படுத்தவில்லை என்று அவர்தானே கேட்டிருந்தார். அம்மாவின் பார்வையும் அவர் பக்கம் திரும்பியது.

"நீங்க எப்பவும் நியாயம் பக்கம் இருக்கறவர். காசு பணம் சேர்ந்துட்டாலும் இப்படிதான் வாழணும்னு நினைக்கறவர். ஆனா உங்க வயித்துல ஏன் அப்படி ஒரு பிள்ளை பிறந்தான் தெரியுமா?"



என்று கவுண்டரின் மனதுக்குள் எழும்பிய கேள்விக்கு விடை சொல்லத் தயாரானாள் அம்மா. ராஜசேகரும் கூர்மையானார்.

"இந்த உலகத்துல எந்த ஒரு உயிரும் தப்ப மட்டுமே பண்றதில்ல. நல்லது மட்டுமேவும் பண்றதுமில்ல. இரண்டையும் கலந்து தான பண்றோம். உங்க மகனும் அப்படிதான்... செய்த புண்ணிய பலம் காரணமாக செல்வந்தரான உங்க மகனா பிறந்தான். அதே சமயம் உங்க முன்னோரான குறிப்பா உங்க அப்பா செய்த பாவம்தான் அவன் காமாந்தகனா மாறக்காரணம்.

எந்த ஒரு உயிரும் பெற்றவங்க சொத்துக்களை மட்டும் அடையறதில்ல. அவங்க பாவ புண்ணியங்களையும் சேர்த்தே அடையறாங்க. அந்த வகைகல உங்க புண்ணிய பாவங்கள, அனுபவிக்க போறது உங்க பிள்ளை இல்ல பேரன்தான். இதே கணக்குத்தான் உங்க மகன் வரையிலேயும்.."

அம்மா சொன்னதில் ஆழ்ந்த பொருள்!

## 23

கெஜலட்சுமியம்மாவின் விளக்கம் ராஜசேகரை நிறையவே சிந்திக்க வைத்திருந்தது. தான் ரகுபதியிடமும், கவுண்டரிடமும் கேட்ட கேள்விகளுக்கு அம்மா கேளாமலே பதில் சொல்வதாகவும் பட்டது.

"அம்மா... உங்க விளக்கங்களை கேட்கக் கேட்க புல்லரிக்குது. நானெல்லாம் ரொம்ப சாமான்யப்

பட்டவன். இந்த மாதிரி எல்லாம் எனக்கு யோசிக்க தெரியாது. ஆனா அம்மாவுக்கு மூணு காலமும் அத்து படி. இப்ப நாங்க எல்லாரும் எதுக்கு வந்துருக்கோம்னும் சொல்லத் தேவை இல்லை. எங்களுக்கு இப்ப நீங்கதான் நல்ல வழிய காட்டணும். அந்த சாமுண்டி பொண்ணு இப்ப எங்க எப்படி இருக்குன்னு தெரியல. டி.விலயும், பேப்பர்லயும் விளம்பரம் கொடுக்கச் சொல்லியிருக் கோம்."

- என்று சொன்ன கவுண்டர் ராஜசேகரை பார்த்து நீங்களும் பேசுங்கள்" என்றார்.

"வணக்கம்மா... இவங்கள்ளாம் உங்கள பத்தி சொன்னப்போ எனக்கு பெருசா தோணல. இந்த நாட்டுல ஒரு கோவிலை கட்டிகிட்டு அபிஷேகம் பூஜைன்னே அதை வெச்சு பொழப்பு நடத்தறவங்க பெருகிட்டாங்க. அப்படிதான் உங்களயும் நினைச்சேன். ஆனா நீங்க இப்ப பேசப்பேச நான் உங்கள தப்பா நினைச்சிட்டது புரியுது."

- என்று ராஜசேகர் தன் நிலைக்கு விளக்கம் கொடுக்க தொடங்கினார்.

"அம்மா... சாமுண்டி கிடைக்கறதுல தான் எல்லா சிக்கலுக்கும் தீர்வு இருக்கு... அதே சமயம்" என்று ரகுபதி தன் மனைவி ஜானகியை ஒரு ஓரப்பார்வை பார்த்தான்.

அவன் முகத்தில் ஒரு பதட்டம் தெளிவாக தெரிந்தது.

"என்னடா... கைக்கு கிடைச்சது வாய்க்கு கிடைக் காத மாதிரி இந்த குழந்தை உன் கைய விட்டு போடு மேன்னு பயப்பட்றியா?" என்று அந்த பதட்டத்தை பார்த்து கச்சிதமாக கேட்டாள் அம்மா...



ஜானகி பதிலுக்கு கண் கலங்க பார்த்தாள்.

"அம்மா சாமுண்டி கிடைச்சுட்டா போதும்... ராஜசேகர் சார் குழந்தையை நீங்களே வெச்சுக்குங்க... எனக்கு என் மருமகளும் பேரனும் நல்லா இருந்தா போதும்னு சொன்னார். அப்படி சொன்னது அவர் பெருந்தன்மையை காட்டுது. ஆனா நாங்க எப்படிம்மா இனி குழந்தையை வெச்சுக்க முடியும்?" - என்று ரகுபதி தெளிவாக திருப்பிக் கேட்டான்.

"அப்ப இப்ப ஒரு பிரச்னைக்கு ரெண்டு பிரச்சைன்னு சொல்லு"

"ஆமாம்மா... சாமுண்டி காணாம போனது ஒரு பிரச்னைன்னா அவ கிடைச்சிட்டா குழந்தை எங்க யார்கிட்ட இருக்கணும்கறது அடுத்து பிரச்சினை."

"நீ என்னமோ சாமுண்டிய கண்டுபிடிக்கறத ஒரு விஷயமில்லங்கற மாதிரி இப்பவே அடுத்த பிரச்னைக்கு போயிட்டியேப்பா..."

"என்னம்மா சொல்றீங்க?"

"போ... போய் முதல் அவளை தேடி கண்டுபிடி. அப்புறம் மற்ற விஷயங்கள பேசிக்கலாம்."

"அதுக்கு என்ன செய்யணுமோ செய்துட்டோம். போலீஸ்லயும் காம்ப்ளைண்ட் கொடுத்துட்டோம்."

"சரி... நீயும் உன் மனைவியும் அப்புறம் இதோ இவங்களும் ஆக நாலு பேரும் நான் சொல்ற மாதிரி நடந்துப்பீங்களா?"

"என்னம்மா செய்யணும்?"

"வடக்க மந்த்ராலயம்னு ஒரு இடம் இருக்கு தெரியுமா?"

"நல்லா தெரியும்மா... ராகவேந்திர சுவாமிகள் மகா சமாதியான இடம்."

"அங்க போய்ட்டு பக்கத்துல நவபிருந்தாவனம்னு ஒரு இடம் இருக்கு. அங்கையும் நீங்க போய் மெய்யுருக வழிபாடு செய்துட்டு வரணும்."

"உத்தரவும்மா... சாமுண்டி கிடைச்சுடட்டும். முதல் காரியமா அவளையும் கூட்டிகிட்டு போயிட்டு வந்துட்றோம்."

"அவ கிடைச்சுடட்டுமா... அவ கிடைக்கத் தானே நானே உங்கள இப்படி நடந்துக்க சொல்றேன்."

"அப்ப அதுவரை சாமுண்டி கிடைக்கமாட்டாளா?"

"என் மனசுக்கு அப்படி தான் தோணுது."

- அம்மா பதிலோடு மிக மென்மையாக சிரித்தாள். ராஜசேகர் முகத்தில் திரும்பவும் சலனம்.

"ரகுபதி சார்... அம்மா சொன்னா அர்த்தமிருக்கும். நாம இப்பவே கிளம்புவோம்" - என்று கூறினார் கவுண்டர்.

"இருப்பா... இவருக்குள்ள சில தயக்கங்கள் ஏற்பட்டிருக்கு என்னன்னு பார்ப்போம்" - என்று அம்மா ராஜசேகரிடம் ஊன்றினாள்.

"ஆமாம்மா... எனக்குள்ள தயக்கங்கள்தான் - இப்படி ஒரு சூழ்நிலைல அவ்வளவு தூரம் இப்ப



எதுக்கும்மா போகணும்? போனாலும் மனசு வணங்கி கும்பிட முடியுமா?"

"யார் உங்கள வணங்கி கும்பிடச் சொன்னது...? வருந்தியே கும்பிடுங்க."

"அப்படி கும்பிடாட்டி இந்த பெண் கிடைக்க மாட்டாளா?"

"நான் அப்படி சொல்லவேயில்லையே.."

"அப்ப அவ்வளவு தூரம் எதுக்கு போகணும்...?"

"கரைய வேண்டியது கரைஞ்சா தான் தெரிய வேண்டியது தெரியும்."

"எது கரையணும் - எது தெரியணும்?"

"வேறு எது... பண்ண பாவம்தான்."

"பாவமா?"

"பாவமேதான்.."

'சரி.. அதை உங்களால விலக்க முடியாதா?"

"அதை தானே நான் இப்ப செய்துகிட்டிருக்கேன்."

"எங்கையோ தூரத்துல இருக்கற இடத்துக்கு போகச் சொன்னா என்ன அர்த்தம்?"

"அது இடம் இல்ல.. க்ஷேத்திரம்! மனுஷனா பிறந்தவங்க மனசை அடக்கி தவம் செய்து மகான்களா மாறி வாழ்ந்து பின் அடக்கமான இடம்."

"அங்க போறதுக்கும் என் மருமகள் கிடைக்கறதுக்கும் என்ன சம்பந்தம்?"

"எல்லாத்தையும் ஒரே சமயத்துல தெரிஞ்சுக்க முடியாது. தெரிஞ்சிக்கவும் கூடாது."

"நீங்க பேசறது நல்லதுக்குன்னு தெரியுது. ஆனா லஞ்சம் கொடுத்தா காரியம் நடக்கற மாதிரி அந்த சாமியார்களை பார்த்து கும்பிட்டாதான் பிரச்சினை சரியாகும்னு சொல்றத என்னால முழு மனசோட ஏத்துக்க முடியலை."

"தொடக்கத்துல இருந்தே சந்தேகம். எல்லாத்துலயும் கேள்வி நிலை. எங்க ஏமாந்துடுவோமோங்கற பயம். இததான் நீங்கன்னு எனக்கும் நல்லா தெரியுது. நான் சொன்னதை தயவு செய்து முழு மனசோட செய்துட்டு வாங்க. நீங்க செய்யப்போறத லஞ்சம் கொடுக்கற ஒரு செயலா நினைக்க வேண்டாம். மனித வாழ்க்கைல மூணு விஷயங்கள் இருக்கும். ஒண்ணு அருள். இன்னொன்னு மருள். மூணாவது இருள். இதுல அருளோட அளவு குறைவுபடும்போது மருளும் இருளும் அதிகமாகி மனசு இப்படி எல்லாம் யோசிக்கும் கேள்வியும் கேட்கும். உடம்புல சர்க்கரை அளவு குறையும் போது சர்க்கரையை சேர்த்துக்கற மாதிரி அருளோட அளவு குறையும்போது மகான்களை தேடிப் போய் தலை வணங்கி நிற்கும் போது அருளோட அளவு அதிகரிக்கும். அதன்பின் எல்லாமே மாறத் தொடங்கும். அந்த மாற்றத்தையும் நீங்க உணரப் போறது நிச்சயம்."

அம்மாவின் பேச்சைக் கேட்ட மறுநொடி கவுண்டர் வேகமாக காலில் விழுந்தார். அதைப் பார்த்த ரகுபதியும் ஜானகியும் கூட காலில் விழுந்தனர். ஜானகி வசமுள்ள குழந்தை அம்மாவை மலங்க மலங்க பார்த்தது. ராஜசேகர் மட்டும் அரை மனதாக கும்பிட்டு முடித்தார்.



"புறப்படுங்க..." என்றாள் அம்மா. அவர்களும் சரி என்று புறப்பட்டனர். சில அடி தூரம் சென்று விட்ட வர்களை ஒரு நிமிஷம் என்று தடுத்த அம்மா "நீங்க எல்லாரும் ஒண்ணா தானே போக போறீங்க?" - என்று கேட்டாள்.

"ஒண்ணாதானேம்மா போக சொன்னீங்க?"

"ஆமாம் ஒருத்தருக்கொருத்தர் அனுசரணையா ஒண்ணா போய்ட்டு வாங்க. வாகனத்துலயும் ஒண்ணா போறது முக்கியம்."

அம்மாவின் அந்த பதிலில் சூட்சமமாய் ஏதோ பொருள் இருப்பது போல் தோன்றியது ரகுபதிக்கு. ராஜசேகர் மட்டும் ஒரு முழுமையான சமாதானத்துக்கு ஆளாகாமலே அங்கிருந்து கிளம்பினார்.

அம்மா ஜானகி பக்கம் பார்வையை திருப்பி னாள். ஜானகியிடம் தொடர்ந்து ஒரு பதட்டம். குழந்தையை வேறு இறுகப் பிடித்தபடி இருந்தாள். எங்கே அது தன்னைவிட்டுப் போய்விடுமோ என்கிற பீதி அவள் உடம்பு முழுக்க நிரம்பி வழிந்து கொண் டிருந்தது. அது அம்மாவுக்கும் புரிந்தது. அவளாக ஜானகியிடம் நெருங்கவும் கார் கதவை சாத்தப்போன ஜானகி, அம்மா வரவும் என்ன பேசுவது என்று தெரி யாமல் பார்த்தாள்.

"என்னடா... இந்த பிள்ளை விஷயம் ஒரு பெரிய பிரச்னையாகி இதை பிரிஞ்சிடுவோமேன்னு பயப் பட்றியா?"

- என்று கேட்ட நொடி ஜானகி உடைந்து அழத் தொடங்கி விட்டாள்.

"அம்மா... எனக்கு ஏம்மா இந்த சோதனை?"

"எந்த சோதனை?"

"குழந்தையையும் கொடுத்து தாயையும் அனுப்பி வெச்சு, அந்த தாய்கிட்ட நானே கோபப்படும்படி யாகவும் பண்ணிட்டீங்களே.

"நான் பண்ணேனா?"

"இல்லையம்மா... சாமுண்டி உங்களாலதானே என் வீட்டுக்கு வந்தா?"

"பைத்தியமே... அது அவ விதி... இந்த விதி எப்பவும் தன் காரியத்தை சாதிச்சுக்க அது ஒரு துரும்புல இருந்து தூண் வரை எதையும் பயன்படுத்தும்..."

"நீங்க எவ்வளவு சொன்னாலும் என் மனசு சமாதானமாக மாட்டேங்குது. இவன் என் பிள்ளைங்கற எண்ணம் எனக்குள்ள ஊறிப் போச்சு. அதே சமயம் சாமுண்டி இவனை கேட்டா என்னால கொடுக்க முடியாதுன்னும் சொல்ல முடியாது. என் மனசு இப்ப நியாயத்துக்கும் பாசத்தும் நடுவுல சிக்கி திணறிகிட்டு இருக்கும்மா..."

"ரொம்ப நல்ல விஷயம்... கவலைப்படாதே உன் போராட்டத்துக்கு அவசியமே இல்லாம போகும். நீ போகப் போற ஸ்தலத்துக்கு அவ்வளவு மகிமை. அங்க உன் காலடி படவும் நிறைய மாற்றங்களை நீ பார்ப்பே. உன் பாசத்துக்கு தோல்வி வரவே வராது. ஒரு நிரந்தர தீர்வு எல்லாருக்கும் ஏற்படணும்னு தான் நான் உங்கள அந்த பிருந்தாவனத்துக்கு போகச் சொல்லியிருக்கேன். ஒரு மகானுக்கு ஒன்பது மகான்கள் தவம் செய்து மகா சமாதி ஆன இடம் அது. அந்த தவசக்தி உனக்குள்ள



நுழையும்போது அருள்சக்தி அதிகரிக்கும். அருள் சக்தி அதிகரிச்சா கோள்களால விளையாடவே முடியாது. அவைகள் விளையாடினாலும் தெரியாது," என்று அம்மா சொன்ன பதில் ராஜசேகர் காதில் விழுந்தது. அவருக்காகவே திரும்பவும் சொன்னது போல் இருந்தது.

அதன்பின் அவர்கள் காரில் ஏறிக் கொள்ள கார் புறப்பட்டது. அம்மாவும் திரும்பி நடந்தாள்.

கன்னிமார் சிலை முன் சென்று அமர்ந்தவள் அங்கு சாமுண்டி சிலைமுன் கிடந்த எலுமிச்சம் பழத்தை எடுத்து உள்ளங்கையில் வைத்து கண்களை மூடிக் கொண்டாள். மனதுக்குள் பலமான ஒரு பிரார்த்தனை!

அந்த குடிசை மாற்று வாரிய அடுக்கு வீடு ஒன்றின் முன் ஒரு கார் வந்து நின்றது. உள்ளே இருந்து மைனர் போல் ஒருவன் இறங்கினான். ஒரு சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டு நாலாபுறமும் பார்த்தபடி மாடிப்படிகளிலும் ஏறி சாமுண்டியை அடைத்து வைத்திருக்கும் ப்ளாட் முன் சென்று நின்று கதவை தட்டினான்.

திறந்து கொண்ட கதவுக்கு பின்னால் அந்த ரவுடிகள். அவர்களும் அந்த மைனரை பார்த்து "வா தல" என்றனர்.

"அதான் வந்துட்டேனே... எங்கடா ஐட்டம்?"

"உள்ள இருக்கு தல."

"நீங்க யாரும் எச்சி பண்ணிடலியே.."

"ஐயோ... அப்புறம் அக்காவுக்கு யார் தல பதில் சொல்றது?"

"எங்க அக்கா?"

"ஒரு ஜோலியா வெளிய போயிருக்கு. நீ வருவே வந்தா மஜாவா எல்லா ஏற்பாடும் செய்து தாங்க டான்னு சொல்லிச்சு..." அவர்கள் பேசிக் கொண்டே ஃப்ரிட்ஜை திறந்து மதுபாட்டில்களை வெளியில் எடுத்தனர்.

அதில் ஒன்றை அந்த மைனர் வசம் தந்தனர்.

"ஐட்டம் எப்படி?"

"அதான் பாக்கப் போறியே தல..."

"லட்சரூவா சொல்றா உன் அக்கா... அப்படி என்னடா அவகிட்ட இருக்கு..."

"போய் பாரு தல... சும்மா தளதளன்னு இருக்கா. ஆனா கொஞ்சம் லூசு போலவும் தெரியுது."

"கோழி குருடா இருந்தா கொழம்பு ருசியா இல்லாம போயிடுமா என்ன?" என்றபடி உள் நுழைந்த மைனர் ஒரு மூலையில் சுருண்டு படுத்திருந்த சாமுண்டி அருகில் நெருங்கினான். நெருங்கும்போதே அனல் அடித்தது. ஆச்சரியமாகவும் இருந்தது.

"ஏ புள்ள இப்படி திரும்பு..." என்று அதட்டவும் அவளும் திரும்பினாள். அவள் திரும்பிய நொடி அவளைப் பார்த்த மைனர் முகம் பேயறைந்ததுபோல் மாறத் தொடங்கிற்று...!



# 24

சாமுண்டியைப் பார்த்து விட்டு அலறிக் கொண்டு ஓடி வெளியே வந்தான். அதை கவனித்த அடியாட்கள் இருவரும் சிரித்தனர்.

"என்ன தல... புதுப் பொண்ணு படியாம கடிச்சி கிடிச்சிபிட்டாளா? இப்படி ஓடி வர்றே..." என்றனர்.

"எலேய்... போய்ப் பாத்துட்டு வந்து பேசுங்க டா.. தளதளன்னு ஒருத்திய காட்றதா சொல்லிட்டு கோரமா சீக்காளியை காட்றீங்களா... உங்க அகராதியில இவதான் அழகியா?" என்றான் அந்த மைனர்

அவர்களுக்கும் அதைக் கேட்க தூக்கி வாரிப் போட்டது. எழுந்து போய் பார்த்தபோது அவர் களுக்கும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

சாமுண்டி முகம் எங்கும் அம்மைக் கொப்ப ளங்கள்! அதோடு அவள் பார்த்த கோலமே நெஞ்சை நடுங்கியது. உடம்பெங்கும் உஷ்ணம் வேறு காந்தியது.

"எலேய் இவளுக்கு என்னடா ஆச்சு... நல்ல தானேடா இருந்தா?"

"ஐயோ முதல்ல பவானி அக்காக்கு தகவல் சொல்வோம் வாடா.." என்று வெளியில் வந்து கதவையும் அடைத்தனர். வந்திருந்த மைனர் முகத்தில் ஏமாற்றம்.

"சாரி தலை... பார்ட்டிக்கு அம்மை போட்டுருக்கற மாதிரி தெரியுது. இதெல்லாம் எப்ப வரும்னு தான் தெரியாதே.." "என்ன தெரியாதே? பாத்தா தெரிஞ்சிட்டு

போவுது. அம்ம போட்டவளை நான் தொடணும் அழிஞ்சிப் போவணும்கற உங்க எண்ணமாடா?"

மைனரிடம் கோபம் பீறிட்டது.

"சத்தியமா நாங்க பாக்கல தல... ஒரு மணி நேரம் முந்தி சோறு கொடுக்க போனப்ப கூட நல்லாதான் இருந்தா. நம்பு."

"என்னாத்த நம்பறது. பவானியாண்ட மரியாதையா என் காசை திருப்பித் தரச் சொல்லு. இல்ல நடக்கறதே வேற..." என்றவனாய் அவன் வெளியேறினான்.

அந்த தடியர்களும் பவானியை செல்போனில் பிடித்துப் பேசத் தொடங்கினர்.

"யக்கோவ்... கொஞ்சம் சீக்கிரம் வாக்கா..."

"என்னடா மேட்டரு. மைனரு வந்தானா..?

"வந்தானாவா. பெரிய பிரச்னையாக தெரிஞ்சிச் சுக்கா, இப்பதான் கோவமா திரும்பிப் போறான்.."

"திரும்பிப் போறானா... என்னடா மேட்டர். அந்த கிறுக்கு பிடிச்சவ ஏடா கூடமா ஏதாவது பண்ணிட் டாளா?"

"அதெல்லாம் இல்லக்கா. நீ வந்து பாருக்கா. அது மேல ஆத்தா இறங்கியிருக்காக்கா.."

"எந்த ஆத்தாடா எனக்கு தெரியாம இறங்கி யிருக்கா. உங்களுக்கு என்னடா ஆச்சு. மற கழண்டு போச்சாடா."

"அது ஒண்ணுதான் பாக்கி. என்னக்கா நீ.. ஆத்தான்னு நான் சொன்னது மாரியாத்தாளை... அந்த



பொண்ணுக்கு அம்மை போட்டு மூஞ்சி உடம்பெல்லாம் ஒரே கொப்பளம். கிட்டயே யாராலையும் நெருங்க முடியலை. எரிறய அடுப்பாண்ட போவுற மாதிரி இருக்குக்கா.."

"அட கொடுமையே... அதுக்கு அம்மை போட்டு டிச்சா?"

"ஆமாக்கா... ஒரு வேகமா வாக்கா. சட்டு புட்டுன்னு ஒரு முடிவு பண்ணுவோம்கா.

ஒருத்தர்க்கு வந்தா இதான் ஊட்ல இருக்கற வங்க எல்லாருக்கும் வருமே?"

"பயப்படாதீங்கடா.... அதெல்லாம் அந்த காலம் இப்ப அம்மைக்கும் எவ்வளவோ மருந்து மாத்திரை வந்துடிச்சு. சுத்த பத்தமா இருந்தும் சமாளிக்கலாம். நீங்க முதல்ல சிகரெட்டு, சாராயத்தை எல்லாம் தூக்கிப் போடுங்க. ஊட்டையே நல்லா கழுவி விட்டுட்டு குளியுங்கடா.. நான் வந்துட்றேன்..."

"என்னக்கா உட்டாக்கா காவி வேட்டி கட்டி மாலை போட்டுக்குங்கடான்னு கூட சொல்லுவே போல தெரியுதே."

"அப்படி இருந்தா தான் இதை சமாளிக்க முடியும். அதுவும் நல்ல விஷயம்தான். நீங்கதான் ஊரை ஏமாத்த வருஷம் ஒரு தபா சபரிமலக்கு மாலை போட்டு போவீங்கல்ல. இப்பவும் அப்படி நினைச்சுக் குங்க."

"யக்கா நான் ஒண்ணும் ஊரை ஏமாத்த சபரி மலைக்கு போறவன் கிடையாது. மெய்யாலுமே நான் அந்த ஐயப்பன் பக்தன்கா..."

"போதும் போதும் நீ போனது. உன் பக்தியை தூக்கி ஓட்டப்புல போடு. ஐயப்பன் கோவிலுக்கு போறவனுக்கு எதுக்குடா தண்ணி பாட்டிலும், சிகரெட்டும்... இருந்தா ஒரே பக்கமா ஒரே மாதிரி இருந்துடணும். நான் இல்ல... எந்த கோவிலுக்குடா இத்தினி வருஷத்துல போயிருப்பேன்."

"உன் விஷயமே வேறக்கா. உன் தில்லும் திடமும் எங்களுக்கு வராது. நீ ராணிக்கா."

"போதுண்டா. விட்டா ஒரு ஐஸ் கட்டியை தூக்கி தலைல வெச்சுடுவீங்களே. நான் சொன்னதை செய்யுங்க."

"யக்கா.."

"என்னடா?"

"கோவிச்சுக்காதக்கா.. இது என்ன நமக்கு ஒட்டா உறவா! எப்ப அம்மை ஆட்டுக்குட்டின்னு வந்துடிச்சோ அப்ப அப்படியே தூக்கிட்டு போய் பெரிய ஆஸ்பத்திரில போட்டுட்டு போய் கிட்டே இருப்போம்கா. நாம எதுக்குக்கா இதை கட்டி சுமக்கணும்?"

அந்த தடியன் கேட்டதும் சற்று சரியாக இருப்பது போலத்தான் பவானிக்கு தோன்றியது.

ஆனால் சாமுண்டியை செல்போனில் போட்டோ எடுத்து மும்பைக்கு அனுப்பியதால் சற்று முன் தான் அங்கிருந்து பதில் வந்திருந்தது. அதில் சாமுண்டிக்கு ஐந்து லட்சம் வரை ஒரு பார்ட்டி தயாராக இருப்பதும் அட்வான்சாக ஒரு லட்சத்தை பவானியின் அக்கௌண்ட்டில் போட்டும் விட்டிருந்தனர்.



அதை எண்ணிப் பார்த்த பவானி அந்த தடியனிடம் ...க்கு சீறத் தொடங்கினான்.

"டேய்.. அவளை நல்ல விலைக்கு வித்து அட்வான்ஸ் வாங்கிட்டேண்டா. அவ இப்ப யாரோ இல்ல.. நாம வெச்சுகிட்டிருக்கற ஒரு நல்ல சரக்கு மாதிரி அவ. அவளை பத்திரமா பாதுகாக்கணும். அதுலயும் அம்மை போட்டு மூஞ்சு எல்லாம் தழும்பாச்சினா பார்ட்டி பேசன தொகை தராது. போட்டோல ஒருத்திய காட்டிட்டு அம்மை மூஞ்சிக்காரியை அனுப்பிட்டதா தகராறு பண்ணுவாங்க. அதுலயும் பம்பாய் சேட்டுங்க கொலைகாரங்க. நான் ஏமாத்திட்டேன்னு தெரிஞ்சா போதும் ஒரு ஆளை அனுப்பி வைப்பாங்க. அவன் வருவான். நேருக்கு நேர் நின்னு சுடுவான். போய்கிட்டே இருப்பான்."

பவானி அளித்த விளக்கத்தில் அந்த தடியர்கள் உறைந்து போய்விட்டனர்!

ராஜசேகர் பங்களா!

அம்மாவை பார்த்து விட்டு திரும்பியவர்கள் நேராக பங்களாவுக்கு வந்து விட்டிருந்தனர். முன்னதாக ராஜசேகர் வீட்டுக்கு போன் செய்து தன் சகோதரியான கல்யாணி என்பவளுக்கு போன் செய்து ஆரத்தி எல்லாம் கரைத்து வைக்கச் சொல்லியிருந்தார். பேர பிள்ளையோடு வீட்டுக்கு வரப் போவதால் அவர் அப்படி சொல்லியிருந்தார். அவர் அப்படி நினைத்ததிலோ சொன்னதிலோ எந்தவித தவறுமில்லை. ஆனால் அது ஜானகியை பாதித்திருந்தது. குழந்தை தன்னைவிட்டு விலகத் தொடங்கி விட்டதன் ஒரு ஆரம்பம் அது என்று

தான் நினைத்துக் கொண்டாள். கணவனிடம் நேராக சேலத்தில் இருக்கும் தங்கள் வீட்டுக்கே போய்விடலாம் என்று சொல்லிப் பார்த்தாள். ஆனால் ராஜசேகர் விடவில்லை. அவருக்கு ஜானகியின் பயமும் புரிய வில்லை.

"அம்மாடி என் பங்களாவுக்கு வந்து ஒய்வெடுத்து கிட்டு பிறகு போகலாம்.." என்று அன்பாலே கட்டிப் போட்டு அழைத்துக் கொண்டு வந்துவிட்டார்.

ஆரத்தியும் எடுக்கப்பட்டு குழந்தையோடு ஜானகி உள் நுழைந்தாள். குழந்தையை தன் அக்காவிடம் காட்டி "அக்கா... குழந்தைய உன் கையால தூக்கி முத்தம் கொடு" என்றெல்லாம் சொல்லி தன் பேரன் என்கிற உரிமையையும், பெருமையையும் நிலைநாட்டி விட்டார் ராஜசேகர்.

ஜானகிக்கும் ரகுபதிக்கும் ஒரு அறையை ஒதுக்கிக் கொடுத்து ஒய்வெடுக்கச் சொன்னார். அந்த இடை வெளியில் கவுண்டரும் செம்மநத்தம் வரை போய் தன் மனைவியிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டு வர தயாராகி விட்டார்.

ராஜசேகரிடம் வந்து "ஐயா நான் வீடு வரை போய்ட்டு வந்துட்றேங்க" என்றார்.

"போய்ட்டு வாங்க.."

"நான் வந்த உடனே நாம மந்த்ராலயம் கிளம்பிட லாம்யா."

"அதபத்தி தான் யோசிச்சுகிட்டு இருக்கேன்."

"இதுல யோசிக்க என்னய்யா இருக்கு?"



"அந்த அம்மா நாம ஒத்துமையா ஒண்ணா அந்த கோயிலுக்கு போகணும்னு சொல்லியிருக்காங்க இல்லையா?"

"ஆமா.. அது தான் ரொம்ப முக்கியம்னாங்க."

"இதுல குழந்தைய கட்டி சுமக்கணுமா... இது தாங்குமான்னு யோசிக்கிறேன்..."

"அப்படின்னா?"

"குழந்தை இங்க நம்ம பங்களாவுலயே இருக் கட்டுமே. என் அக்கா பாத்துக்குவாங்க.. நிறைய வேலைக்காரங்களும் இருக்காங்க. நாம நாலு பேரும் ஒரு கார்லயே போய்ட்டு வந்துடலாமே.."

"அம்மா குழந்தையையும் கூட்டிகிட்டு கோவி லுக்கு போகணும்னு சொன்னதா தான் எனக்கு தோணுது. "இப்ப கார் பயணம் சரிப்பட்டு வராது. வேற மார்க்கமா தான் போகணும்."

"வேற மார்க்கமான்னா ரயில் பயணம்தான் சரிப்பட்டு வரும். முதல் வகுப்பு ஏ.சி. டிக்கட்டை இப்பவே புக் பண்ணிட்றது நல்லது. ஓடற ரயில்ல சாப்பாட்டுப் பிரச்சினையும் பெருசா இருக்காது."

"சரி... அப்ப நான் மேனேஜரை விட்டு டிக்கெட் புக் பண்ணிட்றேன். நீங்க போய்ட்டு வந்துடுங்க." என்று கவுண்டரை அனுப்பினார்.

கவுண்டரும் புறப்பட்டார். முன்னதாக ரகுபதி ஜானகியை பார்த்து ரயிலில் பயணிக்கப் போவதை சொல்லி விடுவது நல்லது என்று தோன்றியது.

அவளது அறையை நோக்கி சென்றார். ஜானகி குழந்தைக்கு பால் கொடுக்க போராடிக் கொண்டிருந்

தாள். அருகில் ராஜசேகரின் சகோதரி கல்யாணி இருந்து கொண்டு 'இப்படி கொடும்மா நான் கொடுக்கறேன்' என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

ரகுபதி கவுண்டரை பார்த்து சிரித்தான். "தம்பி.. நான் என் வீடு வரை போய்ட்டு வந்துட்றேன். நாம அனேகமா இன்னிக்கே கூட மந்த்ராலயம் புறப்பட வேண்டி இருக்கும். ஐயா ரயில்ல போறதுக்கு டிக்கட்புக் பண்ணப் போறாரு. நீங்களும் உங்க வீட்டுக்கு போய் உடைகளை எடுத்து வெச்சுகிட்டா வசதியா இருக்கும்" என்றார்.

அப்படியே "குழந்தையோட அவ்வளவு தூரம் போகணுமா இங்கையே விட்டுட்டு போயிடலாமேன் னும் ஐயா சொன்னார். ஆனா நான் தான் எல்லாரும் தான் சேர்ந்து போகணும்னு சொன்னேன்" என்றார்.

ஜானகிக்கு பகீர் என்றது.

"குழந்தையை நான் விட்டுட்டெல்லாம் எங்கேயும் வர மாட்டேன்." என்றாள் மிக வேகமாக.

"பதட்டம் வேண்டாம். நாம சேர்ந்துதான்மா போகப் போறோம்."

கவுண்டர் ஆறுதலாக சொன்னது ராஜசேகரின் சகோதரி கல்யாணியை சற்று திடுக்கிட வைத்தது.

"குழந்தையோட மந்த்ராலயம் வரை போக போறீங்களா...? அது ரொம்ப தூரமாச்சே" என்று தன் பங்குக்கு தொடங்கினாள்.

"ஆமாம்மா... போயாகணும்... சாமியம்மா உத்தரவு அது."



"எந்த சாமியம்மா... இந்த செம்மநத்தம் சப்த கன்னி கோயில் கெஜலட்சுமியம்மாவா?"

"ஆமாம்மா. அவங்களேதான்..."

"அவங்க சொன்னா அதை நீங்க உடனே அப் படியே எடுத்துக்குவீங்களா?" - கல்யாணி திரும்பி கேட்ட விதமே ஒரு மாதிரி இருந்தது.

"நீங்க என்னம்மா சொல்றீங்க?"

"கெஜலட்சுமியை எனக்கு நல்லா தெரியும். அவளுக்கும் எனக்கு ஒரே வயசு. சின்ன வயசுலே அவ எப்பபார் சாமி பூஜைன்னு தான் கிடப்பா. ஆளன்னா ஒரு அறைக்குள்ளபோய் கதவை அடைச்சிகிட்டு தியானம் பண்றேன்னு உக்காந்துக்குவா... அவ குடும்ப மும் ஒண்ணும் சரி கிடையாது. அவ அப்பன் ஒரு குடிகாரன். அம்மா ஒரு சீக்காளி.."

கல்யாணியம்மாள் ஏதோ ஒரு பக்கத்து வீட்டுக் காரனை பற்றி பேசுகின்ற மாதிரிதான் பேசினாள். பேச்சிலும் ஒரு அலட்சியம். அது கவுண்டரை மிகவே பாதித்திருந்தது. ஜானகிக்கோ அது பெரிய உறுத்தலாகி விட்டது.

"அவ சொன்னான்னுல்லாம் நீங்க அவ்வளவு தூரம் போறதெல்லாம் எனக்கு சரியா படலை. அவ அப்பவே அப்படிதான். எனக்கே அவ நிறைய ஜோசியம் சொல்லியிருக்கா. ஆனா நான் காதுலயே வாங்க மாட்டேன்..நான் என்ன இப்ப கெட்டுப்போயிட்டேன்?"

என்று கேட்டபடியே வெற்றிலை பெட்டியில் இருந்து வெற்றிலையை எடுத்து போடத் தொடங்கி

விட்டாள். கவுண்டரிடம் தர்ம சங்கடம் கூடு கட்டத் தொடங்கியது. ஜானகியும் ரகுபதியை பார்த்தாள்.

"அம்மாடி... இந்த குழந்தை எங்க குடும்பச் சொத்து இது எப்படி உன் கைக்கு வந்துச்சு... அதை மட்டும் ராஜசேகரன் இப்ப சொல்றேன். அப்ப சொல்றேன்னு இழுத்து கிட்டே இருக்கான். நீயும் என்னடான்னா நீயே பெத்து எடுத்த மாதிரி ஒரு நிமிஷம் குழந்தையை கீழே கூட விட மாட்டேங்கறே..." என்று சற்று நீட்டி முழக்கினாள்.

கல்யாணியின் பேச்சு அணுகுமுறை, பேச்சில் தொனிக்கும் அலட்சியம் ஒருவகை ஆணவம் என்று சகலமும் கவுண்டரை மிகவே நிரடியது. ரகுபதிக்கும் ஜானகிக்கும் கூட அதே மனநிலை தான்.

கல்யாணியே அங்கிருந்து விலகத் தொடங்கியவளாக "நான் என் தம்பிகிட்டயே கேக்கறேன் ஏண்டா உன் புத்தி இப்படி சாமியார் பொம்பளங்க பின்னால எல்லாம் போகுதுன்னு கேட்கறேன்.." என்று நடந்தாள்.

கவுண்டர் 'ச்சே..' என்று சடைத்துக் கொண்டார்.

"என்ன கவுண்டரே. பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காகிடும் போல இருக்குது...?

"ஆமாம் தம்பி... ஏற்கனவே ஐயாவுக்கு அம்மா மேலே அப்படி ஒண்ணும் மதிப்பு இல்லை. நமக்கு இருக்கற அனுபவம் இல்லாததுதான் காரணம்னு நானும் அதை பெருசா எடுத்துக்கல. ஆனா இந்த அம்மா எல்லாத்தையும் கெடுத்துடுவாங்கபோல தெரியுதே...?"

அவர் சொன்னது அப்படியே நடக்கும்போல தான் தோன்றியது.



"சரிக்கா... குழந்தையை கூட்டிகிட்டு போகலை. இந்த உன்கிட்டயே விட்டுட்டு போறோம். போதுமா?" என்று சொல்லிக் கொண்டிருந்தார் ராஜசேகர்.

"நீயும் எதுக்குடா போறே... போய் காணாம போன அந்த பொண்ணை தேட்றத விட்டுட்டு கோவிலுக்கு போறேன் குளத்துக்கு போறங்கறியேடா. அந்த கெஜ லட்சுமி ஒண்ணும் ஆகாயத்துல இருந்து குதிச்சவ இல்லடா. என் சினேகிதி தான் அவ. ரொம்ப சாதாரண குடும்பம். வயித்துப் பாட்டுக்காக சாமியாரா மாறி குறி சொல்றேன் அத சொல்றேன் இத சொல்றேன்னு ஏதோ பண்ணிகிட்டிருக்கா. அந்த கவுண்டன் தான் படிப் பறிவில்லாதவன்.. நீ என்ன அப்படியா?"

என்று பதிலுக்கு கல்யாணி கேட்டது யாரை அதிகம் பாதித்ததோ இல்லையோ ஜானகியை மிகவே உலுக்கி விட்டது!

## 25

கல்யாணி கேட்ட கேள்வி ஜானகியை உலுக்கியதை போலவே கவுண்டரையும் அசைத்தது. அதிலும் தன்னை படிப்பறி வில்லாதவன் என்றும் முட்டாள் என்பது போலும் கல்யாணி அலட்சியமாக பேசியது கவுண்டரை ஊசியாய் குத்தியே விட்டது. ராஜசேகரும் கல்யாணிக்கு என்ன பதில் சொல்வது என்று பிடிபடாதபடி இருக்க கவுண்டரே முன் வந்தார்.

கல்யாணியும் அதை எதிர்பார்த்தவள் போல நிமிர்ந்தாள்.

"அம்மா..."

"சொல்லுப்பா..."

"படபடன்னு வார்த்தைகளை இப்படி கொட்டினா எப்படிம்மா. பொருளை அள்ளிப் புடலாம். வார்த்தைகளை அள்ள முடியுமா?"

"எதுக்கு அள்ளணும்? நான் அள்றவ கிடையாது. அத்த நீ தெரிஞ்சுக்கோ.."

"நான் படிப்பறிவில்லாதவன். அதனாலதான் கெஜலட்சுமியம்மாவ நம்பறேங்கற மாதிரி பேசினீங்க. ரகுபதி தம்பி என்ஜினியர் அவரும்தான் நம்பறார் இதுக்கு என்ன சொல்றீங்க?"

"என்ன... நான் சொன்னதை வெச்சு என்னை மடக்கலாம்னு பாக்கறியா கவுண்டா நீ?"

"தப்பா நீங்க பேசறத பொறுத்துக்க முடியாம பேசறேம்மா..."

"நான் தப்பால்லாம் பேசல... சரியாதான் பேசிகிட்டிருக்கேன். என்கிட்ட இந்த பதிலுக்கு பதில் பேச்செல்லாம் வேண்டாம். அந்த கெஜலட்சுமி ஒண்ணும் ஆகாயத்துல இருந்து குதிச்சிடலை. என்னப் போல தான் அவ! அவ சொன்னான்னு நீங்க கோயிலுக்கும் குளத்துக்கும் போறது எனக்கு சரியாபடலை.

நான் தெரியாமதான் கேக்கறேன். அந்த மந்த்ராலயத்துலதான் சாமி இருக்குதா? இந்த மலைலயே இருக்கற சேர்வராய பெருமாள் சாமி கிடையாதா?

கீழ சேலத்துல இருக்கற கோட்டை மாரியம்மன் சாமி கிடையாதா? பக்கத்துலயே குமரகிரி மலைமேல இருக்கற முருகனும் சாமி இல்லையா...?



அதான் சாமி தூணு துரும்புன்னு எல்லாத்துலயும் இருக்குதே? அவ்வளவு ஏன் இந்த பங்களாவுல என் தம்பி பிரம்மாண்டமா பூஜை ரூம் கட்டி அதுல அவ்வளவு சாமிங்களையும் வெச்சிருக்கான். இங்க கும்புட வேண்டியதுதானே?"

- சருகுகளில் தீப்பிடித்துக் கொள்வது போல கல்யாணியின் பேச்சும் இருந்தது. விட்டால் அது எந்த எல்லையையும் கடந்துவிடும் என்று பயந்த ராஜசேகர்

"போதும்கா... கவுண்டரை போட்டு ஒரேடியா உலுக்காதே. நீ கேட்ட கேள்விய எல்லாம் நானும் கேட்டேன். அதுக்கு அந்த பொம்பளயும் பதில் சொன்னா. அங்க மகான்களோட சமாதிங்க இருக்குதாம். அங்க போறது தான் நல்லதாம்..."

"அப்ப இவ எதுக்கு அருள்வாக்கும் இருள் வாக்கும் சொல்லிகிட்டிருக்கா? இவ போய் பேசாம அந்த சமாதிகிட்டயே உக்காந்துக்கிட வேண்டியது தானே?"

"ஐயோ அக்கா... நமக்கு நல்லதுன்னு ஒரு விஷயத்தை சொல்றவங்ககிட்ட வார்த்தைக்கு வார்த்தை பேசறதுங்கறது நல்லாவா இருக்கும்?"

"இதுல எங்கடா நல்லது இருக்குது? கால் போய் உன் மகன் ஆஸ்பத்திரில கிடக்கான் அவனை போய் இன்னும் நீ பார்க்கலை! அவனால கெட்டு குட்டிச் சுவராகி இப்ப எங்க இருக்கான்னே தெரியலை, உன் மருமவ... அவளை தேடிகண்டு பிடிக்கல! இந்த கைக் குழந்தையை யாரோ வெச்சுகிட்டு இருக்காங்க. இவங்க இன்னும் எதுக்கன்னு எனக்கு தெரியல. இங்க இப்படி தீர்க்க வேண்டிய பிரச்சினைங்க இஷ்டத்துக்கும்

இருக்கும்போது இது எதை பத்தியும் பேசாம உங்களை ஒட்டுமொத்தமா அவ கோயிலுக்கு போய்ட்டு வாங் கன்னா என்னடா அர்த்தம்? இதுல எங்கடா இருக்கு நல்லது?"

கல்யாணி கேட்ட கேள்விக்கு அவர்கள் யாரா லுமே பதில் கூற முடியவில்லை.

"என்ன எல்லாரும் முழிக்கிறீங்க... பதில் சொல்ல முடியல இல்ல?"

"அக்கா அது வந்து..."

"போதும்... வந்து போயின்னு இழுக்காம முதல்ல ஆஸ்பத்திரிக்கு போய் உன் மகனை பார்க்கற வழிய பார். அவன் ஆயிரம்தான் அயோக்யன்னாலும் உன் மகன்னு தான் ஊர் சொல்லும். இந்த குழந்தையை தூக்கிட்டு போய் காட்டு, அவனுக்கு கொஞ்சம் ஆறுதலா இருக்கும். உன் மருமகளை தேடிக்கண்டு பிடிக்கற வழிய பார். அவ கிடைச்சா சந்தோசப்படு. கிடைக்காட்டி ரொம்ப சந்தோசப்படு. அவளுக்கு இந்த வீட்ல வாழற அதிர்ஷடம் இல்லேன்னு நினைச்சுக்க வேண்டியது தான். அப்படியே இவங்களுக்கும் பக்குவமா சொல்ல வேண்டியதை சொல்லி அனுப்பிவை" என்று குட்டி சுனாமி போல பொங்கி பிரவாகித்துவிட்டு அப்படியே தன் வெற்றிலைப் பெட்டியை எடுத்து சுண்ணாம்பை தடவிக் கொண்டே விலகிப் போனாள் கல்யாணி.

எல்லாருமே காலை பாம்பு சுற்றிக் கொண்டது போல ஸ்தம்பித்து நின்று விட்டிருந்தனர். ஜானகி யிடம் மயக்கம் வராத குறை. ரகுபதிக்குள் ஒரு கோபம் ஏற்படத் தொடங்கியிருந்தது. கவுண்டரும் மனதுக்குள் கல்யாணியை கிழித்துப் போடத் தொடங்கியிருந்தார்.



ராஜசேகருக்கு எங்கே தொட்டு எப்படி ஆரம் பிப்பது என்பதில் நிறையவே குழப்பம். ஆனால் ஜானகி யிடம் மட்டும் ஆவேசம். "நான் குழந்தையை கொடுக்க மாட்டேன். இது என் குழந்தை. இதை என்கிட்ட கொடுத் தது அம்மா! அவங்க வந்து திருப்பிக் கேட்டா கூட நான் இதை தரமாட்டேன். நீங்கள்ளாம் நடுவுல புகுந்து குழப்பம் பண்றீங்க. அதுலயும் இந்த கெழவி காட்டு யானை மாதிரி கண்டபடி பேசி துவம்சம் பண்ணிட்டு போயிட்டாங்க. இவங்க பேச்சை எல்லாம் நான் கேட்கத் தேவையில்லை.

என்னங்க... புறப்படுங்க. இதுக்கு மேலயும் இங்க நாம இருந்தா அந்த கெழவி நம்மள வார்த்தைகளாலேயே கொன்னு போட்டுடுவா.."

- என்று ஜானகி குழந்தையை தூக்கிக் கொண்டு வெளியேற ஆரம்பித்தாள். ரகுபதியும் எதுவும் பேசாமல் பின் தொடரத் தொடங்கினான்.

ராஜசேகருக்கு அது அதிர்ச்சியோடு மெல்லிய கோபத்தையும் தந்தது.

"ரகுபதி நில்லுப்பா..." என்றார்.

"வேண்டாங்க. தடுக்காதீங்க என்னை... நீங்க இப்ப என்ன பேசுவீங்கன்னும் தெரியும். நீங்க தொடக்கத்து லயே அம்மா வரைல சந்தேகத்தோடயே இருந்தீங்க. இப்ப உங்க அக்கா வேற பேசிட்டாங்க. இனி கேட்க வேண்டாம்."

"சரிப்பா... அதனால எங்க குடும்ப வாரிசோட நீங்க போறது சரியா?"

"என்னங்க வாரிசு..? இது இப்ப என் மகன் முறைப்படி தத்து எடுத்து ஊர் அறிய நான் பேர் வச்ச வளர்த்திட்டு வரேன். என் மனைவி சொன்ன மாதிரி இவனை எங்களுக்கு கெஜலட்சுமி அம்மா கொடுத்தாங்க. இந்த குழந்தையை திரும்ப வாங்கவோ இல்லை இதை பத்தி பேசவோ அவங்களுக்கு மட்டும்தான் உரிமை உண்டு. வேற யாருக்கும் கிடையாது. நான் வரேன்."

ரகுபதியும் படபடவென்று பொரிந்துவிட்டு விறுவிறுவென்று வெளியேறினான். கவுண்டருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கலங்கிப் போய் ராஜசேகரைப் பார்த்தார்.

"என்ன கவுண்டரே... நீங்க என்ன சொல்லப் போறீங்க?"

"நான் என்னத்தங்க சொல்றது.. அதான் ஒரு தானே புயல் மாதிரி உங்க அக்கா வீசிட்டு போயிட்டாங்களே?"

"அவங்க கேட்ட ஒரு கேள்விக்காவது உங்களால பதில் சொல்ல முடிஞ்சதா?"

"அப்ப உங்க அக்கா கேட்டதெல்லாம் நியாயம்னு நீங்க நினைக்கறீங்களா?"

"பின்ன... அக்கா என்ன தப்பா கேட்டுட்டாங்க..?"

"வேண்டாம்யா விட்றுங்க. நீங்களே இப்படி யோசிச்சா நான் என்னத்த பண்றது? நான் புறப்பட்டேன்."

"இப்படி நடுவுல கழண்டுகிட்டு போறேன்னா எப்படிய்யா?"



"எனக்கு வேற வழி தெரியலீங்களே..?"

"என்ன வழி தெரியலங்கறீங்க.. உங்க பையன் பிரச்னை இல்லாமல் வெளிய வரணும்னு ஆசை இருக்கா இல்லையா?"

எங்கே தொட்டால் வலிக்கும் என்பது தெரிந்து சரியாக அவர் தொட்டது போல் இருந்தது.

"ஐயா என்ன சொல்றீங்க நீங்க?"

"நீங்க என் கூட இருங்க. எனக்கு இந்த குடும்பத்து வாரிசு ரொம்ப முக்கியம். என் மருமகளை கண்டு பிடிக்கறது அதைவிட முக்கியம். என் மகனோட சேர்ந்து உங்க மகன் செஞ்ச தப்புக்கு நீங்க பரிகாரம் தேடுங்க."

"அப்ப, அம்மா பேச்சை அப்படியே மறந்துடச் சொல்றீங்களா?"

"ஆமாம்.. அந்த ரகுபதியும் நாம இல்லாம எந்த கோயில் குளத்துக்கும் போகமாட்டார்னு தான் நினைக்கறேன். அந்த பொண்ணு புள்ள பாசத்துல கண்டபடி பேசிடிச்சு. அது பரவாயில்ல. ஆனா அவங்க மேல ஒரு கண்ணு இருந்துகிட்டே இருக்கணும்.

இன்னிக்கே சேலம் போய் கமிஷனரை பார்த்து காணாம போயிட்ட மருமக, குழந்தையை தன் வசம் வெச்சுகிட்டிருக்கற அந்த ரகுபதி பத்தி எல்லா விபரமா பேசி கம்ப்ளைண்டை ஸ்ட்ராங்கா கொடுக்கறோம்."

ராஜசேகர் மிக வேகமாய் முடிவுக்கு வந்து உத்தரவுகளையும் பிறப்பித்து முடித்தவராக "நீங்க ஏதோ வீட்டுக்கு போய்ட்டு வரணும்னீங்களே. போய்ட்டு வந்துடுங்க...' என்று அவருக்கும் அனுமதி அளித்தார்.

கவுண்டருக்கும் வசமாக அகப்பட்டு கொண்டு விட்டதைப்போல் தான் இருந்தது.

சோர்வுடன் விலகத் தொடங்கினார்!

அந்த வாடகை காரின் பின் சீட்டில் ரகுபதியும் ஜானகியும் இருந்தனர். டிரைவர் வண்டியை செலுத்திக் கொண்டிருந்தார். ஜானகி கிட்டத்தட்ட விக்கித்து போயிருந்தாள். குழந்தையை இறுக்கமாக பற்றிக் கொண்டிருந்தாள். இருவருக்கும் இடையில் கனத்த மௌனம். வெளிப் புறத்தில் ஏற்காட்டின் காபி தோட்டங்களும், சில்லென்ற காற்றும் இதமான உணர்ச்சிகளை தரப்பார்த்தன.

ரகுபதியிடம் சட்டென்று ஒரு முடிவு. டிரைவரை பார்த்து காரை செம்மநத்தம் திருப்பச் சொன்னான். ஜானகி அதிர்வோடு பதிலுக்கு அவனை பார்த்தாள்.

“என்ன ஜானகி பாக்கறே... அம்மாவை பாத்துட்டு போயிடுவோம். நடந்ததை எல்லாம் அவங்ககிட்ட சொல்வோம். அவங்களாலதான் இப்ப நம்பளை காப்பாத்த முடியும்...” என்றான். ஜானகியும் மறுப்பேதும் சொல்லவில்லை!

அந்த குடிசைமாற்று வாரிய குடியிருப்பு வீட்டுக்குள் நுழைந்த பவானிக்கு உள்ளே நுழையும் போதே அனல் அடித்தது. அவள் எதிரில் அவளது அடியாட்களான மாரியும், சேகரும் நெற்றி நிறைய பட்டையோடு கறுப்பு வேட்டி கட்டிக் கொண்டு சபரிமலை சாமிகளாட்டம்



தென்பட்டு அவளையும் சற்று சிரிக்க வைத்து விட்டனர்.

“என்னக்கா.. எங்கள சாமியாரா பார்க்கவும் சிரிப்பு வந்துடுச்சா உனக்கு?”

“பின்ன... பாவம்டா சாமிங்க... உங்கள மாதிரி ஆளுங்க கைல சிக்கிட்டு கஷ்டப்படுதுங்க. போவட்டும் எங்க அவ?” என்று கேட்டபடியே சாமுண்டி வைக்கப் பட்டிருந்த அறை கதவை திறந்து கொண்டு உள்ளே போனாள். சாமுண்டியையும் பார்த்துவிட்டு விக்கித்துப் போய்விட்டாள். அப்படியே திரும்பி வந்தாள். முகத்தில் பலத்த சலனம்.

“என்னக்கா யோசனை?”

“வாரிக் கொட்டியிருக்குதேடா..?”

“ஆமாங்கா... குணமானா கூட தழும்புங்க போவாது. தொழிலுக்கும் சரிப்பட்டு வராதுக்கா...”

“அதாண்டா நானும் யோசிக்கிறேன்...”

“இப்ப என்னக்கா பண்ணலாம்?”

“என்னா பண்றத... இது டாக்டர்கிட்ட காட்ற சமாச்சாரமும் கிடையாது.”

“நான் சொன்ன மாதிரி பண்றது தாங்கா சரி... இத்த கொண்டுகிட்டு போய் பெரிய ஆஸ்பத்திரி வாசல்ல உட்டுட்டு வந்துடுவோம். அப்புறம் இது தலையெழுத்து போல நடக்கட்டும்.”

“அப்படி எல்லாம் விட முடியாதுடா. பம்பாய் பார்ட்டி அட்வான்ஸ் பண்ணிட்டான். அதுக்காக வேற ஒருத்திய அனுப்பினாலும் ஏத்துக்க மாட்டான்.”

"அவன் எங்கையோ இருக்கான்.. அவனுக்கு போய் இவ்வளவு யோசிக்கிறியேக்கா..."

"அவன் எங்கையோ இருக்கலாம். ஆனா அவனுக்கு ஆயிரம் கண்ணு. அத்த நீ தெரிஞ்சிக்க."

"சரி என்னதான் பண்ணலாம்கறே?"

"அதாண்டா எனக்கும் புரியல... எப்பவும் பார்ட்டிங்க நம்மகிட்ட மாட்டிகிட்டு தான் கஷ்டப்படும். ஆனா இங்க தலைகீழா நாம இவகிட்ட மாட்டிகிட்ட மாதிரி ஆயிடிச்சேடா...?"

"அதேதான்... யானைக்கும் அடி சறுக்கும்னு சும்மாவா சொன்னாங்க."

"சரி சரி... இந்த ஏரியாவுல அம்மைக்கு மந்திரிக்கற கிழவிங்க யாராச்சும் இருந்தா கூட்டிகிட்டு வந்து அவ பொறுப்புல இவள விட்டுடுங்க. நான் போய் ஒரு நல்ல முடிவோட வரேன்..."

"என்னத்த முடிவு.. பேசாம வாங்குன அட்வான்ஸை திருப்பிக் கொடுத்துடுக்கா. இதையும் தெருவுல விட்றுவோம். தெருவுல கிடைச்சவ தெருவுக்கே போகட்டும்.."

"பேசினதையே பேசறியேடா சேகரு... அப்படி பண்ண முடிஞ்சா நான் பண்ணிட மாட்டேனா? அப்படி பண்ண முடியாது. அவன்கிட்ட உண்மையா இருந்துக் கணும். அம்மை போட்டுருக்கற விசயத்தை பம்பாய் காரன்கிட்ட சொல்லப் போறேன். அம்மை போட்டது வேண்டாம்னா நாமளே இவளை நீ சொன்ன மாதிரி தெருவுல விட்றுவோம். பரவால்ல நீ அனுப்பிவை நாங்க பாத்துக்கறோம்னா அனுப்பி வைப்போம். இப்ப



என்ன?" என்று கேட்டுவிட்டு கெத்தாக நடந்து செல்லத் தொடங்கினாள் பவானி.

செய்வது இழிவான பாவத் தொழிலாக இருந்தாலும் அதிலும் சில நியாயங்கள் இருப்பதும் அதனுள்ளும் அவள் உண்மையாக இருக்க முற்படுவதும் எந்த விதத்தோடு.சேர்ந்தது என்பதுதான் தெரியவில்லை.

# 26

"வீட்டுக்குள் கவுண்டர் நுழையவும் கவலையோடு அவர் மனைவி தாமரை அவரை ஏறிடவும் சரியாக இருந்தது.

பெருமூச்சோடு கவுண்டர் விரிந்து கிடந்த பாயின்மேல் போய் உட்கார்ந்தார். சம்மணமிட்டு அமராமல் காலை உயர்த்தி முக்கோணம் போல வைத்துக் கொண்டு அவர் அமர்ந்த விதமே பல நடக்க கூடாத விஷயங்கள் நடந்து கொண்டிருப்பதை தாமரைக்கு உணர்த்தின.

"நேத்து போனவரு இன்னிக்கு வந்திருக்கீங்க.. யார் கிட்டயும் ஒரு தாக்கல் கூட கொடுத்து விடல..." என்று மெல்ல ஆரம்பித்தாள்.

"தாக்கல் கொடுத்து விட்ற சூழ்நிலையே இல்ல புள்ள..."

"அப்ப விவகாரம் பெருசாயிட்டே போவுதாட்டம்?"

"ஆமா... நாம ஒண்ணு நினைச்சா அது ஒண்ணு நடக்குது."

"அப்படி என்ன நடந்துச்சு, சென்ராயன பாத்தீங்களா?"

"நினைச்சேன்... என்னடா இன்னும் மவனை பத்தி கேக்கலியேன்னு..."

"நான் கேட்காம வேறு யாருங்க கேப்பாங்க. அதுவும் கருவேப்பில்லை கொத்து மாதிரி ஒத்த பிள்ளை..."

"ஒத்த பிள்ளை சரி, ஆனா உத்தமமான பிள்ளையா இல்லாமல்ல போயிட்டான்...?"

"இப்ப அவன் எங்க இருக்கான்... என்ன நடந்துச்சு. சுத்தி வளைக்காம சொல்லுங்க..."

"சுத்தி வளைக்க இந்த விவகாரம் ஒண்ணும் ஜல்லிக்கட்டு மாடு இல்லபுள்ள.." என்றவர் அதுவரை நடந்ததை சொல்லி முடித்தார். அதற்கு ஒரு செம்பு நீராகாரம் குடித்து இரண்டு பச்சை வெங்காயத்தையும் கடித்திருந்தார்.

"இது என்னங்க அநியாயம்.. நம்ம அம்மாவை யாரோ தெருவுல போறவ கணக்கால்ல இந்த பொம்பள பேசியிருக்கா."

"அம்மாவை பேசினவங்க என்னை எவ்வளவு பேசியிருப்பாங்கன்னு யோசிச்சு பார்."

'சரிங்க. இப்ப என்ன பண்ணப் போறீங்க?'

"எனக்கு தெரியல புள்ள, ஆனா முதலாளி குழந்தையை அந்த ரகுபதி தம்பிகிட்ட நிச்சயம் விட்டு வைக்க மாட்டார். அதே சமயம் ரகுபதி சம்சாரமும் குழந்தையை தூக்கி தந்துடாது."



"இதுவுக்கும் நம்ம சென்ராயன் வெளிய வர்றதுக்கும் என்னங்க சம்மந்தம்?"

"விடிய விடிய கதை கேட்டுட்டு சீதைக்கு ராமன் சித்தப்பாங்கறியே தாமரை! நம்ம மவன் நல்லபடியா விடுதலை ஆகணும்னா நான் முதலாளி அய்யா கூட நின்னாவணும். அவரு கழுதையை குதிரைன்னா ஆமாங்கணும். நியாயம் பேசினா சென்ராயன் உள்றயே கிடக்க வேண்டியதுதான்.."

"ஐயோடா... பயமுறுத்தறீங்களே..."

"நீ ஏன் பயப்பட்றே... நீ நியாயம் பக்கம் நில்லு. நம்ம மவன் தப்பு பண்ணவன். தண்டனையை அனுபவிக்கட்டும்னு நினைப்போம்."

"என்னங்க இப்படி சொல்றீங்க?"

"வேற எப்படி சொல்ல...?" முதலாளியும் சரி, அவரோட அக்காவும் சரி அவங்க யோசிக்கறத தான் சரிங்கற மாதிரி பேசறாங்க. அம்மாவை ரொம்ப துச்சமா பேசிட்டாங்க.. அவங்களோட என்னால ஒத்துப் போக முடியாது.."

"இதை பத்தி அம்மாகிட்டயே கேட்டா என்னங்க?"

"நானும் அந்த எண்ணத்துல தான் இருக்கேன்.. நீயும் வர்றியா?"

"பொறவு?"

"அப்ப புறப்படு..."

அடுத்த பத்தாவது நிமிடம் கவுண்டரும் தாமரையும் கெஜலட்சுமியம்மாவிடம் புறப்பட கிளம்பி விட்டனர்!

சப்த கன்னி கோவிலின் முன் ரகுபதியும் ஜானகியும் குழந்தையோடு நின்றபடி இருந்தனர். கெஜலட்சுமி அம்மா தியானத்தில் இருந்தாள். வில்வண்டி வரும் சப்தம் கேட்டதும் இருவரும் திரும்பிப் பார்த்தனர். கவுண்டரும் அவர் மனைவியும் வண்டியில் இருந்து இறங்கி வருவது தெரிந்தது.

கவுண்டருக்கு ரகுபதியை பார்க்க ஆச்சரியம்.

ரகுபதி கவுண்டரை பார்க்க ஆச்சரியம்.

நெருங்கிய கவுண்டர் அம்மா தியானத்தில் இருப்பதை பார்த்துவிட்டு ரகுபதியும் சற்று காற்று குரலில் பேச ஆரம்பித்தார்.

“நீங்க சேலம் போகலையா?”

“அம்மா பார்த்து நடந்ததை எல்லாம் சொல்லிட்டா நல்லதுன்னு தோணிச்சு.”

“எனக்கும் அதே தான் எண்ணம். அதான் மனசு கேட்காம கிளம்பி வந்துட்டேன்.”

“இரண்டு பேரும் ஒண்ணு போல நினைச்சிருக்கோம்...”

“அப்ப இரண்டு பேருக்குமே அம்மா மேல இருக்கற நம்பிக்கை போகலைன்னு தானே அர்த்தம்?”

“இப்படி நாம பேசறதே தப்புங்க. அந்த பொம்பளை நம்மை கூட இப்படி நினைக்க வெச்சுட்டாளே..?”

கவுண்டரும், ரகுபதியும் பேசிக்கொள்ள கவுண்டர் மனைவி தாமரை, ஜானகியிடம் நெருங்கி குழந்தையை கொஞ்சியபடி இருந்தாள்.



நடுவில் அம்மாவும் கண் திறந்தாள்.

எதிரில் உள்ள நால்வரையும் பார்த்தாள்.

கவுண்டரும் ரகுபதியும் அம்மாவை நெருங்கி பேச முற்பட்டனர். அம்மா கைகளை உயர்த்தி பேச வேண்டாம் என்பது போல தடுத்தாள்.

“அம்மா...”

“இன்னும்மா நீங்க நான் சொன்னபடி கோவிலுக்கு போகலை..?”

“அது வந்தும்மா...”

“எனக்கு விளக்கங்களே வேண்டாம். நான் சொன்னது ஒரு நல்ல விஷயம். உங்களை நான் திருடச் சொல்லலை. பொய் சொல்லச் சொல்லலை. என்னை கொண்டாடுங்க உங்க குறைகளைத் தீக்கறேன்னும் சொல்லலை. எனக்கு தெரிஞ்ச ஒரு நல்ல வழியை காட்டினேன். ஆனா நீங்க அதுல போகாம திரும்பி என் முன்னாலேயே வந்து நிக்கறீங்கன்னா என் பேச்சுக்கு இருக்கற சக்தியைவிட உங்க கெட்ட நேரத்துக்கு சக்தி அதிகம் இருக்குன்னு நல்லா தெரியுது.

இந்த மாதிரி நேரத்துலதான் மனதை உறுதியா வெச்சுக்கணும். யார் என்ன சொன்னாலும் கேக்க கூடாது. நான் ஒண்ணும் ஆகாசத்துல இருந்து குதிச்சுடலை. நானும் இந்த பூமியில ஒரு தாய்க்கு மகளா பிறந்த சராசரி பெண்மணி தான்! ஆனா என் ஜாதகப்படி உங்களைப் போல உப்பு புளி காரம் சாப்பிட்டு குடும்பமா வாழ்ந்து பிள்ளை குட்டி பெத்து போட்டு வாழற விதி அமைப்பு இல்லை. பதிலுக்கு உடம்பு மனசு இரண்டை

யும் கட்டிப் போட்டு பக்தி மார்க்கத்துல தியானம் தவம்னு இருக்கேன். உடற்பயிற்சியால உடம்பு உருத்திரண்டு வர்ற மாதிரி மனப் பயிற்சியால ஏதோ என் மனசுக்குள்ள பட்ற விஷயங்களை நான் உங்களுக்கு சொல்றேன். இப்ப இல்லாதவங்க நான் சொல்றதுக்கு எதிரான கருத்துக்களை சொல்லலாம். அது அவங்க விருப்பம். ஆனா எதை எடுத்துக்கணும்ங்கறதுல உங்களுக்கு தான் தெளிவு முக்கியம்.

பசுவோட உடம்பு முழுக்க அதே பால் இருந்தாலும் மடி வழியா தான் அதை கறந்து வெளிய எடுக்கறோம். கடவுள் எல்லா இடத்துல இருந்தாலும் அதாவது இந்த மலைல சேர்வராய பெருமாளா, சேலம் கோட்டைல மாரி அம்மனா, குமரகிரியில முருகனா, வீட்டு பூஜை அறைல படங்களான்னு எல்லா இடத்துலயும் இருந்தாலும் இவங்கல்லாம் நமக்கு தேட்ற சிரமமோ அந்த பாவனையோ இல்லை. ஆனா தேடி பிரயாசைப்பட்டும் ஒரு முயற்சியோட ஜீவ சமாதிகளுக்கு போறதுங்கறது வேற... அப்படி போய் அங்க நின்னு மூச்சு விட்டு சுவாசிக்கறதுல தான் பல சூட்சுமங்களும் இருக்கு.

எல்லாத்தையும் வார்த்தைகளால் சொல்லிட முடியாது. சொல்ல முடிஞ்சா அனுபவம்கறது தேவைப்படாம போயிடும். ஒருத்தர் மட்டும் அனுபவிச்சிட்டு அதை வார்த்தையாலேயே எல்லாருக்கும் சொல்லிடலாமே?

ஆகையால எந்த குழப்பத்துக்கும் கேள்விகளுக்கும் இடம் கொடுக்காம நான் சொன்னடி நடந்துக்குங்க. நல்லது தானா நடந்து முடியும். யார் யார்க்கு எது



தேவையோ அது கிடைக்கும். என்ன நடக்கணுமோ அதுவும் நடக்கும்.”

கெஜலட்சுமியம்மா சொல்ல வேண்டியதை சொல்லிவிட்டு திரும்பவும் தியானத்தில் ஆழ்ந்துவிட கவுண்டரும் ரகுபதியும் விக்கித்துப் போய் விட்டிருந்தனர். ராஜசேகர் வீட்டில் கல்யாணி பேசிய பேச்சு ஒவ்வொன்றுக்கும் அம்மா வார்த்தைக்கு வார்த்தை பதில் சொல்லிவிட்டது போல் இருந்தது.

கல்யாணிதான் இங்க இல்லாத சேர்வராய பெருமாளா? கோட்டை மாரியம்மனா? குமரகிரி முருகனா என்று கேள்விகள் எழுப்பியிருந்தாள். அது மட்டுமல்ல அவ ஒண்ணும் ஆகாசத்துல இருந்து குதிச்சிடலை என்றும் கூறியிருந்தாள். எல்லாவற்றுக்கும் பதில்.

இத்தனைக்கு இவர்கள் ஒரு வார்த்தை இதுதான் நடந்தது என்று கூறவில்லை. நடந்த அவ்வளவும் தனக்கு தெரியும் என்பதுபோல அம்மா பேசி முடிக்கவும். பதிலக்கு இவர்கள் தரப்பில் பேச்சே இல்லை.

“ரகுபதி தம்பி.”

“சொல்லுங்க கவுண்டரே.”

“ஒரு வார்த்தை நம்பள பேசவிடலை. அதே சமயம் நாம கேக்க நினைச்சதுக்கெல்லாம் அம்மா பதில் சொல்லிட்டாங்க பார்த்தீங்களா?”

“ஆமா கவுண்டரே” அதுதான் அம்மா! இனியும் நாம நேரத்தை வீணடிக்காம இப்பவே புறப்படுவோம்.”

“அதைத் தான் நானும் சொல்ல வந்தேன். முதலாளி ராஜசேகரய்யா நம்ம வழிக்கு ஒத்து வரமாட்டாரு. அவர்

ரொம்ப நியாயமான மனுசன் தான். ஆனா அவர் கெட்ட நேரம் அவர் அக்கா வடிவத்துல தடுத்துகிட்டு இருக்கு அவருக்கும் சேர்த்து நாம வேண்டிக்குவோம். புறப் படுங்க."

கவுண்டர் பரபரப்புக்கு மாறினார். கவுண்டர் மனைவி தானும் வருவதாக கூறினாள்.

"வா தாமரை... நீயும் வா. நாம போறது நல்ல காரியத்துக்கு. அதுக்கு நீ வர்றதும் நல்லதுதான்."

"அப்ப நாம மொத்தம் நாலு பேர். குழந்தையோட சேர்த்து அஞ்சு பேர். என் ஏ.சி. கார்ல ஏழு பேர் தாராளமா உட்கார்ந்து போகலாம். இப்பவே கிளம்புவோம்" என்றான் ரகுபதி.

அவர்களிடம் ஒரு புதிய வேகம். புறப்பட்டு விட்டனர்.

பவானி அந்த ஃப்ளாட்டுக்குள் நுழைந்தபோது திரும்பிய பக்கமெல்லாம் வேப்பிலை. வீட்டிலும் சாம்பிராணி வாசம்! அவளது அடியாட்களான மாரியும் சேகரும் விபூதி குங்குமம் என்று திவ்யமாக காட்சி தந்தனர். எப்போதும் சீட் டாடுபவர்கள் பரம பதம் விளையாடிக் கொண்டிருந் தனர்.

பவானிக்கு எல்லாமே ஆச்சரியமாக இருந்தது. "டேய் என்னடா இப்படி மாறிட்டீங்கோ...?"

"நாங்க எங்கக்கா மாறுனோம். உள்ள இருக்கறவ மாத்திட்டா எங்கள... சுத்த பத்தமா இல்லாட்டி ஆத்தா எங்க மேல ஏறிடுவாளாம். ஏற்கனவே நான் பேரழகன்.



அப்பறம் கொத்து மூஞ்சியோட பாக்க சகிக்காமல்ல போயிருவேன்" என்றான் மாரி. பவானியும் யோசிக்க ஆரம்பித்தாள்.

"என்னக்கா யோசனை?"

"இந்த பொண்ணு சாதாரண பொண்ணு இல்லடா.. அதான் யோசிச்சேன்."

"உண்மைதான்கா. வழக்கமா எல்லா பொண்ணுங் களும் நம்மகிட்ட பாடாபடுவாங்க. ஆனா இவ நம்பள படுத்தற."

"படுத்தலடா அப்படியே தலை கீழ மாத்தறா..."

"போவட்டும் என்னக்கா முடிவு பண்ணே. பம்பாய் காரங்க என்ன சொன்னாங்க."

"பரவால்ல அனுப்பி வைன்னுட்டாங்கடா.."

"இந்த உடம்போடயா..

அதான் எனக்கும் புரியல..."

"சரி நீ என்ன பண்ணப் போறே. அத சொல்லு."

"நான் என்னடா பண்றது. ரயில் ஏத்திவிட வேண்டியதுதான். நீங்களே போய் விட்டுட்டு வாங்க."

"யக்கா."

"என்னடா?"

"கொஞ்சம் கூட நல்லா இல்லக்கா இது."

"நல்லா இல்லதான்... ஆனா நான் என்ன பண்ண, கை நீட்டி காசை வாங்கிட்டேனே?"

"அதை திருப்பி கொடுத்துடுக்கா. அந்த பொண்ணை இப்ப கூட்டிகிட்டு போறதும் ஆத்தாளை கூட்டிகிட்டு போறதும் ஒண்ணு.."

"என்னடா சாமியார் மாதிரியே பேச ஆரம்பிச்சிட்டீங்க?"

"மாதிரி பேசலை... நீ யோசிச்சு பார். உள்ளயும் போய் பார். அந்த பொண்ணு மேல இப்ப அம்மை கொப்புளம் இல்லை. ஆனா அவ முகம் பார்க்க நம்பள என்னவோ பண்ணுது."

அவர்கள் புதிர் போட பவானியும் எழுந்து அறைக்குள் சென்று சாமுண்டியை பார்த்தாள். அப்படியே வாய் பிளந்தாள்!

## 27

அந்த தனியறைக்குள் சென்று பார்த்த பவானிக்கு அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது. எதிரில் சாமுண்டியிடம் பெருத்த மாற்றம். முன்பு பார்க்கையில் அம்மைக் கொப்புளங்களோடு மிக விகாரமாய் தெரிந்தவள் இப்போது பார்ப்பதற்கு மஞ்சள் பூசிய முகத்தோடு துளியும் கொப்பளங்கள் இன்றி பளிச்சென்று தெரிந்தாள். பவானிக்கு அது ஒரு பெரிய மாயமாகக் கூட தோன்றியது.

சாமுண்டியும் அவளை அம்பால் குத்துவது போல மிகக் கூர்மையாக பார்த்தாள். நெற்றியில் வட்டமான பெரிய குங்குமப் பொட்டுடன் அவள் பார்த்த பார்வை



பெண் தாதாவான பவானியையே ஒரு உலுக்கு உலுக்கி விட்டது.

போன வேகத்தில் திரும்பி வெளியே வந்தாள். சேகரும், மாரியும், அவளை ஆச்சரியமாகப் பார்த்தனர்.

"என்னக்கா பேயறைஞ்சா மாதிரி வந்து நிக்கறே?"

"பேயறைஞ்சா கூட பரவால்லடா. நானும் ஒரு பேய் மாதிரி தானே... ஆனா இவ விஷயம் பெரிய பேஜாரா இருக்குதுடா..."

"பேஜாராவா... இப்ப என்னக்கா பிரச்சினை?"

"அம்ம போட்டு அகோரமா இருந்தால்ல?"

"ஆ... அதுக்கென்ன இப்போ?"

"அதுக்கென்னவா... இப்ப அவள பாத்தா ஆத்தாளுக்கு விரதம் இருந்து அக்னி சட்டி எடுக்கறவ மாதிரி இருக்காடா..."

"அது அந்த கெழவி பண்ண வேலையா இருக்கும். அதுதான் மொட்ட மாடில வெய்யில்ல தண்ணிய காய வெச்சு அதில் வேப்பிலையே போட்டு ஊற வெச்சு அவளை குளிக்க வெச்சுச்சு! அப்படியே அம்மக் கொப்பளம் மேலல்லாம் வேப்பிலையும் மஞ்சளையும் அரைச்சு பூசிச்சு!"

"அப்படி பூசுனா உடனேயா உதிர்ந்து போகும்?"

"அப்ப இப்ப முகத்துல கொப்பளமே இல்லையா?"

"போய்ப் பாருங்கடா நாயுங்களா."

அவள் அதட்டல் குரலைத் தொடர்ந்து இருவரும் சாமுண்டி இருக்கும் அறை நோக்கி ஓடினார்கள். அதை

வாசல் மேல் நின்றபடியே சாமுண்டியைப் பார்த்து அப்படியே விக்கித்துப் போனார்கள். பவானியும் பின்னாலேயே வந்து நின்றாள்.

"என்னடா சொல்றீங்க?"

"யக்கோவ் இது பெரிய மாயமால்ல இருக்கு..?"

"ஆனா இதுவும் நல்லதுக்கு தாண்டா.."

"எப்படிக்கா..?"

"இவளை நான் இப்ப என் இஷ்டத்துக்குல்ல விப்பேன்."

"உடனே தொழில் புத்திய காட்றியேக்கா..."

"பின்ன... இவள பார்த்து கை எடுத்து கும்புடச் சொல்றியா?"

"இதோ பாருக்கா ஒண்ணு மட்டும் சொல்லிக்கிறேன். இவ சாதாரண பொம்பள இல்ல. இவ பின்னால ஏதோ இருக்குது..."

"என்னடா... நானே பெரிய பேமானி. என்கிட்டயே ஜீன் காட்றீங்களா?"

"ஜீன் காட்டலக்கா.. கண்ணால பாக்கறத வெச்சு சொல்றேன். நீயும் தானே பாக்கறே...?"

"இனி இந்த மாதிரி பேசறத விடுங்க. இப்பவே ரெண்டு பேரும் ரெடியாகுங்க. இவளை இனி ஒரு நிமிஷம்கூட இங்க வெச்சிருக்கக் கூடாது."

"இங்க வெச்சிருக்க கூடாதுன்னா?" "பம்பாய்க்கு அனுப்பிடலாம்."

"பம்பாய்க்கா?"

"இப்ப அதுக்கு பேர் மும்பையாம்..."

"என்னக்கா நீ... திடுதிப்புன்னு போகச் சொல்றே?"

"சொல்றத கேளுங்களடா... நான் இப்பவே ரயில்ல டிக்கெட் எடுத்து தர்றேன். பாத்து சூதானமா கூட்டிகிட்டு போயிடுங்க..."

"அப்படி எல்லாம் போவ முடியாதுக்கா... நீ டிவில பாக்கலையா?"

"டிவில என்னடா?"

"இவளோட போட்டோவை போலவே ஒரு போட்டோவை காட்டிகிட்டே இருக்காங்க. இவளை பத்தி தகவல் தர்றவங்களுக்கு எவ்வளவு தெரியுமா சன்மானம்?"

"எவ்வளவுடா?"

"அஞ்சு லட்சம்..."

"அஞ்சு லட்சமா... நெசமாலுமா?"

"சந்தேகமா இருந்தா லோக்கல் சேனலை பாரு..."

என்ற சேகர் அந்த வீட்டில் இருந்த டி.வியை ஆன் செய்தான். ஆன் செய்த பத்தாவது நிமிஷம் சாமுண்டி பற்றிய செய்தியும் ஐந்து லட்சம் சன்மானம் என்றும் அறிவிப்பும் வெளியாகியது. வாயை பிளந்து விட்டாள் பவானி.

"யக்கா... இந்த பொண்ணாதான் இருக்கணும். அம்மை போட்டதால நம்பளால சரியா அடையாளம் தெரிஞ்சுக்க முடியல..." என்ன சொல்றே?"

“இவளே தாண்டா.. சந்தேகமே இல்லை.”

“அப்ப இவளை கொண்டு போய் போலீஸ்ல ஒப்படைச்சிட்டு ஐஞ்சு லட்சத்தை வாங்கிக்கலாமா?”

“இதோ வந்து சொல்றேன்.” என்ற பவானி சற்று விலகிச் சென்றாள். மார்புப்பக்கம் ரவிக்கைக்குள் இருந்து செல்போனை எடுத்து அவளுக்கேயுரிய பாணியில் ஆட்காட்டி விரல்களால் எண்களைக் குத்தி அலைவரிசை தொடர்பு கொண்டு யாருடனோ பேசினாள். சற்று ஆவேசமாகவெல்லாம் பேசியவள் திரும்பி வந்தாள்.

“என்னக்கா... போலீஸ்ல ஒப்படைச்சிட்லாமா?”

“இல்லடா.”

“பம்பாய் பார்ட்டி இவளுக்கு 10 லடசம் தர சம்மதம்னு சொல்லிட்டாங்க.”

“நீ பிரச்சினையையே காசாக்கற கில்லாடிக்கா.”

“அதாண்டா பவானி... ஆளு பாக்க ஷோக்கா மாறிட்டா! உள்ளூர்லயே அஞ்சு லட்சத்துக்கு ஆஃபர் இருக்குதுன்னு சொன்னேன். நம்ப மாட்டேன்னான். லோக்கல் டி.விலே ஓடிகிட்டிருக்கு உன் ஆளுங்க யாரையாவது விட்டு பாத்துட்டு சொல்லுன்னேன். கடைசில வழிக்கு வந்துட்டான்.”

சரிக்கா போலீஸ் கண்ணுபடாம எப்படிக்கா கூட்டிகிட்டு போக?”

“நீ எல்லாம் என் கூட தொழில் பண்றவங்கன்னு வெளில சொல்லிடாதீங்க. பின் பக்கமா சிரிச்சு வைக்க போறாங்க.”



“அட என்னக்கா நீ... ரயில்ல போகச் சொல்லிட்டு கண்ணுல படாம எப்படிக்கா போறது?”

“ரயில்ல ஏண்டா போறே... கார்ல போங்கடா...”

“கார்லயா... அவ்வளவு தூரமா?”

“சரி நீங்களே சொல்லுங்க... வேற எப்படி போகலாம்.”

“கார்ல போனாலும் ஆபத்து தாங்க்கா.. வழியில ஏகப்பட்ட டோல் கேட்டுங்க.. அது போக போலீசோட சோதனை...”

“அப்ப ஆகாசத்துல பறந்து போறீங்களா... இப்பதான் ஏரோப்ளேன் டவுன் பஸ் மாதிரி ஆகிப் போச்சே...”

“இது இன்னும் சிக்கல். விமான நிலையத்துல தஸ்சு புஸ்சுன்னு இங்கிலீஸ்ல பேசுவாங்க. நாங்க திருதிருன்னு முழிக்கணும்.”

“அப்ப ரயில்ல முதல் வகுப்பு பொட்டி ஒண்ண அப்படியே புடிச்சு அதுல ஏறிட வேண்டியது தான்.”

“ஆமாக்கா... நீயும் வா. மொத்தம் நாலு பர்த். ஒரு ரூமுக்குள்ள கதவ சாத்திகிட்டு உக்காந்துடலாம்.”

“அதே சமயம் சேலம் ஜங்ஷன்ல ஏறாம அடுத்த ஏதாவது ஸ்டேஷன்ல ஏறணும்.”

“இவ ஒழுங்கா கூட வருவாளா?”

“போதை ஊசிய போட்டு உடம்பு சரியில்லன்னு சொல்லி ரயில்ல ஏத்திட வேண்டியதுதான்...”

அவர்களிடம் இறுதியாக ஒரு திட்டம் உருவாகி விட்டது!

ஏற்காட்டு பங்களாவில் கவுண்டரின் வருகைக்காக காத்திருந்த ராஜசேகர் அவர் வராமல் போகவும் ஒரு வேலைக் காரனை விட்டு பார்த்து வரச் சொன்னார். அவனும் திரும்பி பாத்து செம்ம நத்தத்தில் அவர் வீட்டில் அவர் இல்லை என்றான்.

“எங்க போய்ட்டான் இந்த ஆள்.. இவன் கைல போனும் வெச்சிருக்கறவனில்ல...” என்று முணு முணுத்திட ராஜசேகரின் சகோதரியான கல்யாணி எதிரில் கல்லுக் குண்டாக வந்து நின்று “என்னப்பா யோசனை பலமாக இருக்கு?” என்று ஆரம்பித்தாள்.

“வரேன்னு சொல்லிட்டு போன கவுண்டன் வரலக்கா...”

“அவன் வராட்டி போறான். நீ போய் ஆக வேண்டியத பாரு.”

“வேற வழியில்ல அப்படித்தான் செஞ்சாகணும்.”

“டிவில அந்த பொண்ணு போட்டோ வருதாட்டம் இருக்குதே.”

“அப்படியா. நீ பாத்தியா?”

“பாத்துட்டு தான் கேக்கறேன். பொண்ணு மாநிறமா இருந்தாலும் நல்ல களையா இருக்கா...”

“நான் பார்க்கலையேக்கா...”



“இப்ப என்ன ஆயிடிச்சு. அதோ டிவி, போட்டா போச்சு.” என்று டிவியில் சாமுண்டியை காட்டினாள். குழந்தைக்கான பெயர் சூட்டுவிழாவில் எடுத்த படம். அவளைப் பார்த்து விட்டு ஒரு பெருமூச்சுவிட்டார்.

“இத பாரு... இவளுக்கு அஞ்சுலட்சமெல்லாம் அதிகம். போவட்டும் சனியன்னு விட்டுடு. ஆஸ்பத்திரிக்கு போய் உன் மவனை முதல்ல பாரு. நீ என்னதான் முறுக்கிட்டாலும் அவனை உன் மவன் இல்லேன்னு யாரும் சொல்லிடப் போறதில்ல. இந்த குடும்பத்துக்கும் ஒரே வாரிசு அவன்தான்.

குழந்தையை கூட அந்த சேலத்துக்காரனே வெச்சிகிட்டு போவட்டும். நம்ம பையனுக்கு நல்ல பெரிய இடத்துல கட்டிக் கொடுத்து அந்தஸ்த்தோட இருக்கற வழிய பாக்கறது தான் சரி..”

கல்யாணியின் கருத்து அவருக்குள் கசப்பை உருவாக்கியது.

“நீ சும்மா இருக்கா.. ஏற்கனவே என் மகன் ஒரு தறுதல. அதுல இப்ப கால் போனவன் வேற. அந்தஸ்த்தா பொண்ணு கொடுக்க யார் முன்னால வருவா?”

“அப்ப இப்ப அதான் உன் கவலையா... நல்லா பொண்ணு கிடைச்சிட்டா நீ இதை எல்லாம் அப்படியே விட்டுட்றியா?”

“இவனை கட்டிக்கறேன்னு சொல்றவ எப்படிக்கா நல்ல பொண்ணா இருப்பா... என் சொத்துக்கும் காசுக் கும் ஆசைப்பட்டு வேணா சரின்னு சொல்லலாம். ஆனா அப்படி ஒரு மருமக எனக்கு தேவையில்லை.”

“நீ நல்ல நாள்ளயே நூறு நாயம் பேசறவன். இப்ப தானா நான் சொல்லியா கேக்கப் போற?”

கல்யாணி அலுத்துக் கொள்ள அதற்கு மேல் அங்கே நிற்காமல் புறப்பட்டார் ராஜசேகர்.

ரகுபதியின் பங்களாவிற்குள் கவுண்டரும் அவர் மனைவி தாமரையும் நுழைந்தபோது தாமரைக்கு ரகுபதி பங்களா பெரிய வியப்பை அளிக்கத் தொடங்கிவிட்டது. சுற்றிச் சுற்றி பார்த்தாள். ரகுபதி உற்சாகமாக வரவேற்றான். ஜானகியும் குழந்தையும் கையுமாக வந்து வரவேற்றாள். தாமரை குழந்தையை வாங்கிப் பார்த்தாள்.

“சரியான மாயக்காரன் இவன். பொறந்தது ஒரு இடத்துல வளர்றது ஒரு இடத்துல. அந்த கிருஷ்ணனாடா நீ?”

என்று கேட்டு கொஞ்சினாள்.

ஊருக்கு கிளம்பத் தயாராக பெட்டி படுக்கைகள் எடுத்து வைக்கப்பட்டிருந்தன.

“தம்பி எங்க பெட்டி படுக்கை இரண்டே இரண்டு தான். சட்டுபுட்டுன்னு கிளம்புவோம். முதலாளி மோப்பம் பிடிச்சிகிட்டு இங்க வந்தாலும் வந்துடுவார்” என்று ரகுபதி ஜானகியை துரிதப்படுத்தி நல்லதாக ஒரு காபியை மட்டும் குடித்துவிட்டு பெரிய அந்த இன்னவோ ஏ.சி. காருக்குள் நால்வரும் ஏறிக் கொள்ள டிரைவர் காரைக் கிளப்பினான்!



அந்த இரவு வேளையில் ஒரு இஞ்ஜெக்ஷன் சிரிஞ்ஜோடு எதிரில் வந்து நின்ற சேகரையும் மாரியையும் இமைக்காதபடி ஒரு பார்வை பார்த்தாள் சாமுண்டி. அது அவர்களுக்கு சற்று பயமாக கூட இருந்தது. இருந்தும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஊசியை போட்டனர். அவள் மயங்கவும் அவளுக்கு கறுப்பு நிற ஃபர்தா உடையை அணிவித்து அப்படியே தோளில் தூக்கிக் கொண்டு அந்த குடிசை மாற்று வாரிய வீட்டை விட்டு வெளியே வந்தனர்.

ஊர் அடங்கி விட்டிருந்தது. சேலம் போஸ் மைதானத்தில் ஒரு கட்சிப் பொதுக்கூட்டம். எல்லார் கவனமும் அதன் மேல் இருந்தது வசதியாகி விட்டது. வெளியே காத்திருந்த ஒரு காருக்குள் சாமுண்டியை கிடத்தியவர்கள் ஏறிக் கொண்டனர். காரும் புறப்பட்டது.

“பவானியக்காவை நாம போற வழியில் பிக் அப் பண்ணிக்குவோம்” என்றனர்.

பவானியும் ஜாகீர் அம்மாபாளையம் என்னும் இடத்தில் உள்ள அவளது வீட்டில் காத்துக் கொண்டிருந்தாள். சுற்றிலும் அவளது சகாக்கள்.

“யக்கா வரும்போதே பணத்தை வாங்கிட்டு வந்துடு. நோட்ட நல்லா பாத்து வாங்கு. பாகிஸ்தான்ல அடிச்ச கள்ள நோட்டுங்க அதிகம் இப்ப பம்பாய்லதான் புழங்குதாம்” என்றான் ஒருவன்.

“இந்த பவானிகிட்ட அதெல்லாம் நடக்காதுடா...” என்று அவள் கித்தாப்பாக பேசவும் சேகரும் மாரியும்

சாமுண்டியோடு உள்ள காருடன் அவள் வீட்டு முன் வந்து தேங்கி நிற்கவும் சரியாக இருந்தது!

## 28

காரில் இருந்தபடியே டிரைவர் ஹாரன் கொடுத்தான். உள்ளே சேகரும் மாரியும் இஸ்லாமியர்களைப் போல தொப்பி அணிந்திருக்க சாமுண்டிக்கு கருப்பு பர்தா அணிவித்து முகத்தையும் மூடியிருந்தனர். அவள் அரை மயக்கத்தில் அப்படியே பின் சீட்டில் சேகருக்கு பக்கத்தில் சாய்ந்திருந்தாள்.

ஹாரன் சப்தம் கேட்டு ஓடிவந்த பவானி காருக்குள் அவர்கள் மூவரையும் பார்த்து லேசாக விக்கித்துப் போனாள். அவர்களும் "என்னக்கா என்ன பாக்கறே.. நான் இப்ப மைதீன். இவன் அப்துல் காதர்" என்று சிரித்தான் மாரி.

பவானி பின் சீட்டில் ஏறிக் கொள்ள காரும் புறப்பட்டது.

"என்னடா இது வேஷம்?"

"அதான் சொன்னேனே போலீஸ் உசாரா இருக்குதுன்னு..."

"இங்க இருக்கற ஜங்கஷனுக்கு போறதுக்கு கூட வா வேஷம்?"

"இப்பல்லாம் நினைச்ச இடத்துல நின்னு மடக்கறாங்கக்கா! நம்பள போல கேப்மாரிகளும் ஜாஸ்தியாயிட்டோம்ல?"



"நம்பளால தாண்டா அவங்களுக்கு வேலையே கிடைச்சிருக்குது. ஊரில் இருக்கற எல்லாரும் சாமியாரா இருந்துட்டா இவங்களுக்கு ஏது வேலை... போலீஸ் ஸ்டேஷனும் காலப் போக்குல பஜனை மடமாயிடும்ல?"

அவர்கள் தங்களுக்குள் ஜாலியாகவும் பேசிக் கொண்டனர். கார் சென்று கொண்டிருந்தது. அவர்கள் சொன்னது மிகச்சரி என்பது போல இரு இடத்தில் டிராஃபிக் போலீஸ் நல்ல வேட்டையில் இருந்தது. ஹெல்மெட் போடாமல் வந்து ஒரு பைக்காரர் சிக்கி விட்டிருந்தார்.

பவானி இருந்த காரை ஓரம் கட்டி நிறுத்திவிட்டு பைக்காரரிடம் மல்லு கட்டிக் கொண்டிருந்தனர். பைக்காரரும் சளைக்கவில்லை.

"சார் ஹெல்மெட் அணியறத கட்டாயப்படுத்தி எந்த சட்டமும் போடப்படலை சார். நான் ஒரு வக்கீல். எனக்கு சட்டம் தெரியும். ஹெல்மெட்டுங்கறது ரேஸ்ல 150 மைல் ஸ்பீடுல ஓட்றவங்க பாதுகாப்புக்காக கண்டு பிடிக்கப்பட்டது. இங்க டிராஃபிக்ல ஊர்ந்து போறவங்களுக்கு இது தேவையில்லை."

"நீங்க வக்கீலா... அதான் இந்த பேச்சு பேசறீங்க. நாங்க உங்க நல்லதுக்கு தானே சொல்றோம். ஏன் கேக்க மாட்டேங்கறீங்க.."

"இது நல்லதுக்குத்தான்னு நினைக்கறவங்க தாராளமா போட்டுகட்டும். அதே சமயம் இதை பெரிய உபத்ரவமா நினைக்கற என்னப் போன்றவங்களும் இருக்கோம். எங்க போனாலும் கைல பிச்சைக்காரன் திருவோடு மாதிரி இதை தூக்கிட்டு சுத்தற கொடு

மையை கார்ல போய் கார்ல வர்றவங்களால புரிஞ்சுக்க முடியாது."

"அப்ப கோர்ட்டுல ஜட்ஜே இதை எதிர்த்து போட்ட வழக்கை தள்ளுபடி செய்துட்டாரே அதுக் கென்ன சொல்றிங்க?"

"எந்த ஜட்ஜ் இப்ப பைக்குல கோர்ட்டுக்கு வர்றார்? அவர் ஒரு ரெண்டு நாள் ஹெல்மேட் போட்டு வண்டி ஓட்டினா சத்தியமா தள்ளுபடி பண்ணியிருக்க மாட்டார்."

"இது அதிக பிரசிங்கித்தனம். உங்க நல்லதுக்கு சொல்றத கேட்டு நடக்கறது தான் உங்களுக்கு நல்லது."

"இதுல எந்த நல்லதும் இல்லை. நடந்து போய் அடிபட்டு சாகறவங்களும் இருக்காங்க. கார்லபோய் அக்சிடென்ட் ஆகி சாகறவங்களும் இருக்காங்க. அவங்க ஹெல்மெட் போட்டுருந்தா உயிர் பிழைச்சிருக்க லாம்னு கூடத்தான் பேசலாம். தினசரி லட்சக் கணக்குல குடிச்சு செத்து போறாங்க. அழிக்க முடியாத கொசுவால காய்ச்சல் வந்து சாகறாங்க. அவங்க நல்லா இருக்க இப்படி ஏதாவது ஒரு சட்டம்னு சொல்லி கட்டாயப் படுத்துங்களேன்.

ஏன் டூவிலர் வெச்சிருக்கறவங்க மேல மட்டும் இவ்வளவு கரிசனம்?"

"அந்த வக்கீலின் கேள்வி பவானிக்கு மிக பிடித்து விட்டிருந்தது.

"டேய்.. இவனை பாத்து வெச்சுக்குங்கடா... நல்ல பாயின்ட்டா பேசறான். நமக்கு யூஸ் ஆனாலும் ஆவான்" என்றாள்.



"யக்கா இப்ப நாம இந்த வேதாளங்ககிட்ட இருந்து எப்படி தப்பிக்க போறோம்? அதை சொல்லு நீ..."

"பொறுடா... நானும் முட்டாக்கு போட்டுக்கறேன். ஒரு சாவுக்கு போறதா சொல்லுங்கடா. அவ சாவு செய்தி கேட்டு மயங்கி கிடக்கறான்னும் சொல்லுங்கடா" என்றவள் சேலை தலைப்பை இழுத்து முட்டாக்கு போட்டுக் கொண்டு தலையை குனிந்து கொள்ள தொடங்கினாள்.

"எதுக்கு சார் இப்படி பாதி வழியில நிறுத்தி வெச்சு டார்ச்சர் பண்றீங்க. நாங்க சாவு வீட்டுக்கு போய் கிட்டிருக்கோம்" என்றான். பதில் பேசாமல் உற்றுப் பார்த்த போலீஸ்காரர் வண்டியின் ஆர்.சி புக், லைசென்ஸ் வகையறாவை பார்த்து விட்டு மயங்கிக் கிடக்கும் சாமுண்டியை பார்த்தார். ஃபர்தா முகத்தை மூடியிருந்தது.

"அது யாரு?"

"பார்த்தா தெரியல. என் அக்கா சார்."

"அவங்க பேசமாட்டாங்களா?"

"இறந்துட்டதே இவங்க வீட்டுக்காரர்தான் சார். எப்படி பேச்சு வரும்?"

அந்த பதில் மிக வேகமாக வேலை செய்தது.

"சரி சரி கிளம்புங்க.." காரும் வேகமெடுத்தது!

ரகுபதியின் கார் நாற்சக்கரச் சாலையில் நல்ல வேகமெடுத்திருந்தது. உள்ளே உள்ள போர்ட்டபிள் டிவியில் திருவிளையாடல் படத்தை தாமரையும் கவுண்டரும் வெகுவாய் ரசித்துக் கொண்டிருந்தனர்.

ஏற்காடு மலையில், செம்மநத்தத்தை தாண்டியிராத தாமரைக்கு அந்த கார் பயணம் ஒரு புது அனுபவம். ஒரு பக்கம் கண் எதிரில் ஓடும் காருக்குள் திரைப்படம். இன்னொரு புறம் வழவழவென்ற சாலையில் இரு புறமும் நழுவும் காட்சிகள். இதுபோக காருக்குள் நிலவும் ஏ.சி. என்று பல விஷயங்கள் அவளை பரவசத்தில் ஆழ்த்தியிருந்தன.

ஆனால் ஜானகியிடம் அப்படி எல்லாம் எந்த பரவசமும் இல்லை. குழந்தை இல்லை என்கிற ஒரு விஷயம் அவளை எங்கெங்கோ எப்படியெல்லாம் எல்லாமோ இழுத்துச் செல்லுகிற ஒரு வேதனைதான் அவளிடம் இருந்தது.

நடுவில் குழந்தை சிணுங்கவும் தீப்பட்டவள் போல் உணர்வுவயப்பட்டு “என்னடா ராஜா” என்று கொஞ்சலுடன் கவனிக்கத் தொடங்கினாள்.

அந்த ராஜா அவள் மடியை மூத்திரத்தில் ஈரப்பட்டு விட்டிருந்தான். மலமும் சேர்ந்து வெளியேறியிருந்தது. ஆனால் ஜானகியிடம் எந்த விதமான அருவருப்பு உணர்வும் இல்லை. மளமளவென்று சுத்தம் செய்யத் தொடங்கினாள்.

“ஏங்க இவனைக் கொஞ்சம் பிடிங்க.” என்று ரகுபதி கையில் தூக்கிக் கொடுத்தாள். அவனும்



அப்படியே மார்பில் போட்டு முதுகில் தட்டி கன்னத்தில் முத்தமிட்டான்.

இதெல்லாம் தான் மனித வாழ்வின் உன்னதமான தருணங்கள் என்பதுபோல் இருந்தது அவன் செயல்பாடு. நடுவில் செல்போன் அழைத்தது. அதோடு தொடர்பு கொண்டபோது ஒரு வியாபார விஷயம் வந்து சேர்ந்தது.

“சார் பெரிய சந்தர்ப்பம். பத்து கோடி ரூபா பிராஜக்ட்! நாளைக்கு 10 மணிக்கு நேர்ல வரச் சொல்லிட்டார்...”

“நீங்களே என் சார்பா போயிடுங்க. என்னால வரமுடியாது. நான் வர இரண்டு மூணு நாளாகலாம்.”

“சார் நீங்க தான் வரணும்னு ஆபீஸ்ல உறுதியா சொல்லிட்டாங்க.”

“அப்ப இந்த பிராஜக்டே வேண்டாம். விட்றுங்க” என்று போனை கட் செய்தான்.

“என்ன தம்பி, ஏதாவது முக்கியமான விஷயமா?” என்று கேட்டார் கவுண்டர்.

“ஆமாங்க... ஒரு பத்து கோடி ரூபா பிராஜக்ட் நேர்ல வரணுமாம்.”

“இப்ப என்ன... கோவிலுக்கு போய்ட்டு பிறகு போய் பார்த்தா போச்சு?”

“இது போட்டி உலகம் கவுண்டரே. ஒரு நிமிஷம் தாமதம் கூட பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். நாளைக்கு பத்து மணிக்கு நாம் இருந்தாகணும்.”

“அப்படியா விஷயம்!”

"அதான் வேண்டாம்னுட்டேன். வேற வழிதான் இல்லையே? நாம மந்த்ராலயம் போகவே இன்னிக்கு இரவு ஆயிடும். நாளைக்கு அங்க ராகவேந்திர சாமியை தரிசனம் பண்ணிட்டு நவ பிருந்தாவனம் போகணும்."

"நவபிருந்தாவனமா? பத்து கோடியான்னு? காலம் என்னை பார்த்து கேட்குது. நான் நவபிருந்தாவனம்னு முடிவு பண்ணிட்டேன். அம்மா அவ்வளவு தூரம் சொல்லி அனுப்பினதை விடவா இதெல்லாம் பெருசு?"

ரகுபதியிடம் நம்பிக்கை பளிச்சிட்டது. அது கவுண்டருக்கும் புரிந்து வெகு ஆச்சரியமாக பார்த்தார்.

"தம்பி உங்கள பாக்கறச்சே எனக்கு ரொம்ப பெருமையா இருக்குது. உங்க நம்பிக்கை வீண் போகாது தம்பி. இந்த யாத்திரை நம்ம எல்லாருடைய குழப்பத்தையும் போக்கி யாருக்கு என்ன தேவையோ அதை நிச்சயம் கொடுக்கும்" என்றார்.

அவர் சொன்னது தாமரை கண்களில் கண்ணீராக எதிரொலித்தது.

"நீ ஏன் புள்ள அழுவறே?"

"இல்ல... இவ்வளவு தூரம் பணம் காசை விட நம்பிக்கை பெருசுன்னு நினைக்கறவங்களும் இருக்கற ஊர்லதானே நம்ம மவனும் இருக்கான். ஆனா அவன் மட்டும் ஏங்க இப்படி தப்பு பண்ணுனான்?"

என்று தாமரை தன் மகன் சென்ராயனிடம் சென்று விட்டாள். மகனை ஞாபகப்படுத்தவும் கவுண்டர் முகமும் மாறியது.



"வாஸ்தவம் தான் புள்ள... நீ சொல்லவும் தான் நான் யோசிக்கறேன். நம்ம வயித்துல போய் இப்படி ஒரு புள்ள பொறந்துட்டானே...?"

அவரது பெருமூச்சு ரகுபதியை பேச வைத்தது.

"கவுண்டரே என்ன இது? புள்ளைப் பாசம் உங்களையும் கலங்க வைக்குதா?"

"நானும் மனுஷன் தானே தம்பி?"

"இப்ப தானே நம்பிக்கையா பேசுனீங்க? கவலை படாதீங்க. தப்பு பண்றது ஒண்ணும் பெரிய தப்பே இல்லை. அதை தொடர்ந்து பண்றது தான் தப்பு. உங்க மகனும் நிச்சயம் மாறிடுவார்.

எப்பவும் ஆயிரம் வார்த்தைகள்ள சொல்லி தர முடியாததை ஒரு அனுபவம் சொல்லித் தந்துடும். லாக்அப்புல இருக்கற அவங்க நிச்சயம் யோசிப்பாங்க. அது மட்டுமில்ல... நேரம் காலம் கூடிவந்தா எல்லாமே மாறிடும்."

"உங்க வார்த்தை பலிக்கணும். அம்மாவை நான் நம்பறேன். நல்லது நிச்சயம் நடக்கும்."

"ஆமாங்க எனக்கும் அந்த நம்பிக்கை வந்துருக்கு. இப்படி எல்லாம் நான் வெளிய வந்ததே கிடையாது. உங்க கூட இப்படி கார்ல வர்றது எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? என் மனசுலயும் இப்போ நிறைய வெளிச்சம் தெரியுது" என்றாள் தாமரை.

மொத்தத்தில் ஒருவர் மேல் ஒருவர் சாய்ந்து கொள்வதுபோல் இருந்தது அவர்கள் பேச்சும் செயலும்...

ரகுபதிக்கு போன் செய்த ராஜசேகர் லேண்ட் லைனில் ரிங்க் போய் கொண்டே இருப்பதை வைத்தே அவர்கள் வீட்டில் இல்லை என்பதை புரிந்து கொண்டார்.

அடுத்து செல்போனில் தான்... ஆனால் நாட் ரீச்சபுள் என்றே வந்தது. அவருக்கு புரிந்து விட்டது. 'ரகுபதியும் கவுண்டரும் மந்த்ராலயம் புறப்பட்டிருக்க வேண்டும்.' என்ற முடிவுக்கு வந்தார். சிறிது யோசனைக்கு பிறகு ஆஸ்பத்திரி நோக்கி புறப்பட்டார்.

ஆஸ்பத்திரியில் சுரேஷை பார்க்கும்போது அவன் அவரை எப்படி எறிடுவான் என்பதை நினைத்துப் பார்க்கவே அவருக்கு சிரமமாக இருந்தது. மனதில் நெருடல் குறையாமல் அதே சமயம் வேறு வழியும் தெரியாமல் ஆஸ்பத்திரிக்கு போய் படுக்கையில் சுரேஷை பார்த்தபோது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

சுரேஷ் நெற்றி நிறைய குங்குமத்தோடு ஒரு பக்திப் புத்தகம் படித்துக் கொண்டிருந்தான்! இடுப்புக்கு கீழே காலில் பெரிதாய் ஒரு கட்டு.

அது பாட்டும் இருக்கட்டும் என்பது போல் பக்தி புத்தகம் படித்துக் கொண்டிருந்தவன் அருகில் ஆச்சரியம் குறையாமல் போய் நின்றார்.

அவனும் அவரை புத்தகத்தை மூடியபடி எறிட்டான். அருகில் டாக்டர் நர்ஸ் என்கிற கூட்டம். அவர்களை எல்லாம் மறந்து அப்பா என்று விம்மி அழத் தொடங்கினான். அவன் அழுது அவர் அப்போதுதான் பார்க்கிறார். அந்த காட்சியே ராஜசேகருக்கு புதிது.



வேண்டா வெறுப்பாக மகனைப் பார்க்க வந்தவர் அவன் அழுவதைப் பார்க்கவும் மனம் மாறியவராக "சுரேஷ்" என்று கட்டிக் கொண்டார்.

# 29

சுரேஷின் கண்களில் வழியத் தொடங்கிய கண்ணீரை ஆறுதலாக துடைத்து விட்டார் ராஜசேகர்.

அதெல்லாமே அரிய காட்சி என்று தான் கூற வேண்டும். அப்பாவும் பிள்ளையும் எப்பவுமே எலியும் பூனையுமாக இருந்தே பார்த்தவர்களுக்கு ஒரு பெரிய நல்லது நடந்துவிட்டதாக தோன்றியது.

காபி தோட்டத்து மேஸ்திரி கையில் பழங்களுடன் சுரேஷை பார்க்க வந்தவர், ராஜசேகரும் சுரேஷிடம் பாச வலையில் நெகிழ்ந்து கொண்டிருப்பதை பார்த்து அவரும் நெகிழத் தொடங்கினார்.

"அப்பா நான் பெரிய தப்பு பண்ணிட்டேன். நீங்க சொன்னப்பல்லாம் எனக்கு புரியவே இல்லை. ஆனா இனி நான் அடுத்தவங்க தயவு இல்லாம வாழவே முடியாதுன்னு டாக்டர் சொல்லும்போது புரியுது. கடவுள் என்னை நல்லா தண்டிச்சிட்டாருப்பா!"

என்று வாக்கு மூலமும் கொடுத்தான்.

"அவர் எங்கடா தண்டிச்சார். நீ தான் குடிச்சே. ஆட்டம் போட்டே, தெருவுல போய் விழுந்தே... அவ்ரா தன் கைல இருக்கற ஆயுதங்களோட வந்து உன் காலை வெட்டுனார்?"

அந்த நிலையிலும் ராஜசேகர் சரியாகத்தான் கேட்டார்.

“வாஸ்தவம் தான் முதலாளி. முள்மேல நாம காலை வெச்சா அது குத்தத்தான் செய்யும். ஆனா முள் வந்து நம்பளை குத்திருச்சிங்கற மாதிரி தான் நாம பேசுவோம்.

இது உலக வழக்கு! ஆனா எதை இழந்தோம்கறத விட பெருசு எதை அடைஞ்சோம்கறது...

இங்க தம்பிக்கு நல்ல புத்தி வந்திருக்கறது ரொம்ப பெருசுங்க...” என்றார் மேஸ்திரி.

“சரியா சொன்னய்யா... இவன் உடம்பு நல்லா இருந்தப்பா மனசுல ஊனம் இருந்தது. இப்ப உடம்பு ஊனமாகவும் மனசு தெளிவாயிடிச்சு.

ஆனா இது மாறிடக் கூடாது... என்னப்பா இனி மாற மாட்டேல்ல?”

- சுரேஷிடம் சற்று சந்தேகப்படவும் செய்தார் ராஜசேகர்.

“அப்பா... இனியும் நான் தப்பு பண்ணா அந்த கடவுள் கூட என்னை மன்னிக்க மாட்டாருப்பா. நான் உணர்ந்து தான் பேசறேன்.

எங்க நீங்க கடைசி வரை என்னை பார்க்க வராமலே போயிடுவீங்களோன்னு நினைச்சுகிட்டிருந்தேன். இன்னிக்கு மட்டும் நீங்க வராம போயிருந்தா நான் தற்கொலை செய்துக்கற எண்ணத்துல இருந்தேன். இதோ அதுக்கான ஆயுதம்” என்று தலையணைக்கு கீழே இருந்து ஆபரேஷன் தியேட்டரில் பயன்படுத்தும் கத்தி ஒன்றை வெளியே எடுத்தான் சுரேஷ்.

ஆடிப் போனார் ராஜசேகர்!

“டேய்... உன்னால இன்னும் எவ்வளவோ நல்லது நடக்க வேண்டியிருக்குடா. இப்படி எல்லாம் எதையாவது செய்து வெச்சு என் தலைல மண்ணை அள்ளிப் போட்டுடாதே” என்று பதறியவர்,

“இப்ப நான் கேக்கற கேள்விக்கு மனசாட்சிக்கு விரோதமில்லாம பதில் சொல்லு... உன்னால ஒரு பொண்ணு பாதிக்கப்பட்டு கைல குழந்தையோட வந்து நின்னது உண்மை தானே?”

“ஆமாம்ப்பா... அருந்ததிப்பா அவ பேர்! நம்ம எஸ்டேட்ல வேலை கேட்டு வந்த அவளை நான் காதலிக்கற மாதிரி நடிச்சு ஏமாத்திட்டேன்.”

“அவ பேர் சாமுண்டின்னுல்ல சொன்னாங்க...?”

“இல்லப்பா அவர் பேர் அருந்ததி. நான் ஒரு அனாதை! மாமாவோட தயவுல இருந்தேன். ஆனா மாமா ஒரு குடிகாரன். அவரும் இறந்துவிட்டாருன்னு சொல்லித்தான் எஸ்டேட் வேலை கேட்டு வந்தா. அவளுக்கு யாரும் இல்லைங்கற விஷயம் என்னை அவகிட்ட தப்பு பண்ண வெச்சிடுச்சிப்பா...”

“குழப்பமா இருக்கே. அப்ப அந்த சாமுண்டி யாரு?”

ராஜசேகர் குழப்பத்தோடு தாடையை வருட மேஸ்திரி இடையிடத் தொடங்கினார்.

“ஐயா... டிவி விளம்பரத்துல வந்துகிட்டிருக்கற பொண்ணுதாங்க தம்பிகிட்ட வந்த பொண்ணு. அது வேலை கேட்டு வந்தப்பா நானும் இருந்தேன். டிவில

அதை சாமுண்டின்னு சொன்னப்ப எனக்கும் குழப்பமா தான் இருந்துச்சு. ஆனா தம்பி சொல்ற பொண்ணும் அதுவும் ஒண்ணுதான்'' என்றார் மேஸ்திரி.

“அப்ப சாமுண்டிங்கற பேரை யாரோ தற்காலிகமா வெச்சிருக்கணும்'' என்று ராஜசேகர் கூறிட...

“அப்ப அருந்ததி இப்ப எங்கப்பா இருக்கா? நான் அவ கால்ல விழுந்து மன்னிப்பு கேட்கணும்பா'' என்று திரும்பவும் கண்ணீர் விட்டான் சுரேஷ்.

“அவளை தொலைச்சுட்டு தான் எல்லாரும் அல்லாடிகிட்டிருக்கோம். நீ ஒருத்தன் பண்ண தப்பால எவ்வளவு பேருக்கு எவ்வளவு குழப்பம் தெரியுமா?''

“சாரிப்பா... நான் இனி எந்த தப்பும் பண்ண மாட்டேன்பா. அருந்ததி கூட நல்லவிதமா வாழறேம்பா...''

“வாழணும். வாழ்ந்தே ஆகணும். உனக்கும் வேற வழி கிடையாது. ஆனா அவ கிடைக்கறதுலதான் எல்லாம் இருக்கு!''

ராஜசேகர் அழுத்தமாய் கூறிவிட்டு அதே வேகத்தில் சேலம் போலீஸ் கமிஷனரை பார்க்கப் புறப்பட்டுவிட்டார்!

அந்த முதல் வகுப்புப் பெட்டியின் படுக்கையில் சாமுண்டியை ஒரு போர்வை போட்டு மூடி படுக்க வைத்திருந்தனர். பக்கமாய் அமர்ந்து சேகரும் மாரியும் சீட்டு விளையாட பவானியும் அவர்களோடு செட்டு சேர்ந்திருந்தாள்.

ரயிலிடம் நல்ல வேகம்!



டிடிஆர் வந்து டிக்கட்டை பரிசோதித்து விட்டு ஒரு மாதிரி பார்த்துவிட்டுத்தான் போனார்.

“இந்த ஆள் ஏண்டா இப்படி பாக்கறான்...?'' பவானி கேட்டாள்.

“கேப்மாரி எல்லாம் முதல் வகுப்புல வந்தா பாக்காம என்ன பண்ணுவான்?''

“இது ஜனநாயக நாடு நண்பா?'' எனறான் சேகர்.

“கருவாடு. நீ ஒழுங்கா சீட்ட போடு...

நம்ம மூஞ்சியில மொல்லமாரின்னு தெளிவா எழுதி வெச்சிருக்குங்கறத மறந்துடாதே...''

என்றபடி முதல் வகுப்பு அறையின் கதவை இழுத்து மூடினான் மாரி.

“வீடு மாதிரியே இருக்குதுல்ல?''

“மாதிரி என்ன... அத்தேதான்! ஆனா ஓட்ற வீடு! அதனாலதான் மந்திரிங்க, பாலிடிக்ஸ் பண்றவங்க இதுல வர்றாங்க... ஏக்கா நீயே எவ்வளவோ பார்டிய இதுல ஏத்தி விட்றுப்பியே...?''

“நான் ஏத்திதாண்டா விட்றுக்கேன். ஆனா இன்னிக்கு தாண்டா ஏறியிருக்கேன். இதுவும் ஒரு மாதிரி நல்லாதாண்டா இருக்குது.''

“இதுல தண்ணிங்கற சுருதியை சேத்துகிட்டேன்னு வை இன்னும் ஜோரா இருக்கும்.''

“சரக்கு இருக்குதாடா?''

“இருக்காவா? அது இல்லாம நாங்க எங்கேயுமே போக மாட்டோம்ல?''

"யக்கா... இந்த உலகத்துல எவ்வளவோ இட்டம் லாம் இருக்குக்கா. டிவில பாக்கும்போது எனக்கு பிரமிப்பா இருக்கும். ஆனா என் வரைல தண்ணிதாங்கா கடவுள். படைப்புலயே நம்பர் ஒன்... என்ன சொல்றே?"

சேகர் ரசனையோடு கேட்டு ஜோக்கரை இறக்கினான்.

"அதுல என்னடா சந்தேகம்? அதனாலதான் காந்தி நேருன்னு படா படா தலைங்களால கூட இதாண்ட பருப்பு வேகலை! இன்னிக்கு தமிழ்நாட்டுல இலவச அரிசி வாங்கி சாப்பிட்ற அவ்வளவு ஏழைங்களுக்கு இதான் படி அளக்குது. இது வருமானத்தை தர்றதாலதான் அங்க இலவசமா அரிசி தர முடியுது.

"சரியா சொன்னே... தண்ணியாலதான் உலகம் அழியும்னு சொல்றாங்களே அது எவ்வளவு பெரிய தப்பு?"

நீ எங்க வரேன்னு எனக்கு நல்லா தெரியுது" என்றபடி பாட்டிலை எடுத்து திறந்து பெப்பர் கப்பில் ஊற்றி முன்னால வைத்தான் மாரி. அதை ஒரே விழுங்கில் விழுங்கிவிட்டு "பாட்டிலை இப்படி தா... இது என்ன பெருமாள் கோயில்ல அய்யரு தீர்த்தம் தர்ற மாதிரி..." என்று புடுங்கினான் சேகர். பவானியும் வாங்கிக் குடித்தாள்.

ரயிலின் ஓட்டமும் ஆட்டமும் ஒரு புறம். அவர்களுக்குள் ஏற்பட்ட போதை ஒரு புறம். அப்படியே ஒருவர் மேல் ஒருவர் விழுந்தனர். அதே சமயம் சாமுண்டியிடம் மட்டும் அவளுக்கு போடப்பட்ட போதை ஊசியை மீறி மயக்கம் தெளியத்தொடங்கியிருந்தது!



மந்த்ராலயத்துக்குள் ரகுபதியின் கார் பிரவேசித்து ஒரு நல்ல ஹோட்டலின் பார்க்கிங்கில் தேங்கி நின்றது. அனைவரும் இறங்கினர். புதிய இடம், புதிய சூழல், ஹோட்டல் பணியாளர்கள் வந்து லக்கேஜ்களை எடுத்துச் சென்றனர்.

ரிசப்ஷனை நெருங்கியபோது சென்ட்ரலைஸ்டு ஏசியின் குளிர் உடம்பைக் கவ்வியது.

தாமரைக்கு தான் ஒவ்வொரு விஷயமும் அபூர்வமாக இருந்தது.

"இங்கதான் நம்ம ஊர்ல இருக்கற மாதிரி இருக்கு" என்று கவுண்டரிடம் சொல்லிக் கொண்டாள்.

ரகுபதி கவுண்டருக்கு தனியாக ரூம் போட்டான். தனக்கு தனியாக போட்டுக்கொண்டான். "கவுண்டரே ரூம்ல வென்னீர் கிடைக்கும். நல்லா குளிச்சு முடிச்சு ரெடியாகுங்க. நாம இப்ப ராகவேந்திரரோட ஜீவசமாதி இருக்கற சன்னதிக்கு முதல்ல போகப் போறோம்" என்றான்.

"தம்பி நம்ம ரஜினிகாந்த் சாமியாரா நடிச்சாரே அவர்தானே?" தாமரை அப்பாவித்தனமாக கேட்டாள்.

"ஆமாம்மா... ராகவேந்திரர் தான் ரஜினி. இன்னிக்கு இவ்வளவு உயரத்துல இருக்கவே காரணம்" என்று ராகவேந்திரரை அவள் முன் தூக்கி நிறுத்தினான் ரகுபதி. சினிமா இன்று பல அற்புதங்களை சாதாரணமாகவும் பல சாதாரணங்களை அற்புதமாகவும் மாற்றிவிட்டதும் அவனுக்கு புரிந்தது. அதன்பின் ஒரு மணி நேரத்தில் அவர்கள் தயாராகி ராகவேந்திரரின் ஆலயத்துக்கும் வந்துவிட்டனர்.

"இந்த கோவிலுக்கு என்ன சிறப்பு?" தாமரை கேட்டாள். அதற்கு ஒரு சரியான பதில் ரகுபதிக்கு தெரியவில்லை. ஆனால் அது அவர்களை கடந்து சென்ற ஒரு பெரியவர் காதில் விழுந்து அவர் அவர்களிடம் வந்தார்.

"நீங்க தமிழ்நாடா?"

"ஆமாங்க."

"நான் எனக்கு தெரிஞ்சதை சொல்லலாமா?"

"ஆஹா தாராளமா சொல்லுங்க."

"கடவுள் மனுஷ்ய ரூபிணே'ன்னு ஒரு பதம் உண்டு. அதாவது கடவுள் மனுஷ வடிவத்துல வந்துதான் வழி காட்டுவார். அப்படி மனுஷ வடிவத்துல வர அவர் விரும்பும்போது மகான்கள் மூலமா அவர் வந்து வழி காட்றாரு. ராகவேந்திரரும் ஒரு பெரிய மகான். உண்மைல ராகவேந்திரர்தான் பூர்வ ஜென்மங்கள்ள பிரகலாதனாகவும், லட்சுமணனாகவும், ஆதிசேஷனாகவும் அவதாரம் எடுத்தது...!

இதுக்கு சாட்சி என்னன்னு கேட்காம நம்பிக்கை அடிப்படைல ஏற்கணும். ராகவேந்திரர் ஜீவசமாதி ஆன இந்த இடத்துக்கு மந்த்ராலயம்னு பேர். மந்திரமே இங்க கோவிலா இருக்குன்னும் சொல்லலாம். மனசோட திறம் தான் மந்திரம். அதனால இங்க யார் வந்தாலும் அவங்க மனசுல அமைதி முதல்ல ஏற்படும். அப்புறம் தெளிவு ஏற்படும். அப்புறமா சந்தோஷம் ஏற்படும் அப்படி ஏற்படணும்னு தான் ராகவேந்திரர் இங்க கோவில் கொண்டிருக்கார்.



மகான்கள் உடம்பு வேணா அழியலாம். ஆனா அவங்க ஆத்மாவுக்கு அழிவே இல்லை. அது இங்க இப்ப நாம பேசறதையும் கேட்டுகிட்டு இருக்கு

நாம நம்பிக்கையோட உருக்கமா நம்ம மனசை அவர் காலடி கிடத்தினா. நமக்கு எது தேவையோ அதை அவர் நமக்கு கொடுப்பார்."

பெரியவரின் விளக்கம் சுருக்கமாகவும், அழுத்தமாகவும் இருந்தது.

அப்போது குழந்தை அழுதது!

"தாயில்லாம தவிக்கற இந்த குழந்தையோட தாய் கிடைச்சா போதும்" என்றாள் தாமரை.

ஆனால் அது ஜானகியை வெகுவாக பாதித்தது கலக்கமாய் தாமரையை பார்த்தாள்.

"தப்பா எடுத்துக்காதம்மா... என்னையும் மீறி வாய்ல வந்துடுச்சு. இந்த குழந்தைக்கு உன்னை விட ஒரு நல்ல தாய் கிடைக்க முடியாது" என்று சமாளிக்க பார்த்தாள் தாமரை.

"போதும் புள்ள... பெரியவர் என்ன சொன்னாருன்னு கேட்டியோ? நமக்கு எது தேவையோ அதை சாமி கொடுப்பாருன்னு. நாம எதையும் கேட்க தேவையே இல்லைன்னு அர்த்தம். தாயி உனக்கு தேவைதான். அதை அவர் சத்தியமா கொடுப்பாரும்மா... வாங்க சன்னதிக்கு போவோம்."

கவுண்டர் சமாளித்து சன்னதியை நோக்கி நடந்தார்.

# 30

நாகவேந்திரரின் ஜீவசமாதியில் அவ்வளவாக கூட்டம் இல்லை. அங்கும் இங்குமாய் சிலர் இருந்தது ஜானகிக்கு மிக வசதியாகப் போனது. கையில் குழந்தையுடன் அந்த பிருந்தாவனத்தை வலம் வந்தவள் ஒரு சரியான இடமாக பார்த்து அமர்ந்தாள். மடிமேல் குழந்தையையும் விட்டுக் கொண்டாள். அவள் மனம் விட்டு பிரார்த்தனை செய்ய விரும்புகிறாள் என்பது ரகுபதிக்கும் புரிந்தது. அவனும் அவள் அருகிலேயே அமர்ந்து கொண்டான். அவர்கள் இருவர் செயலையும் பார்த்து கவுண்டரும் அவர் மனைவியும் ஒரு இடத்தில் அமர்ந்துகொண்டனர்.

“இங்க இப்படி உட்காரலாமா?” தாமரை கவுண்டரிடம் கேட்டாள்.

“எல்லாரும் உட்கார்றாங்கல்ல... கேள்வி கேக்காம நீயும் உக்காரு...”

“உக்கார்ந்து என்ன பண்ணணும்?”

“உன்ன மலைக்காட்டுலயே வெச்சிருந்த தப்புக்கு இப்ப நான் அனுபவிக்கிறேன். நீ பேசாம இரு. முடிஞ்சா அந்த சாமிகிட்ட உன் மவனுக்காக பேசு...”

“புரியுது... மனசுக்குள்ள கும்புட்டுங்க சொல்றீங்க.”

“அதே தான்” கவுண்டர் அழுத்தமாய் கூறவும் தாமரை கண்களை மூடிக்கொண்டு தன் மகன் சென்றாயன் திருந்த வேண்டும். விடுதலையாகி விட வேண்டும். அவனுக்கும் நல்லபடியாக திருமணம் நடந்து நானொரு பேரன் பேத்தியை பார்க்க வேணும் என்கிற



ஆசைகளில் ஊர்வலம் போகத் தொடங்கி விட்டாள் தாமரை. கிட்டத்தட்ட அதே எண்ணங்கள் தான் கவுண்டரிடம்...

மனித வாழ்வே சாகும் வரை இப்படித் தேவைகளும் ஆசைகளுமாய் திகழ்வது தானோ?

ஜானகி மடி மேல் உள்ள குழந்தையையே பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது அவளுக்கு அருகில் ஒரு பழுத்த சுமங்கலிப் பெண் மடிசார் உடுத்தி தலை நிறைய பூவோடு வந்து அமர்ந்தாள். அவளைப் பார்த்தால் பார்த்துக்கொண்டே இருக்கத் தோன்றும் விதமாக அவள் இதழ்களில் ஒரு குருநகை.

ரகுபதி தியானத்தில் மூழ்கி விட்டிருந்தான். அவன் அந்தப் பெண்மணி வந்து அமர்ந்ததையே உணரவும் இல்லை.

“என்னம்மா... குழந்தைக்கு ஏதாவது பிரச்னையா?” அந்த பெண்மணி ஆரம்பித்தான்.

“குழந்தையே எனக்கு பிரச்னை தாம்மா.” ஜானகியும் தன்னை மறந்து பதில் சொல்லத் தொடங்கினாள்.

“உன் பேச்சு எனக்கு புரியல...”

“அம்மா இது என் குழந்தை தான். ஆனா நான் பெறாத குழந்தை.”

“சுவீகார புத்திரனா?”

“ஆமா, ஆனாலும் இவன் என்னைவிட்டு போயிடுவானோன்னு மனசு கிடந்து அடிச்சுக்குது.”

“அதனாலதான் இங்க வந்தியா?”

"அதனாலையும் இங்க வந்தேன்..."

"கவலைப்படாதே... எப்ப இங்க வர விதி இருக்கோ அப்ப அது நல்ல விதியா தான் இருக்கணும். உன் பிரச்சினை தீரப் போற நேரம் வந்தாச்சுன்னு தான் அர்த்தம்..."

"ஆனா எனக்குள்ள அந்த நம்பிக்கை குறைஞ்சுட்டேதாம்மா போகுது. உலகத்துல கோடி கோடி பேர். மக்கள் தொகைதான் இப்ப இந்த உலகத்தோட பிரச்சினையே... ஆனா எனக்கொரு பிள்ளையை தர அந்த கடவுளுக்கு மனசில்லாம போச்சேம்மா..."

"கர்மம் தடுக்கும்போது கடவுளால என்னம்மா பண்ண முடியும்?"

"இது என்ன பதில். எனக்கு தெரிஞ்சு நான் எறும்புக்கு கூட துரோகம் செய்ததில்லம்மா..."

"உன் பதிலுக்குள்ளயே பதில் இருக்கு பார். தெரிஞ்சுதான் ஈ எறும்புக்கு கூட நீ துரோகம் செய்ததில்லை. தெரியாம செய்திருக்கேன்னு தானே அர்த்தம்."

"அப்படிப் பார்த்தா இந்த உலகத்துல ஒருத்தர்கூட தேற முடியாதே..."

"அடுத்தவங்களை பத்தி பேசாதே... நீ பாக்கறது கேக்கறது புரிஞ்சுக்கறதுங்கற மூணும் உன் வரைலயே தெளிவில்லாதப்ப அடுத்தவங்க வரைல எப்படி சரியா இருக்க முடியும்?"

"நீங்க என்னதான் சொல்ல வர்றீங்க?"

"நாம அழறதுக்கும் சரி, சிரிக்கறதுக்கும் சரி. சரியான காரண காரியம் இருக்கும்மா. காரணமில்லாம எதுவுமே இந்த உலகத்துல கிடையாது."



"இந்த மாதிரி தத்துவமான பதில் என் மனசை குருப்திப்படுத்தாதும்மா. எனக்கு குழந்தை இல்லைங்கறதை தாங்கிகிட்டு ஒரு தத்து குழந்தையை என் குழந்தையா நான் நினைக்கும்போது இந்த குழந்தைக்கும் பிரச்சினை வந்தா நான் என்னம்மா பண்ணுவேன்?"

"இப்படி பேசிகிட்டே அழுதுகிட்டே தாங்கிக்கறது தானே மனுஷங்களோட வழக்கம்...?"

"அதுக்கும் ஒரு எல்லை இருக்கும்மா... இந்த குழந்தையும் என்னைவிட்டு போயிட்டா நான் தற்கொலை செய்துக்க தயங்கவே மாட்டேன்..."

"அது தான் உன் விதின்னா யாராலம்மா மாற்ற முடியும்?"

அந்த பெண்மணி அப்படி ஒரு பதிலை கூறவும் ஜானகிக்கு பொசுக்கென்று போய்விட்டது. இதைச் சொல்லவா இத்தனை தேஜசோடும் லட்சணத்தோடும் அருகில் வர வேண்டும். ஜானகி அந்த பெண்ணை வெறித்தாள்.

"என்னம்மா பாக்கறே?"

"உங்க பதில் எனக்கு அதிர்ச்சியா இருக்கு... உங்ககிட்ட இருந்து ஆறுதலா ஏதாவது கிடைக்கும்னுதான் நான் நம்பினேன்."

"உனக்கு ஆறுதலா நான் விஷயத்தை தான் சொல்ல முடியும். வருத்தம் எப்பவும் அதிகமா இருக்குன்னா சந்தோஷத் தட்டுல எடை குறைவா இருக்குன்னு அர்த்தம். அந்த தட்டுல நம்பிக்கைங்கற பிரார்த்தனையை வை. எவ்வளவுக்கெவ்வளவு வைக்கிறியோ அவ்வளக்கவ்வளவு தட்டு கனமாகி வருத்தம் சிறிதாயிடும்."

"ஒவ்வொரு நொடியும் நான் பிரார்த்தனை செய்து கிட்டு தானே இருக்கேன்."

"உண்மையா பிரார்த்தனை செய்தியா?"

"செய்தியாவா? என்னப் பார்த்தா உங்களுக்கு தெரியலியா?"

"உண்மையான்னா. புரிஞ்சு பிரார்த்தனை செய்யற துன்னு அர்த்தம். நீ பிரார்த்தனை செய்யலேன்னு நான் சொல்லல. புரிஞ்சு செய்யணும்."

"புரிஞ்சு செய்யறதுன்னா?"

"நல்லா கேட்டுக்கோ. எந்த ஒரு நல்லதுக்கும் கெட்டதுக்கும் நம் செயல்தான் காரணம். நம்ம நிழல் போல அதுவும் கூடவே வரும். எப்ப பிள்ளைப்பேறு இல்லையோ அப்ப அந்த கர்மமும் அந்த ரகம்தான். முதல்ல இதை ஒத்துக்கணும். நாம போட்ட குப்பையை நாமதான் எடுத்துப் போடணும். நாம வாங்கின கடனை நாமதான் வட்டியோட கட்டணும்.

அந்த வகைல பிள்ளை இல்லாத குறையை முதல்ல முழு மனசா ஏத்துக்கோ. கடவுளே இந்த தண்டனையை நான் முழுசா அனுபவிச்சு தீக்கறேன்னு சொல்லு. அது தான் நீ புரிஞ்சு பிரார்த்தனை செய்யறதுக்கு அர்த்தம்.

பிராந்தர்ங்கற சித்தர் முன்னால அவர் அழைக் காமலே காளிதேவி பிரசன்னமானா. பிரசன்னமான தோட பிராந்தரோட தீராத வியாதியையும் குணப் படுத்தறேன்னு சொன்னா! ஆனா பிராந்தர் வேண்டாம் நீ புறப்படுன்னு சொல்லிட்டார். காளிதேவி ஆச்சரியப் பட்டா. இது கர்மத்தால வந்தது. நான் அனுபவிச்சே



...ட்டேன்னு! உன் கருணையால இது தீர்ந்து போனா ...க்கு முழு வலி தெரியாமலே போயிடும்னு பதில் ...ன்னார்.

இப்படி ஒரு மனத்தெளிவோடயும் துணிவோட ...ம் தான் பிரார்த்தனை செய்யணும். இந்த ஜென் ...த்துல நாம தவறுகள் செய்யாம இருந்திருக் ...லாம். ஆனா அதற்கு முன்பு பல பிறப்புகள் கடந்து ...ான் மனிதப் பிறப்புக்கே வந்திருக்கோம். அந்த பிறப்புல நாம ஒரு தவறும் செய்யலைன்னு எப்படி சொல்ல முடியும்?

அதனாலதான் பிராந்தரோட மனநிலை நின்னு கர்மத்தை அனுபவிக்கறதை நான் உண்மையான பிரார்த் தனைன்னு சொன்னேன். பிரார்த்தனை மட்டும் செய் தாலே போதும். அவன்கிட்ட எதையும் கேட்க தேவையே இல்லை. உனக்கொரு அப்பா அம்மா உனக்கொரு கணவன் - உனக்குன்னு ஒரு ஊர் அதுல சுற்றங்கள்னு எல்லாத்தையும் அவன் உன்கிட்ட கேட்டா கொடுத் தான். இதெல்லாம் எப்படி தானா அமைஞ்சுதோ அப்படித்தான் உனக்கு கிடைக்க வேண்டிய எல்லாமும் தானா கிடைக்கும்."

அந்த பெண்ணின் பேச்சில் அளவுக்கதிகமான ஞானமும், பொருளும் இருந்து ஜானகியை ஸ்தம்பிக்க வைத்துவிட்டது.

"எதையும் கேட்காதே- இங்க வந்து வணங்க முடிஞ் சதே பாக்யம்தான். இதைவிட ஒரு பெரிய விஷயத்தை நீ கேட்டுட முடியாது. எப்பவும் நீதியோட நியாயத்தோட நடந்துக்கோ. எது நடந்தாலும் ஏத்துக்கோ.

இங்க இருந்து பக்கத்துல இருக்கற நவபிருந்தா வனம்ங்கறது ஒன்பது கோள்களோட குணங்களையும் உடைய இடம். அங்க போகும்போது ராசிச் சக்கரத்துல பெரும் சக்தி சேரும். பெரும் சக்தி நம்ம ராசிச் சக்கரத்துக்கு தேவைன்னா அங்க போகணும். இதை உத்தேசிச்சு தான் ஒன்பது மகான்கள் அங்க ஜீவ சமாதி அடைஞ்சாங்க. துவைச்சா அழுக்கு போகும். குடிச்சா தாகம் தீரும். அதுமாதிரி அங்க போனாலே ஒரு உயிருக்கு சமநிலை ஏற்பட்டுடும். போ... அங்கயும் போய் வணங்கு எதையும் கேட்காதே. கேட்கறவங்கள கடவுளுக்கு ஒரு பங்கு தான் பிடிக்கும். கேட்காத வங்களதான் கடவுளுக்கு பல மடங்கு பிடிக்கும்..."

அந்த பெண்மணி சொல்ல சொல்ல கரகரவென்று கண்களில் கண்ணீர் சுரக்க ஆரம்பித்தது ஜானகிக்கு. புடவை முந்தியால் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தால் அந்த பெண்மணி அங்கு இல்லை.

திகைப்பாக மட்டுமல்ல. சிலிப்பாகவும் இருந்தது ஜானகிக்கு!

ஒரு ஆச்சரியம் போல ரகுபதி ஜானகிக்கு நடந்த எந்த உபதேசம் பற்றியும் தெரிந்திடாத நிலையில் அவன் தியானம் தொடர்ந்து கொண்டிருந்தது. அது ஜானகி வரையில் இன்னமும் ஆச்சரியம் தந்தது.

சற்று தள்ளி கவுண்டரும் அவர் மனைவி தாமரையும் கூடவா அதேபோல் இருக்க வேண்டும்?



அந்த ரயில் மந்த்ராலயம் கேட் எனும் ஸ்டேஷனில் நின்றபோது நள்ளிரவு! கோஷா உடையோடு கண்விழித்திருந்த சாமுண்டிக்கு அதிகாலை தூக்கம் கலைந்தவுடன் ஏற்படும் அதே அளவு சுறுசுறுப்போடு தன்னைப் பற்றிய பிரக்ஞையும் மெல்ல ஏற்படத் தொடங்கியிருந்தது.

அவளுக்கு அருகில் பவானியும், சேகரும் மாரியும் போதையில் புழுவைப் போல சுருண்டு படுத்திருந்தனர்.

எழுந்து நின்றாள். தன்னை தானே ஒரு முறைக்கு பல முறை பார்த்துக்கொண்டாள். ஜன்னலை ஒட்டியிருந்த கண்ணாடியிலும் முகம் தெரியவே வெறித்தாள். அவர்கள் போதை ஏற்றுவதாக நினைத்து போட்ட ஊசிகளே ஆழ்ந்த உறக்கத்தில் அவளை ஆழ்த்தி, விழிப்பு ஏற்படும்போது அவளுக்கு பழைய நினைவுகளை கொண்டு வந்து விட்டிருந்தது.

ஆனால் அதெல்லாம் எதுவுமே அவளுக்கு தெரியவில்லை. மாரி, சேகர், பவானி மூவருமே அன்னியமாக தெரிந்தார்கள்.

மெல்ல நடந்து கதவை திறந்துகொண்டு வெளியில் வந்தாள். பெட்டியை திறந்து கொண்டு ஸ்டேஷனில் கால் வைத்தாள். பலர் அங்கே இறங்கியிருந்தனர். அவர்களிடம் சென்று கேட்டாள்.

"இது எந்த ஸ்டேஷன்?"

"மந்த்ராலயம் கேட்டும்மா..."

"இது எங்க இருக்கு?"

"சரிதான் தப்பா வண்டி ஏறிட்டியா நீ?"

"நான் இந்த ரயில் பெட்டிக்கு எப்படி வந்தேன்னே தெரியலை."

"என்னம்மா சொல்றே. ஆனா உன் கூட யார் வந்தாங்க?"

"அதான் சொன்னேனே... எனக்கு எதுவுமே தெரியலை." அவள் அவர்களிடம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ரயிலும் புறப்பட்டுவிட்டது. அவளுக்கு அதைப் பற்றிய கவலையும் இல்லை. அவர்களோ அவளிடம் கேட்பதை விட்டுவிட்டு மூட்டை முடிச்சுகளுடன் ஒரு வேன் ஒன்றில் ஏறத் தயாராயினர். ஒரே ஒரு விளக்கு கம்பம் தான். கம்பத்தின் வெளிச்சத்தில் அவர்களை தெளிவாக பார்க்க முடியவில்லை.

"சாமுண்டியும் ஏறி அமர்ந்தாள்."

## 31

அந்த வேன் புறப்பட்டது!

இருண்ட இரவில் தார்ச்சாலை மேல் புழுதி பறக்க வேகமெடுத்தது. உள்ளே சாமுண்டி யாரென்றே தெரியாத ஒருவருக்கு அருகில் உட்கார்ந்திருந்தாள். அவளுக்குள் இனம்புரியாத குழப்பம்.. குறிப்பாக தன்னைப் பற்றியே! அந்த வேனுக்குள் ஒரு பெண் கைக்குழந்தை ஒன்றோடு ஏறியிருந்தாள். அந்த குழந்தை சிணுங்கி அழவும் அவளும் தோளில் போட்டு சமாதானம் செய்ய முயன்றாள். அந்த குழந்தையின் சப்தம் சாமுண்டிக்குள் அவள் குழந்தையின் நினைவுகளைக் கிளறி விடத் தொடங்கின.



குழந்தையை பற்றிய நினைப்பு வந்த மாத்திரத்தில் சற்று நெஞ்சை அடைத்தது. ஏற்காட்டு மலையில் செம்மதத்தம் கிராமத்தில் சப்த கன்னி கோயிலில் விரக்தியோடு தன் குழந்தையை விட்டுவிட்டு கிணற்றில் போய் உயிரை விடுவதற்காக குதித்தது வரை நினைவுக்கு வந்தது. அதன்பிறகு சுத்தமாக எதுவும் நினைவுக்கு வரவில்லை. அதற்கு பிறகு தான் ஏதேதோ நடந்திருக்கிறது! அதன் தொடர்ச்சியில் தான் ரயில் பயணம் என்பது மெல்லப் புரிந்தது. ஆனால் அந்த பயணம் மட்டும் தொடர்ந்திருந்தால் மும்பை சிகப்பு விளக்குப் பகுதியில் தான் அங்குள்ள பல பெண்களில் ஒரு பெண்ணாக ஆகிவிட்டிருக்கும் கொடூரம் பற்றி எல்லாம் துளிகூட அவள் அறிய வாய்ப்பேயில்லை. பவானியும் சேகரும் மாரியும் எதிரில் வந்து நின்றால் அவர்களை புதிதாகத் தான் பார்ப்பாள்.

வேனுக்குள்ளேயோ-எங்கே போகிறோம் என்பதில் குழப்பமாக இருந்தது. பக்கத்தில் இருப்பவரிடம் கேட்டாள்.

"இந்த வேன் இப்ப எங்க போகுது?"

"இது நவபிருந்தாவனம்கற இடத்துக்கு போயிட்டு அங்க இருந்து மந்த்ராலயம் போகுது" என்றார் அவர். அவருக்கு தமிழ் பேசத் தெரிந்திருந்தது ஒரு ஆச்சரியம்.

"நவபிருந்தாவனத்துல அப்படி என்ன இருக்கு?" என்று அடுத்த கேள்வியை கேட்டாள்.

"இது கூட தெரியாமலா வேன்ல ஏறினே?"

"நான் வழிமாறி வந்துட்டேன். கொஞ்சம் உதவி செய்யுங்க ஐயா..."

"உனக்கு எந்த ஊர்?"

"எனக்கு சொந்த ஊர் சேலம் பக்கம் ஆத்தூர். வேலை தேடி ஏற்காடு எஸ்டேட்டுக்கு போனவ தான் இப்ப இங்க இருக்கேன்."

"சரிதான்... இது ஆந்திராம்மா... நீ சொல்றதோ தமிழ்நாடு. ஆனா இந்த பக்கம் எப்படி வந்தே?"

"சத்யமா தெரியலய்யா..."

"என்ன பேசறே நீ...? நீ சொன்ன சேலம் ஆத்தூருக்கும் இந்த இடத்துக்கும் நடுவுல, கிட்டத்தட்ட ஆயிரம் கிலோ மீட்டர்மா. இவ்வளவு தூரம் எதுல வந்தே? எப்படி வந்தே?"

"அய்யா நான் சுயநினைவு இல்லாம இருந்தேன். இப்பதான் நினைவு திரும்பியிருக்கு. அதனால பழசு எதுவும் ஞாபகத்துக்கு வர மாட்டேங்குது. என்னை நம்புங்கய்யா."

சாமுண்டி கெஞ்சும் குரலில் பேசியது நன்றாகவே வேலை செய்தது.

"சரி இப்ப நான் உனக்கு என்ன செய்யணும்ங்கறே?"

"நான்... நான் செம்மநத்தம் போகணும். அதுக்கு உதவி செய்தா போதும்யா..."

"அது எங்க இருக்கு?"

"சேலம் ஏற்காடு மலைமேல..."

"சரி... நான் திருச்சியில இருந்து சாமி தரிசனம் பண்ண வந்திருக்கேன். நான் என் மனைவி குழந்தைங்கன்னு நாலுபேர். நீ எங்க கூடவே வா. திரும்ப போகும்



போது உன்னை சேலத்துல விட்டுட்றேன். அங்க இருந்து நீ போய்க்கோ."

"இது போம்யா... இது போதும் எனக்கு."

"ஒரு விஷயம் நல்லா தெரிஞ்சுக்க... வழி தவறிட்டவ மாதிரி நடிச்சு அனுதாபத்தை சம்பாதிச்சு எங்களை ஏமாத்தி எங்கிட்ட இருந்து எதையாவது களவாட்ற எண்ணம் இருந்தா இப்பவே விலகிப் போயிடு. நாங்க யாத்திரை வந்திருக்கோம். யாத்திரைல உதவி செய்யறங்கறது ஒரு நல்ல விஷயம். அதனால உனக்கு உதவி செய்யறேன். அதை தப்பாக்கிடாதே."

அவரது எச்சரிக்கை பேச்சை கேட்டு அவள் விரக்தியாக சிரித்தாள்.

"ஐயா நான் ஒரு பரிதாபத்துக்குரிய பிறவி. பெத்த குழந்தையை கூட வெச்சுக்க துப்பில்லாதவ. என் கதையை கேட்டா எப்பேர்ப்பட்ட கல் மனசும் கனத்துப் போயிடும். நீங்க நினைக்கற மாதிரி நான் தப்பான பெண் இல்லைய்யா..." என்றாள் சோகம் மிகுந்த குரலில்...

"நீ சொல்றது தான் உண்மைன்னா நீ உனக்கே தெரியாம ஒரு நல்ல இடம் நோக்கித்தான் வந்துகிட்டிருக்கே. நவபிருந்தாவனம்கறது இந்த பூலோகத்துல இருக்கற ஒரு புனிதமான இடம். காசிக்கு போய் கரையாத பாவம்கூட இங்க வந்தா கரையும்னு சொல்லக் கேட்டிருக்கேன். எங்க வாழ்க்கைலயும் எவ்வளவோ பிரச்சினைகள். நிம்மதிக்காகதான் நாங்களும் வந்திருக்கோம்" என்றார் அவர்.

அதை கேட்டு அவளும் நெகிழ்ச்சியோடு அந்த பிருந்தாவனத்தை கண் கலங்க நினைத்தாள். அவள் மனதிற்குள் தன் குழந்தையின் எண்ணம்...

"சாமி எனக்கு முக்தி, மோட்சம், தங்கம், வைரம்னு எதுவும் வேண்டாம். எனக்கு என் குழந்தை கிடைச்சா போதும்" என்று அவள் தாய்மை துடித்தது.

காலை மிகச்சரியாக ஆறுமணி.

காருக்குள் ரகுபதி ஜானகி கவுண்டர் தாமரை என்று நான்கு பேரும் இருந்திட காரும் புறப்பட்டது.

"இப்ப எங்க தம்பி போறோம்?" என்று கேட்டார் கவுண்டர்.

"கஜலட்சுமியம்மா சொன்னா நவபிருந்தாவனத்துக்கு கவுண்டரே."

"அது ஏன் சமாதிங்களை பிருந்தாவனம்னு சொல்றாங்க..."

"தெரியல கவுண்டரே... ஆனா வனம்னா காடுன்னு தெரியும். காட்லதான் எல்லாமே இருக்குமே. அந்த மாதிரி இந்த பிருந்தாவனத்து சித்தர்கள்கிட்டயும் நமக்கு தேவைபட்ற எல்லாமே இருக்கலாம்."

"அப்ப நாம இங்க கேக்கற எல்லாம் கிடைக்கும்னு சொல்லுங்க" என்றாள் தாமரை.

"நிச்சயமா..."

"அப்ப நீங்களும் உங்களுக்குன்னு ஒரு பிள்ளை பிறக்கணும்னு வேண்டிக்குங்க..."

தாமரை உடனேயே அப்படி சொல்வாள் என்று ஜானகியும் சரி ரகுபதியும் கூட எதிர்பார்க்கவில்லை. இருவரிடமும் அடர்த்தியான மௌனம் நிலவியது.



"ஏன் பேசமாட்டேங்கறீங்க... நான் தப்பா சொல்லிட்டேனா?"

"அதெல்லாம் இல்லம்மா. ஆனா அது சாத்யமில்லை. எங்களுக்கு இதோ கஜேந்திரன் மாதிரி சுவீகாரக் குழந்தை நிலைச்சா போதும்..." என்றான் ரகுபதி.

"அப்ப டாக்டருங்க ஜானகியால பிள்ளை பெற முடியாதுன்னே சொல்லிட்டாங்களா?"

"ஆமாம்... கருப்பை தேவையான வளர்ச்சி அடையல. அதுமட்டும்மில்ல நிறைய கோளாறுங்க..."

ரகுபதிதான் சொன்னான். ஜானகி மௌனமாகவே வந்தாள்.

"ஏம்பா நீ எதுவும் பேசமாட்டியா?"

தாமரை மெல்ல அவளை சீண்டினாள்.

"நான் பேச என்ன இருக்கு?" மிருதுவான குரலில் திருப்பி கேட்டாள் ஜானகி. மடிமேல் கஜேந்திரன்.

"என்னப்பா சாமியார் மாதிரி கேக்கறே?"

"அப்படி கூட சொல்லலாம்."

"போதும் என்னாச்சு உனக்கு?" தாமரையிடம் நல்ல ஸ்னேக பாவம்.

"எதுவும் ஆகலை. இப்பதான் நான் தெளிவுல இருக்கேன்."

"தெளிவுல இருக்கியா. விரக்தில பேசறியா?"

"விரக்தியா... சேச்சே...! நேத்து கோவில்ல அந்த ராகவேந்திரர் என் கண்ண திறந்து விட்டுட்டார். கடவுள் கிட்ட நாம எதையும் கேட்கத் தேவையே இல்லை. நாம

நல்ல மனுஷங்களா நடந்துகிட்டா போதும். நமக்கு எது நடந்தாலும் அதனால நல்லது தான் நடக்கும்."

ஜானகியின் பேச்சு ரகுபதியையும் ஆச்சரியப் படுத்தியது.

"ஜானகி... நீ நிஜமா ஒரு தெளிவோட தான் பேசறியா?"

"ஏங்க... உங்களுக்கு என்ன பாக்க ஆச்சரியமா இருக்கா?"

"ஆமாம்... எப்பவும் டென்ஷனோட பறி கொடுத்த மாதிரியே இருந்த நீ இப்படி பேசறதெல்லாம் ஆச்சரியமான விஷயம் தான். எது உன்னை இப்படி மாத்திச்சு?"

"எதுவா... என் கூட ஒரு அம்மா பேசிக்கிட்டிருந் ததை நீங்க கேக்கலியா?"

"அம்மாவா?"

"ஆமாங்க... பழுத்த சுமங்கலி. அந்த அம்பாளே நேர்ல வந்த மாதிரி வந்து என் பக்கத்துல உக்காந்து அவங்க பேசின ஒவ்வொரு வார்த்தையும் அட்சரலட்சம் பெறுங்க."

"நான் பாக்கவேயில்லையே."

"அப்ப நீங்க தியானத்துல இருந்தீங்க."

"நடுவுல நான் கண் திறந்து உன்னையும் பாத்து கிட்டுதான் இருந்தேன். உன்கிட்ட நான் யாரையுமே பாக்கலியே."



"இதுக்கு நான் என்ன சொல்ல முடியும்? ஆனா நான் பொய் சொல்லலேங்க..."

ஜானகி பதட்டமே இல்லாமல் சொன்ன விதம் ரகுபதியை வெகுவாக யோசிக்க வைத்தது.

"ஜானகி அவங்க என்ன சொன்னாங்க அப்படி"

"நல்லதை எல்லாமே சொன்னாங்க. ரொம்ப பக்குவமா சொன்னாங்க. கடவுள் கிட்ட நாம எதையுமே கேட்க தேவையில்லைங்க! அவருக்கு தெரியும் எப்ப எதை தரணும்னு..."

"அப்ப இந்த குழந்தையை ராஜசேகர் சார் கேட்டா கொடுத்துடுவியா?"

"நிச்சயமா..."

பளிச்சென்ற அவள் பதில் ரகுபதிக்கு அடுத்த ஆச்சரியம். நடுவில் செல்போனில் அழைப்பு. திரையைப் பார்க்கவும் ராஜசேகர் பெயர்.

"யாருங்க?"

"நான் இப்ப யார் பேர சொன்னேனோ அவர் தான்..."

"முதலாளியா... பேசுங்க... பேசுங்க..." என்று குறுக் கிட்டார் கவுண்டர். ரகுபதியும் பேசத் தொடங்கினார்.

"என்ன ரகுபதி... கடைசில என்னை விட்டுட்டே புறப்பட்டீங்க போல இருக்கு?"

"ஆமாம் சார். எங்க நம்பிக்கை எங்களுக்கு"

"அதுவும் சரிதான். இப்ப எங்க இருக்கீங்க?"

"நவபிருந்தாவனம் போய்கிட்டு இருக்கோம்..."

"அந்த கெஜலட்சுமி அம்மா சொன்ன மாதிரி நல்லதா எதாவது நடந்ததா?"

"நல்லதான்னா?"

"நல்லாதான்னா நல்லதாதான்... இங்க சாமுண்டிங் கற அந்த பொண்ணு இன்னும் கிடைக்கல..."

"அப்ப அவ கிடைச்சுட்டா நீங்க அம்மா சொன் னதை நம்புவீங்க அப்படிதானே?"

"அதுல என்ன சந்தேகம். என் அக்கா கேட்டது லேயும் தப்பு இருக்கற மாதிரி தெரியல. அவ்வளவு தூரம் நீங்க அங்க போனதுக்கு சொல்லிக்கற மாதிரி எதாவது நடந்தாதானே நல்லா இருக்கும்?"

"சரி சார்... நீங்க நீங்களா இருங்க... நான் நானா இருக்கேன். நான் இப்ப நவபிருந்தாவனம் போய் கிட்டிருக்கேன். போற வழில உங்க பேச்சால என் மனசு சலனப்பட்றத விரும்பல. வெச்சிட்றேன்" என்றான்.

தெளிவான பதில்!

அந்த காலை வேளையில் ரயில் பெட்டிக்குள் கண் விழித்த பவானிக்கும் சேகருக்கும் மாரிக்கும் பகீர் என்றது. சாமுண்டியை காணாத குழப்பத்தோடு கோச் அட்டெண்டரிடம் சென்று எங்கே எங்களோடு வந்த பெண்? என்று கேட்கவும் அவர் 'யாருக்கு தெரியும்?' என்று திரும்பிக் கேட்கவும் கோபமாக வந்தது சேகருக்கு.



"என்னய்யா சொல்றே... ராத்திரி வண்டி எங்க நின்னுச்சு?"

"அது ஒரு ஏழெட்டு ஸ்டேஷன்ல நின்னுருக்கும்."

"அது ஒரு ஏழெட்டு ஸ்டேஷன்லயா?" என்று கேட்டு வாயைப் பிளந்த சேகர் திரும்பி வந்தவனாய் "அக்கா எப்படி வந்தாளோ அப்படியே மாயமா மறைஞ் சுட்டாக்கா." என்றான்.

"அடப்பாவிங்களா... கடைசில தண்ணி நம்ம ளையே கவுத்துடிச்சேடா..."

"கவுத்தா தாங்க்கா அது தண்ணி."

"தத்துவமா பேசறே பேமானி... இப்ப என்ன பண்ண?"

"வாங்குன காசை திருப்பிக் கொடுத்துட்டு வந்ததுக்கு பம்பாயை ஒரு சுத்து சுத்தி பாத்துட்டு திரும்ப வேண்டியதுதான்."

"அது உங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தா நடக்கும். காசை வாங்கமாட்டேன் ஆள் தான் வேணும்னு பார்ட்டி அடம் புடிச்சா உங்க இரண்டு பேரை விட்டுட்டு நான் கிளம்பிடுவேன்" என்றாள் பவானி. சேகரும் மாரியும் பிளந்த வாயை மூடவில்லை!

நவபிருந்தாவனம்!

மனதில் பெரும் கற்பனைகளுடன், வடிவங்களுடன் வந்தால் மிகவே ஏமாற்றமாக இருக்கும். ஒரு சமவெளி போன்ற நிலப்பரப்பின் மேல் உரிய இடைவெளியில் ஜீவசமாதிகள்! கோவிலுக்குள் தூய்மையாக நுழையும்

அதே உணர்வுடன் பலர் கூப்பிய கரங்களுடன் அந்த சமாதிகளை சுற்றியபடி இருந்தனர்.

சாமுண்டியும் அவளை அழைத்து வந்திருந்த திருச்சிக்காரரும் பிருந்தாவன வாசலில் நின்றபடி இருந்தனர்.

"நீயும் எங்க கூட வந்து கும்பிடு. இங்க நீ மனசுல நினைக்கறது நடக்கும். அதுக்காக பாளம்பாளமா தங்கம் வேணும். இந்த உலகத்துக்கே நான் சக்கரவர்த்தியாகணும்னு பேராசை கூடாது. நாம கேக்கற விஷயத்துக்கு நமக்கு தகுதி இருக்கணும்" என்று திருத்தமாக சொன்னார் அவர். அதை கேட்டபடி வந்த ஒரு வயதானவரோ "அதெல்லாம் எதுவும் தேவையில்லை. என்னை நான் உங்ககிட்ட ஒப்படைச்சுட்டேன். எனக்கு எது நல்லதுன்னு உங்களுக்கு தெரியும்னு சரணடைஞ்சுடுங்க அதான் சரியான பிரார்த்தனை" என்று எடுத்துக் கொடுத்தார். சாமுண்டிக்கும் அதுதான் சரியாகப் பட்டது. ஆனால்,

"சாமி நான் ஒருத்தனை நம்பி எல்லாத்தையும் இழந்துட்டேன். இனி இழக்க என்கிட்ட இருக்கறது உயிர் ஒண்ணுதான். இந்த நிலைல இங்க நான் வர முடிஞ்சதையே பாக்யமா சொல்றாங்க. அது உண்மைன்னா எனக்கு என் குழந்தை வேணும். பெரியவர் சொன்ன மாதிரி என்னை அப்படியே ஒப்படைக்க என்னால முடியலை. நான் இல்லாம என் குழந்தை என்ன பாடு பட்டிகிட்டிருக்கோ. அந்த குழந்தைக்காக கேக்கறேன். என் குழந்தைகிட்ட என்னை சேருங்க. என் குழந்தைகிட்ட என்னை சேருங்க..." என்று திரும்பத் திரும்ப பிரார்த்தித்தபடியே எத்தனை சுற்று சுற்றினாளோ தெரியாது.



"அதோ சாமுண்டி" என்கிற ஒரு குரல் மளுக்கென்று அவள் கண்களை திறக்க வைத்தது. எதிரில் கவுண்டர் ரகுபதி, தாமரை ஜானகி! அவர்கள் நால்வருமே அவளுக்கு புதிதாய் தெரிந்தாலும் தாமரை கையிலுள்ள குழந்தை அவளுக்கு புதிதானதாக இல்லை. அதுவும் கை கால்களை உதைத்துக் கொண்டு பிரமிப்பும் தவிப்புமாய் நிற்கும் சாமுண்டியை பார்த்தது.

ஜானகியிடம் ஒரு உறைந்துவிட்ட நிலை!

சாமுண்டி ஓடிவந்து தன் வசம் இருந்த குழந்தையை தூக்கிக் கொண்டதோடு தான் தனியானதோ எதுவுமே அவளுக்கு தெரியவில்லை. சாமுண்டி குழந்தையின் கன்னத்தில் முத்தமாரி பொழிந்தாள். மார்பின் மேல் இப்படியும் அப்படியுமா மாறி மாறிப் போட்டு அணைத்தாள். அந்த திருச்சிக்காரருக்கு விளங்கிவிட்டது. அவரிடமும் சிலிர்ப்பு.

கவுண்டரும் தாமரையும் வாய் பேச முடியாத ஒரு சிலிர்ப்பு நிலைக்கு ஆட்பட்டிருந்தனர். ரகுபதி மட்டும் சற்று விடுபட்டு விலகிச் சென்று ராஜசேகரை தன் செல்போன் மூலமாக தொடர்பு கொண்டான்.

"சார்... எதெல்லாம் நடக்கணுமோ அதெல்லாம் நடக்க தொடங்கிடிச்சு!

கஜலட்சுமி அம்மா கடவுளோட பிரதிநிதி இல்லை! அவங்களே ஒரு கடவுள்தான். எங்க நம்பிக்கை வீண் போகலை. சாமுண்டி இங்க இருக்கா. குழந்தை அவகிட்ட சேர்ந்துடுச்சு. இரண்டு நாள்ள இவங்கள உங்ககிட்ட சேர்த்திடுவேன். தயவு செய்து கவுண்டரோட பையன் சென்ராயனை வெளிய எடுத்துடுங்க.

அவன் திருந்திடுவான். ஏன்னா கவுண்டரும் தாமரையம்மாவும் எங்க சொல்லணுமோ அங்க சொல்லிட்டாங்க.”

என்றவன் ராஜசேகரிடம் பதிலுக்கு ஒரு வார்த்தையை கூட எதிர்பார்க்காமல் போனை கட் செய்துவிட்டு திரும்பி வந்தபோது தாமரை சாமுண்டியிடம் நடந்து முடிந்தவைகளை சொல்லத் தொடங்கியிருந்தாள். ஒரு ஓரமாக அவர்கள் அமர்ந்திருந்தனர். குழந்தை சாமுண்டியின் மார்பை நிமிண்டியபடி விளையாடிக்கொண்டிருந்தது.

“கஜேந்திரனுக்கு பசிக்குதாட்டம் இருக்கு. முதல்ல பால் கொடு” என்ற தாமரையின் சொல்லுக்கு உடனே மதிப்பளித்து தன் உயிர் அமுதத்தை குழந்தை பருக விட்டாள்.

தூரமாக போய் நின்றிருந்தாள் ஜானகி. அவள் தாய்மையிடம் ஒரு அழுத்தமான மௌனம். மனதிலும் நிர்மலம். எந்த ஜென்மத்து பாவமோ கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாமல் போய்விட்டது. மனதுக்குள் துக்கம் பொங்கப் பார்த்தது. ஆனால் அதை அடக்கிக்கொண்டாள். அந்த அளவுக்கு அந்த சுமங்கலிப் பெண்ணின் பேச்சு மனதுக்குள் விழுந்திருந்தது. ரகுபதி மெல்ல அவளருகே சென்று தோளில் கை வைத்தான். அவளும் அவனை ஏறிட்டாள். கண்களிலிருந்து கண்ணீர் மெல்ல எட்டிப் பார்த்தது. அவ்வளவுதான். அதற்கு மேல் அவனால் அவளை அடக்கி வைத்திருக்க முடியவில்லை. ரகுபதியை கட்டிக்கொண்டு அவள் கதற ஆரம்பிக்கவும் சற்றுச் சூழலே உறைந்து போனது.



பிருந்தாவனத்துக்கு வந்தவர்கள் எல்லாமும் நின்று கவனித்தனர். ரகுபதி அவளை அழ வேண்டாம் என்றெல்லாம் கூறவில்லை. நன்றாக அழு. அழுது தீர்த்துவிடு என்று விட்டுவிட்டான். அவளும் அழுது அழுது அப்படியே மயங்கிப் போனாள். அழுகை நின்று அவள் அவன் தோள். மேல் பாரமாகவும் ரகுபதி அவள் கன்னத்தில் தட்டி மயக்கத்தை விலக்கப் பார்த்தான். அதைப் பார்த்து தாமரையும் எழுந்து ஓடிவந்தாள். ரகுபதி அவளை மெல்லக் கீழே படுக்க வைத்தான். பலரும் சுற்றி நின்று கவனிக்க அவர்கள் முன்தினம் மந்த்ராலயத்தில் பார்த்த அந்த சுமங்கலிப் பெண்ணும் இருந்தாள்.

“என்ன ஆச்சு?” என்று கேட்டபடியே ஜானகி அருகில் குனிந்து அமர்ந்தாள். ஒரு மருத்துவச்சியை போல கண்ணின் கீழ் பாக சதையை இழுத்துப் பார்த்தாள். கன்னத்திலும் இரு தட்டு தட்டிவிட்டு கையை பிடித்தாள். நாடி பார்த்தாள். ரகுபதிக்கு எல்லாமே வியப்பாக இருந்தது.

அவள் முகத்தில் மெல்லிசாய் புன்னகை அரும்பத் தொடங்கியது.

“நல்ல விஷயம் தான். பிள்ளை நாடில்ல துடிக்குது!” என்றாள். அதை கேட்ட ரகுபதிக்கு உடம்பின் சர்வாங்கமும் சிலிர்த்துப் போனது. ஆகாயத்தில் தான் விசுவரூபமெடுத்து அப்படியே பறக்கத் தொடங்கிவிட்டது போல் இருந்தது.

“துளிர்த்திருக்குப்பா... வேற ஒண்ணுமில்ல. பாத்து கூட்டிகிட்டு போய் கவனமா பாத்துக்கோ” என்றபடியே

அங்கிருந்து விலகியும் போனாள். கவுண்டர் ரகுபதியின் தோளைத் தொட்டார். அவர் கண்களிலும் கண்ணீர்.

"அம்மா ஜெயிச்சுட்டாங்க தம்பி" என்றார் கவுண்டர்.

"நம்பிக்கையும் ஜெயிச்சிடுச்சு கவுண்டரே" என்ற ரகுபதி ஆகாயத்தை பார்த்தபடியே கரம் குவித்தான். கண்களில் ஆனந்தக் கண்ணீர்!

முற்றும்